
கல்கி
வள்ளுவர் மலர்
KALKI
12.1.1969
40 காசு




பிரபல சமையல் கலைஞர் திருமதி பிரேமா லால் தமது விசேஷப் பக்குவ முறை ஒன்றை உங்களுக்கு உதவுகிறார்.

பிரவுன் & போல்ஸன்

வெரய்டி கஸ்டர்டு பவுடர்

உபயோகித்து ஃப்ரூட்டி கஸ்டர்டு டார்ட் செய்து பார்த்திருக்கிறீர்களா?

உங்கள் குடும்பம் விரும்பும் இடை வேளைக்கான இனிய பழ வகைச் சிற்றுண்டி !



இனிமையிலும், வளப்பத்திலும், மென்மையிலும் சிறந்தது பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு. பல்வேறு வகையான புட்டிங்குகளையும், தின்பண்டங்களையும் தயாரிக்க எப்போதும் உங்கள் வசம் பிரவுன் & போல்ஸன் வெரய்டி கஸ்டர்டு பவுடர் இருக்கட்டும். இது அருமையான பொருள்களில் விருந்துமிகுந்த கவனத்துடன் பக்குவப் படுத்தப்பட்டதால் வெரய்டி கஸ்டர்டு பவுடர்களில் மிகவும் சிறந்தது.

தேர்ந்தெடுக்க இனிமையான 6 சுவைகள்.



பக்குவ முறை:
(15 டார்ட்கள் தயாரிக்க)

250 கி. மைதா மாவு
½ டீஸ்பூன் உப்பு
125 கி. சர்க்கரைப் பவுடர்
125 கி. வெண்ணெ
2 சிறிய முட்டைகள்
1 பாக்கெட் பிரவுன் & போல்ஸன் வெரெய்டி கஸ்டர்டு பவுடர்
1 கப் நறுக்கிய ஆப்பிள்
சுவைக்கு மேலே தூவ துருவிய தேங்காய்

1. மாவு, உப்பு மற்றும் சர்க்கரையை இருமுறை சலித்துக் கொள்ளவும். வெண்ணெயைச் சேர்த்துக் கலக்கவும். மெதுவாகக் கடைந்த முட்டையைச் சேர்த்து நன்கு கலக்கவும்.
2. பிசைந்த மாவை சிறிதே மாவு தூவிய பலகை மீது மெல்லியதாகக் குழவியினால் இடவும் (⅛ அங். கனம்.)
3. தனிப்பட்ட டார்ட் டின்னை (அச்சை) மேலே அழுத்திப் பொருத்தவும். அல்லது டார்ட் டின்னுள் மாவை வைக்கவும்.
4. அதை சுடு தட்டில் வைத்து 18–20 நிமிஷங்களுக்கு (400° பா.) சுடவும்.
5. பிரவுன் & போல்ஸன் வெரெய்டி கஸ்டர்டை பாக்கெட்டின் மீது குறிப்பிட்டுள்ளபடி கெட்டியான விழுதாகும் வரை தயாரிக்கவும்.
6. ஆப்பிளைக் கொட்டிக் கிளறவும்
7. டார்ட் மாவுக் கூட்டை ஆற வைத்து கஸ்டர்டைக் குளிர வைக்கவும்.
8. பேஸ்ட்ரி மாவுக் கூட்டினுள் கஸ்டர்டு கலவையை நிரப்பி, தேங்காய்த் துருவலை தாராளமாகத் தூவவும்.

தயவு செய்து எனக்கு ஒரு பக்குவ முறை சீட்டை ஆங்கிலம் / இந்தி / வங்காளம் / தமிழ் / தெலுங்கு / மலையாளம் / குஜராத்தி / மராத்தி / கன்னடத்தில் / இலவசமாக அனுப்பி வைக்கவும்.

பெயர் ....

முகவரி ....

இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புக:
கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா)பிரைவேட் லிமிடெட்
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்) K-5

இது போல் இன்னும் பலவகையான தின்பண்டங்களைத் தயார் செய்து உங்கள் குடும்பத்தினரை மகிழ்விக்கலாம். பின் வரும் இதழ்களைக் கவனித்து வாருங்கள்.

உங்கள் சமையல் உன்னதமாக இருக்க உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்!

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ.(இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீ நிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. (பி.ஆர்)

ஏகபோக விற்பனை ஏஜண்டுகள்:
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ்–1
மற்றும் அவர்களது கிளைகள்

1394/TM


வள்ளுவர் மலர்

கல்கி


பொருளடக்கம்

இலக. மார்கழி 29 — ஜனவரி 12

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மக்களின் நினைவு காங்கிரஸுக்கு
மீண்டும் வந்துவிட்டது!





தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 28 இதழ் 24

காச்மீரப் பிரச்னை அல்ல; அதனினும் பெரிது!

'அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா ஆகிய மூன்று நாடுகளும் காச்மீரத்தை நிர்வகிக்க ஒரு குழு நிறுவி, அதன் மூலம் பத்து ஆண்டுகளுக்குக் காச்மீரத்தில் பொறுப்பு ஏற்க வேண்டும். இந்தப் பத்தாண்டுகளுக்குப் பிறகு காச்மீர மக்கள் எந்த ஆட்சி வேண்டுமென்று முடிவு செய்கின்றனரோ, அதனை நிலைநிறுத்திவிட்டு, வல்லரசுகளின் நிர்வாகக் குழு விலகிவிட வேண்டும்' என்று நான் சமீபத்தில் யோசனை தெரிவித்திருந்தேன். இது சுதந்திரக் கட்சியின் கொள்கை என்று எடுத்துக் கொள்ளலாகாது. இது என் சொந்த அபிப்பிராயம். இதனைக் கட்சி விவாதிக்கவோ, அங்கீகரிக்கவோ இல்லை. இவ்விஷயத்தை சுதந்திரக் கட்சியின் பொதுக் காரியதரிசி ஒரு பத்திரிகை அறிக்கை மூலம் தெளிவு செய்துள்ளார்.

காச்மீரத்தைக் குறித்த ஒரு திட்டமாக என் யோசனையை எடுத்துக் கொள்ளலாகாது. அதைவிட முக்கியமான ஒரு பிரச்னையைத் தீர்ப்பதற்கு அடி எடுத்து வைக்கவே இந்த யோசனையைக் கூறினேன். இந்தியாவின் மக்களுக்கும் பாகிஸ்தான் மக்களுக்கும் இடையில் நல்லெண்ணத்தை உண்டாக்குவதுதான் அந்தப் பெரிய பிரச்னை. இந்திய யூனியனுக்குள்ளேயே காச்மீரத்தில் நிலையான ஆட்சி ஏற்படுத்துவது வெகு எளிதான காரியம். இதில் அதிக சிரமம் இல்லை. ஆனால் இதனால் மட்டும் மன நிறைவு ஏற்படுமா என்று பார்க்க வேண்டும். இப்போதே காச்மீரம் இந்திய யூனியனின் ஒரு பகுதியாகத்தான் ஆளப்பட்டு வருகிறது. ஆயினும் நமக்கு மன நிறைவு உண்டாகவில்லை.

இது ஒருபுறமிருக்க, பாகிஸ்தான் மக்களும் இந்திய மக்களும் பரஸ்பரம் நண்பர்களாகப் பாவித்துக் கொள்ளும் நிலையைப் படிப்படியாக உருவாக்குவது எப்படி என்பதே உண்மைப் பிரச்னை. இதை உரியபடி தீர்த்து வைத்தால்தான் நமது பொருளாதாரமும், பாகிஸ்தானின் பொருளாதாரமும் நாசமாகாமல் காப்பாற்ற முடியும். அந்நிய வல்லரசுகளை உபகிரகம் போல் சுற்றி வரும் கௌரவமற்ற நிலையிலிருந்து இந்தியாவையும் பாகிஸ்தானையும் விடுவிக்க வேண்டுமாயின், நம்முடைய பரஸ்பர நட்பே வழி.

பாகிஸ்தான் இந்தியாவுடன் மாற்றவொண்ணாத துவேஷம் கொண்டுள்ளது என்பதை ஒரு மாற்ற முடியாத சித்தாந்தமாகவே வைத்துக் கொண்டு விட்டால், நம்முடைய பொருளாதாரம் 'இன்ஸால்வென்ட்' நிலையிலேயேதான் இருக்க வேண்டும் என்பதும் மாற்ற முடியாத சித்தாந்தமாகிவிடும். பாகிஸ்தானுடன் பகையைப் போக்கிக்கொள்ள முடியாது என்று எண்ணி விட்டால், அந்நிய நாடுகளிடம் நாம் இமாலய அளவில் கடன்படுவது தவிர்க்க முடியாத தேவையாகி விடும். அதோடு பாகிஸ்தானையும் இந்தியாவையும் சமமாக நடத்த அந்நிய நாடுகள் விரும்புவதால் நாம் பெறுகிற ராணுவ உதவி போலவே, பாகிஸ்தானுக்கும் அவை உதவி புரிவதைப் பார்த்துக் கொண்டு நாம் நிரந்தரமாக அவல நிலையில் இருக்க வேண்டியதாகும்.

பாகிஸ்தானின் ஆட்சித் தலைவர் யார் என்பதைப் பார்த்து நட்புப் பணியைத் தொடங்குவதற்கில்லை. யார் ஆட்சித் தலைவராக இருந்தாலும், அவர் மக்களின் பொதுவான உணர்ச்சியின் அழுத்தத்துக்கு வளைந்து கொடுத்தேயாக வேண்டும். ஆட்சித் தலைவர்களைப் பற்றிய விஷயமல்ல இது. நம்முடைய விவேகத்தைப் பயன்படுத்திப் பாகிஸ்தான் மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நட்பை ஏற்படுத்த வேண்டியதே இப்போது அவசியப் பணி. இரு நாடுகளும் சுதந்திரம் பெற்றபோதிலும், சுதந்திரத்துக்கு அநுபந்தமாக பரஸ்பரக் கசப்பு உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு இரு நாட்டுப் பொதுமக்களின் மட்டத்திலேயே தீர்வுகாண முடியும். இதை

நமது அரசியல் கட்சிகளாலும், தலைவர்களாலும் செய்ய இயலாவிடில், நம் சுதந்திரமே ஓர் அனுக்கிரகமாக அன்றி சாபமாகி விட்டதாகத்தான் பொருள்.

இந்தியாவுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையே நட்பு ஏற்படுத்துவது சுதந்திரக்கட்சியின் அடித்தளமாக அமைந்துள்ள கொள்கைகளில் மிக முக்கியமானது. இந்தக் கொள்கையில் சிறிதும் நெகிழ்ந்து கொடுக்காமலிருக்கும் ஒரே கட்சி சுதந்திரக் கட்சிதான். இந்த ஒரு காரணமே போதும் அது நாட்டு நிர்வாகத்தை ஏற்கும் தகுதி பெற்றுள்ளது என நிரூபிக்க: இப்போது அது சட்டசபைகளில் எவ்வளவு ஸ்தானம் பெற முடிகிறது என்பதைக் கொண்டு அதன் மதிப்பை எடை போடக் கூடாது. அது எந்தக் கொள்கைகளின் மீது எழுப்பப்பட்டுள்ளதோ, அவற்றைக் கொண்டே மதிப்பிட வேண்டும்.

பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நல்லெண்ணமும், நன்னம்பிக்கையும் ஏற்படுத்துவது ஒரு முக்கியமான இலட்சியம். இந்த இலட்சியத்துக்குப் பலவிதமான உபாயங்கள் காணலாம். உபாயம் யாதாயினும், நட்பு என்ற இலட்சியத்தை முக்கியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

அடியிற் காணும் நான்கு விஷயங்களும் என்றோ ஒரு நாள் நடக்கும் என்ற நம்பிக்கையிலேயே விமோசனம் உள்ளது :

(1) வியாபாரத்திலும், தொழில் உற்பத்தியிலும் முதலீடு செய்திருப்பவர்கள், ஆளும் கட்சியிடம் அச்சத்தை விடுத்து, விளைவுகளைப் பொருட்படுத்தாமல், தமது இதயத்தில் உறுதியாக உள்ள கருத்தை மதித்துச் சுதந்திரக் கட்சியின் அங்கத்தினராகி, அதற்கு உதவி புரிவது.

(2) முதலீடு செய்தவர்கள் சௌக்கியமாக இராவிடில், தொழில் படுத்துப் போய்த் தொழிலாளிகளும் இன்னலுக்கு ஆளாவர் என்பதைத் தொழிலாளர் சமூகம் புரிந்து கொள்வது. வியாபார சுபிட்சமே தங்களது நல்வாழ்வுக்கும் அடிப்படை என்பதைத் தொழிலாளிகள் உணருவது; தங்களது நலன்களும் நிர்வாகிகள் நலன்களும் பிணைக்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்வது.

(3) சர்க்காரின் செலவுகள் குறைந்து, இதனால் வரிச் சுமையும் குறைந்தால் அன்றி தேசத்தில் நல் வாழ்வோ முன்னேற்றமோ ஏற்படாது என்று அரசியல்வாதிகள் உணருவது.

(4) இவ்வாறு சர்க்கார் செலவு குறைய வேண்டுமாயின், ராணுவச் செலவைக் குறைக்க அநுகூலமாக, நமது மிக முக்கியமான அண்டை நாட்டுடன் நல்லெண்ணத்தையும் நன்னம்பிக்கையையும் வளர்ப்பது.

இந்த நான்கும் நடக்கும் என்று நம்புவதே புரட்சிகரமானது. புரட்சிகரமான இந்த நம்பிக்கைகளே நம்மைக் காக்க வழி. எனவே, அவற்றை இலட்சியமாகக்கொண்டு, உழைத்து வரும் சுதந்திரக் கட்சியே உண்மையில் ஒரு புரட்சிக் கட்சி — நாச வேலை மூலம் மேம்பாடு காணலாம் எனத் தங்களையும் ஏமாற்றிக் கொண்டு, பிறரையும் ஏமாற்றும் கட்சிகள் உண்மையில் புரட்சிக் கட்சிகள் ஆகா. **(ராஜாஜி 'ஸ்வராஜ்யா'வில் எழுதியது)**

இரண்டாயிரம் ஆண்டு

தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் கட்சி வேறுபாடு ஒருசிறிதும் இன்றித் தாங்கொணு உவகையோடு கொண்டாடும் பெரு விழா வள்ளுவர் விழா ஒன்றுதான்.

மக்கள் வாழ வேண்டிய முறைகளையெல்லாம் வகுத்துக் கூறி, சொல்ல வேண்டிய பொருள்கள் பலவற்றையும் தொகுத்துக் கூறி, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று புருஷார்த்தங்களையும் விளக்கி, அவற்றின் விரிவான விளக்கத்தினுலேயே வீடு என்னும் நான்காவது தத்துவத்தையும் தமது ஒரே நூலினுல் குறிப்பாக எடுத்துக் காட்டிய ஒப்பற்ற அறிஞர் வள்ளுவர். அத்துடன் நில்லாமல், தாம் கூறிய அறநெறிகளின்படி நின்று, ஒழுகி, வாழ்ந்து காட்டிய மாமனிதரும் அவரே !

தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக் கூறப் புகுந்த மகாகவி பாரதியார், ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று அந்தப் புலவர் பெருந்தகைக்குத் தனியிடம் தந்து சிறப்பித்தார். மகாகவியின் வாக்கு பொய்க்கவில்லை. திருவள்ளுவர் உலகப் புகழ் பெற்றுவிட்டார். திருக்குறள் உலகத்து மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளிலெல்லாம் பெயர்க்கப்பட்டுத் தனிச் சிறப்பு எய்திவிட்டது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த ஒருவர் இயற்றிய நூல், இன்னும் பல இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்பும் பயன்படக் கூடிய அளவில் இருக்கிறது என்றால் அந்நூலின் பெருமையை என்னென்று சொல்ல !

'' நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு ''

என்று நற்பண்புள்ள மனிதர்களைப் பற்றி விளக்கம் தர வந்த வள்ளுவர், ஓர் உதாரணம் காட்டி விளக்குகிறார். ''நல்லதொரு நூலைப் படிக்கப் படிக்க மேன்மேலும் உற்சாகம் பெருகுவதைப் போல் நற்பண்பு உடையவரின் நட்பு பழகப் பழக இன்பம் தருவதாகும்'' என்று.

படிக்கப் படிக்கச் சுவையூட்டும் நூல்களில் திருக்குறளைவிடச் சிறந்ததாக வேறு எந்த நூலைக் கூறமுடியும்? எந்தக் காலத்துக்கும், எந்த மக்களுக்கும், எப்பொழுதும் பயன்படக்கூடிய நூல் அல்லவா அது ?

அம் மாபெரும் நூலை இயற்றிய வள்ளுவர் பெருமானை இந்த இரண்டாயிரத்து ஆண்டில் வாழ்த்தி வணங்கி இந்த வள்ளுவர் மலரைத் தமிழன்னையின் பாதகமலங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

அவனுக்கு ஒரு லட்சம் வந்தது. இவனுக்கு ஒரு லட்சம் வந்தது என்று பத்திரிகையில் செய்தியும் படமும் பார்த்து மக்கள் சூதாட்ட வலையில் சிக்குகிறார்கள். எத்தனை ஆயிரம் மக்கள் போட்ட பணத்தை இழந்து இந்தப் ''பரிசு'' ஒரு ஆளுக்கு வந்து சேருகிறது என்பதை உணராமல் மக்கள் இந்தச் சூதாட்ட வலையில் சிக்கி வருவது வருந்தத்தக்க விஷயம்.

வள்ளுவர் சொன்னது உண்மையல்லவா?

வேண்டற்க வென்றிடினும் சூதினை - வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று

பொன் என்பது இரும்புக் கொக்கி.

இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் - துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்

எவ்வளவு துன்பங்கள் வந்து வருத்தினாலும் மனிதன் உயிரை விடுவதற்கு ஒப்புக்கொள்ள மாட்டான். இதற்கு உவமை சூதாட்டத்தில் நஷ்டத்துக்கு மேல் நஷ்டம் வந்தாலும் மனிதர்கள் சூதாட்டத்தை விடமாட்டார்கள். அடுத்த ஆட்டத்தில் வெற்றி அடையலாம் என்று ஆசைப்பட்டு வலையை விட்டு வெளியே செல்ல மாட்டார்கள். உயிரில் மனிதன் பற்று வைத்துத் துன்பங்களை அடைவதற்கு, சூதாட்டம் மனிதனைப் பிடித்துக் கொண்டு விட்டு விட மனமில்லாமல் செய்யும் என்பதைக் குறளாசிரியர் உபமானத்தை உபமேயமாகவும் உபமேயத்தை உபமானமாகவும் அமைத்துச் சொல்கிறார். இது ஓர் உயர்ந்த வகை உத்தி.

ஃஃஃ

தமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் பல கிராமங்களில் மார்க்ஸீயவாதிகள் (கம்யூனிஸ்டுகள்) அறுவடை வேலைகளுக்கு இடையூறு உண்டாக்கி வருவதாகச் செய்திகள் வருகின்றன. தடை உத்தரவு இருந்தபோதிலும், மார்க்ஸீயத் தலைவர் திரு பி. ராமமூர்த்தி திருவாரூரில் டிசம்பர் 31ந் தேதி ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். பண்ணையார்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே உள்ள பூசலிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியானது அரசியலில் பூரண லாபம் சம்பாதித்து வருகிறது.

டில்லியில் உள்ள அரசாங்கமும் சரி, தமிழகத்தின் அரசாங்கமும் சரி, கம்யூனிஸ்டுகளின் நாசத் திட்டம் குறித்துக் கண்டிப்புடன் நடக்காமல் இருக்கின்றன. இது தற்கொலைக்கு ஒப்பான கொள்கை.

ஃஃஃ

நக்ஸல்பாரி பாணியில் நாச வேலை செய்வோர் நாடெங்கும் சர்வ வியாபகமாக இருக்கின்றனர். இப்போது, எடுக்கக்கூடிய நடவடிக்கை என்ன, எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பது குறித்து ஸ்ரீ சவான் அவர்களுக்குத் தகுந்த முறையில் யோசனை கூறப்பட வில்லை என்று தோன்றுகிறது. அரசாங்கத்தின் சார்பில் எச்சரிக்கை விடுப்பதும், உபதேசப் பிரசங்கம் செய்வதும், கவலை தெரிவிப்பதுமே காரியமாகி விட்டது. இந்த ரீதியிலேயே போனால் லாயத்தைப் பூட்டும் முன்பே குதிரை களவு போக வேண்டியதுதான்.

ஃஃஃ

அடுத்த செப்டம்பரிலிருந்து யூனியன் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் பரீட்சை எல்லாப் பிரதேச மொழிகளிலும் நடத்தப்படும் என்று இந்திய யூனியனின் கல்வி இலாகாவின் ராஜாங்க மந்திரி கூறியிருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இது ஒற்றுமையைக் குலைத்துப் பிளவு உண்டாக்கும் திசையில் ஓர் அடி எடுத்து வைத்ததாகும்.

ஃஃஃ

ஆங்கிலத்தை நீக்குவது, கடிகாரத்தைப் பின்நோக்கித் திருப்பி வைப்பதாகும் என்று (தமிழக) சர்க்காரின் பிரதம கல்வி ஆலோசகர் திரு என். டி. சுந்தர வடிவேலு கூறினார்.

ஆங்கிலத்தை அந்நிய மொழியாகக் கருதுவது தவறு என்றார் அவர். 'ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி; இத்தனை காலமாக நமக்கும் நல்ல முறையில் உதவி வந்திருப்பது. நம் குழந்தைகளுக்கு இம்மொழி பயிலும் உரிமையை மறுப்பது குற்றம். ஆங்கிலம் ஒரு கருவி; வேறெதுவும் அல்ல. இக்கருவி நமக்கு உபயோகமாக இருப்பின், இதனைப் பயன் செய்து கொள்வதற்கு நாம் அவமானப் பட வேண்டியதே இல்லை' என்றார் திரு சுந்தர வடிவேலு.



மகாத்மாவின் மணிமொழி

பழைமையானது என்பதாலேயே சத்தியம் பெருமை பெற்றிருக்கவில்லை. சத்தியம் என்பது சத்தியமாக இருப்பதாலேயே அதற்குப் பெருமை. பழைமையானதாயிற்றே என்பதால் அதைச் சந்தேகத்துடன் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

ஒருவருடைய வாழ்வில் சிலவற்றை அமுங்கடித்துக் காட்டுவது சிரமமாயிருக்கும். அதனால் அவற்றை இலேசாக ஒதுக்கிவிடக் கூடாது. இப்படிப்பட்ட ஜீவாதாரங்களில் ஒன்று சத்தியம்.

என்ன சேதி ?

தமிழ் எழுத்தாளர் சங்கம்

தமிழ் எழுத்தாளர் சங்கத்துக்குப் புதுத் தலைவராக திரு க. வேம்பு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம். திரு க. வேம்பு அவர்கள் அமுதசுரபி பத்திரிகையின் ஆசிரியர். விக்ரமன் என்ற புனைபெயரில் பல சரித்திர நவீனங்கள் எழுதியுள்ளார். கணக்கு வழக்கு சம்பந்தப்பட்ட நிர்வாக அனுபவமுள்ளவர்.

சமீப காலத்தில் எழுத்தாளர் சங்க நிர்வாகக் குழுவினரிடை தோன்றிய மன வேறுபாடுகள் வருந்துவதற்குரிய விஷயமாகும். தமிழ் எழுத்தாளர் சங்கம் செல்வாக்கும் மதிப்பும் இழந்துவிடும் நிலைக்கு வந்து விட்டது. சுமார் இருநூறு அங்கத்தினர்கள் தாங்கள் எழுத்தாளர் சங்கத்தின் உறுப்பினர் என்ற தகுதி பெறச் சந்தா செலுத்தவே முன்வரவில்லை.

இத்தகைய நிலையிலிருந்து சங்கத்தை மீட்டு அதற்குப் புத்துயிரூட்டி பழைய செல்வாக்கை நிலை நிறுத்தவேண்டியது ஒவ்வொரு எழுத்தாளனின் கடமையுமாகும். வெளியேறிய அங்கத்தினர்களை, மீண்டும் சேரும்படி கேட்டுக் கொண்டு, அவர்களை சங்க நலனில் அக்கறை கொள்ளும்படி செய்தாலன்றித் தமிழ் எழுத்தாளர் சங்கம், சிறப்பெய்தாது. புதிய தலைவர் முன்னால் சிரமமான ஒரு பணி காத்திருக்கிறது. அவருக்கு நிர்வாகக் குழுவினர், சங்க அங்கத்தினர்களின் ஒத்துழைப்பு பரிபூரணமாகக் கிட்டவேண்டும்; கிட்டும் என எதிர்பார்க்கிறோம்.



திரு க. வேம்பு

கம்பன் மணி மண்டபம்

திரு சா. கணேசன் அவர்களின் சமுதாய, இலக்கிய, அரசியல், சமயத் தொண்டுகளையும் குறிப்பாக கலை, தொல்பொருள் துறைகளில் அவரது சிறந்த தொண்டினையும் தமிழ் கூறும் நல்லுலக மக்கள் நன்கறிவர்: வரும் மார்ச் மாதத்தில் கம்பன் திருநாளையொட்டி அவருக்குப் பாராட்டு விழாவினை நடத்தி அவர் சென்ற முப்பது ஆண்டுகளாகப் போற்றி வந்த கம்பன் பெயரால் ஒரு மணி மண்டபம் காரைக்குடியில் எழுப்புவதற்கு ஏற்பாடு செய்வதாகவும் அதற்கு இரண்டு லட்சம் ரூபாய் வசூலிப்பதாகவும் உத்தேசம். இதுவரை இந்நிதிக்குப் பல அன்பர்கள் ரூபாய் எழுபத்து ஐயாயிரம் வரை வழங்கியுள்ளார்கள். இன்னும் நாட்கள் குறைவாகவே இருப்பதனால் தமிழன்பர்கள் கூடிய விரைவில் தங்கள் நன்கொடைகளைப் பின்கண்ட முகவரிக்குத் தாராளமாக அனுப்பி உதவுமாறு வேண்டிக் கொள்கிறோம்.


முகவரி : திரு அழகப்பன், திரு டி. ஆர். அருணசலம், செயலாளர்கள், கம்பன் மணி மண்டபம் நிதிக் கமிட்டி, காரைக்குடி.


மலாசியா செல்லும் நாதசுர வித்வான்கள்


தமிழகத்தின் சிறப்புக்களில் ஒன்றாகிய நாதஸ்வர மங்கல இசையைத் தமிழர்கள் ஏராளமாக வாழும் மலாசியாவில் மார்கழி விழாவில் சமர்ப்பித்து மகிழ்விக்கப் புகழ்பெற்ற செம்பனார் கோவில் சகோதரர்கள் மாயூரம் எஸ். ஆர். டி. முத்துக் குமாரஸ்வாமியும், எஸ். ஆர். டி. வைத்திய நாதனும் மலேசியா செல்லுகின்றனர். செம்பனார் கோவில் என்றதுமே, நாதஸ்வர வித்வான் ராமஸ்வாமி பிள்ளையின் ஞாபகம்தான வரும். அவர்களுடைய பரம்பரைதான் இவர்களும். அவருடைய பேரப் பிள்ளைகள். தகப்பனார் தட்சிணாமூர்த்தி பிள்ளையிடமும், மாயூரம் ஏ. கே. கணேசபிள்ளையிடமும் நாதசுர இசை பயின்று, மதுரை மணி அய்யரிடம்கூடப் பல நுணுக்கங்களைக் கற்றறிந்தவர்கள். திருவாவடுதுறை, தருமபுரம் இவ்வாதீனங்களில் பல கச்சேரிகள் செய்து விருதுகளும் பாராட்டுதல்களும் பெற்றுள்ளனர். இவர்களுடன் தவில் வித்வான்களாக வேதாரண்யம் வேதமூர்த்தியின் சகோதரர் வி. ஜி. பாலசுப்பிரமணியமும், மாயூரம் ஆர். வி. வெங்கடேசனும் உடன் செல்லுகின்றனர். நல்ல ஜமா. மலேசியாவாழ் தமிழ் மக்கள் அவர்களுடைய நாதசுர இசையைக் கேட்டு மகிழ ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தை வரவேற்பார்கள்.

எதிர்ப் பக்கத்தில் :


1. காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளிடமிருந்து வந்திருந்த பிரசாதத்தை ஸ்ரீ சதாசிவம் மந்திரி ஸ்ரீ கரன் சிங் அவர்களுக்கு வழங்குகிறார். 2. இந்த வருஷ வித்வத் சபையின் தலைவி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி தமது தலைமை உரையை நிகழ்த்துகிறார். 3. சங்கீதகலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். ஸுக்குப் புகழ்மாலையோடு பூமாலையும் கிடைத்தது. 4. மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீ கரன் சிங் சங்கீத கலாநிதி விருதை ஸ்ரீமதி எம். எஸ். ஸுக்கு மகிழ்ச்சியோடு தருகிறார். 5. நடனராணி பாலசரஸ்வதி சங்கீத ராணிக்குச் சங்கீதகலாநிதி பதக்கத்தைச் சூட்டுகிறார். 6. எதனன்று டாக்டர் வே. ராகவன் அவர்களுக்கு வித்வத் சபையின் சார்பில் பாராட்டிதழைக் கொடுத்தார் காஷ்மீர் அரசர். அருகே திரு ராகவனுக்கு ஜரிகை மாலை சூட்டக் காத்திருக்கிறார் காரியதரிசி ஸ்ரீ ராஜகோபாலன்.














ஸதஸ்
காட்சிகள்

ஸதஸ்

1969ம் வருஷம் கலாரசிகர்களுக்கு அற்புத ஆண்டாகப் பிறந்திருக்கிறது. ரசிகர்களின் பாராட்டுக்கும் நன்றிக்கும் அன்புக்கும் பாத்திரமாயுள்ள இசைக் கலைஞர்களில் முதலிடம் பெற்றுள்ள ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி 'ஸங்கீத கலாநிதி' விருது பெற்ற தினமல்லவா ஜனவரி 1௳?

நான்கு மணிக்கு ஸதஸ் எனில் இரண்டு மணியிலிருந்தே மியூஸிக் அகாடெமி கல்யாண வீடாகத் திகழத் தொடங்கிவிட்டது. எள் போட்டாலும் விழாத ரசிகர் கூட்டம் மன்றத்தை நிறைத்தது. 'சங்கீத ராணி' என்று நேருவால் பாராட்டப்பட்ட எம்.எஸ். தலைமை தாங்கிய மாநாட்டுத் தொடக்கத்துக்குக் கேரள ராணியையும், ஸதஸுக்குக் காச்மீர மன்னர் டாக்டர் கரன்ஸிங்கையும் அழைத்திருந்ததன் மூலம், மியூஸிக் அகாடமி விதுஷிக்கு 'ராஜோபசாரம்' செய்து விட்டதாக அனைவருக்கும் உற்சாகம் ததும்பியது.

மியூஸிக் அகாடெமி காரியதரிசி ஸ்ரீ நடராஜன் ஸதஸை முறைப்படி பிரகடனம் செய்தார். மற்றொரு காரியதரிசி ஸ்ரீ ரங்கநாதன் வாழ்த்துரைகளை வாசித்தார். அகாடெமித் தலைவர் ஸ்ரீ டி. எல். வேங்கடராம அய்யர் காச்மீர ராஜ குலச் செல்வரும், யூனியன் விமானத் துறை அமைச்சருமான டாக்டர் கரன் ஸிங்கை வரவேற்றார்.

இதன்பின் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் அருள் கூர்ந்து அனுப்பி யிருந்த பிரசாதம் ஸ்ரீ கே. பாலஸுப்ரமணிய அய்யரின் கரம் பட்டு, ஸ்ரீ மடத்துப் பிரதிநிதிகளால் விதுஷிக்கு அளிக்கப்பட்டது. காஞ்சி காமாக்ஷி, திருப்பதி வேங்கடேசுவர பெருமான், வடபழனி ஆண்டவர் ஆகியோரது பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

டாக்டர் கரன்ஸிங் தமது ஆசிவந்த கரங்களால் 'ஸங்கீத கலாநிதி' விருது பத்திரத்தையும், பதக்கத்தையும் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியிடம் அளித்தார். ஸ்ரீமதி பாலசரஸ்வதி பதக்கத்தை எம். எஸ்ஸின் கழுத்தில் சூட்டினார்.

ஸங்கீத கலாநிதி எம். எஸ்ஸை வாழ்த்தி பிரதம நீதிபதி ஸ்ரீ அனந்தநாராயணன், முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர், வடஇந்திய விதுஷி ஸ்ரீமதி ஸித்தேசுவரி தேவி ஆகியோர் பேசினர். அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீ ஜேம்ஸ் ரூபின், எம். எஸ்ஸின் சர்வதேச ரஸிகர்களின் சார்பில் நன்றியும் வாழ்த்தும் அளித்தார்.

இதன்பின் ஸங்கீத கலாநிதி எம். எஸ்., தமது உரையை ஸங்கீதமயமாக வாசித்தார். மியூஸிக் அகாடெமியின் நிதி நிலைமை நல்ல நிலை அடையும் வாய்ப்பு இந்த மகாநாட்டில் நிச்சயமாகி விட்டதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார். இளம் வித்வான்களைப் பேணி, முன்னுக்குக் கொண்டு வரும் பணியில் இனி முக்கியமாக ஈடுபட வேண்டிய அகாடெமி, இசைத் தரத்தில் செலுத்தவேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தினார் ஸ்ரீமதி எம். எஸ். தமக்கும், தம் கணவருக்கும் தந்தைபோல் பல உதவிகள் புரிந்த காலஞ்சென்ற கஸ்தூரி ஸ்ரீநிவாஸன் அவர்களை நினைவு கூர்ந்து நமஸ்கரித்தார். "இன்று அமரர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், ரஸிக மணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும் வானுலகில் பேரானந்தத்துடன் என்னை வாழ்த்திக் கொண்டிருப்பார்கள். அவர்களை வணங்குகிறேன்" என்று விதுஷி கூறிய போது மன்றத்தில் கரகம்பம் எழும்பியது. முடிவாக, இசை விழாவின் பன்னிரு நாட்களும் தம்மை இயக்கிய அநுக்கிரக விசையாகிய ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளின் அடியிணைகளுக்கு உணர்ச்சி பரவசத்துடன் வந்தனம் தெரிவித்தார்.

டாக்டர் கரன் ஸிங் அவர்கள் அற்புதமான தலைமை உரையை ஆற்றினார். கலைகளே ஒரு நாட்டின் நாகரிகத்துக்கு அளவை யாகும் என்று குறிப்பிட்ட கரன்ஸிங், இன்றைய விஞ்ஞான உலகில் தெய்விகமான ஸங்கீதத்தின் தேவை அதிகமாகியுள்ளது என்றும், முக்கியமாக, அரசியலே மனித வாழ்வு என்று மயங்கும் அரசியல்வாதிகளுக்கு இசை ஞானம் அத்தியாவசியம் என்றும் கூறினார்.

ஃ ஃ ஃ


ஸதஸின் போது வழக்கம் போல், அகாடெமியின் ஸங்கீதப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. நான்கு முதற் பரிசுகளும், ஓர் இரண்டாம் பரிசும் பெற்ற குமாரி ஸீதாவுக்கு விசேஷப் பரிசு வழங்கப்பட்டது.

இந்த வருட சதஸில் ஒரு விசேஷம், அகாடெமி காரியதரிசி வே. ராகவன் அவர்களுக்குப் பாராட்டிதழ் வழங்கப்பட்டதே யாகும். அகாடெமி தொடங்கியதிலிருந்து அதற்கு அரும் பணி புரிந்து வரும் டாக்டர் ராகவன் அவர்கள் சங்கீதத்தில் பெரும் ஞானஸ்தர்; தேர்ந்த ஆராய்ச்சியாளர்; சர்வதேசப் புகழ் கொண்ட சம்ஸ்கிருத நிபுணர். அவருக்கு அகாடெமி பாராட்டிதழ் வழங்கியது பரம நியாயம்.

ஸங்கீத கலாநிதி எம். எஸ்ஸை வாழ்த்திய அனைவரும் டாக்டர் ராகவன் அவர்களின் பல்வேறு சிறப்புக்களையும் பாராட்டிப் பேசினர். இவற்றுக்குப் பதிலளித்துப் பேசிய ஸ்ரீ ராகவன், அயல் நாட்டினர் பலர் நம் இசையில் ஈடுபாட்டுடன் இங்கு வருவதை முன்னிட்டு, அவர்களுக்காக அகாடெமியில் விடுதி அமைக்க யோசித்து வருவதாகத் தெரிவித்தார். அதோடு, எம். எஸ். தலைமை உரையில் குறிப்பிட்டது போல், இளம் வித்வான்களுக்கு அகாடெமியில் மாதந்தோறும் கச்சேரிகள் வழங்குவதற்காகச் சிறியதொரு மன்றம் எழுப்ப உத்தேசித்திருப்பதாகவும், ஒரு நூல் நிலையம் கட்டத் திட்டம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அகாடெமியின் எதிர்காலத் திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேற இறைவனைப் பிரார்த்திக்கிறோம். ஏற்கனவே அகாடெமியின் மன்றத்துக்காக உதவிக் கச்சேரிகள் தந்துள்ள எம். எஸ். அடுத்த சில மாதங்களில் மலேசியா சென்று, இசைக் கச்சேரிகள் வழங்கி அகாடெமிக்காக ஒரு லட்சம் ரூபாய் திரட்டித் தர உத்தேசித்திருப்பதாக, மகாநாட்டின் போது ஒரு நாள் காலை ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அறிவித்தார்.

அகாடெமிக்கும், எம். எஸ்ஸுக்கும் உள்ள உறவு இப்படியே நாளும் பெருகி, அதன் பயனாக இந்த இசை நிறுவனமும், இசையும், இசைக் கலைஞர்களும் பயன் பெற நாதப் பிரம்மம் அருளட்டும்!



கடவுள் வாழ்த்து


கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ
னற்றாள் தொழாஅ ரெனின்.

படிப்பதன் பயன் அறிவு பெறுதல். அப்படியானால் நம் அறிவுக்கெல்லாம் எட்டாத ஒரு பொருள் இருப்பதை உணர்ந்து அதைப் போற்றாவிட்டால் படிப்பினால் என்ன பயன்?

படம்: காஞ்சியில் ஒரு கோயில்

★

பெரியாரைத் துணைகோடல்



அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

பெரியவர்களை அண்டி அவர்கள் எப்போதும் நமக்கு ஆதரவாக இருக்கும்படி செய்து கொள்வது பெறுதற்கருமையான பாக்கியங் களிலெல்லாம் மிகவும் பெரிய பாக்கியம்.



அன்புடைமை

அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

அன்புதான் ஒருவரையொருவர் விரும்புகிற ஆசையை உண்டாக்குவது. அந்த ஆசையினால்தான் நட்பு என்கிற உறவு தானாகவே உண்டாகிறது. அதனால்தான் சமுதாயம் அமைகிறது.

தான் வளர்த்த பூனையிடம் வைத்த அன்பு நட்பாக மலர்ந்துள்ளதைக் கண்டு அந்த இனிய உணர்விலே லயித்திருக்கிறான் இச் சிறுவன்.



உழவு

சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனால்
உழந்து முழவே தலை

எப்படி யெல்லாம் சுற்றிச் சுற்றி எண்ணிப் பார்த்தாலும் உலகிலுள்ள மனிதர்கள் உழவுத் தொழிலைப் பின்பற்றித்தான் வாழ முடியும். அதனால் உழைப்பு மிகுந்த தொழிலானாலும் உழவுத் தொழில்தான் எல்லாத் தொழில்களிலும் மேலான தொழில்.

மேலான தொழிலில் ஈடுபட்டிருக்கும் நினைப்பில் பெருமிதம் பொங்க நிற்கும் சிறுமியைப் புகைப்படமெடுத்தவர் என். ராமகிருஷ்ணா.

கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

குற்றங்கள் நீங்குவதற்காகப் பல நூல்களைப் படித்துக் கல்வி கற்க வேண்டும். அதற்குத் தகுந்த நூல்களைத் தெரிந்து படித்தறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்.

படத்தில் நீங்கள் காண்பது கொலுப் படியல்ல; குழந்தைகளுக்காக மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒரு வாசகசாலை!





புணர்ச்சி மகிழ்தல்

உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

அவளுடைய உடலைத் தீண்டும்போதெல்லாம் என் உயிர்க்குப் புதுப் புது ஜீவசக்தி உண்டாவதால் அவளுடைய உடல் அமிர்தத்தால் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.


புகைப்படம்: கொனாரக் சிற்பம்

படைமாட்சி

உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

யுத்தம் மூண்டுவிட்டபோது துன்பங்களுக்கு அஞ்சாமல் போர் புரியக்கூடிய தைரியம் யுத்தம் இல்லாத சமாதான காலங்களிலும் யுத்தப் பயிற்சி செய்து கொண்டே இருக்கிற சேனைக்கல்லாமல் மற்றவர்களுக்கு வராது.

வடக்கு எல்லையில் வெண்பனிச் சிகரங்களைச் சதாசர்வகாலமும் பாதுகாத்து வரும் பாரத வீரர்களைப் படத்தில் காண்கிறோம்.





மக்கட்பேறு

மக்கள்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

தாம் பெற்ற குழந்தைகளின் உடல் தம் உடலைத் தீண்டுவது உடலுக்கு இன்பமளிக்கும். தாம் பெற்ற குழந்தைகளின் பேச்சைக் கேட்பது காதுக்கு இன்பமளிக்கும்.

படங்கள்: ஸ்ரீமதி சித்தேசுவரிதேவி
ஸ்ரீமதி பாலசரஸ்வதி





மண்டபமும் பந்தலும்

- சுப்புடு -

மண்டபத்துக்கும் பந்தலுக்கும் இடையே வாக்குவாதம்.

''பெரிய பெரிய வித்வான்களெல்லாம் இங்கேதான் மேடையேறிப் பாடுகிறார்கள். தெரியுமல்லவா?'' என்றது மண்டபம்.

''படே படே வித்வான்களின் ஸ்பெஷல் கச்சேரிகள் எல்லாம் இங்கேதான் நடக்கிறது. புரிஞ்சுக்கோ! ரொம்பக் கர்வப் படாதே! இளம் வித்வான்களுக்கு அரங்கமாக அமைவதிலும் எனக்குப் பெருமைதான்'' என்றது பந்தல்.

''கொளுத்துகிற வெய்யிலில் பந்தலில் உட்கார்ந்தால் அவதிதான். இங்கே குளுகுளு சாதனம் பொருத்தப்பட்டிருப்பதால் எல்லாருக்கும் சுகமான சூழ்நிலை'' என்றது மண்டபம்!

''அது சரி, செம்மங்குடி கச்சேரி அன்றைக்குக் குளிர் ஏரேயடியாக அதிகமாகப் போய் எல்லாருக்குமே வெடவெடக்க ஆரம்பிச்சுட்டதாமே, கேள்விப்பட்டேன். பாடகரே, 'இந்த ஏர்கண்டிஷனரை நிறுத்தினால் தேவலை' என்று கேட்டுக் கொள்ளும்படியாகிவிட்டதாமே!'' - கிண்டல் செய்தது பந்தல்.

பந்தல் உசத்தியோ, மண்டபம் உசத்தியோ அது பற்றி ரசிகர்கள் கவலைப்படவில்லை. எங்கே நடந்தாலும் நல்ல கச்சேரிகளுக்குச் சிரமம் சுகம் பாராமல் தப்பாமல் ஆஜராகிறார்கள்.

இளம் விதுஷி சுகுணாவுக்கு நல்ல காத்திரமான சாரீரம். அழுத்தம் திருத்தமான பிடிகள். சுகி ருசியோடான அம்சங்களில் கவனம். ஸ்வரப் பிரஸ்தாரங்களில் காமா சோமா என்றில்லாமல் ஓர் ஒழுங்கு. ஆனால் ஸ்திரீ சாரீரம் புருஷ சாரீரமாகப் பரிணமிக்கும் போது அதற்கு இயற்கையாயிருக்க வேண்டிய மிருதுத் தன்மை போய் விடுகிறது. மேலும், உற்சாகத்தைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். கச்சேரி முழுதும் நிறைவு பெறப் பிரயோகங்களைச் சீராகப் பகிர்ந்துகொள்ளத் தெரியவேண்டும். காம்போதியில் 'ஓரங்கசாயி' தரமாயிருந்தது. மிருதங்கம் வாசித்த திரு வி. கோபாலகிருஷ்ணன் ஒத்துழைப்பு உதவுபடியாக இருந்தது. இவ்வளவு ஞான பாவம் இருந்தும் அந்த மிருதங்கம் கால் கட்டை கூடுதலாக ஒலித்தது சுகுணாவுக்கோ, கோபாலகிருஷ்ணனுக்கோ தெரியாமலிருந்தது விந்தைதான்.

டி. வி. நமசிவாயம் நன்றாகப் பழுத்துக் கொட்டை போட்ட புள்ளி. அழகாக ஜிலுஜிலுப்பாக உள்ள இரட்டை நாடி சாரீரம். தோடி கன கிராண்ட். ஒரு வாரு வாரி விட்டார். 'கத்தனவாரி'யில் நிரவலும், ஸ்வரப் பிரஸ்தாரமும் அவரை ஐந்தரை மணி ஆசாமி என்று நிமிஷத்துக்கு நிமிஷம் நினைவுபடுத்தியது. பிடில் வாசித்த எம். சந்திரசேகரன் லயத்தில் அபரிமிதமான ஈடுபாடு உடையவர். திஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், மிஸ்ரம், சங்கீர்ணம் எல்லாம் அவருக்குத் தண்ணீர் பட்டபாடு. கால் ஆவர்த்தன ஸ்வரக் கோவைகளில் அவரால் புகுந்து விளையாட முடியும். வில் வீச்சில் வில்லாதி வில்லர். அந்தகராயிருந்தும் அகக் கண் உடையவர். வருங்காலத்தில் இவர் சிறந்த மேதையாவார் என்பது திண்ணம். நமசிவாயத்தின் வெற்றிக்கு இவர்தான் உறுதுணையாயிருந்தார் என்றால் அது மிகையாகாது.

மிருதங்கம் சிட்டு (டி. கே. மூர்த்தி) சிட்டாய்ப் பறந்தார். அவர் 'தனி' ஒரு 'தனி'ச் சோபையுடன் விளங்கியது. எக்கச் சக்கமான தாள வகைகளில் அநாயாசமாகப் புகுந்து வெளிவந்தார். சபாஷ் சிட்டு.

கமலாவின் நாட்டியம் கண்ணுக்குக் குளிர்ச்சி. அவர் அபிநயம் பிடித்த தசாவதாரக் கீர்த்தனை ஒரு சிறந்த அனுபவம்.


அவர் அபிநயித்த பிரகலாத சரித்திரம் என் மனக் கண் முன் இன்னும் பசுமையாயிருக்கிறது. ஹிரண்ய கசிபுவும், பிரஹ்லாதனும் மாறி மாறி மேடையில் தோன்றினர். கண்ணனின் வருகைக்காக ராதை தயாரித்துக் கொண்ட காட்சி ஒரு சிறந்த இலக்கியமாகவே அமைந்து விட்டது.

இவ்வளவு சிறந்த நடன மணிக்குப் பாட்டு நன்றாக அமையாதது துர்ப்பாக்கியமே. பாட்டுக்குப் பிராதான்யம் தராமல் அவர் 'பாட்டுக்கு' இருப்பது பெரிய குறை. நோட்டுப் புத்தகத்தை வைத்துக் கொண்டு பாட்டைப் பாடுவது ரொம்பவும் தரக் குறைவாக இருந்தது.

பாலக்காடு மணி அய்யர் சோபிதம் செய்த மற்றொரு காலைக் கச்சேரி மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்காருடையது. ஸ்ரீரங்கம் அய்யங்கார் மிகவும் புராதனக் கலைஞர். பழங்காலத்தில் கச்சேரி பாணி எப்படி இருந்தது. ஸ்வரப் பிரஸ்தாரங்களில் கணக்கு வகைகள் எப்படி அமைந்திருந்தன என்பதற்கு அவர் கச்சேரி ஒரு சான்றாயிற்று. அசப்பில் அரியக்குடி மாதிரி இருக்கிறார். சன்னமான சாரீரம். ஒரு காலத்தில் சக்கைப் போடு போட்டிருக்க வேண்டும். ராக ஆலாபனையில் ரஞ்சகமான அம்சங்கள் நிறைய. நாயகி போன்ற தாயாதி நிறைந்த ராகங்களை எப்படிப் பாட வேண்டும் என்று நிரூபிக்கும் தன்மை வாய்ந்தவர்.

இந்தக் காலைக் கச்சேரிக்கு லால்குடி பிடில் வாசித்தார்; பொழிந்தார் என்றே வைத்துக் கொள்ளுங்களேன். மணி அய்யரும் லால்குடியுமாகச் சேர்ந்து, பெரியவரை உத்ஸாகித்து உள்ளே இருந்ததை எல்லாம் வெளியே கொண்டு வந்துவிட்டார்கள்.

மதுரை சோமசுந்தரம் நல்ல கனமான சாரீரம் படைத்தவர். வஞ்சகம் இல்லாமல் உழைத்துப் பாடுபடுபவர். சங்கீதத்தில் வீர, தீர, சாகஸங்கள் புரியும் மனப்பான்மை கொண்டவர். அவர் ஷண்முகப் பிரியா விரிவாக நன்றாக அமைந்தது. 'அவுட்டு' சங்கதிகள் நிறையப் போட்டு அட்டகாசம் செய்து விட்டார். பல்லவியில் சாஹித்யத்தைக் கண்டமும், மிஸ்ரமுமாய்



ஸ்ரீ வேணுகோபால், ஸ்ரீ கேதாரநாதன்

அமைத்து அவர் தமக்குள்ள லய ஈடுபாட்டைப் பறைசாற்றிக் கொண்டார். சாகசங்கள் புரியும் போது சறுக்கல்கள் இன்றியமையாதவை.

உஸ்தாத் பிஸ்மில்லாகான் நாதத்தில் மிதப்பவர். அவர் வாசிப்பில் விவகாரமே கிடையாது. அவர் வாசித்த ''மால்கோஷ்'' உயர்தரமாயிருந்தது. ஆனால் வெறும் நாதத்தை எவ்வளவு நாழி கேட்பது? அவர் நாதத்தில் மிதக்கிறார். அவரோடு மணிக் கணக்கில் என்றால் மிதக்க இயலவில்லையே ! என் மூச்சு முட்டுகிறது. கரையேறி விடுகிறேன் !

எம். எல். வஸந்தகுமாரியின் கச்சேரி என்றுமே சோடை போவதில்லை. அவர் சங்கதிகளை அலட்சியமாக உதிர்க்கும்போது சபையோருக்குத்தான் பயமாயிருக்கிறது எங்கேயாவது தவறி விடுமோ என்று. ஆனால் அப்படி ஒன்றும் நேர்ந்து விடுவதில்லை. நிம்மதிப் பெருமூச்சு விடுகிறோம். அவர் 'அடாணா'வும், 'கல்யாணி'யும் மறக்க முடியாத அனுபவங்கள். அந்த ரீங்காரம் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

செம்மங்குடி சீனிவாசய்யர், லால்குடியையும், சிவராமனையும் அணைத்துக் கொண்டு

ஸ்ரீ சிவராமன் — ஸ்ரீ செம்மங்குடி — ஸ்ரீ லால்குடி.



நிகழ்த்திய சங்கீத சாதனை அறுபது வயதில் அவருக்குள்ள இளமையைக் காட்டியது. எல்லாம் பழைய பாடாந்தரம்தான். ஆனால் ஒவ்வொரு தடவை அவர் பாடும் போதும் அவை புது மெருகுடன் ஜொலிக் கின்றன. வஞ்சனையே இல்லாத பாட்டு. சங்கராபரணம் சக்கைப் போடு போட்டார். 'எந்துகு பெத்தல'வில் நிரவலும், ஸ்வரப் பிரஸ்தாரமும் பரபரப்பாக இருந்தது. அவர் ஸ்வரப் பிரஸ்தாரத்தின் வெற்றியின் ரகசியம் என்னவெனில் எல்லாம் சர்வ இலகுக் கோவைகள். ரசிகர்களை ஆகர்ஷித்து விடுகிறது. லால்குடியின் வாசிப்பின் தனி விசேஷம் என்னவெனில், அவர் வாய்ப் பாட்டுக்காரரின் பாணியை ஒட்டியே தமது வின்யாசங்களை அமைத்துக் கச்சேரியைப் பரிணமிக்கச் செய்து விடுவார். அதை அன்றும் செய்தார்.



திரு டி. ஆர். சுப்பிரமணியம்

யாமினி முதல் தடவையாக அகாடமி மேடையில் தோன்றினார். யாமினியைப் போல் யாம் இனி எங்கும் காணோம் என்ற அளவிற்கு அவரது பரதநாட்டியப் பகுதி தெளிவாக இருந்தது. ஜதிஸ்வரமும், ஸ்வர ஜதியும் உசத்தியான அயிட்டங்கள். நல்ல தாளக்கட்டு. அபிநயம் பாவபூர்வமா யிருந் தது. அவள் தங்கை ஜோதிஷ்மதியின் நட்டுவாங்கம் தரமாக இருந்தது. நல்ல நிர்வகிப்பு. அற்புதமாகப் பாடுவதற்கு ஸ்ரீமதி சியாமளா ஸ்வாமி இருக்கும்போது அந்தப் பொறுப்பை அவர்களிடமே விட்டு விடலாம் என்று தோன்றுகிறது. மிருதங்கம் வாசித்த டி. எஸ். சுப்பிரமணியத்துக்கு ஒரு சபாஷ். நல்ல லய நங்கூரம்.

நன்றாக அமைந்திருக்க வேண்டிய வைஜயந்தி மாலாவின் நாட்டியம், நட்டுவ னார் கிட்டப்பாவின் இசையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. என்ன இருந்தாலும் பரத நாட்டியம் பாவ, ராக, தாளந்தானே. எந்த அம்சம் குறைந்தாலும் நிறைவு கெட்டு விடும்.

திருப்பாம்பரம் எஸ். ஷண்முகசுந்தரம் நல்ல சங்கீத பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது சொல்லாமலே விளங்கும். நல்ல கனமான சாரீரம். கார்வையான, தீர்க்க மான பிடிகள். நல்ல தாளப் பிடிப்பு. சந் தேகமில்லாமல் நல்ல எதிர்காலம். கௌரி மனோகரியில் 'ப்ரோவஸமயமிதே' ரம்யமாக இருந்தது. வயலின் வாசித்த குமரேசனும், மிருதங்கம் வாசித்த கே. ஸ்ரீவத்ஸனும் நல்ல சங்கீத பாத்திரங்கள். தேய்க்கத் தேய்க்க நல்ல பிரகாசம் ஏற்படும். கண் பார்வையற்றவனாயிருந்தும் நல்ல சர்வலகு ஞானத்துடன் அட்சரம் பிசகாமல் மிருதங் கம் வாசித்த ஸ்ரீவத்ஸனின் சாதனை பாராட் டுக்குரியது.

குமாரிகள் கே. வசந்தாவும், கே. விஜய லக்ஷ்மியும் பட்டுக் கத்திரித்தாற்போல் பாடினார்கள். சாரீரத்தில் நல்ல ஜிலுஜிலுப்பு. நல்ல சிட்சையும்கூட. முதலில் சற்று சபைக் கோழையாயிருந்தாலும் 'பேகடா' வருவ தற்குள் நன்றாகக் கார்வார் பண்ணிவிட் டார்கள். நீலகண்டசிவனின் 'கடைக்கண்' கடைந்தெடுத்தாற் போலிருந்தது. காந்தா மணி ராகத்தில் இடையில் ஒரு சிறிய குட்டிக்கரணம் இருக்கிறது, அதைச் சரியாக நிர்வகிக்கா விட்டால், துளிக்கூடப் பிசகில் லாமல் அதைப் பாடினார்கள். மிருதங்கம் மாஸ்டர் ஸ்ரீராமனும் வயலின் ஆலந்தூர் நடராஜனும் நல்ல அனுசரணையுடன் வாசித் தார்கள்.

பி. ராஜமய்யரின் பாட்டில் அரியக்குடியின் அம்சங்கள் நிறைய இருந்தன. ஆனால் அகப் பட்ட ஒன்றரை மணி நேரத்தில் 'ஸ்ரீ ஸுப்ர மண்யாய நமஸ்தே'யும் பாடி, குறைத்து, கரைத்து ஸ்வரமும் பாடி, அதன் பிறகு ராகம், தானம், பல்லவியும் பாட வேண்டுமா?

குமாரி வேதவல்லியின் பாட்டு நல்ல உயர்தரமானது, மலருக்கு மணம் படைத் தாற்போல். கரஹரப்பிரியா ராக ஆலா பனை பேஷாக அமைந்தது. நல்ல சுக பாவம். ஸ்ரீமதி ஆர். கமலா வயலினில் நல்ல அனுசரணையாக வாசித்தார்.

டி. கே. ஜயராமனும், திருச்சி சங்கரனும் சேர்ந்து விட்டால் அந்தக் கச்சேரி எங்ஙனம் அமையும் என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். ஒரே லய மயம். ஒரே ஒதுக்கல், செதுக்கல், பதுக்கல் வேலைகள். கல்யாணி ராக ஆலாபனை கன கச்சிதம். 'கணபதே' க்ருதியில் ஸ்வரப் பிரஸ்தாரங் களை ஒரு கை பார்த்தார். திருச்சி சங்கரன் மிருதங்கத்தில் இரண்டு கை பார்த்தார்.

பி. எஸ். நாராயணசாமியின் பாட்டில் நல்ல கனம் உண்டு. பாட மனமுண்டு. அனாவசிய சங்கதிகளை கிடையாது. தோடி ராக ஆலாபனையும், கஜவதன கீர்த்தனையும் இதற்குச் சான்று. ஓரளவு வல்லினம், மெல்லினம் அறிந்து பாட ஆரம்பித்துவிட் டால் அழகாக இருக்கும். இவருக்குப் பிடில் வாசித்த சாலக்குடி நாராயணஸ்வாமி, நிறைய சாத்துக்குடி சங்கதிகள் வழங்

கிறார். வேலுக்குட்டி நாயரின் மிருதங்க வாசிப்பு தரமாயிருந்தது.

உத்தியோகத்திலிருந்து கொண்டு நாதஸ்வரத்தைப் போன்ற கடினமான வாத்தியத்தைக் கையாளுவது பாராட்ட வேண்டிய அம்சம். திருவனந்தபுரம் ஆர். ஜயசங்கர் இதில் நன்கு மெனக்கட்டிருக்கிறார். அவர் வாசித்த கரஹரப்ரியாவில் பிசிறு இல்லை. வாசித்தவரையில் சுத்தமாயிருந்தது.

கே. ஆர். கேதாரநாதனும், எம். ஏ. வேணுகோபாலனும் சேர்ந்து பாடிய கச்சேரியில் நிறைவு இருந்தது. கேதாரநாதனுக்கு நல்ல கனமான சாரீரம். ஆனால் அந்த வசதி வேணுகோபாலனுக்கு இல்லை; அடிக்கடி அலை பாய்கிறது. எனினும் அவரது உழைப்பைக் குறைசொல்ல முடியாது. கல்யாணி ராக ஆலாபனை நல்ல உயர்தரம். இருவருக்குமே ஸ்வரப் பிரஸ்தாரங்களில் நல்ல பிடிப்பு இருக்கிறது. 'ஏதாவுனரா' கீர்த்தனையில் பாடப் பட்ட ஸ்வர ப்ரஸ்தாரங்கள் இதற்கு எடுத்துக் காட்டு. வயலின் வாசித்த சிக்கல் பாஸ்கரனும், மிருதங்கம் வாசித்த ராமநாதபுரம் ராகவனும் தங்கள் கடமையை நன்குணர்ந்து நல்ல பக்கபலம் அளித்தனர். ஆனால் துரித கால ப்ரஸ்தாரங்களில் பாஸ்கரன் இன்னும்



ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணா

தேர்ச்சி பெற வேண்டும். அச் சமயங்களில் சுத்தமத்திமத்துக்கும், பிரதி மத்திமத்துக்கும் வித்தியாசமே தெரியாமல் போய் விடுகிறது.

திரு கே. வி. நாராயணஸ்வாமி ஒரு முதிர்ந்த சங்கீதக் கலைஞர். அரியக்குடியிடம் குருவாசகம் என்றாலும் வெறும் காபி சங்கீதம் அல்ல. தமக்கே வகுத்துக் கொண்ட ஒரு சிறப்புப் பாணி. சம்பிரதாயத்திலிருந்து இம்மியளவும் வழுவாமல், லயத்திலும், நயத்திலும் அபரிமிதமான தேர்ச்சியுடன் பாடும் வல்லமை பெற்றவர். சதஸுக்குப் பிறகு அவர் கச்சேரி சிறப்பாக அமைந்ததென்றால் ஆச்சரியமே இல்லை.

காம்போதி ஆலாபனை அற்புதம். கம்பீரத்திற்குக் கம்பீரமும் சொகுசுக்குச் சொகுசுமாய் அது அந்த ராகத்தின் பல கோணங்களையும் கவர்ந்தது. ஸ்ரீ சுப்பிரமணியாய நமஸ்தே, சித்திர வேலைப்பாடுகளுடன் வாலவாதியில் மூன்றாய்ப் பிரிந்து, ஸ்வரப் பூக்களைச் சூடி, மறுபடி எடுப்பில் கூடி, அழகு பெற்றது. ஓர் ஒப்புயர்வற்ற கலைஞர்; சந்தேகமில்லை.




ஸ்ரீமதி வேதவல்லி

ஸ்ரீமதி எம். எல். வசந்தகுமாரி



வித்வத் சபை கோலாகலம் பத்து நாள் கல்யாணமாக அற்புதமாய் நடந்தேறியது. வித்வான்கள் பலரும் திருவையாற்றுக்கு சீனிவாசக் காலண்டரில் தேதி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.



இரந்து வாழ்வதற்கு அஞ்சிய திருவள்ளுவர் 'முயற்சியை விட்டுப் பிறரிடம் கை நீட்டிப் பிச்சைப் பிழைப்பு பிழைக்கும்படியாக மக்களை ஆண்டவன் படைத்தானானல், அவனே கைநீட்டிப் பிச்சை கேட்டுக் கெட்டுத் திரிய வேண்டும்' என்னும் பொருள்படக் குறள் இயற்றினார் :

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

முயற்சியின்றி இரந்து வாழ்பவர்களின் எண்ணிக்கை புராண காலத்திலேயே உயர்ந்து விட்டதனால்தானோ என்னவோ, ஓங்கி உலகளந்த உத்தமன் கூனிக் குறுகி நிற்கும் வாமன உருவம் தரிக்கும்படியாகி விட்டது! அது மட்டுமா? மாவலி என்னும் அரக்கர் குல மன்னனிடம் மூன்றடி மண் கேட்டுக் கையேந்தி நிற்கும்படியும் ஆகி விட்டது !

மாபெரும் வேள்வி இயற்றி மாவலிச் சக்கரவர்த்தி தன் பொருள் அனைத்தையும் இரப்போர்க்கு ஈந்து மகிழ்ந்தான். யாசகர்களும் தங்களுக்கு வேண்டும் பொருள் வேண்டா முன்னரே கிடைக்கப் பெற்று மகிழ்ச்சியோடு திரும்பினர்.

"இந்தக் குள்ளனுக்கு எதுவும் கொடுக்காதீர்கள். இவன் மோசக்காரன்!" என்று மாவலியிடம் சுக்கிராச்சாரியார் கூறியதைக் கேட்டபொழுது, கூனிக் குறுகி யாசகம் கேட்டு வந்த வாமனனுக்கு எப்படிக் கசந்திருக்கும்? அகமும் முகமும் எப்படிக் குறுகிப் போயிருக்கும்?

'தான் செய்த வினை தன்னையே இப்படிச் சூழும்' என்று தெரிந்திருந்தால்.... இப்படி ஒரு தப்பிதம் செய்திருப்பானா? எப்படியோ மூன்று அடி மண் கேட்டு விட்டான், மாவலியிடம் !

பின்னால் திரிவிக்கிரமனாகி மண்ணையும் விண்ணையும் மாவலியின் தலையையும் அளந்து விட்டான். என்றாலும் கூனிக் குறுகி யாசகம் கேட்டுக் கெட்டலைந்த மாதவனின் நிலையை விளக்கும் குறட் கருத்து எப்படி ?

ஃ ஃ ஃ

கற்பின் இலக்கணமாக வாழ்ந்தவள் கண்ணகி. அந்தக் கண்ணகியின் வாழ்க்கைக்கு இலக்கணமாக அமைந்தது கீழ் வரும் குறள்:

"தெய்வந்தொழாஅள் கொழுநன் தொழுது
எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

பொறுமையைப் பூஷணமாகக் கொண்ட பெண்களுக்குக் கற்பே சிறந்த ஆபரணம். அந்தக் கற்பை உயிரினும் மேலாகப் பேணித் தன் கணவனின் இன்பத்தையே தன் இன்பமாகக் கருதி, தன் வாழ்க்கைப் பயனை மதித்துத் தவ வாழ்க்கை வாழ்ந்தாள் கண்ணகி. அவளுக்குத்தான் வாழ்க்கையில் எத்தனை சோதனைகள் ! அத்தனை சோதனைகளையும் கடந்து வெற்றி காண எத்தனை மனத் திண்மை வேண்டும்? கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெற்றதனால்தானே கண்ணகிக்கு அது கைவந்தது! அவள் பத்தினித் தெய்வமாகவும் உயர்ந்து நிற்க முடிந்தது !

"**வெ**ற்றிக்கு மேல் வெற்றி கிடைத்தால் இடையே உள்ள 'ற்' எகிறி 'வெறி'யாகப் பரிணமித்து விடும் !"

இவ்வுண்மையைச் சகுனியின் முக விலாசம் எப்படித் தீர்மானமாக எடுத்துக் காட்டுகிறது, பாருங்கள் !

நேரான வழியில் பாண்டவர்களை வெல்ல முடியாது என்பதைக் கண்டான் 'சூதும் வாதும் வேதனை செய்யும்' என்பதை உணராத சகுனி. எனவே, துரியோதனனுக்குத் துராலோசனை கூறினான்: "பாண்டவர்களை மெல்லக் கூட்டிச் சூது பொரச் செய்வோம்; அந்த வண்டரை நாழிகை யொன்றிலே—தங்கள் வான் பொருள் யாவையும் தோற்று னைப் பணி தொண்டரெனச் செய்திடுவேன் யான், என்றன் சூதின் வலிமை அறிவை நீ."

மாமன் பேச்சில் மயங்கித் துரியோதனன் திருதராஷ்டிரனைச் சம்மதிக்க வைத்து விதுரனைத் தூது அனுப்பிய பின்னரே மனம் நிம்மதி பெற்றான்.

சூதாட்டத்தில் வெற்றிக்கு மேல் வெற்றி கண்ட சகுனி தன் வாதினாலும், 'வெற்றி இன்னும் இவர் பெறலாகும் காண்' எனத் தூபம் போட்டுத் திரௌபதியையே பணயம் வைக்கத் தூண்டுகிறான், தூண்டிற் பொன்னைக் கட்டி, அதாவது இரும்புக் கொக்கியைக் கட்டி மீனை விழுங்க வைக்கிறவன் போல.

"'தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்;
தருமம் மறுபடி வெல்லும்' எனுமியற்கை
மருமத்தை"

—உணராத சகுனியின் நிலை மட்டுமில்லை ; அவனைச் சேர்ந்த துரியோதனாதியர்களின் நிலையும் அல்லவா, 'தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று' ஆகி விட்டது !

அறைகூவலுக்கு அடிபணிந்து வேண்டா விருப்பாகச் சூதில் பற்றில்லாமல் ஆடிய தர்மர் தோல்விக்கு மேல் தோல்வி கண்டார். அதுவே கடைசியில் வெற்றியாக முடிந்தது. சகுனியோ வெற்றி வெறியில் திளைத்து இறுதியில் தோல்வியே கண்டான்! சூதின் தீமையையும் அதிர்ஷ்டத்தின் அனர்த்தத்தையும் வலியுறுத்தும் திருக்குறள் ஒன்று மாபெரும் காவியம் ஒன்றையே தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் அழகை என்னவென்பது?

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன் விழுங்கி யற்று"


வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூ உம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.
கல்கி வள்ளுவர் மலர் 1969


இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.
கல்கி வள்ளுவர்
மலர் 1969


தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.


அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.
கல்கி வள்ளுவர் மலர் 1969

திருமணம் ஆன கையோடு தன் இன்பங்களை மறந்து துறந்து தன் கணவனை இன்னொருத்தியின் கையில் பிடித்துக் கொடுத்தது. அவன் சொத்தும் சுதந்திரமும் இழந்து ஆசைக் கிழத்தியைப் பிரிந்து திரும்பி வந்த போது இன்முகத்துடன் வரவேற்றது. அவன் தன் வாழ்வில் மீண்டும் வளம் காண வேண்டும் என்பதற்காக மதுரை மாநகரை அடைந்து தன் காற் சிலம்பைக் கழற்றிக் கொடுத்தது. அது அவனைக் கள்வனுக்கிக் காலன் கையில் சேர்ப்பித்தது வரை...அவள் பொறுமைத் தவம் இருந்தாள். அரசனே சுமத்திய அடாத பழியைக் கேட்ட பின்னரே படாத பாடு பட்டுப் பொங்கியது அவள் நெஞ்சம் !

அரசனின் அதிக்கிரமச் செயல்களால் கொதித்தெழுந்த அவளது கற்புக் கனல் மதுரை மாநகரையே எரித்தது. அப்படிப் பட்டவள் தெய்வம் தொழாதவளா ? இல்லை ; தெய்வத்தையே கணவனுக்கி, கணவனையே தெய்வமாக்கித் தொழுதவள்.

கற்புக்கரசி பெய் என்று உத்தரவிட்டால் மழை பெய்யும் என்கிறார் வள்ளுவர். கண்ணகியோ அக்னி பகவானுக்கு உத்தரவிடும் ஆற்றலும் கற்புக்கு உண்டு என்று நிரூபிக்கிறாள்.

எத்தனையோ இன்னல்களைப் பொறுமையாக ஏற்றவளுக்குத் தன் தெய்வமான கோவலனுக்கு ஊறு நிகழவே சினத் தீ கொதித்தெழுந்தது. அதன் வெப்பத்தில் மதுரை மாநகரில் தீ மழையையே பெய்ய வைத்து விட்டாள் !

அந்த அதீத மழையில் மதுரை மாநகரம் எரிந்து சாம்பலாகியது என்று கூறுவதைக் காட்டிலும் மறம் மடிந்து அறம் வளர்ந்தது என்று கூறுவதே பொருந்தும். கற்பின் நல்லாள் தீயை உமிழ்ந்தாலும் அது மக்களை நல்லறத்தில் நாட்டம் கொள்ளச் செய்யும் குளிர் மழையாகத்தானே இருக்க முடியும் ?

ஃ ஃ ஃ

உலகத்தில் தோன்றிய உயிரினங்கள் அனைத்துமே அன்பைப் பிடிப்பாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இவ்வுண்மையை ஈ எறும்பு முதல் எல்லா ஜீவராசிகளிடமும் கண்ட திருவள்ளுவர் 'அன்பின் வழியது உயிர் நிலை' எனக் கூறுகிறார்.

'ஏனைய ஜீவராசிகளைக் காட்டிலும் மனிதன் பகுத்தறிவு படைத்தவன் ஆதலால், அந்த உயிர் நிலையைப் பிடித்து வாழ வேண்டும், அப்படி வாழ்ந்து அன்பே தெய்வம் என்று உணர வேண்டும்; உணர்ந்து உய்ய வேண்டும்.'

இந்தக் கோட்பாடு சான்றோர் அனைவராலுமே ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று.

இந்த அன்பிலே தன்னலம் தலைக்காட்டுமானல், அன்பு மரித்துவிட்டது என்றுதான் பொருள். அன்பு மரித்தபின், இவ்வுடல் 'எலும்பு தோல் போர்த்த உடம்பு'தான்.

தன்னலம் கொண்ட அன்புக்கு எந்தப் பொருளுமே தன்னுடையதாகத் தோன்றும். தன் வாழ்க்கையில் இன்பம் துய்ப்பது ஒன்றே குறிக்கோளாகி விடும்.

இந்த அன்பு விரிந்து பரந்தால் எவ்வுயிருக்கும் ஊறு செய்யத் தோன்றாது. எவ்வுயிரையும் தன்னுயிராகப் பாவிக்கும் மனோ பாவம் தோன்றும். அன்பின் பிரவாகத்தில் தன் உயிரையே விட்டுக் கொடுத்துப் பிற நலம் காணும் பாங்கு வளரும். இதுவே உலகுக்குத் தேவை எனக் கருதி,

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்கிறார் திருவள்ளுவ நாயனார்.

இந்தக் குறளுக்கு ஒரு காவியத்தையே படைத்து விட்டார் சிபிச் சக்கரவர்த்தி.

தமது அரண்மனை நந்தவனத்தில் அமர்ந்து மலரின் அழகை அநுபவித்துக் கொண்டிருந்தவர் உள்ளுறை பொருளான ஆண்டவன், புலன்களுக்குப் புலனாகாத அன்பை ஓடவிட்டு, உலகத்தை ஆட்டிப் படைக்கும் விந்தையை எண்ணிப் பார்க்கலானார்.

அப்பொழுது அவர் மடியில் ஒரு புறா பயந்து அடித்துக் கொண்டு வந்து விழுந்தது. அதன் பரபரப்பில், அதற்கு உயிரின் மீதுள்ள ஆசையும் புலனாகியது ! அடுத்த கணமே அதைத் துரத்திக் கொண்டு ஒரு வல்லூறும் வந்து சேர்ந்தது ! அதன் விழிகளில்தான் எத்தனை பசி, புறாவை அப்படியே கொத்தித் தின்றுவிட !

ஓர் உயிர் இன்னோர் உயிரை வலியச் சென்று மாய்க்கப் புகும் காட்சியைக் காணச் சிபிச் சக்கரவர்த்திக்கு வயிற்றை என்னவோ செய்தது. ''உனக்கு உணவு தானே வேண்டும் ? நான் வேண்டுமளவு தருகிறேன் !'' என்றார்.

''உணவு என்றால்....? எனக்கு இறைச்சி தான் தேவை !'' என்பது போலப் பார்த்தது வல்லூறு.

''ஓ ! பேஷாகத் தருகிறேனே !''

இப்படிக் கூறியவருக்கு யோசனை பிறந்தது. 'எந்த உயிரை மாய்த்து இந்த வல்லூறுக்கு இரையாகக் கொடுப்பது ? மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதும் நாம் எப்படிப் பிற உயிரைக் கொல்வது? அது அன்புடைமை ஆகுமா ?'

இப்படி எண்ணம் ஓடவே, தம் உடலையே தரச் சித்தமாகி விட்டார். புறாவின் அளவுக்குத் தம் மாமிசத்தை வல்லூறுக்குத் தந்துவிடுவதென்று முடிவு செய்தார்.

அவரெதிரே தராசு வந்தது. புறாவை ஒரு தட்டிலும் தம் இறைச்சியை இன்னொரு தட்டிலும் வைத்தார்.

தராசு சமன் எடை காட்டவில்லை. 'உடல் நிறையா பெரிது? உயிர் நிறையல்லவா பார்க்க வேண்டும்?' இவ்வெண்ணம் உதிக்கவே, தாமே தராசுத் தட்டில் உட்கார்ந்து விட்டார்.

அன்புடையவரின் இந்தச்செயலைக் காணப் புறாவும் வல்லூறும் மட்டுமின்றி அவற்றின் உருவம் தாங்கி வந்த இந்திரனும் அக்கினியும்கூடத் தோன்றினர். அதோடு அன்பின் வழியது தோன்றிய அத்தனை உயிர் நிலையும் ஒன்றாகி, 'எல்லாம் ஓர் உயிர்' என்ற பாவனையை உணர்த்தும் வகையில் தோன்றின; தோன்றி அன்பு நீரையும் உகுத்தன.

அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

ஓவியம் : **வினு**
விளக்கம் : **ரா. வீ.**

மகாபாரதம்

• ராஜாஜி •



அபிமன்யுவினால் ஏற்பட்ட நாசத்தைக் கண்டு துரியோதனன் மிகுந்த கோபம்கொண்டு தானே சென்று அபிமன்யுவை எதிர்த்தான். அபிமன்யுவை எதிர்க்க அரசனே சென்றான் என்பதை அறிந்து, துரோணர் துரியோதனனை நான்கு பக்கங்களிலும் காப்பாற்றுங்கள் என்று பல வீரர்களைத் துணைக்கு அனுப்பினார். கொஞ்ச நேரம் சண்டை நடந்தது. பிறகு துரியோதனனைக் கஷ்டப்பட்டு விடுவித்தார்கள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று அபிமன்யு வருத்தப்பட்டான். அரசனுடைய துணைக்கு வந்த மகாரதர்களைப் புறங்காட்டி ஓடும்படி செய்தான்.

அதன் மேல் யுத்த தர்மத்தையும் வெட்கத்தையும் விட்டுப் பல வீரர்கள் ஒன்று கூடித் தனியாய் நின்ற பாலகனைச் சூழ்ந்து கொண்டு ஒரே சமயத்தில் தாக்கினார்கள். பொங்கி வரும் சமுத்திரத்தையும் மணற் கரையானது தடுப்பது போல் அருச்சுனனுடைய குமாரன் அவர்களையெல்லாம் தடுத்து நின்றான். துரோணர், அசுவத்தாமன், கிருபர், கர்ணன், சகுனி, சல்லியன் முதலிய பெரும் தளகர்த்தர்கள் எல்லோரும் தங்களுடைய ரதங்களிலிருந்து கொண்டு அபிமன்யுவைத் தாக்கினார்கள்.

அசுமகன் என்ற ராஜன் ஒருவன் தன் ரதத்தை மாய வேகமாக ஓட்டி அபிமன்யுவின் பேரில் பாய்ந்தான். அபிமன்யு சிரித்துக் கொண்டு அந்தப் பாய்ச்சலைத் தாக்கிப் பாணங்களால் அவனை வதம் செய்தான். பிறகு கர்ணனுடைய கவசத்தைப் பிளந்து புகழ் பெற்ற சூரிய குமாரனும் திணறும் படியான பாணப் பிரயோகம் செய்தான். இன்னும் இவ்வாறே பிரபலமான பல வீரர்கள் அடிபட்டுப் புறங் காட்டினார்கள். அநேகம் பேர் மாண்டார்கள். சல்லியன் நன்றாக அடிபட்டுத் தேரில் மூர்ச்சையடைந்து உட்கார்ந்தான். சல்லியனுடைய தம்பி இதைக் கண்டு அபிமன்யுவை மெய் மறந்த வேகத்தில் எதிர்த்தான். ஆனால் அருச்சுன குமாரன் அவனுடைய தேரைப் பொடிப் பொடியாக்கி இருந்த இடம் தெரியாதபடி செய்து அவனையும் வதம் செய்தான். இவ்வாறு மாமன் வாசுதேவனிடமும் தந்தை அருச்சுனனிடமும் கற்ற அஸ்திரங்களைப் பிரயோகம் செய்து பகைவர்களை மாய்த்த பால வீரனுடைய சௌரியத்தையும் சாமர்த்தியத்தையும் பார்த்துச் சந்தோஷத்தினால் துரோணாச்சாரியாருடைய கண்கள் மலர்ந்தன என்கிறார் முனிவர்.

''இநத அபிமன்யுவுக்கு நிகர் யாருமில்லை'' என்று கிருபரிடம் துரோணர் சொன்னார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த துரியோதனனுக்குப் பொறுக்க முடியாத கோபம் பொங்கிற்று.


ஆசாரியார் அருச்சுனனிடம் வைத்திருக்கும் அன்பினால் அவனுடைய பாலகனைப் புகழ்ந்து கொண்டு அவனைக் கொல்லாமலிருக்கிறார். உண்மையில் அவனை அடக்க வேண்டும் என்று எண்ணினால் அது முடியாதகாரியமா?'' என்றான்.

அதர்ம யுதததில் பிரவேசித்த துரியோதனனை இவ்வாறு அடிக்கடி சந்தேகம் ஏற்பட்டுப் பரிதபிக்கச் செய்தது.

துச்சாதனன், ''இந்த மூடப் பையனை நான் கொன்று தீர்த்துவிடுகிறேன்'' என்று சொல்லிச் சிம்மநாதம் செய்து அபிமன்யுவைத் தாக்கினான்.

துச்சாதனனும் அபிமன்யுவும் தங்களுடைய தேர்களை நானாவித மண்டலகாரங்களில் செலுத்தி வெகு நேரம் போர் செய்தார்கள். முடிவில் துச்சாதனன் அடிபட்டு மூர்ச்சையடைந்து சாய்ந்தான். துச்சாதனனுடைய சாரதி இதைக் கண்டு விரைவில் தேரை ரணகளத்தினின்று விலக்கிச் செலுத்தினான். பலசாலியான துச்சாதனனின் தோல்வியைக் கண்டு பாண்டவ சேனை சந்தோஷமடைந்து முழக்கம் செய்தது.

அதன் பின் அபிமன்யு கர்ணனால் தாக்கப்பட்டு மிகவும் பீடிக்கப்பட்டான். ஆயினும் சுபத்திரா புத்திரன் பரபரப்பில்லாமல் ஒரு பாணத்தைச் செலுத்திக் கர்ணனுடைய வில்லை அறுத்துப் பூமியில் விழும்படி செய்தான். இதைப் பார்த்துக் கர்ணனுடைய சகோதரன் அபிமன்யுவை எதிர்த்தான். அடுத்த கணம் அபிமன்யு செலுத்திய அம்பினால் அவனுடைய தலை அறுபட்டுக் கீழே உருண்டது. அதன்மேல் அபிமன்யு கர்ணனையும் பலமாகத் தாக்கி அவனையும் அவன் சேனைக் கூட்டத்தையும் புறங்காட்டி ஓடச் செய்தான். அதைக் கண்டதும் கௌரவ சேனை ஒழுங்கிழந்தது. ''நில்லுங்கள், நில்லுங்கள்'' என்று துரோணர் எவ்வளவு சொல்லியும் நிற்காமல் கலைந்தது. ஓடாமல் நின்றவர்களை உலர்ந்த காட்டில் வைக்கப்பட்ட நெருப்பைப் போல் அபிமன்யு நாசம் செய்தான்.



81. அபிமன்யு வதம்

தாங்கள் தீர்மானித்திருந்தபடி அபிமன்யு வியூகத்தை உடைத்த பாகத்தில் அவனைப் பின்தொடர்ந்து பாண்டவர்கள் நுழையப் போனார்கள். இதைக் கண்டு திருதராஷ்டிரனுடைய மருமக

னும், மகா பராக்கிரமசாலியும், சிந்து தேசத்து ராஜனுமான ஜயத்ரதன் பள்ளத்தாக்கில் யானை இறங்குவதுபோல் பாண்டவர்கள் மேல் படையுடன் பாய்ந்தான். அவனுடைய தைரியத்தையும் சமயத்துக்குத் தகுந்தபடி யோசித்துச் செய்த சாதுர்யத்தையும் பார்த்த கௌரவ சேனை மறுபடியும் தைரியம் கொண்டது. ஜயத்ரதன் பாண்டவர்களைத் தடுத்த இடத்தில் படை வீரர்கள் பலமாகக் கூடினார்கள். வியூகத்தின் பிளவு மறுபடியும் மூடப்பட்டது. சிந்து ராஜனுடைய வெள்ளிப் பன்றிக் கொடியைப் பார்த்துக் கௌரவ சேனை உற்சாகமடைந்தது. அபிமன்யுவினால் உண்டாக்கப் பட்ட வியூக உடைப்பு அடைக்கப்பட்டு மறுபடியும் நன்றாக ஒன்று சேர்த்துப் பூர்த்தி செய்யப்பட்டது.

யுதிஷ்டிரன் ஒரு பல்லத்தைப் பிரயோகித்து ஜயத்ரதனுடைய வில்லை அறுத்தான். கண் கொட்டுவதற்குள் அவன் வேறு ஒரு வில்லை எடுத்துப் பத்துப் பாணங்களைத் தருமபுத்திரன் மேல் வீசினான். பீமசேனன் ஜயத்ரதனுடைய வில்லையும், தேரின் கொடி, குடை எல்லாவற்றையும் பாணங்களால் நாசம் செய்து பூமியில் தள்ளினான். சிந்து ராஜன் தயங்காமல் மறுபடியும் வேறு வில்லை எடுத்துப் பீமனுடைய வில்லை அறுத்துத் தள்ளினான். பீமனுடைய தேர்க் குதிரைகளையும் வீழ்த்தினான். பீமசேனன் தன் தேரினின்று இறங்கி சாத்யகியின் தேரில் ஏறவேண்டியதாயிற்று.

ஃ ஃ ஃ

இவ்வாறு ஜயத்ரதன் மிகுந்த சாமர்த்தியமாக வியூக உடைப்பை உடனே அடைத்து விட்டுப் பாண்டவர்கள் உள்ளே நுழையாமல் செய்து விட்டான். உள்ளே அபிமன்யு சகாயமற்று நின்றான்.

கௌரவ சேனைக்குள் புகுந்து சுபத்திரா புத்திரன் தன்னை எதிர்த்த வீரர்களையெல்லாம் வீழ்த்தினான். தனியாக நின்ற அவனை எதிர்க்க வந்தவர்கள் அனைவரும் சமுத்திரத்தில் புகுந்த நதிகளைப் போல் இருந்த இடம் தெரியாமல் மறைந்தார்கள். துரியோதனனுடைய குமாரன் லக்ஷ்மணன் என்பவன் மிகவும் காந்தியும் வீரமும் கொண்ட பாலன். அனைவரும் பின் வாங்கியபோது அவன் பயமின்றி அபிமன்யுவை எதிர்க்க வந்தான். அதைக் கண்டவுடன் புறங்காட்டிச் சென்று கொண்டிருந்த பல கௌரவ வீரர்கள் திரும்பி வந்து துரியோதனனுடைய குமாரனுக்குச் சகாயமாக நின்று போர் புரிந்தார்கள். மலை மேல் மழை பெய்வது போல் அபிமன்யுவின் மேல் அம்புகளைப் பொழிந்தார்கள்.

துரியோதனனுடைய மகன் லக்ஷ்மணன் மிக்க பராக்கிரமத்துடன் போர் புரிந்தான். முடிவில் சுபத்ரா குமாரன் எய்த ஒரு பல்லம் சட்டை உரிந்த பாம்பு போல் லக்ஷ்மணனைத் தாக்கிற்று. அழகிய மூக்கும் புருவங்களும் பளபளவென்ற கூந்தலும் குண்டலங்களும் பொருந்திய அந்த வீரன் இறந்து வீழ்ந்தான்.

''ஆ! ஆ!'' என்று கௌரவ சேனையில் துயரச் சத்தம் கிளம்பிற்று.

''இந்தப் பாதகனை அபிமன்யுவைக் கொல்லுங்கள்'' என்று துரியோதனன் உரக்கக் கத்தினான்.

துரோணர், கிருபர், கர்ணன், அசுவத்தாமன், பிருஹத்பலன், கிருதவர்மன் ஆகிய ஆறு மகாரதர்களும் அபிமன்யுவைச் சூழ்ந்து கொண்டார்கள்.

துரோணர் கர்ணனை நெருங்கி, ''இவனுடைய கவசத்தை உடைக்க முடியாது. சரியாகக் குறி பார்த்துக் குதிரைக் கடிவாளங்களை அறுத்து விடு. பின்புறத்திலிருந்து இவன் மேல் ஆயுதப் பிரயோகம் செய்!'' என்று சொன்னார்.

சூர்ய குமாரனும் அவ்வாறே செய்தான். பின்புறத்திலிருந்து விடப்பட்ட அம்புகளால் அபிமன்யுவின் வில் அறுக்கப்பட்டது. குதிரைகளும் சாரதியும் கொல்லப்பட்டு அபிமன்யு தேரிழந்தவனாகவும் வில்லற்றவனாகவும் செய்யப்பட்டான். க்ஷத்திரிய ஸௌர்யத்தின் அவதாரமே போல் அபிமன்யு அந்தச் சமயம் கத்தியும் கேடயமும் கையில் எடுத்துக் கொண்டு நின்றான். அவன் அப்போது காட்டிய சாமர்த்தியம் யுத்த களத்திலுள்ள வீரர்களுக்கெல்லாம் வியப்பு உண்டாக்கிற்று. தன்னை ஒன்று போல் கூடி எதிர்த்த அனைவரையும் கத்தி சஞ்சாரம் செய்து தாக்கினான். தரையில் கால் வைத்து நிற்காமல் ஆகாயத்தில் பறந்து யுத்தம் செய்பவனைப் போலவே காணப்பட்டான். துரோணர் அபிமன்யுவின் கையிலிருந்த கத்தியை ஒரு பாணத்தால் வெட்டினார். கர்ணன் கூர்மையான அம்புகளைச் செலுத்தி அவன் கேடயத்தைச் சிதற அடித்தான்.

உடனே அபிமன்யு ரதத்தின் சக்கரத்தைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு சுதர்சனதாரியான மகா விஷ்ணுவைப் போலவே விளங்கினான். தேர்ச் சக்கரத்திலிருந்த புழுதி அவன்

உடல் மேல் படிந்து அவன் சுபாவமான அழகு இன்னும் அதிகமாகப் பிரகாசித்தது.

இரண்டாவது ஜுனர்த்தனனைப்போல் அபிமன்யு ஒரு க்ஷண காலம் பயங்கரமாகப் போர் நடத்தினான். பிறகு சேனை முழுவதும் அவனைத் தாக்கி அவன் கையிலிருந்த தேர்ச் சக்கரம் துண்டு துண்டாகச் செய்யப்பட்டது. துச்சாதன புத்திரன் அச்சமயம் கதையை எடுத்துக் கொண்டு அபிமன்யுவைத் தாக்க வந்தான். அபிமன்யுவும் கதாயுதம் எடுத்துக்கொண்டு இருவரும் ஒருவரை யொருவர் அடித்துக் கொண்டு போர் தொடங்கினார்கள். இருவரும் கீழே விழுந்தார்கள். பிறகு துச்சாதன குமாரன் முதலில் எழுந்தான். சுபத்திரா குமாரன் எழுந்து கொண்டிருக்கும் சமயத்தில் அவன் தலையில் துச்சாதனனுடைய குமாரன் கதாயுதத்தால் அடித்தான். பல போர்களை ஒருவனாக இருந்து எதிர்த்து யுத்தம் செய்த சிரமத்தினால் மயக்கமடைந்திருந்த அபிமன்யு அந்த அடிக்கு இரையாகி உயிரிழந்தான்.

''தாமரை ஓடையை யானை கலக்குவது போல் பெரும் கௌரவ சேனையைக் கலக்கிய சுபத்திரா புத்திரனைப் பலர் சேர்ந்து கொண்டு இவ்வாறு கொன்றார்கள்'' என்று சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குச் சொன்னான். ''அவ்வாறு கொல்லப்பட்ட அபிமன்யுவை உம்மைச் சேர்ந்தவர்கள் சூழ்ந்துகொண்டு காட்டு வேடர்களைப் போல் கூத்தாடிச் சந்தோஷப்பட்டார்கள். உண்மை வீரர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் ஒழுகிற்று. ஆகாயத்தில் பறந்து வட்டமிட்டுக்கொண்டிருந்த பறவைகள் 'இது தருமமல்ல! தருமமல்ல!' என்று அலறிச் சொல்லுவது போல் சப்தமிட்டன.

கௌரவ வீரர்கள் அபிமன்யு வதத்தைப் பற்றி மகிழ்ச்சி யடைந்து சிம்மநாதம் செய்தார்கள். திருதராஷ்டிரனுடைய மகன் யுயுத்ஸு மட்டும் மிகுந்த கோபம் கொண்டவனாக, ''இது தகாது. யுத்த தர்மத்தை அறியாத க்ஷத்திரியர்களே! வெட்கப்படுவதற்குப் பதில் சிம்மநாதம் செய்கிறீர்கள். பெரிய அதர்மத்தைச் செய்து விட்டு நெருங்கி நிற்கும் அபாயத்தையும் அறியாமல் மூடர்களைப் போல் சந்தோஷப்படுகிறீர்கள்!'' என்று சொல்லி ஆயுதத்தை எறிந்து விட்டு யுத்த அரங்கத்திலிருந்து விலகினான். யுயுத்ஸு தர்மத்துக்குப் பயந்தவன். அவன் பேச்சு கௌரவர்களுக்குப் பிடிக்கவில்லை.

82. புத்திர சோகம்

''துரோணரையும் அசுவத்தாமனையும் துரியோதனனையும் யுத்தத்தில் ஜெயித்துப் பகைவர்களின் கூட்டங்களை எரித்த வீரன் தீர்க்க சயனத்தை அடைந்து விட்டான். துச்சாதனனைப் புறங்காட்டி ஓடச் செய்த சூரனே! நீ இறந்து விட்டாயா? எனக்கு இனி என்னத்திற்காக வெற்றி? என்னத்திற்காக ராஜ்யம்? அருச்சுனனுக்கு நான் என்ன சமாதானம் சொல்லுவேன்? கன்றை இழந்த பசுவைப் போல் புத்திரனைக் காணாமல் துக்கப்படும் சுபத்திரைக்கு என்ன சமாதானம் சொல்லுவேன்? அர்த்தமில்லாத வார்த்தைகளை எப்படிச் சொல்லுவேன்? பேராசை கொண்டவனுக்கு மதி அழிந்து போகிறது. தேனுக்கு ஆசைப்பட்டுக் கீழே இருக்கும் பெரும் பள்ளத்தைப் பாராமல் நாசம் அடைவதைப் போல் வெற்றிக்கு ஆசைப்பட்டுச் சுகங்களுக்குரிய பாலனை — அன்புக்குரிய குழந்தையை— யுத்தத்தில் முன்னால் தள்ளினேன். என்னைப் போன்ற மூடன் உலகத்தில் இல்லை. அருச்சுனன் இல்லாத சமயத்தில் அவனுடைய அருமைப் புதல்வனைக் காப்பாற்றாமல் கொன்றவனானேன்.''

இவ்வாறு பாசறையில் யுதிஷ்டிரன் புலம்பினான். சுற்றி உட்கார்ந்திருந்த வீரர்கள் அபிமன்யுவின் சௌரியத்தையே நியானித்தவர்களாகப் பேச்சில்லாமல் இருந்தார்கள். பொறுக்க முடியாத துக்கம் மேலிட்டு யுதிஷ்டிரன் தவித்துக் கொண்டிருந்த சமயங்களில் பாண்டவர்களுக்கு ஆசாரியரும் பிதாமகருமான வியாசர் பிரஸன்னமாகி ஆறுதல் சொல்லுவது வழக்கம். இந்தச் சமயமும் வந்தார்.

யுதிஷ்டிரன் அவரைப் பூஜை செய்து ஆசனத்தில் இருத்தி, ''மனத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள எவ்வளவு முயன்றாலும் என்னால் முடியவில்லை'' என்று அவரிடம் சொன்னான்.

''மிகுந்த புத்திமானும், சாஸ்திரங்களெல்லாம் படித்தவனுமான நீ இவ்வாறு மதிமயங்கிச் சோகத்துக்கு இரையாகக் கூடாது. மிருத்யுவின் தன்மை உனக்குத் தெரியாதா! பாமரர்களைப் போல் நீயும் சோகத்துக்கு இரையாகித் திகைக்கலாகாது'' என்று வியாசர் தருமபுத்திரனைச் சமாதானப் படுத்தினார். (தொடரும்)



இதுவும் அதுவும்





கொறிப்பதற்குக் கொஞ்சம்..

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி' என்கிற பழமொழியை மாற்றியமைத்தாக வேண்டும். இப்போது உண்மையில் ஊருக்கு இளைத்தவர்கள் சர்க்கார் ஊழியர்கள்தாம். ஏற்கனவே, சர்க்கார் உத்தியோகம் என்றால் வேலையில்லாமல் வெட்டிப் பொழுது போக்குவதற்கான ஒரு வாய்ப்பு என்றும் அரசாங்க ஊழியர்கள் அத்தனை பேரும் ஆபீசில் கால் நீட்டிப் படுத்துக் குறட்டை விடுகிறவர்கள் என்றும் ஓர் அபிப்பிராயம் இருந்து வருகிறது. இந்த நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல் 'அரசாங்க ஊழியர்கள் ஒரு வருடத்தில் 213 நாட்களுக்கு மேல் வேலை செய்வதில்லை!' என்று சுட்டிக் காட்டிப் பேசியிருக்கிறார் ஓர் அமைச்சர். மீதி நாட்களில், விடுமுறை போக மற்ற நாட்களில் அவர்கள் விடுமுறை எடுத்துக் கொண்டு விடுகிறார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது 'ஆகா! என்ன அநியாயம் இது!' என்று நினைக்கத் தோன்றுகிறதல்லவா? கொஞ்சம் பொறுங்கள்.

தனியார் நிறுவனங்கள் சிலவற்றில் வேலை பார்க்கும் ஊழியர்கள் ஒரு வருடத்தில் சர்க்கார் ஊழியர்கள் வேலை செய்யும் அளவுக்குக் கூட (நான் கணக்கில்தான்!) வேலை செய்வதில்லை என்பது அமைச்சருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. உதாரணமாக, எனக்குத் தெரிந்த ஓர் அயல் நாட்டுக் கம்பெனியில் சனியும் ஞாயிறும், வாராந்தர விடுமுறை நாட்கள். இவை தவிர, பண்டிகைகளுக்கென ஒரு வருடத்தில் பதினெட்டு நாட்கள் லீவு விடுகிறார்கள். இதுவும் போதாது அல்லவா?..... அங்கே வேலை பார்ப்பவர்களுக்கு வருடத்துக்கு 12 நாட்கள் 'காஷுவல் லீவு'ம் 15 நாட்கள் 'சிக்' லீவும், 30 நாட்கள் 'பிரிவிலேஜ்' லீவும் கொடுக்கிறார்கள். இவ்வளவுதானா?... ஒருவர் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகி விடுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த மாதிரி

ஆசாமிகளுக்கு இரண்டு மாத லீவு அரைச் சம்பளத்தில் கொடுக்கிருர்கள்.

இப்படிப்பட்ட ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் ஓர் ஊழியர் தமக்கு இருக்கும் எல்லா லீவையும் ஒரு வருடத்தில் தீர்த்துக் கட்டி விடுவதென்று சபதம் செய்து கொள்கிருர் என்று வைத்துக் கொள்வோம். அவர் எத்தனை நாட்கள் ஆபீசுக்கு மட்டம் போடுவார் என்று ஒரு சின்னக் கணக்குப் போட்டுப் பார்ப்போம்:

சனிக்கிழமைகள்: 52; ஞாயிற்றுக்கிழமைகள்: 52; காஷுவல் லீவ்: 12 சிக் லீவ் 15; பிரிவிலேஜ் லீவ் 30; அதிகப்படி லீவ் 60. ஆக, மொத்தம்: 221 நாட்கள். மீதி இருக்கும் 144 நாட்களிலும் அவர் எத்தனை நாட்கள் முழு மனத்துடன், ஒழுங்காக வேலைசெய்துவிட்டுப் போகிருர்? எட்டு மணி நேரம் வேலை என்ருல் அதிகப்பட்சம் ஆறு மணி நேரம்தான் அவரால் உழைப்பதற்கு முடியும்; (அல்லது அவர் தயார்) அப்படியாஞல் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் அலுவலகக் கணக்குப்படி கால் நாள் — அவர் வேலை செய்வதாகப் 'பாவலா' பண்ணிக் கொண்டிருப்பார். இப்படிப் பார்த்தால் அவர் வேலை செய்கிற 144 நாட்களில் 36 நாட்கள் கோவிந்தா! மீதி 108 நாட்களில் எத்தனை நாட்கள் அவர் காலையிலோ அல்லது மாலையிலோ 'பெர்மிஷன்' கேட்டுக் கொண்டு போவார்?... அலுவலகக் 'காண்டீனி'ல் எத்தனை மணி நேரம் விரயமாக்குவார்?... நண்பர்கள், உறவினர்களை ஆபீசுக்கு வரச் சொல்லி விட்டு, அவர்களுடன் எத்தனை மணி நேரம் அரட்டை அடித்துப் பொழுது போக்குவார்?...

தம்முடைய மனைவியின் நளபாகத் திறமை குறித்து, கடைக் குட்டிப் பயலின் அதிமேதாவித்தனம் பற்றி, வீட்டுப் புறக்கடையில் பிஞ்சு விட்டிருக்கும் வெண்டைச் செடியின் செழுமை பற்றி வர்ணிக்க அவர் எடுத்துக் கொண்ட நேரம் என்ன?... பொடி அல்லது வெற்றிலை பாக்குப் போடவோ, காரக் கடலை அல்லது பாப்கார்னை மேஜை இழுப்பறைக் குள் வைத்துக் கொண்டு கொரித்துத் தள்ளவோ, அவருக்குப் பிடித்த மொத்த அவகாசம் எத்தனை?..... போனில் நண்பர்களைக் கூப்பிட்டு ஊர் வம்பு பேச அவர் ஒதுக்கும் மணிகள் எத்தனை?...

இப்படியெல்லாம் கணக்குப் போட்டுப் பார்த்தால் அவர் ஒரு வருடத்தில் ஒரு மாதம்கூட உருப்படியாக வேலை செய்திருக்க மாட்டார் என்பது தெரிய வரும்.

கடுகைப் போல் மதிக்கப்பட்டாலும் சர்க்கார் உத்தியோகத்தில் ஒரு காரம் உண்டு. அதுதான் அதிகாரம்! அந்த ஊழியர் என்னதான் இருநூற்றுச் சில்லறைக்கே தாளம் போடும் கடைநிலைக் குமாஸ்தாவாக இருக்கட்டுமே, அவர் மட்டும் வருமான வரி இலாகாவிலோ, சுங்க வரி ஆபீசிலோ காவல் துறையிலோ, உள் துறையிலோ, ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு அலுவலகத்திலோ இருப்பவராஞல், பெரிய பெரிய நிறுவனங்களின் பட்டே பட்டே ஆசாமிகளும் அல்லவா இவர்களது தயவை நாடி, பேனுக் கீறலை மதித்து, நிற்க வேண்டி வரும்?...

அந்தக் காலத்திலெல்லாம் எல்லோருமே தங்கள் பிள்ளைகளுக்குச் சர்க்கார் உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதில்தான் குறியாக இருந்தார்கள். தனிப்பட்ட நிறுவனங்களை விட இந்தச் சர்க்கார் உத்தியோகங்கள் புளியங் கொம்பாகக் காட்சியளித்ததென்ருல் அதற்குக் காரணம் மேலே சொன்ன 'காரம்' மட்டுமல்ல, தனியார் நிறுவனங்களில் நிரந்தரத் தன்மை கிடையாது என்ற ஓர் அபிப்பிராயமும் நிலவி வந்தது. ஆஞல் இப்போது நிலைமை தலை கீழாக மாறிவிட்டிருக்கிறது. கம்பெனி வேலைகளுக்கு முட்டி முயன்று, தோல்வி யடைந்த பிறகே சர்க்கார் உத்தியோகத்துக்குப் போவதைப் பற்றிப் பலர் யோசிக்கிருர்கள்.

இரண்டு துறைகளிலுமே முதுகு எலும்பு முறிய உழைப்பவர்களும், சுகவாசிகளாக இருப்பவர்களும் உண்டு. ஆஞல் அது ஏன் சர்க்கார் ஊழியர்களை மட்டும் குறை சொல்கிருர்கள் என்பதுதான் புரியவில்லை.

-எஸ். வி. ஆர்.



நேற்றும் நாளையும் 1

குடித்தன வாழ்க்கை



மாறுதல்களின் ஊடே உருவாகி வருவது இந்தத் தலைமுறை. அன்னிய ஆட்சியிலிருந்து சுயாட்சிக்கும், அணாவிலிருந்து காசுக்கும், படியிலிருந்து லிட்டருக்கும் தெரிந்து மாறி வருகிறோம் என்றால் — தெரியாமலேயே, மௌனமாக, சமூக—பொருளாதார அந்தஸ்துகளிலும் சிந்தனைகளிலும் பழக்கங்களிலும்கூட எவ்வளவோ மாறி வருகிறோம். இவற்றைப் பூரணமாக உணர வேண்டும் என்றால் ஒரு தலைமுறை இடைவெளியுள்ள இரண்டு பேரிடம் பேசிப் பார்க்கலாம்! 'நேற்று' எப்படி இருந்தது என்பதை அறிந்து, 'நாளை' எப்படியிருக்கும் என்பதையும் ஓரளவு உணரலாம்!

வாழ்க்கையின் பல துறைகளையும் இந்த இரண்டு விதக் கோணங்களில் காண உதவும் நோக்கு இந்தப் புதிய பேட்டி வரிசை.

ஸ்ரீமதி கோமதி சேஷாத்ரிநாதன்:

தொளாயிரத்துப் பதினாலிலே கல்யாணம் ஆனபோது எனக்குப் பன்னிரண்டு வயசு. அவருக்கு இருபத்து மூணு வயசு. கல்யாணமான இரண்டு பெரிய மைத்துனர்கள், கல்யாணமாகாத சின்ன மைத்துனர் எல்லாரும் ஒன்றாக இருந்தோம். நான் வந்து பதினோரு வருஷம் வரை என் மாமியார் தான் குடும்பத்திலே எல்லாம் கவனித்துக்கொண்டார்.

திருவல்லிக்கேணியிலே ஒரு பெரிய வீடு மொத்தமாக இருபது ரூபாய்க்கு எடுத்திருந்தோம். அதிலே பாதி வீட்டை வாடகைக்கு விட்டிருந்தோம். உளுத்தம்பருப்பும் துவரம் பருப்பும் ரூபாய்க்கு ஆறு படி. குண்டு விறகு நாலணா. 32 படி அரிசி மூட்டை நாலு ரூபாய். மாதச் சாமான் பத்து இருபது ரூபாய்க்கு வாங்கினால் போதும். நிறையப் பால் கிடைத்தது. சவரன் பதிமூணு ரூபாய்தான். அப்போது நாங்கள் குடித்தனம் பண்ணியது என்ன பெரிசு? இப்போதான் கெட்டிக்காரத்தனம் வேணும்.

மயிலாப்பூர் மாட வீதியிலே பெரிய வீட்டுக்குக் குடித்தனம் வந்தோம். இங்கேயும் ஒன்று இரண்டு குடித்தனங்களை எங்கள் கூட வைத்திருந்தோம். குளிக்கும் அறை முதலியன எல்லாருக்கும் ஒன்றுதான். நிறையப் பேர் இருந்தாலும் ஒற்றுமையாக இருந்தோம்.

விறகு விலை கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக் குண்டு பத்து அணா ஆயிற்று. கரி விலையும் ஏற ஆரம்பித்தது.

இவர் இந்தியன் மெடிகல் சர்விசில் சேர்ந்து இரண்டு வருஷங்கள் வெளி தேசம் போனார். அதற்கு ஒரு மாசம் முன்னாடியே பல்லாவரத்தில் பயிற்சிக்குப் போயிருந்தார். கப்பல் ஏறுவதற்கு முதல் நாள்தான் தாயாரிடம் சொன்

னார். என்னிடமும் அன்றுதான் சொன்னார். வெளி தேசத்திலே இருக்கும்போது என் மாமியாருக்குப் பத்துப் பவுனும் எனக்குப் பத்துப் பவுனும் கிடைக்கும்படி அனுப்பி வந்தார்.

என் மாமியார் ரொம்ப ஆசாரம். 'பிரைமர் ஸ்டவ்' வைத்திருந்தோம். அதையே ஏற்க மாட்டார். இவர் கப்பல் ஏறுவதற்கு முன்னால் தாயாரிடம் சத்தியம் பண்ணினார். காந்தி மாதிரி—மது, மாமிசம், மாதர் விஷயமாக.

உத்தியோகம் பார்த்தபோது நிறையத்தான் சம்பாதித்தார். செலவழித்தபடி இருந்தோம். ஏதாவது விசேஷமாக ஆசைப்பட்டால், ''அது இல்லாமல் நடக்காதா?'' என்று கேட்டு என்னை அடக்கி விடுவார்.

முதலில் ஒரு மோட்டார் சைக்கிள், சைட்-காருடன் வாங்கினார். அப்புறம் மோட்டார் கார் வாங்கினார். மூன்று பெண்களுக்குக் கல்யாணம் பண்ணினோம்.

வீட்டிலே எப்போதும் யாராவது உறவுக்காரர்கள் இருப்பார்கள். ஒரு சமையல்காரனை வீட்டோடு வைத்துக் கொண்டிருந்தோம். அவன் சம்பளத்தை அவன் பேரில் பாங்கியில் போட்டு வந்தோம். சில குழந்தைகள் எங்கள் வீட்டில் வாரச் சாப்பாடு சாப்பிட்டார்கள். எத்தனையோ குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டி வந்தோம். ஒரு பள்ளிக்கூட வாத்தியாரின் பெண் குழந்தைக்கு வரன் பார்த்துக் கல்யாணமே செய்து வைத்தோம். உறவுக்காரர் கல்யாணங்களுக்கும் நிறைய உதவி செய்தோம். வீட்டில் எப்போதும் அன்னதானம்தான். அந்தத் தர்மந்தான் இப்போது நலைகாக்கிறது.

திருமதி அம்புஜம் பத்மநாபன்:

நான் கிராமத்துப் பெண். எனக்குப் பன்னிரண்டு வயதானபோது வெளி உலகம் தெரியாது. குழந்தைகள் எதிரே எங்க அம்மா சந்தோஷம் துக்கம் எதையும் காட்டிக்கமாட்டாள். வீட்டிலே இருக்கிறது இல்லாதது எங்களுக்குத் தெரியாது. ஆனால் இன்றைய குழந்தைகள் ராக்கெட் யுகத்திலே இருக்கிறார்கள். இவர்களைப் பார்த்துக்கொள்ள, நாமும் ரொம்பத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கு.

வயசுப் பெண் பள்ளிக்கூடத்திலே, ''வீட்டிலே சீக்கிரம் வரச்சொன்னா'' என்று புறப்பட்டுப் போகிறாள். நேரம் கழித்து வீட்டுக்கு வந்து''பள்ளிக்கூடத்திலே ஸ்பெஷல் கிளாஸ்'' என்கிறாள். உண்மை வீட்டுக்கும் தெரியாது; பள்ளிக்கூடத்துக்கும் தெரியாது. இதுமாதிரி எங்க வட்டாரத்திலே நடந்ததைக் கேள்விப்பட்டதும் என் பெண் படிக்கும் பள்ளிக்கூடத்தில் பெற்றோர் சங்கம் ஆரம்பித்திருக்கிறோம். தாய்மாரும் ஆசிரியைகளும் அடிக்கடி சந்தித்துக் கொள்ள ஏற்பாடு செய்கிறோம்.

இதற்கெல்லாம் ஏது நேரம் என்கிறீர்களா? ஏன் இல்லாமல்? நேரம் இல்லாமலா ஹிந்தி படித்து, விசாரத் பரீட்சை எழுதி, இந்த வாரம் ''சால்வை'' வாங்குகிறேன்! மூன்று குழந்தைகளுக்கு அப்பாவான இவரே பிரைவேட்டாக டில்லி யூனிவர்ஸிடி டிகிரி வாங்கி விட்டாரே!

சமையல் வேலை என்றால் முன்னைப் போல் நாலு மணி நேரமா ஆகிறது? காஸ் அடுப்பு வைத்திருக்கிறேன். குழந்தைகளும் கூடமாடச் செய்யும். பாத்திரங்களை வேலைக்காரி துலக்குகிறாள். ஆனால் வேலைக்காரியை நம்மைப் போல ஒருத்தி என்றுதான் நடத்துகிறேன். நாம் செய்ய வேண்டிய வேலையைத்தானே பாவம், அவள் செய்கிறாள்.

குழந்தைகள் ஆடம்பரப் பொருள்களுக்கு ஆசைப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. ''எங்க வீட்டிலே காட்ரெஜ் வாங்கினா. எங்க வீட்டிலே டேப் ரிகார்டர் இருக்கு'' என்றெல்லாம் யாராவது சொன்னால், நம்ம வீட்டிலேயும் வாங்கணும் என்று குழந்தைகள் கேட்டு விடுகிறார்கள்.

குழந்தைகளை ஆளாக்கி விடுகிறோம். படிப்புச் சொல்லி வைக்கிறோம். அப்புறம் அவர்கள் சாமர்த்தியம். பெண் குழந்தைகளுக்குப் பதினெட்டு வயது ஆகும்போது கிடைக்கும்படி சிறு தொகை இன்ஷுர் பண்ணியிருக்கிறோம்.

இங்கிலீஷ் கம்பெனியிலே முப்பதைந்து வருஷமா இவர் வேலை பார்க்கிறார். வரவுக்கும் செலவுக்கும் சரிதான். செலவோடு செலவு என்று நினைத்துச் சீட்டுச் சேர்த்தால் ஏதாவது சாமான் வாங்க முடிகிறது. இப்படித்தான் பாத்திரம் வாங்குகிறேன்.

குழந்தைகள் டிரஸ்ஸிலே ஏராளமாப் பணம் போடுவதில்லை. பளிச்சென்று வருஷத்துக்கு நாலு புது செட் எடுத்துத் தருவோம். அடுத்த வருஷம் அதை வீட்டிலே இருக்கும் போது போட்டுக் கொள்வார்கள். அப்புறம் அதைக் கொண்டு பாத்திரம் வாங்கிவிடுவேன். தேங்காய்க்காரனோடு பேரம் பேசுவதில் கூட ரொம்ப 'சைகாலஜி' பார்க்க வேண்டியிருக்கிறது. அடுத்த வீட்டில் மிகவும் குறைந்த விலை கேட்டதற்காக எரிச்சலோடு வருவான். நானும் குறைவான விலை கேட்டால் திட்டுவான். அனுதாபமாகவும் பக்குவமாகவும் கேட்டால் சரியான விலைக்குக் கொடுத்துச் சிநேகமாகப் பேசிவிட்டும் போவான்.

ஒவ்வொரு குடும்பப் பெண்ணும் ஓர் இடிதாங்கி என்று அடிக்கடி நான் சொல்லுவேன். இவா அவா சொல்வதெல்லாம் நம்மைப் பாதிக்க விடக் கூடாது. உறவுக்காரர் ஒருத்தரைப் பத்தி ஒன்று சொல்லுவார். வெளியே சொல்ல முடியாத சில கஷ்டங்களும் வரும். எல்லாவற்றையும் நமக்குள்ளேயே இடிதாங்கியைப்போல் அழுத்தப் புதைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஆசாரமாக இருக்கத்தான் எல்லோரும் பழகியிருக்கிறார்கள். ஆனால் சுத்தமான சாணம் பட்டணத்திலே எங்கே கிடைக்கிறது? 'டெட்டால்' போட்டுத்தான் கழுவுகிறேன்.

பேட்டி: அம்பி ஆசிர்வாதம்

அடுத்த பேட்டி: **வேலை பார்க்கும் பெண்மணி**


சந்திரா குழம்பிப்போய்ப் பேசினாள்.
பார்த்தன் ஸார்! பாலுவுடைய தோழன் ஒருவன் இரண்டு வருஷத்துக்கு முன்னால் டி.எஸ்.ஸி. வாங்கிக் கொண்டு பம்பாய்க்குப் போனான். அவன் அப்பாவுக்கு அங்கு மாற்றலாகி விட்டது!
கடிதத் தொடர்பு உண்டா அவர்களுக்கு இடையில்?
007 பாலு
கதை: குமரன் படம்: விஜயா
உண்டு! எனக்குக் கூட அது அவ்வளவாகப் பிடிப்பதில்லை. சந்திரனின் சிநேகம் உனக்கு வேண்டாம் என்று பாலுவிடம் சொல்லுவேன். ஆனால் அவன் ரொம்பப் பணக்காரனானதால் பாலுவுக்கு அவனிடம் ஒரு பிரமை!
இதோ பாருங்க! பாலு தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் தன் நண்பனைப் பார்க்கப் போவான். பம்பாயில் அவனுடனே தங்கவும் செய்வான்.
எனக்கு அவன் விலாசத்தைக் கண்டு பிடித்துத் தாருங்கள்!
சரிதான்! பயமில்லை நிச்சயம் பாலு கிடைப்பான். தாங்க்யூ சந்திரா!
அதே சமயத்திலேதான் பாலு ஒளிந்திருந்த ஜாம்போ பம்பாய் விமான நிலையத்தில் தரை தட்டியது.
கதவுகள் திறக்கப்பட்டுப் பிரயாணிகள் கீழே இறங்கினார்கள். பெட்டிகள் வைக்கப்படும் இடத்தினுடைய கதவு திறந்தது.
இரண்டு பெட்டிகள் இறக்கப்படும் வரை பதுங்கி இருந்த பாலு மெள்ள வெளியே வந்து ஒரு பெட்டியைத் தானே இறக்கிக் கொடுத்தான்.
பக்கோ! பக்கடோ! ஜல்தி!


அதிர்ஷ்டப் பெட்டிகள் கைமாறி வைத்துக்குரிய வாகனத்தில் அடுக்கப் பட்டன. பெட்டிகளை இறக்கி வைத்த போர்ட்டர்கள் சந்தேகக் கண்ணோடுதான் பாபுவைப் பார்த்தார்கள். ஆனால் பாபு அவர்களைப் பேசவிடாமல் செய்து வாயடைத்தான்.
பெட்டிகளை எல்லாம் இறக்கியானதும் பாபு தானும் கீழே இறங்கி வேகமாக நடக்க ஆரம்பித்தான்.
அதோ பாபு!
நிற்கச் சொல்லியும் பாபு நில்லாததைக் கண்டு ஒரு போர்ட்டருக்குச் சந்தேகம் வலுப்பட்டது. அவன் விரைந்து வந்து பாபுவின் தோளில் கை வைத்ததும்....
....பாபுவின் நாக் அவுட் ஒன்று அவனுக்குப் பதிலாகக் கிடைத்தது!
திருமாறி விழுந்தவன் தன்னை சுதாரிப்பதன், விழிப்படைந்த மற்றவர்கள் செயல்படுமுன் பாபு மின்னலைப் பாய்ந்து முன் வாசலை அடைந்தான்.
விமான நிலையக் கட்டிடத்தின் பின்புறம்....
சோர்! சோர்! பக்கடோ, சோர்!
கட்டிடத்தின் முன்புறம்...
டாக்ஸி, சலோ!
தொடரும்....

''ஐயா, கண்டக்டரே! ஒரு நிமிஷம்..''

''இந்த பஸ் புறப்பட இன்னும் பதினைந்து நிமிஷம் ஆகுங்க.''

'' அது தெரிந்துதான் உம்மகூட ஒரு நிமிஷம் பேசலாம்னு....''

''ஏதாவது கம்ப்ளெயிண்டுங்களா?...? அப்படீன்னு நீங்க....''

''இல்லை! கம்ப்ளெயிண்டுக்கு இல்லே! காம்ப்ளிமெண்டுன்னுகூட வைச்சுக்கலாம்! வள்ளுவர் வகுத்த குறளின் அடிப்படையிலே வாழணும்னு பல பேர் நினைக்கிறதோட நின்னுடறாங்க. நீங்க என்னடான்னு உங்க வேலை நேரம் முழுதும் குறளோடேயே வாழறீங்க! நம்ப தமிழக அரசாங்கம், சர்க்கார் போக்குவரத்து பஸ்களிலே குறளடிகளைப் பொறித்து வைத்திருப்பதைத்தான் சொல்றேன்! அதற்காக உங்களைப் பாராட்டலாம் அல்லவா?''



திரு ராதாகிருஷ்ணன்


பேட்டி: திரு பாபு, திரு சுதர்சனம்

போக்குவரத்தில் வள்ளுவர்

''ஓ, அதைச் சொல்றீங்களா? ஆனால்....''

''என்னங்க, உங்களுக்குச் சந்தேகம்....?''

''சந்தேகம் ஒண்ணும் இல்லீங்க....! இப்போ வேலைக்கு வந்து சேருகிற கண்டக்டர்கள் எல்லாருமே ஓரளவு நல்லா படிச்சு பாஸ் பண்ணி வந்திருக்கிறவங்கதான். சில்லறை எண்ணவும் டிக்கட் கிழிச்சுக் கொடுக்கவும்தான் தெரியும்னு சொல்ற கண்டக்டர்கள் காலம் இல்லை. ஆனாலும், எல்லாருக்கும் டிரான்ஸ்போர்ட் பஸ்களிலே எழுதியிருக்கிற எல்லாக் குறள்களுக்கும் அர்த்தம் தெரியுமான்னு கேட்டா தெரியாதுன்னுதான் நான் சொல்வேன். சில சமயங்களில் பாசஞ்சர்களுக்குக் கோபம் வர்ற போது, 'என்னையா! குறளை மாத்திரம் எழுதி வச்சுக்கிட்டாப் போதுமா? அதன்படி நடக்க வேண்டாமா?'ன்னு கூச்சல் போடறாங்க.. 'எங்களுக்குப் புரியலேன்னு' சொல்ல முடியுமா? வாயை மூடிக்கிட்டு டிக்கெட் கிழிச்சுக் கொடுத்துக்கிட்டே இருப்போம். சில பாசஞ்சர்கள் ஆர்வத்தோடே, எங்கிட்டே நிதானமாப் பொருள் கேட்பாங்க. அப்போ சிரிச்சு மழுப்பிடுவோம். வேறே என்ன நாங்க செய்யறதுங்க?''



''கண்டக்டர், டிரைவர்களுக்குக் குறள் வகுப்புக்களை அப்பப்போ நடத்தி, பஸ்களிலே எழுதியிருக்கிற குறள்களையாவது தெளிவுபடுத்தலாமில்லையா?''

''அது நடக்கிற விஷயமில்லீங்க! அவங்கவங்க டியூட்டி நேரம், இருக்கிற இடத்தின் தூரம், இதெல்லாம் ஒத்து வராதுங்க! அதுக்குப் பதிலா, இந்த பஸ் குறள்களுக்கெல்லாம் கொஞ்சம் தெளிவாக எங்களுக்கெல்லாம் புரியறாப்போல விளக்கம் எழுதி, கையடக்கமாக ஒரு புத்தகம் தயாரிச்சு அரசாங்கத்திலே கொஞ்ச விலைக்கோ, இல்லை இலவசமாகவோ விநியோகம் பண்ணினாங்கன்னு நல்லா இருக்கும். எங்களுக்கும் புரியும். மத்த பாசஞ்சர்களுக்கும் முடிஞ்ச அளவு புரிய வைப்போம்.''

''நல்ல யோசனைதான்! உங்க பேரு?''

''என் பேரு எம். பாபு. என் கூட வர டிரைவர் பேரு சுதர்சனங்க!''

''என்ன மிஸ்டர் சுதர்சனம்! உங்க அபிப்பிராயம் என்ன?''

''நம்ப கண்டக்டர் பாபுதான் சொல்லிட்டாரே கச்சிதமாக. சில குறள்களுக்கு எனக்கு



பொங்கல் விழா

தமிழகத்தில் விவசாயிகளின் தனிப்பெரும் திருவிழா வாகத் திகழ்வது பொங்கல். ஜெர்மனியிலும் 'பொங்கல்' திருவிழா கொண்டாடப்படுகிறது. இதனை "அறுவடைத் திருவிழா" என்கிறார்கள். அக்டோபர் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று "அறுவடைத் திருவிழா"வை ஜெர்மானி யர்கள் சிறப்புடன் கொண்டாடுகிறார்கள். நல்ல பருவநிலை காரணமாகக் கோதுமை, பழங்கள், காய்கறிகள் அமோகமாக விளைச்சலாகி விருப்பதற்காக, இயற்கை அன்னைக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாகும். அன்று பெண்கள் அழகிய ஆடையணிந்து, ஆனந்த நடனமாடுவதுண்டு. (யூ. பி. எஸ்.)

அர்த்தம் தெரியும். பல குறள்களுக்குத் தெரியாது. இந்த பஸ்ஸிலே எழுதியிருக்காங்களே, 'உடம்பா டிலாதார் வாழ்க்கை'ன்னு ஆரம்பமாகிற குறளுக்கு அர்த்தம் புரியலே."

"வணக்கம், பாபு! கதர்சனம்!"

"வணக்கமுங்க..."

இதுபற்றி சர்க்கார் பஸ் போக்குவரத்துக் காரியாலயத்தைச் சேர்ந்த பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு தீனதயாளனைச் சந்தித்துக் கேட்ட போது. "அவங்க சொல்றது வாஸ்தவம்தான். ஆனால் புத்தகங்களை அச்சடித்து விநியோகம் பண்ணு வதை விட அந்தந்தக் குறள் அடியில் பொருளைச் சுருக்கமாகச் சிறிய எழுத்தில் முடிந்தால் ஒரு வரி யில் எளிமையாக அந்தந்த பஸ்களில் எழுதி வைக் கலாம். பிரயாணிகள் யாரையும் கேட்காமல் தாங்களாகவே புரிந்து கொள்ளலாம். ஆனால் இதற்குச் செலவு ஆகும். நிதிப் பகுதி கவனிக்க வேண்டிய விஷயம்" என்றார் அவர்.

சென்னை நகர பஸ்களில் பிரயா ணம் செய்யும் ஆயிரக்கணக்கானோரில் ஒருவர் என்ற முறையில் அயனாவரம் பகுதியைச் சேர்ந்த திரு ராதா கிருஷ்ணன் குறள் வரிகள் பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறுகிறார்:

"பஸ்களில் தீட்டப்பட்டிருக்கும் குறளடிகளைக் காணும்போது உள்ளத் தில் உவகை தோன்றுகிறது. உண்மை. நான் கலாசாலையில் குறள் படித் திருக்கிறேன். எனக்குப் பொருள் விளங்குகிறது. ஆனால் சாதாரண மக்களுக்கு எல்லாக் குறளடிகளுக்கும் பொருள் புரியுமா என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்லுவேன். இதற்குத் தெளிவுரையும் எழுது கிறார்கள் என்று வைத்துக் கொள்ளு வோம். அப்புறம் வெளி மாநிலக் காரர்கள் - தமிழ் மொழி தெரியாத வர்கள், 'உங்கள் பஸ்களில் என்ன எழுதி வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்பார்கள். ஆகவே, ஆங்கிலத்தி லும் விளக்கம் எழுதப்பட வேண்டும். இல்லா விட்டால் வெளி மாநிலக் காரர்களுக்குப் புரியாது.

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று

என்ற குறளையே எடுத்துக் கொள்ள லாமே. இதற்கு என்ன பொருள்? உட்பகை உள்ளவர்களுடன் சேர்ந் திருப்பது சிறு குடிசைக்குள் பாம் போடு வசிப்பதைப் போல எந்த நிமி டத்திலும் அபாயத்தை உண்டாக் கக் கூடியது என்பதுதான்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்து இந்தக் குறளைப் பார்த்துக் கொண்டே போகிறோம். டிரைவருக்கு ஏதோ அவசரம். கண்களை மூடிக்கொண்டு அசுர வேகத்தில் ஓட்டுகிறார் என்று வைத்துக் கொள்வோம். எந்தக் கணத்தில் எங்கே மோதல் ஏற் படுமோ என்று அஞ்சுகிறோம். இந்தக் குறளுக்குப் பொருள் தெரிந்தவர்கள் அந்த டிரைவரையே பாம்பாக நினைத்து நடுங்குவார்கள். உட்பகை விஷயத்தை விட்டுவிடுவார்கள்!

பொதுமக்களுக்கு வாழ்க்கைக் கட மைகளை நினைவூட்டும் சுமார் பத்துப் பதினைந்து குறள் பாக்களை மாத்திரம் பொறுக்கி, அவைகளை எளிய தமிழ், ஆங்கில விளக்கங்களுடன் எல்லாப் பஸ்களிலும் பொறிப்பது வள்ளுவ ருக்கு நாம் செலுத்தும் காணிக்கை யாகும். ஆயிரத்து முந்நூற்று முப்பது பேருந்திகளில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களையும் எழுதுவ தென்றால் ஆதாயம் எழுத்துக்களை எழுதும் பெயின்டருக்குத்தானே தவிர, மக்களின் எண்ணங்கள் உயர வேண்டும் என்கிற நோக்கத்துக்கு அல்ல."

– கோமதி ஸ்வாமிநாதன்

கரும்புக் குறள்!

தமிழழகன்



தங்கப் பிழம்பாய், தகதகத் தகாயமாய்,
மூங்கி வெளிவரும் முழுமணிப் புதையலாய்
வானின் கீழே வட்டப் பரிதி
தானே எழுந்து தாவுமுன் காலை!

முன்னிருள் வானில் முழுக்க இரவெலாம்
மின்னிக் கிடந்த மென்பொடித் துகள்தாம்
காலையில் உதிர்ந்து காண்பன போலும்
கோல வெண்மணல் கொஞ்சு முற்றத்தில்
பரணி அடுப்பில் பானையும் புதிதாய்க்
குறள் நெறி உழவன் கொள்ளை மகிழ்வொடும்
பொங்கல் இட்டுப் பொங்குக என்று
மங்கலக் குரவை மணிச் சொல் முழக்கினன்!


கண்ணில் எழுச்சியும் கருத்தில் உணர்ச்சியும்
பண்ணில் மலர்ச்சியும் பால் போல் பெருகும்
அன்னவன் முன்னே, அவன் குலக் கொழுந்தாம்
சின்னஞ் சிறுவன் செங்கரும் பொன்றை
ஏந்தி வாயில் இட்டுக் கடிப்பதில்
சாந்தியும் தவழச் சார்ந்திருந்தான்.

கரும்பை அவன் வாய் கடிக்கக் கடிக்கப்
புறம்பாய்ச் சா(று) அவன் பூ விதழ் மார்பெலாம்
வழிய வழிய வளமுழுக் காட்டிற்று!
விழியில் கூர்ந்திதை வேடிக்கை பார்த்தவன்
சிந்தையும் எங்கோ சென்று படர்ந்தது!
சந்தைக் கரும்புச் சாற்றில் அவன் மகன்
இன்றுடல் குளித்தான். இதைக் காண்பதற்கே
அன்றவன் குளித்தான். அதுவே வியர்வை!

உழைக்க இறங்கும் ஒவ்வொரு நாளும்
மழைக்குள் நனையும் மரம்போல், வேர்வை
அரும்பு கட்டிப்பின் அருவியாய்க் கொட்ட
விரும்பி அதைக்கை விரல்களால் வழித்துத்
தூர எறிந்து, தொடர்ந்தே உழைப்பில்
சேரக் கருத்தும் செலுத்திய தெல்லாம்
சிந்தையிற் படமாய்ச் சிரித்து விரிந்தது!

விந்தை தான் கரும்பில் வெளிவரும் சாறு
வெண்ணிறம் ஆயினும் விளைச்சல் கரும்போ,
எண்ணிறச் செம்மை ஏறிக் கிடந்தது.
உடலின் குருதியே உழைப்பில் திளைத்துப்
படலின் மிசைப்பூம் பனி போல் வியராய்
வெளிவரும் உண்மையை விளக்கிச் சென்றது!
தெளிவுற உணர்ந்தான், தெய்வக் குறளினை;
!

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார். மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்!'



தெய்வமானவர்

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோவிலுக்கு நேர் வடக்கே அரை மைல் தூரத்தில் இருக்கிறது திருவள்ளுவ நாயனார் ஆலயம்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்ற வாக்குப்படி திருவள்ளுவருக்கே எழுந்த கோவில் போலும். கோவில் எவ்வளவு புராதனமானது என்பதற்கு இலக்கிய சரித்திர ஆதாரம் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

திருவள்ளுவ நாயனாருக்கும் வாசுகி அம்மைக்கும் தனித் தனியே சந்நிதிகள் உள்ளன. தென்புறம் இருப்பது பஞ்சமூர்த்தி சந்நிதி. வடபுறம் நவக்கிரக பிரதிஷ்டை. சைவ ஆகம விதிப்படி இரண்டு கால பூசை நடத்துகின்றனர், திருப்பாப்புலியூர் ஞானியார் மடத்துச் சீடர்கள். அவர்களில் ஒருவரான வீரசைவர் குமாரஸ்வாமி, ''திருவள்ளுவரின் அஸ்திமீது எழுப்பிய சமாதியே இந்தக் கோவில்'' என்று தெரிவிக்கிறார்.

திருவள்ளுவ நாயனார், வாசுகி அம்மையின் அழகிய உற்சவ மூர்த்தங்கள் ஆண்டுதோறும் வீதி புறப்பாடு காணும் நான்கு விசேஷ தினங்கள்: அவதார தினமான மாசி உத்திரம்; மகா சமாதி யடைந்த வைகாசி அனுஷம்; சித்திரை ஆண்டு விழா; கபாலீசுவரரின் அறுபத்து மூவர் விழா நாள். இந்த நாட்களில் சமாராதனைகளும் நடப்பதுண்டாம். மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் விசேஷ அபிஷேக அலங்காரம் செய்து வைக்க ஓர் உபயம் இருக்கிறது.

வாசுகி அம்மன் சந்நிதி கோபுரத்தில் திருவள்ளுவரின் இல்லற வாழ்க்கை நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. பெற்றெடுத்த ஆதி—பகவன் குழந்தையை மயிலை இலுப்பைத் தோப்பில் விட்டுப் போனதாகப் பரம்பரை வரலாறு. கோயில்முன் மண்டபத்தை ஒட்டிப் பல்லாண்டுகளாக இருந்த ஒரு பழைய இலுப்ப மரம் இப்போது செப்புக் கவசம் அணிந்துள்ளது.

ஹிந்து அறநிலையப் பாதுகாப்புக்கு உட்பட்ட இந்த ஆலயம் பூந்தோட்டமும் மலர்ச் சோலையும் நிறைந்த விஸ்தாரமான மனையில் அமைந்துள்ளது. எளிமையும் தூய்மையும் நிறைந்த இந்த ஆலயத்தை ஒட்டி ஒரு கல்யாண மண்டபம் எழுப்பும் முயற்சியும் தொடங்கப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வரைகூட வாரந்தோறும் குறள் வகுப்புகள் நடந்து வந்த இந்தக் கோவிலில் மக்கள் அதிகம் வரக் காணோம். கபாலீசுவரர் கோவில் வரை வரும் 'டூரிஸ்ட் பஸ்'களை இங்கேயும் திருப்பி விடலாமே?

—டி. எஸ். வி.

பிற மொழிகளில் திருக்குறள்

முதன் முதலாக ஆங்கிலத்தில் திருக்குறள் வெளிவந்தது 1794ல். அதைத் தொடர்ந்து இருபத்திநாலு ஆங்கில நூல்கள் தரமான முறையில் பிரசுரமாகியுள்ளன.

பதினாறும் நூற்றாண்டின் இறுதியிலேயே மலையாளத்தில் திருக்குறள் எழுதப்பட்டு விட்டது. இதனைச் சென்னை சர்வகலாசாலை நூலக நிர்வாகி திரு எஸ். ஆர். ரங்கநாதன் கண்டுபிடித்தார். இது தவிர மலையாளத்தில் திருக்குறளின் மூன்று மொழி பெயர்ப்புக்கள் உள்ளன.


லத்தீனில் பெஸ்கி பாதிரியார் குறளைப் பெயர்த்துள்ளார். 1856லும் 1865லும் வேறு இரு மொழி பெயர்ப்புகள் வெளியாகியுள்ளன.

பிரெஞ்சு மொழியில் குறள் பற்றியும் குறளின் மொழிபெயர்ப்பாகவும் ஒன்பது நூல்கள் உள்ளன.

ஜெர்மன் மொழியில் நான்கும் சமஸ்கிருதத்தில் நான்கு நூல்களும் இருக்கின்றன, வள்ளுவம் பற்றி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் அறத்துப் பாலை சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்க ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர் திருவிதாங்கூர் மகாராஜா ஆயில்யம் திருநாள் ஆவார்.

தெலுங்கில் ஏழு புத்தகங்களும் ஹிந்தியில் ஐந்து புத்தகங்களும் குறளை எடுத்துரைக்கின்றன.

குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பிற மொழிகளாவன: பெங்காலி, மராத்தி, ரஷ்யன், பிஜி, சிங்களம், பர்மிய மொழி, மலே, குஜராத்தி, கன்னடம், உருது. சீனம் ஆக மொத்தம் பதினெண்பது மொழிகளில் வள்ளுவர் வாழ்கிறார்!



அம்மி மிதித்து, அருந்ததி பார்த்துப் பூங்காவில் நுழையும் இல்லற தம்பதி களுக்கு, வசிஷ்டரும் அருந்ததியும் மட்டும் ஆதரிசத் தம்பதிகள் அல்ல; வள்ளுவரும் வாசுகியும் கூடப் பிறர் பார்த்துப் பின்பற்ற வேண்டும் என்ற அளவுக்கு வாழ்ந்து வழி காட்டியவர்கள்.

கரம் பற்றிய நாள் முதலே கணவருக்கு அன்னம் படைக்கும் பொறுப்பு மனைவியைச் சார்ந்து விட்டது.

வள்ளுவர் பின்னைப் பிராயம் முதலே, கலத்துச் சோறு கீழே சிந்தாமல், சுத்தமாகச் சாப்பிட்டுப் பழகியவர்.


தமக்கு வாய்த்த மனைவி அமுது படைக்கும்பொழுது சோற்றை எப்படி இறைப் பாளோ என்று கவலை கொண்டார். எனவே, தமது இலைக்கருகில் நீருடன் ஒரு பாத்திரமும் ஊசியும் வைக்குமாறு பணித்தார். அன்னப் பருக்கை கீழே சிதறினால் ஊசியினால் குத்திப் பாத்திரத்தில் போட்டு விடலாம் என்ற எண்ணமே இப்படிக் கூறியதற்குக் காரணம்.

ஏன், எதற்கு என்று எதிர்ப் பேச்சுப் பேசிப் பழக்கப்படாத வாசுகியம்மை யார் கணவரின் ஆணையை அப்படியே பின்பற்றினார்.

கணவருக்கு முன் மஞ்சள் குங்குமத்தோடு பூவுலகிலிருந்து விடைபெற்றார் கற்பின் நல்லாளான வாசுகியம்மையார்.

அவரது பிரிவினால் வருந்திய வள்ளுவர் ஒருநாள் மனம் திறந்து கூறினார்:

'' அன்னம் படைப்பதில் அலட்சியம் காட்டிச் சிந்தினால், அவளுக்கு அசட்டுப் பட்டம் கட்ட வேண்டும் என்று முன்கூட்டியே பாத்திரமும் ஊசியும் இலைக் கெதிரே அவளைக் கொண்டே வைக்கச் செய்தேன். என் கருத்தை அவள் எப்படிப் புரிந்து கொண்டாளோ, தெரியவில்லை. ஊசிக்கும் பாத்திரத்துக்கும் வேலை வைக்காமல் என்னையே அசடாக்கிச் சென்று விட்டாள்!''



திருமணம் புரிந்து கொண்டு இல்வாழ்க்கையின் நற்பயனை அநுபவித்து வந்த வள்ளுவரை அணுகி, அவர் நண்பர் ஒருவர் கேட்டார்:

"நானும் திருமணம் செய்துகொள்ள விழைகிறேன். எனக்கு வாய்க்கும் மனைவி எப்படிப்பட்டவளாக இருந்தால், என் வாழ்க்கை இன்பம் பயக்கும்?"

'கற்பென்னும் திண்மை உண்டாகப் பெற' வேண்டும். 'நிறை காக்கும் காப்பே தலை'யாக அமைந்திருக்க வேண்டும் என்றெல்லாம் அவர் உபதேசம் செய்யவில்லை.

வாசுகியும் தாமும் நடத்திய 'வாழ்க்கைத் துணை நலம்' என்னும் அதிகாரத்தையே நாடகமாக்கி நடித்துக் காட்டி விட்டார்!

அப்பொழுது கொல்லைக் கிணற்றில் தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தாள் வாசுகி.

வள்ளுவர் வாய் திறந்து அவள் பெயரைச் சொல்லி அழைக்கவில்லை; கையைச் சொடுக்கினார். அந்த ஒலி கேட்டு அவள் திரும்பினாள். பார்வையினாலேயே அவளைத் தம் அருகே வருமாறு அழைத்தார்.

அடுத்த கணமே தண்ணீர் இழுப்பதைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு வாசுகி கணவன் அருகில் ஓடோடி வந்தாள்.

அப்படி அந்தரத்தில் விட்டு வந்ததும் மட மடவென்று தண்ணீர்க் குடம் கிணற்றுக்குள் அல்லவா இறங்கியிருக்க வேண்டும்? ஆனால் என்ன ஆச்சரியம்! அவள் எந்த நிலையில் விட்டுச் சென்றாளோ, அப்படியே நின்றது!

'கற்பைப் பூஷணமாகக் கொண்டவளின் பேச்சை மழை மட்டும் கேட்கும் என்ப இல்லை. அவள் இயக்கியபடி தெய்வமே கூட ஆடும்.'

இவ்வுண்மையைச் சொல்லாமல் சொல்லி விளங்க வைத்தார் வள்ளுவர்.

கல்கி வள்ளுவர்
மலர் 1967



திருக்குறளாட்சி

ம.பொ. சிவஞானம்

திருக்குறள் அறம் — பொருள் — இன்பம் என்னும் முப்பால்களைக் கொண்ட முழு நூலாகத் திகழ்கின்றது. வேத காலம் தொட்டு இந்த விஞ்ஞானக் காலம் வரை சமயவாதிகள் வழி வழி போதித்து வந்த அறவுரைகளை அறத்துப் பாலில் காண்கின்றோம். தமிழினத்துக்கே உரியதாய்க் கருதப்படும் ஐந்திணை ஒழுக்கங்களை இன்பத்துப் பாலில் காண்கின்றோம். இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள பொருட் பால் முழுக்க முழுக்க அரசியல் சாத்திரமாகத் திகழ்கின்றது.

முதற் பாலிலே ஞானியாகவும் இறுதிப் பாலிலே களவியலும் கற்பியலும் போதிக்கும் இலக்கியப் புலவராகவும் காட்சி அளிக்கும் வள்ளுவர் இடையில் உள்ள பொருட்பாலிலே மாபெரும் அரசியல் மேதையாக அறிமுகமாகின்றார். பொருட்பாலிலே வள்ளுவர் போதிக்கும் அரசியல் அவர் கண்ணால் கண்ட நன்னெறிகளைத் தொகுத்தும், அவர் காண விரும்பிய நல்லறங்களைக் கலந்தும் படைத்தளித்த ஒரு புதிய ஆட்சியாகும். இத்தகைய ஓர் ஆட்சியைத்தான் ராமராஜ்யம் என்று காந்தியடிகளும் கூறியிருக்க வேண்டும்.

தனிமனிதன் வாழ்க்கையிலே ஒவ்வொரு மனிதனுக்கும் கடமையுண்டு, உரிமையுமுண்டு. ஆனால் உரிமை என்பது அசல் பொருளன்று; கடமையின் முடிவிலே பிறப்பது. கடமை நிறைவு பெறாத இடத்து உரிமை தோன்றாது. கடமையைச் செய்யாதவன் உரிமை பேசுவானேல், அது பிறர் உரிமையைப் பறிப்பதாகவே முடியும். இதுதான் பொருட்பாலின் சாரம்.

வள்ளுவர் பொருட்பால் முழுவதிலும் அரசன், அமைச்சர், படை வீரர் ஆகியோரின் கடமைகளை விளக்குகின்றார். ஆனால் அவர்களுக்குள்ள உரிமைகளை ஒரு சிறிதும் கூறினாரில்லை. கடமைகள் கால மாறுதலுக்கேற்ப மாறாதவை. காலம் மாறினும் மாறாத ஒன்றையே கடமை அல்லது தர்மம் என்கிறோம். கால மாறுதலுக்கேற்ப மாறக்கூடியது உரிமை. அதனால் மாறாத தர்மத்தைக் கூறி மாறும் தன்மை உடைய உரிமையைக் காலத்தின் கையில் விட்டுவிட்டார்.

அரசனுக்குரிய கடமைகளை ஒன்று விடாமல் கூறிய வள்ளுவர், அவர் எந்த வருணத்திலிருந்து வரவேண்டும், அரச பதவி வழி வழி வருவதா இல்லையா, முடிசூட்டு விழா எப்படியெல்லாம் நடைபெற வேண்டும் என்பனவற்றைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. நீதி வேறு நியதி வேறு. நீதிகளைக் கூறி நியதிகளை விட்டுவிட்டார். அதனால்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறட்பாக்களும் உயிரோடு வாழ்கின்றன. அத்துடன் உலக நாடுகளிலெல்லாம் வாழ்கின்றன. உரிமை வருணத்துக்கு வருணம் நாட்டுக்கு நாடு மாறுதல் அடையும். கடமை அப்படியல்ல. இதனால்தான் ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்றார் பாரதியார். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் கடமைகளை வற்புறுத்துவதைப் போல் உரிமைகளையும் வற்புறுத்துகிறது. இதிலிருந்து வள்ளுவர் சிறிது மாறுபடுகின்றார்.

வள்ளுவர் காலத்திலும் பிற்காலத்திலும் மன்னனைத் தெய்வமாகக் கருதும் மரபு இருந்திருக்கிறது. அதனால் கொடுங்கோலர்களும் தெய்வத்தின் நிலையில் வைத்துக் கும்பிடப்பட்டிருக்கிறார்கள். 'திருவுடை மன்னனைக் காணில் திருமாலைக் கண்டேனே' என்னும் வாக்கே இதற்குச் சான்று. வள்ளுவர் பழமையைப் பகைத்துப் புதுமையைத் திணிப்பவர் அல்ல. பழையன கழித்துப் புதியன புகுத்தும் பண்புடையவர். அதனால் மன்னன் தெய்வத்துக்குச் சமம் என்ற கருத்தை மறுக்காமல் ஒரு நிபந்தனை போட்டு ஏற்றுக் கொள்கிறார்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்

குடிமக்களுக்கு முறை செய்து நல்வாழ்வு அளிக்காத வேந்தன் தெய்வமாக மாட்டான் என்ற பொருளும் அதில் தொக்கி நிற்கிறதல்லவா? இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரான பாரதியார் தமது புரட்சித் தமிழிலே இந்தக் குறளுக்கு விளக்கம் தருகிறார். அது, ''பேயரசு செய்யின் பிணம் தின்னும் சாத்திரங்கள்'' என்பதாம். வள்ளுவரும்,

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்

என்கிறார்.

இதன் பொருள், அரசு அல்வழிப்பட்டால் சாத்திரிமார் சாத்திரங்களை மறப்பர், சத்தியம் வாழ்விழக்கும் என்பதாம்.



அறத்துப் பாலிலே புலால் உண்ணாமை, பிறர் இல் விழையாமை போன்ற தனிமனிதர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களையெல்லாம் கூறிய வள்ளுவர், கள்ளுண்ணாமையை மட்டும் பொருட்பாலிலே வைத்துள்ளார். ஆம், பஞ்சமா பாதகங்களிலே மற்ற நான்கு பாதகங்களை அறத்துப் பாலிலே வெறுத்துரைத்தவர், ஐந்தாவதான கள் குடியை மட்டும் அரசியலிலே சேர்ப்பானேன்? மற்ற தீய வழக்கங்களெல்லாம் தனி நபர்களுடைய உரிமை தவறாகப் பயன்படுத்தப்படுவதன் விளைவுகளாகும். அதனால் உபதேசத்தின் மூலமே அவற்றை ஒழிக்க வேண்டும் என்கிறார். ஆனால் குடிப்பழக்கம் ஒன்றை மட்டும் ஆட்சி தண்டத்தின் மூலம் தவிர்க்க வேண்டும் என்கிறார். இந்நாளில் சிலர் போதைப் பழக்கம் தனி நபரின் உரிமை என்றும், அதனை உபதேசத்தின் மூலமாக அன்றி சட்டத்தின் மூலமாகத் தவிர்க்கக் கூடாதென்றும் வாதாடுகின்றனர். இது வள்ளுவர் காணும் அரசியலிலே அங்கீகரிக்கத் தக்கதன்று.

வள்ளுவர் அமைச்சரைத் தேர்ந்தெடுக்கும் முறை பற்றி மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். மன்னராட்சிக்கே யன்றி இன்றைய மக்களாட்சிக்கும் பொருந்தும் வகையில் கூறியுள்ளார். ஒருவர் அரசன்பால் அழுத்தமான அன்பும் பக்தியும் கொண்டவராக இருக்கலாம். ஆனால் இந்தப் பண்புகளுக்காகத் தகுதியற்றவனை அமைச்சனாக்கிவிடக் கூடாது என்பதனை,

காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்

என்ற குறட்பாவில் வலியுறுத்துகின்றார். தன்பால் பற்றுடையவன் பக்தியுடையவன் என்பதற்காக அமைச்சுக்குத் தகுதியற்ற ஒருவனை அமைச்சனாக்குவது பேதைமைகள் எத்தனை உண்டோ அத்தனையும் மொத்த வடிவில் செய்வது போலாகும் என்கிறார்.

மனைவி, மக்கள் சுற்றம் இல்லாதவனையும் அமைச்சனாக்கக் கூடாது என்பது வள்ளுவர் அரசின் கொள்கை.

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி

என்ற குறள் இதற்குச் சான்று.

தனக்குப் பின்னே தான் விட்டுப் போகும் வாரிசு இல்லாமையாலும், பாவத்துக்கு அஞ்சியும் புண்ணியத்தை விரும்பியும் தனக்கு ஆலோசனை கூறும் இல்லாள் இல்லாமையாலும் தனி மரம் போன்ற மனிதன் பழி பாவங்களுக்கு அஞ்சாமல் செயல்படுவானாம். அவனிடம் நாடாளும் பொறுப்பும் சேர்ந்து விட்டால் நாசத்துக்குக் கேட்கவா வேண்டும்?

'பற்று இலர் நாணார் பழி' என்ற வாசகம் இந்த விஷயத்தில் வள்ளுவருக்கு இருந்த கொள்கைப் பிடிப்பை நன்கு காட்டுகிறது.

சகல தகுதிகளையும் பெற்ற ஒருவனை அமைச்சனாக்கிய பின்னர் அதற்குரிய அதிகாரங்கள் அனைத்தையும் அவனுக்கு உரிமையாக்க வேண்டும். அதாவது அன்றாட நிர்வாகத்திலே அரசன் தலையிடக் கூடாது என்கிறார் வள்ளுவர். இதனை,

வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்

என்ற குறளால் அறிகின்றோம். அமைச்சனுடைய தகுதிக்கும் திறமைக்கும் மதிப்பளித்த பின்னர் அவனிடம் ஒப்புவிக்க வேண்டிய இலாகாவைப் பற்றியும் அரசனுக்கு அறிவுரை வழங்குகிறார் வள்ளுவர்.

தலைமுறை தலைமுறையாகப் போர்முனையே கண்டறியாதவனிடம் பாதுகாப்புக்குரிய அலுவல்களை ஒப்புவிப்பதும், என்ன செய்தேனும் பொருள் திரட்டிவிட வேண்டும் என எண்ணும் தன்னலக்காரனிடம் நிதி இலாகாவை ஒப்புவிப்பதும் பொருத்தமற்ற செயல் தானே?

இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்

என்ற குறளிலே அமைச்சர்களுக்குப் பொறுப்புக்களைப் பிரித்துத் தருவதிலே அரசனுடைய கடமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

அரசாங்கம் தொழில் துறையில் ஆற்ற வேண்டிய கடமையைக் கூறுமிடத்து, இலாபத்தை எதிர்பார்த்து அந்த லாபம் கிடைக்காமல் முதலுக்கே மோசம் வரும் வகையில் தொழில் துறையில் செயல்படக் கூடாதல்லவா என்கிறார். இதனை,

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்

என்ற குறளிலே காண்கிறோம். இந்நாளில் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கும் மேதைகள் இந்தக் குறட்பாவை நினைவில் கொள்வது நலம்.





வள்ளுவர் முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். ஆயினும் குடியாட்சிக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒரு நல்லாட்சியைச் சுட்டிக் காட்டியுள்ளார். அரசன் என்று வரும் இடங்களிலெல்லாம் ஆட்சித் தலைவன் என்று பொருள் கொண்டால் இன்றைய மக்களாட்சிக்குப் பொருட்பால் முழுவதும் பொருந்தக் காண்கின்றோம்.

அரசனுக்குத் தேவைப்படும் திறமைகளைக் கூறுமிடத்து கல்வி கேள்வி நாவன்மை ஆகிய வற்றைப் பட்டியல் போட்டுத் தருகிறார். இங்கே வள்ளுவர் வற்புறுத்தும் கல்வி வெறும் மொழி அறிவு அன்று. லோகாயதத்தோடு பொருந்தும் பொருளறிவு மட்டுமன்று. தர்மங்களோடு பொருந்தும் சாத்திரக் கல்வியையும், சாத்திர அறிவையும் வள்ளுவர் வற்புறுத்துகிறார் என்றே கொள்ள வேண்டும். இதனைத் திருமந்திரம் தெளிவுபடுத்துகிறது:

"கல்லா அரசனும் காலனும் நேர் ஒக்கும்"

என்ற வாக்கிலே பழி பாவங்களுக்கு அஞ்சும் ஆன்மிகக் கல்வி பயிலாத ஆட்சித் தலைவனும், உயிர்க் குலத்தை அழிக்கும் எமனும் ஒன்றுபோலத்தான் என்கின்றார்.

திரும்பவும் அடுத்த வரியிலேயே ஆன்மீகக் கல்வி கல்லாத ஆட்சித் தலைவனைவிட எமனே மிக நல்லவன் என்பதனை, 'கல்லா அரசனில் காலன் மிக நல்லன்' என்று வற்புறுத்துகின்றார். இந்த விளக்கத்தை நினைவில் கொண்டால் வள்ளுவர் கூறும் சமுதாயத்திலே ஆட்சித் தலைவன் அற நூல்கள் அனைத்தையும் பயின்று அந்த நூல்கள் போதிக்கும் அற வழியில் வாழ்க்கை நடத்துவோனாக இருக்க வேண்டும் என்பது புலனாகும்.

மொத்தத்தில் வள்ளுவர் தந்த பொருட்பாலிலே இன்றைய உலகம் சிந்தை செலுத்துமானால், மனித சமுதாயத்தைப் பீடித்துள்ள கொடுமைகள் அடியோடு மறையாவிடினும் பெருமளவுக்குக் குறையவேனும் செய்யும்.

காந்தியடிகள் ராணுவம் இல்லாத ஓர் ஆட்சியையே விரும்பினார். வள்ளுவரின் விருப்பமும் அதுதான். ஆயினும் தற்காப்புக்கு ராணுவம் தேவைப்படுவதனை அவர் உணர்ந்திருந்தார். அதனால் அரசுக்குரிய அங்கங்கள் ஆறினுள் படையையும் ஒன்றாக்கினார். ஆனால் படை மட்டுமே நாட்டைப் பாதுகாத்து விடாது. கோல் கோடாதவிடத்து வேலுக்கு வேலை இல்லை என்பதனை,

வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்

என்னும் குறளிலே தெளிவுபடுத்துகிறார்.

அரசராயினும் சரி, அமைச்சராயினும் சரி, அதிகாரிகளாயினும் சரி இவர்களிலே ஒவ்வொருவரும் பிறர் குற்றம் காண்பது போலத் தம் குற்றத்தையும் காணும் பண்பு பெற்றிருக்க வேண்டும் என்பதனை,


ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு


என்ற குறளில் வற்புறுத்துகின்றார். வள்ளுவரைப் போற்றுவதும் அவர் குறட்பாக்களுக்குப் புத்துரை காண்பதும் நாள்தோறும் நிகழ்ந்து வரக் காண்கிறோம். ஆனால் அவருடைய போதனைகளைச் சாதனையாக்கிக் காட்டும் சமுதாயம் தோன்ற வேண்டும். திருக்குறளாட்சி இனித்தான் தோன்ற வேண்டும்; தோன்றுமென்று நம்புவோமாக.

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன்ட் செய்யப்படுகிறது

அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' செயல்புரியும் விதம்





ஒரு மாத்திரையில் உள்ள அணுக்கூறு எவ்வளவுக் கெவ்வளவு பெரியதாக உள்ளதோ அது உங்கள் உடலில் கலப்பதற்கு அவ்வளவுக் கவ்வளவு தாமதமாகிறது. நீங்கள் வலியிலிருந்து நிவாரணம் பெறவும் அவ்வளவுக்கவ்வளவு காக்க வேண்டியிருக்கிறது.

மைக்ரோஃபைன்ட் ஆக இருப்பதனால் புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' வின் ஒவ்வொரு மாத்திரையிலும் சுமார் 15 கோடி நுண்ணிய அணுக்கூறுகள் அடங்கியுள்ளன—எனவே, அது மேலும் துரிதமாக இரண்டறக் கலந்து விரைவில் நிவாரணம் அளிக்கிறது.

இந்தக் கஷ்டங்களுக்கு புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: ஜுரம் • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி • தொண்டைஅழற்சி • பல்வலி

புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' இப்பொழுது கிடைக்கும் அதி நவீனமான வலி நிவாரணியாகும்.

சாப்பிடும் அளவு:

வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொல்படி



புதிய மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ'

அதி வேகமாக வலியை வெளியே இழுத்து விடுகிறது.

நிகோலஸ் (N) தயாரிப்பு

அமெரிக்கா செல்லும் அமுத இசை

வேதத்தின் பல சாகைகள் பல்லாண்டுகளாகப் பரம சுத்தமாக வழி வழியே வந்திருப்பது போல், கர்நாடக சங்கீதத்தில் பல மகத்தான பாணிகள் வம்சாவளியாகத் தூய்மை குன்றாது வந்துள்ளன. இவற்றில் வீணை தனம்மாள் அவர்களின் பாணிக்குத் தனியான பெருமை உண்டு. அநாவசியத்துக்கு இடம் தராத பாணி அது என்று சொன்னால் மட்டும் போதாது; அத்தியாவசியம் தவிர வேறு எதற்குமே அதில் இடம் கிடையாது என்று சொல்ல வேண்டும். தனம்மாள் வழியின் மற்றொரு விசேஷப் பெருமை, ஒலியின் பரிமாணத்துக்குத் தரப்படும் கவனமேயாகும். இன்ன இடத்தில் இத்தனை கனம் வேண்டும், இன்ன இடத்தில் இத்தனை நயம் வேண்டும் என்றறிந்து ஒலியின் பரிமாணத்தை வெளிப்படுத்தும் அற்புதம் ரத்தத்தோடு ஊறிப் பரம்பரையாக வரும் போலும்! இன்று தனம்மாள் பாணியின் வாரிசாக விளங்கி வரும் அவரது பேரன் பேத்திமார்களைப் பார்க்கும்போது இப்படித்தான் தோன்றுகிறது.

இந்தப் பேரன் பேத்திகளில் ஸ்ரீமதிகள் பிருந்தா — முக்தாவின் பெருமை சங்கீதக் கலைஞர்களுக்கு நன்கு தெரியும். இருவரின் இசை ஒருவரின் இசையாக இழையும் அழகு பிருந்தா முக்தா கச்சேரிகளில் முழுமையுடன் விளங்கும். தியாகையர், தீக்ஷிதர், சியாம சாஸ்திரி, சுப்பராய சாஸ்திரி என்றிப்படி எவருடைய கிருதிகளை இவர்கள் பாடினாலும் அதில் ஒரு தனி அழுத்தமும், அழகும், ஜீவசக்தியும் பொலியும். சுழன்று சுழன்று சுழித்தோடும் க்ஷேத்ரக்ஞர் பதங்களைப் பற்றியும், ஒரே வீச்சாகப் பளிச்சென்று விழும் தர்மபுரி ஜாவளிகளைப் பற்றியும் சொல்லவே வேண்டியதில்லை.

பழகிப்போனது புதுமையாக இருக்க முடியாது. ஆனால் பிருந்தா — முக்தா பாடல் பழகியும் புதுமையாய் இருப்பது. கிருதிகளும், பதங்களும், ஜாவளிகளும் பூரணமாக நிர்ணயமான அதே உருவத்தில்தான் திரும்பத் திரும்ப வரும். ஆனாலும் ஒரே விக்கிரகத்தை அன்றன்றும் புதிய அநுபவமாக ரசிப்பதுபோல், மாறாத அதே பாடலை, அதே பதத்தை, அதே ஜாவளியை மாறாத புத்துணர்ச்சியுடன் அநுபவிப்போம். கலைஞர்களின் மனோ தர்மத்தைப் பற்றி நிறையச் சொல்கிறோம். ஆனால் பிருந்தா—முக்தா பாடலின் அழகைப் பார்க்கையில் மனோ தர்மம் என்பது புதிதாக எதையோ செய்வது மட்டுமல்ல. பழையதையே புதிதாக அநுபவிப்பதும் மனோ தர்மம் தான் எனத் தோன்றுகிறது. மனோ தர்மத்துடன் அவர்களது மனோ தைரியத்தையும் சொல்ல வேண்டும். தங்கள் மரபின் லக்ஷணம் இம்மியும் மாறாமல் அப்படியே காத்து வர மனோ தைரியம் வேண்டியதுதானே? இதனால்தான் இவர்களது சங்கீதம் வித்வான்களும் மதிக்கும் இசையாக உள்ளது.

இவர்களில் பிருந்தா மூத்தவர். அடையாறு கர்நாடக சங்கீதக் கல்லூரியில் பேராசிரியராக இருக்கிறார். அவர் தொட்ட இடம் எல்லாம் சுஸ்வரம். பரம நிச்சயத்துடன் ஸ்வர ஸ்தானங்களைத் தொட்டு, ஞானஸ்தர்களை ஆனந்தத்தில் ஆழ்த்துவார். அவர் மந்த்ர ஸ்தாயியில் 'கம்'மென்று நிற்பதைக் கேட்பது ஒரு பெரிய இசையநுபவம்.

ஸ்ரீமதி பிருந்தா அவர்கள் அமெரிக்காவிலுள்ள ஸியாட்டில் சர்வகலாசாலையில் சுமார் ஓராண்டு கர்நாடக இசை போதிப்பதற்காகச் செல்கிறார். சுத்த சாஸ்திரீய சங்கீதக் கலைஞர் மேல் நாடு செல்வது விசேஷம். தனம்மாள் வீணையின் நரம்பை மீட்டினாலும், அந்த இசைவழி நரம்புக் கிளர்ச்சிக்குச் சம்பந்தமே அற்றது; ஆன்மாவுடனேயே நேரடித் தொடர்பு கொள்ளும் சௌக்கியமான, சாந்தமான இசை அது. மேல் நாட்டினரை நாம் நரம்பால் ஆட்டி வைக்காமல், உள்ளத்தைத் தொட முடிந்தால் அதுவே பெருமை. எனவே பிருந்தா அமெரிக்காவில் சங்கீத போதனை தரச் செல்வது பெருமைக்குரிய விஷயம். தனம்மாள் பரம்பரையில் அடுத்த கீழ்க் கன்றாக வந்திருக்கும் குமாரி வேகவாகினி (பிருந்தாவின் புதல்வி) உடன் செல்கிறார். தாயும், மகளும் மேற்கொண்டுள்ள இந்த சங்கீதப் பணி பூரணமாகப் பலன் அளிக்க வாழ்த்தி வழியனுப்புகிறோம்.





பொன்னியின்

அமரர் கல்கி

பூர்வ கதை

இன்றைக்கு 970 ஆண்டுகளுக்கு முன்பு சோழ சாம்ராஜ்யம் குமரி முனையிலிருந்து வட பெண்ணை வரையில் பரவியிருந்தது. இரண்டாவது பராந்தகர் என்றும் பழையாறைச் சுந்தரசோழர் என்றும் பெயர் பெற்ற சக்கரவர்த்தி அந்தப் பெரிய ராஜ்யத்தை ஆண்டு வந்தார். முத்தரைய வம்சத்தை முறியடித்து அவர்களிடமிருந்து விஜயாலய சோழன் கைப்பற்றிய தஞ்சாவூர் நகரம் சுந்தர சோழரின் காலத்தில் சோழ நாட்டுக்குத் தலைநகரமாயிற்று. அதற்கு முன்பு நூறு ஆண்டு காலமாகக் குடந்தைக்கு அருகிலிருந்த பழையாறை சோழர்களின் தலைநகரமா யிருந்தது.

சுந்தர சோழர் திருக்கோவலூர் மலையமானின் மகள் வானவன்மா தேவியை மணந்திருந்தார். அவர்களுக்கு இரண்டு புதல்வர்களும் ஒரு புதல்வியும் இருந்தனர். மூத்தவன் ஆதித்த கரிகாலன்; அடுத்தவள் குந்தவை; கடைக்குட்டிப் புதல்வன் பின்னால் சரித்திரத்தில் இராஜராஜ சோழன் என்று புகழ் பெற்ற அருள்மொழி வர்மன்.

சுந்தர சோழர் சில காலமாக நோய்வாய்ப்பட்டுத் தஞ்சாவூர் அரண்மனையில் படுத்த படுக்கையா யிருந்தார். பாரிச வாயுவினால் இரண்டு கால்களும் வலுவிழந்துவிட்டபடியால் நடமாடவும் பிரயாணம் செய்யவும் முடியாத நிலையில் இருந்தார்.

அண்ணன் தம்பிகளான பெரிய பழுவேட்டரையரும், சின்னப் பழுவேட்டரையர் காலாந்தக கண்டரும் சோழ சாம்ராஜ்யத்தில் அப்போது பேரதிகாரம் படைத்திருந்தார்கள். சாம்ராஜ்யத்தின் பொக்கிஷமும் தானிய பண்டாரமும் வரி விதிக்கும் அதிகாரமும் பெரிய பழுவேட்டரையரிடம் இருந்தன. சின்னப் பழுவேட்டரையர் தஞ்சைக் கோட்டையின் காவற்படைக்கு அதிபதியாக விளங்கினார்.

இளம் வயதிலேயே போர்க்களம் சென்று வீராதி வீரன் என்று பெயர் வாங்கிய ஆதித்த கரிகாலன் இளவரசுப் பட்டம் சூட்டப் பெற்றுக் காஞ்சியில் வட திசைச் சைனியத்தின் அதிபதியாகத் தங்கியிருந்தான்.

தென்திசைப் படையின் மாதண்டநாயகனாகிய அருள்மொழி வர்மன் இலங்கைத் தீவுக்குப் பெரும் படையுடன் சென்று போர் புரிந்து கொண்டிருந்தான்.

அவர்களுடைய சகோதரி குந்தவைப் பிராட்டியும் மற்றும் பல சோழ குலத்து அந்தப்புர மாதரும் பழையாறை நகரில் இருந்தார்கள்.

இத்தகைய சமயத்தில் நாடு நகரமெங்கும் ஓர் அதிசயமான வதந்தி பரவியது. சுந்தரசோழருக்கும் அவருடைய குமாரர்களுக்கும் எதிராக ஒரு பெரிய சதி நடக்கிறது என்பதுதான் அவ் வதந்தி. பழுவேட்டரையர்களும் மற்றும் சம்புவரையர் முதலிய சோழ நாட்டுப் பிரமுகர்கள் பலரும் அச் சதியில் கலந்து கொண்டிருந்தனர்.

சுந்தரசோழரின் பெரிய தந்தையும் சிவஞானச் செல்வருமான கண்டராதித்தரின் குமாரன் மதுராந்தகன் சில காலத்துக்கு முன்பு வரையில் சிவபக்தியில் திளைத்த வைராக்கிய சீலனாக விளங்கினான். சின்னப் பழுவேட்டரையரின் மகளை மணந்து கொண்டதிலிருந்து அவனுடைய மனம் மாறி உலக வாழ்க்கையில் ஈடுபட்டது. சுந்தரசோழச் சக்கரவர்த்திக்குப் பிறகு மதுராந்தகனைச் சிம்மாசனம் ஏற்றுவது என்று சதி செய்தவர்கள் தீர்மானித்திருந்தார்கள்.

வானத்தில் சில காலமாகத் தூமகேது என்னும் வால் நட்சத்திரம் காணப்பட்டு வந்தது. இதை ஓர் உற்பாதமாக மக்கள் கருதினார்கள். இராஜ வம்சத்தில் ஏதோ விபரீதம் நிகழப் போகிறது என்று நாடு நகரமெல்லாம் ஜனங்கள் மிகுந்த கவலையுடன் பேசிக் கொண்டார்கள்.

காஞ்சியில் இருந்த இளவரசன் ஆதித்த கரிகாலன் காதுக்கு இந்தச் செய்திகள் எட்டின. தன் தந்தையைப் பற்றி அவன் மிக்க கவலை கொண்டான். பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலிருந்து



செல்வன்

சுந்தர சோழரை மீட்டுக் காஞ்சிக்குக் கொண்டுவர விரும்பினான்.

காஞ்சியில் ஆதித்த கரிகாலன் புதிதாகப் பொன் மாளிகை கட்டியிருந்தான். சுந்தரசோழர் காஞ்சிக்கு வந்து சில காலம் அப் பொன் மாளிகையில் தங்கியிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்து ஓலை ஒன்று எழுதினான். அதை வல்லவரையன் வந்தியத்தேவன் என்னும் தன் அந்தரங்க நம்பிக்கைக்குரிய வீரனிடம் கொடுத்து அனுப்பினான்.

பெரிய பழுவேட்டரையர் அறுபது பிராயத்துக்கு மேலே நந்தினியை மணந்து கொண்டார். நந்தினி பழுவூர் அரண்மனையில் சர்வாதிகாரியானாள். தன்னை நெருங்கிய யாரையும் தன் இஷ்டப்படி செய்விக்கும் மாய மோகன சக்தியை நந்தினி பெற்றிருந்தாள்.

வந்தியத்தேவன் வழியில் கடம்பூர் சம்புவரையர் மாளிகையில் தங்கியிருந்தபோது சோழ நாட்டுப் பிரமுகர்களின் சதியாலோசனையைப் பற்றித் தெரிந்து கொண்டான். பிறகு, தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தான். அங்கே நந்தினியைச் சந்தித்துப் பனை இலச்சினையுள்ள முத்திரை மோதிரத்தை வாங்கிக் கொண்டான். அதன் உதவியால் சுந்தரசோழரைப் பேட்டி கண்டான். அவரைச் சூழ்ந்திருந்த அபாயங்களைப் பற்றி எச்சரிக்கை செய்ய எண்ணிய சமயத்தில் சின்னப் பழுவேட்டரையர் வந்து குறுக்கிட்டார்.

வந்தியத்தேவன் தற்செயலாகத் தஞ்சாவூர்ப் பொக்கிஷம் வைத்திருந்த நிலவறையைப் பார்க்க நேர்ந்தது. இதை அறிந்த பழுவேட்டரையர்கள் அவன் தப்பிச் செல்லாமல் கைப்பற்ற முயன்றார்கள். அவர்களுடைய வீரர்களுக்கு அவன் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் பழையாறையை அடைந்தான். குந்தவை தேவியைப் பார்த்து ஓலையைக் கொடுத்தான்.

ஏற்கெனவே குந்தவையைப் பற்றிக் கேள்விப்பட்டு வந்தியத்தேவன் தன் உள்ளத்தை அவளுக்



ருப் பரி கொடுத்திருந்தான். குடந்தையிலும் அரிசலாற்றங்கரையிலும் அவளைச் சந்தித்தும் இருந்தான். இலங்கைக்குப் போக வேண்டும் என்ற ஆசையும் அவன் மனத்தில் இருந்து கொண்டிருந்தது. எனவே குந்தவை சொன்னபடி அவன் ஈழத்துக்கு உடனே செல்ல ஆயத்தமானான். "பொன்னியின் செல்வா! இராஜ்யத்துக்குப் பேரபாயம் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வா!" என்று குந்தவை ஓலை எழுதிக் கொடுத்தாள். அதை எடுத்துக் கொண்டு வந்தியத் தேவன் புறப்பட்டான்.

வந்தியத்தேவன் தன் பிரயாணத்தில் ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவனைச் சந்தித்திருந்தான். ஆழ்வார்க்கடியான் நாடெங்கும் சஞ்சரித்துத் துப்பறிந்து வந்தான். ஆனால் யாருடைய சார்பில் அவன் வேலை செய்கிறான் என்று தெரியவில்லை. ஆகையால் அவன் பேரில் வந்தியத்தேவனுக்கு ஐயம் உண்டாகி யிருந்தது.

இனி, இவ்விதழில் தொடரும் "பொன்னியின் செல்வன்" கதையைப் பழைய நேயர்களோடு புதிய வாசகர்களும் சேர்ந்து படிக்கத் தொடங்கலாம்.

ஐம்பதாம் அத்தியாயம்

பராந்தகர் ஆதுரசாலை

மறு நாள் காலையில் சூரிய பகவான் உதயமாகி உலகத்தை ஒளி மயமாகச் செய்து கொண்டிருந்தார். சூரியனுடைய செங்கிரணங்கள் பழையாறை அரண்மனைகளின் பொற் கலசங்களின்மீது விழுந்து தக தகாமயமாய்ச் செய்து கொண்டிருந்தன. குந்தவைப் பிராட்டியின் மாளிகை முன்றிலில் அம்பாரி வைத்து அலங்கரித்த மாபெரும் யானை ஒன்று வந்து நின்றது. குந்தவையும் வானதியும் மாளிகையின் உள்ளேயிருந்து வெளி வந்து மேடைப் படிகளின்மீது ஏறி யானையின் மேல் ஏறிக்கொண்டார்கள். படை வீடுகளுக்கு நடுவில் இருந்த பராந்தக சோழர் ஆதுர சாலையை நோக்கி யானை பூமி அதிரும்படி நடந்து சென்றது. யானைப் பாகன் அதன் அருகில் நடந்து அதன் நடை வேகத்தைக் குறைத்து அழைத்துச் சென்றான். யானையின் மணி ஓசையைக் கேட்டு நகர மாந்தர் தத்தம் வீடுகளுக்குள்ளேயிருந்து விரைந்து வெளி வந்து பார்த்தார்கள். பெண்ணரசிகள் இருவரையும் கண்டதும் அவர்கள் முகமலர்ந்து கைகூப்பி நின்று முகமன் செலுத்தினார்கள்.

மற்ற வீதிகளைக் கடந்து யானை, படை வீடுகள் இருந்த நகரத்தின் பகுதியை அடைந்தது. அந்த வீதிகளின் தோற்றமே ஒரு தனி மாதிரியாகத்தான் இருந்தது. கொழுத்த சேவற் கோழிகள் ஒன்றையொன்று சண்டைக்காகத் தேடிக் கொண்டு சென்றன. வளைந்து சுருண்ட கொம்புகளை உடைய ஆட்டுக் கடாக்கள் "போருக்கு வருவோர் யாரேனும் உண்டோ?" என்ற பாவனையுடன் அங்கு மிங்கும் பார்த்துக் கொண்டு நின்றன. ரோஷம் மிகுந்த வேட்டை நாய்களைத் தோல் வாரினாலும் மணிக் கயிறுகளினாலும் வீட்டு வாசல் தூண்களில் பிணைத்திருந்தார்கள். சின்னஞ் சிறு பிள்ளைகள் கைகளில் மூங்கில் கழி பிடித்து ஒருவரோடொருவர் சிலம்பம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிலம்பக் கழிகள் மோதிக் கொண்ட போது, 'சட சடா பட படா' என்ற ஓசைகள் எழுந்தன.

வீடுகளின் திண்ணைச் சுவர்களிலே காவிக் கட்டிகளினால் விதவிதமான சித்திரக் காட்சிகள் வரையப்பட்டிருந்தன. பெரும்பாலும் அவை முருகப் பெருமானுடைய லீலைகளையும், சோழ மன்னர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் சித்திரித்தன. அவற்றில் யுத்தக் காட்சிகளே அதிகமாயிருந்தன. முருகப் பெருமான் சூரபதுமாசுரனுடைய தலைகளை முளைக்க முளைக்க வெட்டித் தள்ளிய காட்சியும், துர்க்கா பரமேசுவரி மகிஷாசுரனை வதம் செய்த காட்சியும் மிகப் பயங்கரமாக எழுதப்பட்டிருந்தன. தெள்ளாறு, தஞ்சை, குடமூக்கு, அரிசிலாறு, திருப்புறம்பயம், வெள்ளூர், தக்கோலம், சேவூர் முதலிய போர்க்களங்களில் சோழ நாட்டு வீரர்கள் நிகழ்த்திய அற்புத பராக்கிரமச் செயல்கள் திண்ணைச் சுவர்களில் தத்ரூபமாகக் காட்சி அளித்தன.

இந்தப் படை வீட்டு வீதிகளில் இளவரசிகள் ஏறியிருந்த யானை வந்ததும் ஒரே அல்லோலகல்லோலமாயிற்று. சேவல்கள் இறகுகளைச் சட சட வென்று அடித்துக் கொண்டு பறந்து கூரைமீது உட்கார்ந்து கூவின. பிள்ளைகள் ஒருவரையொருவர் கூச்சலிட்டு அழைத்துக் கொண்டு ஓடினார்கள். அவரவர்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி உள்ளேயிருந்தவர்களுக்குச் செய்தி அறிவித்தார்கள்.

படை வீட்டு வீதிகள் வழியாக யானை சென்ற போது வீட்டு வாசல்தோறும் பெண்களும் குழந்தைகளும் முதியோர்களும் நின்று, "இளைய பிராட்டி







குந்தவை தேவி வாழ்க!'' ''சுந்தர சோழரின் செல்வத் திருமகள் வாழ்க!'' என்று வாழ்த்தி மகிழ்ந்தார்கள். வர வர இக்கூட்டம் அதிகமாகி வந்தது. பல வித வாழ்த்தொலிகளின் மூலமாகத் தங்கள் மகிழ்ச்சியை அவர்கள் வெளியிட்டுக் கொண்டு வந்தார்கள்.

அப்படை வீடுகளில், இலங்கைக்குப் போர் புரியச் சென்றிருந்த வீரர்களின் பெண்டு பிள்ளைகளும் பெற்றோர்களும் அச்சமயம் வசித்து வந்தார்கள் என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுடைய நலத்துக்காக ஒரு மருத்துவசாலையைக் குந்தவை தன் சொந்த நில மான்யங்களின் வருமானத்தைக் கொண்டு ஸ்தாபித்திருந்தாள். சோழ குலத்தாரிடம் தம் முன்னோர்களைப் போற்றும் பழக்கம் சிறப்பாக இருந்து வந்தது. குந்தவையின் மூதாதைகளில் அவளுடைய பாட்டனாரின் தந்தையான முதற் பராந்தக சக்கரவர்த்தி மிகப் பிரசித்தி பெற்றவர். அவருடைய பெயர் விளங்கும்படி குந்தவை தேவி இந்தப் 'பராந்தகர் ஆதுர சாலை'யை ஸ்தாபித்து நடத்தி வந்தாள். அடிக்கடி அந்த வைத்திய சாலைக்கு வரும் வியாஜத்தை வைத்துக் கொண்டு போர்வீரர்களின் குடும்பத்தாருடைய க்ஷேம லாபங்களைப் பற்றி அவள் விசாரிப்பது வழக்கம்.

ஆதுர சாலைக்கு அருகில் வந்து சேர்ந்ததும் யானை நின்றது. முன்னங் கால்களை முதலில் மடித்துப் பிறகு பின்னங் கால்களையும் மடித்து அது தரையில் படுத்துக் கொண்டது. பெண்ணரசிகள் இருவரும் யானைமேலிருந்து பூமியில் இறங்கினார்கள்.

யானை சிறிது நகர்ந்து அப்பால் சென்றதும் ஜனக் கூட்டம், — முக்கியமாகப் பெண்கள் — குழந்தைகளின் கூட்டம், தேவிமார்களை நெருங்கிச் சூழ்ந்து கொண்டது.

''ஆதுர சாலை உங்களுக்கெல்லாம் உபயோகமாயிருக்கிறதல்லவா? வைத்தியர்கள் தினந்தோறும் வந்து தேவையானவர்களுக்கு மருந்து கொடுத்து வருகிறார்கள் அல்லவா?'' என்று இளவரசி கேட்டாள்.

''ஆம், தாயே! ஆம்!'' என்று பல குரல்கள் மறுமொழி கூறின.

''மூன்று மாதமாக இருமலினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒரு வாரம் வைத்தியரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டதில் குணமாகி விட்டது!'' என்றாள் ஒரு பெண்மணி.

''அம்மா! என் மகன் மரத்தின் மேல் ஏறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டான். வைத்தியர் கட்டுப் போட்டு விட்டுப் பதினைந்து நாள் மருந்து கொடுத்தார். சுகமாகிவிட்டது.



இப்போது துள்ளி ஓடி விளையாடு கிறான். மறுபடியும் மரத்தின் மேல் ஏறவும் ஆரம்பித்து விட்டான்!'' என்றாள் இன்னொரு ஸ்திரீ.

''என் தாயாருக்குக் கொஞ்ச கால மாகக் கண் மங்கலடைந்து வந்தது. ஒரு மாதம் இந்த ஆதுரசாலைக்கு வந்து மருந்து போட்டுக் கொண்டு வந்தாள். இப்போது கண் அவளுக்கு நன்றாய்த் தெரிகிறது!'' என்றாள் இளம் பெண் ஒருத்தி.

''பார்த்தாயா, வானதி! நம் தமிழகத்தில் வாழ்ந்த முன்னோர்கள் எப்பேர்ப்பட்டவர்கள்? இன்ன வியாதியை இன்ன மூலிகையினால் தீர்க்கலாம் என்று அவர்கள் எப்படித்தான் கண்டு பிடித்தார்களோ, தெரியவில்லை!'' என்றாள் குந்தவைப் பிராட்டி.

''ஞானக் கண் கொண்டு பார்த்துத் தான் அவர்கள் இவ்வளவு அதிசயமான மருந்துகளைக் கண்டு பிடித்திருக்க வேண்டும். வேறு எப்படி முடியும்?'' என்றாள் வானதி.


''எவ்வளவோ அதிசயமான மருந்துகளை அவர்கள் கண்டுபிடித்திருப்பது உண்மைதான். ஆனால் உன்னைப் போல் மனோ வியாதியினால் வருந்துகிறவர்களுக்கு மருந்து ஒன்றும் கண்டு பிடிக்கவில்லையே? என்ன செய்வது?''

''அக்கா! எனக்கு ஒரு மனோ வியாதியும் இல்லை. கருணை கூர்ந்து இவ்விதம் அடிக்கடி சொல்லாதிருங்கள்! என் தோழிகள் ஓயாது என்னைப் பரிகசித்து என் பிராணனை வாங்குகிறார்கள்!''

''நன்றாக வேண்டுமடி உனக்கு! உலகத்தில் ஒரு கவலையும் இல்லாமல் வாழ்ந்து வந்த என் தம்பியின் மனம் பேதலிக்கும்படி செய்து விட்டாய் அல்லவா? ஒவ்வொரு தடவையும் இலங்கையிலிருந்து ஆள் வரும் போதெல்லாம் உன் உடம்பு எப்படியிருக்கிறது என்று கேட்டு அனுப்புகிறானே!'' என்றாள் இளையபிராட்டி.

இதற்குள், ''வைத்தியருக்கு வழி விடுங்கள்! வைத்தியருக்கு வழி விடுங்கள்!'' என்று கோஷம் கேட்டது. அங்கே சூழ்ந்து நின்றவர்களைக் காவலர்கள் விலக்கினார்கள். ஆதுர சாலையின் வயது முதிர்ந்த தலைமை வைத்தியர் வந்து இளவரசிகளை வரவேற்று உபசரித்தார்.

''வைத்தியரே! கோடிக்கரைப் பக்கத்துக் காடுகளில் சில உயர்ந்த மூலிகைகள் இருக்கின்றனவென்று சொன்னீர் அல்லவா? அங்கே போய் வருவதற்காக ஒரு வாலிப வீரரை



அனுப்பினேனே? அவர் வந்தாரா?'' என்று குந்தவை கேட்டாள்.

''ஆம், தாயே! அந்தச் சூடிகையான இளம் பிள்ளை வந்தான். ஈசான சிவ பட்டர் அழைத்துக் கொண்டு வந்தார். அவனுடன் என் மகன் ஒருவனை அனுப்பி வைக்கிறேன். என் மகன் கோடிக்கரையிலிருந்து திரும்பி வந்து விடுவான். தாங்கள் அனுப்பிய வீரன் இலங்கைத் தீவுக்கும் போய் வருவதாகச் சொல்கிறான்....''

''இலங்கையிலிருந்துகூடவா மூலிகை கொண்டு வர வேண்டும்?'' என்று வானதி கேட்டாள்.

''ஆம், தாயே! லக்ஷ்மணருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக அனுமார் சஞ்சீவி பர்வதம் கொண்டு வந்த போது கோடிக்கரை வழியாகத்தான் கடலைத் தாண்டினாராம். அப்போது சஞ்சீவி மலையிலிருந்து சில மூலிகைகள் கோடிக்கரைக் காட்டில் விழுந்தபடியால்தான் அங்கே இன்றைக்கும் நல்ல மூலிகைகள் கிடைக்கின்றன. இலங்கையில் சஞ்சீவி பர்வதமே இருந்தபடியால் அங்கே இன்னும் அபூர்வமான மூலிகைகள் கிடைக்கும் அல்லவா? நான் எதிர்பார்க்கும் மூலிகைகள் மட்டும் கிடைத்து விட்டால், சக்கரவர்த்தியின் நோயை நானே கட்டாயம் குணப்படுத்தி விடுவேன்....''

''கடவுள் கிருபையினால் அப்படியே ஆகட்டும். இப்போது அந்த வாலிபர்கள் இருவரும் எங்கே?''

''உள்ளே இருக்கிறார்கள், அம்மா! பிரயாணத்துக்கு ஆயத்தமாகத் தங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படக் காத்திருக்கிறார்கள்!''

தலைமை மருத்துவர் அழைத்துச் செல்ல இளவரசிகள் இருவரும் ஆதுர சாலைக்குள் சென்றார்கள். அங்கே தாழ்வாரங்களில் மருந்து வாங்கிக் கொண்டு வந்தவர்களையும் மருந்துக்காகக் காத்திருப்பவர்களையும் பார்த்துக் கொண்டு நடந்தார்கள். அவர்கள் அனைவரும் குந்தவைப் பிராட்டியைப் பார்த்ததும் அகமும் முகமும் மலர்ந்து இவ்வளவு நல்ல மருத்துவசாலையைத் தங்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததற்காக இளவரசியை வாழ்த்தினார்கள்.

தலைமை மருத்துவரின் அறையில் இருவர் காத்திருந்தனர். அவர்களில் நம் வந்தியத்தேவன் புதிய முறையில் உடை அணிந்திருந்ததைப் பார்த்து இளையபிராட்டி புன்னகை பூத்தாள். வானதிக்கும் அவ்வீரனை ஒருவாறு அடையாளம் தெரிந்து விட்டது. குந்தவையின் காதோடு, ''அக்கா! குடந்தை ஜோதிடரின் வீட்டில் பார்த்தவர் மாதிரி இருக்கிறதே!'' என்றாள்.

''அவர் மாதிரிதான் எனக்கும் தோன்றுகிறது. ஜோதிடரைப் பார்த்த பிறகு வைத்தியரிடம் வந்திருக்கிறார். உன் மாதிரியே இவருக்கும் ஏதாவது சித்தக் கோளாறு போலிருக்கிறது!'' என்று சொல்லி விட்டு, வந்தியத்தேவனைப் பார்த்து, ''ஏன், ஐயா! சக்கரவர்த்தியின் உடல் நலத்துக்காக மூலிகை கொண்டு வருவதற்கு இலங்கைக்குப் போக ஒப்புக் கொண்டவர் நீர்தானா?'' என்று கேட்டாள்.

வந்தியத்தேவனுடைய கண்களும் கண்ணிமைகளும் வேறு ஏதோ இரகசிய பாஷையில் பேசின. அவன் வாயினால், ''ஆம், இளவரசி! நான்தான் இலங்கைக்குப் போகிறேன். ஒரு வேளை அங்கு இளவரசரைப் பார்த்தாலும் பார்ப்பேன். அவருக்கு ஏதாவது செய்தி சொல்ல வேண்டுமா?' என்று கேட்டான்.

''பார்த்தால், அவசியம் இந்தச் செய்தியைச் சொல்லுவீர். கொடும்பாளூர் இளவரசி வானதிக்கு உடம்பு சரியாகவே இல்லை. அடிக்கடி நினைவு இழந்து மூர்ச்சை போட்டு விழுகிறாள். இளவரசியைச் சுயப் பிரக்ஞையோடு பார்க்க வேண்டுமானால் உடனே புறப்பட்டு வர வேண்டும் என்பதாகத் தெரிவிக்க வேண்டும்'' என்றாள் இளையபிராட்டி.

''அப்படியே தெரிவிக்கிறேன், அம்மணி!'' என்று கூறி வந்தியத்தேவன் வானதியை நோக்கினான்.

குந்தவையின் வார்த்தைகளைக் கேட்டதும் உண்டான நாணத்தினால் வானதியின் இனிய முகம் இன்னும் பன்மடங்கு அழகு பெற்றுப் பொலிந்தது. பொங்கி வந்த நாணத்தையும் கூச்சத்தையும் சமாளித்துக் கொண்டு வானதி தட்டுத் தடுமாறி, ''ஐயா! அப்படியொன்றும் தாங்கள் சொல்லி விட வேண்டாம். ரொம்பவும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். கொடும்பாளூர் வானதி இளையபிராட்டியின் போஷணையில் தினம் நாலு வேளை உண்டு உடுத்துச் சுகமாக இருப்பதாகத் தெரியப்படுத்துங்கள்'' என்றாள்.

''அப்படியே தெரிவித்து விடுகிறேன், அம்மணி!'' என்றான் வந்தியத்தேவன்.

''அழகாயிருக்கிறது! நான் கூறியதையும் 'அப்படியே தெரிவிக்கிறேன்' என்றீர். இவள் சொன்னதையும் 'அப்படியே தெரிவிக்கிறேன்' என்று

ஒப்புக் கொள்கிறீரே ? இரண்டில் ஏதாவது ஒன்றுதானே உண்மையாக இருக்க முடியும் ?''

''அதனால் என்ன, அம்மணி! வாதி கூறியதையும் பிரதிவாதி சொன்னதையும் அப்படி அப்படியே நான் சொல்லி விடுகிறேன். எது உண்மை, எது இல்லை என்பதை இளவரசரே நீதிபதியாக இருந்து தீர்மானித்துக் கொள்ளட்டும்!'' என்று சொன்னான் வந்தியத்தேவன்.

''ஆனால் ஒருவர் சொன்னதை இன்னொருவர் சொன்னதாக மட்டும் மாற்றிச் சொல்லிவிட வேண்டாம்! உமக்குப் புண்ணியம் உண்டு!'' என்றாள் வானதி.

குந்தவை இந்தப் பேச்சை அத்துடன் நிறுத்த விரும்பி, ''வைத்தியரே! அரண்மனைத் திருமந்திர அதிகாரியிடமிருந்து இவர்களுக்குக் கொடுத்து அனுப்ப ஓலை கிடைத்ததா?'' என்று கேட்டாள்.

''கிடைத்தது, தாயே! 'சக்கரவர்த்திக்கு வைத்தியம் செய்வதற்காக இவர்கள் மூலிகை கொண்டு வரப் போவதால் வழியிலுள்ள அரசாங்க அதிகாரிகள் எல்லாரும் இவர்கள் கோரும் உதவி செய்ய வேண்டும்' என்று பொதுவாக ஓர் ஓலையும், கோடிக்கரை கலங்கரை விளக்கக் காவலருக்குத் தனியாக ஓர் ஓலையும் கிடைத்தன. இவர்களிடம் கொடுத்து விட்டேன்!'' என்றார் வைத்தியர்.

''அப்படியானால் ஏன் தாமதம்? உடனே புறப்பட வேண்டியதுதானே?'' என்றாள் இளையபிராட்டி குந்தவை.

''ஆம்; புறப்பட வேண்டியதுதான்!'' என்றான் வந்தியத்தேவன்.

ஆனால் உடனே புறப்பட்டுவிடும் காரியம் அவ்வளவு சுலபமாக இல்லை.

மருத்துவசாலையிலிருந்து அவர்கள் வெளியேறி வெளியில் வந்தார்கள். அரச குமாரிகளை ஏற்றிச் செல்ல அம்பாரி யானை காத்திருந்தது. வந்தியத்தேவனையும் அவனுடைய துணைவனையும் ஏற்றிக் கொண்டு காற்றாகப் பறந்து செல்லுவதற்கு அரண்மனைக் குதிரைகள் இரண்டு துடிதுடித்துக் கொண்டு நின்றன.

ஆனால் வந்தியத்தேவனுக்குத் திடீர் திடீர் என்று ஏதாவது சந்தேகம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. குந்தவைக்கும் புதிது புதிதாக எச்சரிக்கை செய்வதற்கு ஏதேனும் விஷயம் தோன்றிக் கொண்டிருந்தது. போகும் வழியில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைப் பற்றிக் குந்தவை முக்கியமாக எச்சரிக்கை செய்தாள்.

அரசகுமாரிகள் அம்பாரி யானை மீது ஏறிக் கொண்டார்கள்.

பிறகு வந்தியத்தேவனும் அவனுடைய துணைவனும் குதிரைகள்மீது ஏறினார்கள்.

யானை புறப்படுகிற வழியாகத் தோன்றவில்லை. நெடுந் தூரம் பிரயாணம் போகிறவர்கள்தான முதலில் புறப்பட வேண்டும் என்று குந்தவை குறிப்பினால் தெரியப்படுத்தினாள்.

வந்தியத்தேவன் மனமின்றித் தயக்கத்துடன் குதிரையைத் திருப்பினான். இன்னும் ஒரு முறை ஆவல் ததும்பிய கண்களுடன் இளவரசியைத் திரும்பிப் பார்த்தான். பிறகு குதிரையின் பேரில் கோபங் கொண்டவன் போல் சுளீர் என்று ஓர் அடி கொடுத்தான். ரோஸம் மிகுந்த அக்குதிரை நாலு கால் பாய்ச்சலில் பிய்த்துக் கொண்டு பறந்து சென்றது. அவனைத் தொடர்ந்து போவதற்கு வைத்தியரின் புதல்வன் திணற வேண்டியிருந்தது.

யானை திரும்பிச் செல்லத் தொடங்கிய பிறகு குந்தவை சிந்தனையில் ஆழ்ந்தாள். இந்த மனசுதான் என்ன விசித்திரமான இயல்பை உடையது? மன்னாதி மன்னர்களையும் வீராதி வீரர்களையும் நிராகரித்த இந்த மனசு வழிப் போக்கனாக வந்த இவ்வாலிபனிடம் ஏன் இவ்வளவு சிரத்தை கொள்கிறது? இவன் ஏற்றுக் கொண்ட காரியத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு பத்திரமாய்த் திரும்ப வேண்டுமே என்று ஏன் இவ்வளவு கவலைப் படுகிறது?....

''அக்கா! என்ன யோசிக்கிறீர்கள்?'' என்ற வானதியின் குரல் குந்தவையை இந்த உலகத்துக்குக் கொண்டு வந்தது.

''ஒன்றுமில்லை, வானதி! அந்த வாலிபனுடைய அகம்பாவ சுபாவத்தைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அவனிடம் என் தம்பிக்கு ஏன் செய்தி சொல்லி அனுப்பினோம் என்று இப்போது தோன்றுகிறது.....''

''ஆம், அக்கா! அவன் ரொம்பப் பொல்லாதவன்தான்! பெரிய கொள்ளைக்காரன் என்றுகூடச் சொல்லத் தோன்றுகிறது....''

''அது என்ன? கொள்ளைக்காரன் என்று எதனால் சொல்கிறாய்!''

''சாதாரணக் கொள்ளைக்காரர்கள் பொன் வெள்ளி முதலிய பயனற்ற பொருள்களைக் கொள்ளையடிப்பார்கள். இந்த வாலிபன் சோழ வள நாட்டின் குல தெய்வத்தையே கொள்ளையடித்

துக் கொண்டு போய் விடுவான் என்று எனக்குப் பயமாயிருக்கிறது. தாங்கள் அதற்கு இடங் கொடுக்கமாட்டீர்கள் அல்லவா?'' என்று வானதி கூறினாள்.

''அடி கள்ளி! உன்னைப் போல் என்னையும் நினைத்து விட்டாயா! அப்படியெல்லாம் ஒரு நாளும் நடவாது!'' என்றாள் குந்தவை.

* * *

யானை திரும்பிச் சிறிது தூரம் சென்றபோது வீதியில் ஓரிடத்தில் பெண்கள் பலர் கூட்டம் கூடி நிற்பதை அரசிளங் குமரிகள் பார்த்தார்கள். யானையை நிறுத்தச் செய்து விட்டு, ''ஏன் கூட்டம் கூடி நிற்கிறீர்கள்? ஏதாவது சொல்ல வேண்டுமா?'' என்று இளையபிராட்டி குந்தவை கேட்டாள்.

அந்தப் பெண்களில் ஒருத்தி முன் வந்து, ''தாயே! இலங்கையில் உள்ள எங்கள் புருஷர்களைப் பற்றி ஒரு செய்தியும் இல்லையே? அவர்களுக்கு இங்கிருந்து அரிசி அனுப்பக் கூடாதென்று தஞ்சாவூர்க்காரர்கள் தடுத்து விட்டார்களாமே? வயிற்றுக்குச் சாப்பாடு இல்லாமல் எப்படி அம்மா அவர்கள் சண்டை போட முடியும்?'' என்று கேட்டாள்.

''அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டாம். மாமல்லபுரம் துறைமுகத்திலிருந்து அவர்களுக்கு வேண்டிய தானியம் போய்க் கொண்டிருக்கிறது. தஞ்சாவூர்க்காரர்கள் என்ன செய்தாலும், உங்கள் இளவரசர் சும்மா விட்டு விடுவாரா? சோழ நாட்டு மகாவீரர்கள் பட்டினி கிடக்கும்படி பார்த்துக் கொண்டிருந்துவிடுவாரா!'' என்றாள் இளையபிராட்டி.

வேறொரு சந்தர்ப்பமாயிருந்தால், குந்தவை அங்கேயே இறங்கி அந்தப் பெண்களுக்கு மேலும் சமாதானம் சொல்லியிருப்பாள். இப்போது அவளுடைய மனம் வேறு விதமான சஞ்சலத்துக்கு உள்ளாகியிருந்த படியால் தனிமையை விரும்பினாள். யானை அரண்மனையை நோக்கிச் சென்றது.

ஐம்பத்தோராம் அத்தியாயம்

மாமல்லபுரம்

நேயர்கள் ஏற்கெனவே நன்கு அறிந்துள்ள மாமல்லபுரத்துக்கு இப்போது அவர்களை அழைத்துச் செல்ல விரும்புகிறோம்.

மகேந்திர பல்லவரும் மாமல்ல நரசிம்மரும் இத்துறைமுகப்பட்டணத்தை அற்புத சிற்ப வேலைகளின் மூலம் ஒரு சொப்பனபுரியாகச் செய்த காலத்துக்குப் பிறகு இப்போது முந்நூறு ஆண்டுகளுக்கு மேலேயே ஆகிவிட்டன.

நகரத்தின் தோற்றம் ஓரளவு மங்கியிருக்கிறது. மாறுதல் நம் மனத்துக்கு மகிழ்ச்சி தரவில்லை.

மாட மாளிகைகள் இடிந்து விழுந்து பாழடைந்து கிடக்கின்றன. வீதிகளிலும் துறைமுகத்திலும் முன்போல் அவ்வளவு ஜனக்கூட்டம் இல்லை. வர்த்தகப் பெருக்கமும் அவ்வளவாக இல்லை. பெரிய பெரிய பண்டகசாலைகள் இல்லை. வீதிகளிலெல்லாம் ஏற்றுமதி இறக்குமதிப் பண்டங்கள் மலை மலையாகக் குவிந்திருக்கவில்லை.

கடல் பூமிக்குள் புகுந்து ஆழம் மிகுந்த கால்வாயாக அமைந்து கப்பல்கள் வந்து பத்திரமாய் நிற்பதற்குரிய இயற்கைத் துறைமுகமாக இருந்ததை முன்னர் பார்த்தோம். இப்போது அந்தக் கால்வாயில் மணல் அடித்து அடித்துத் தூர்ந்து போய், ஆழம் வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. ஆழமற்ற அக் கடற் கழியில் சிறிய படகுகளும் ஓடங்களும்தான் வரக்கூடும். நாவாய்களும் மரக்கலங்களும் சற்றுத் தூரத்தில் கடலிலேதான் நிற்க வேண்டும். படகுகளில் வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் சென்று அந்த மரக்கலங்களிலே சேர்ப்பிக்க வேண்டும்.

மேலே கூறிய இடைக்காலத்தில் மாமல்லபுரம் சில புதிய சிறப்புக்களையும் அடைந்திருந்ததைக் குறிப்பிட வேண்டும். முக்கியமாகக் கடற்கரையோரத்தில் விளங்கிய அழகிய கற்கோயில் நம் கண்களையும் கருத்தையும் கவர்கின்றது. அது மகேந்திரன்—மாமல்லன் காலத்தில் அமைக்கப்பட்ட குன்றுகளைக் குடைந்தெடுத்த கோயில்களைப் போன்றதல்ல. குன்றுகளிலிருந்து கற்களைப் பெயர்த்துக்கொண்டு வந்து கட்டப்பட்ட கோயில். சமுத்திர ராஜனுடைய தலையில் சூட்டப்பட்ட அழகிய மணி மகுடத்தைப் போல் விளங்குகிறது. அடடா! அந்தக் கோயில் அமைப்பின் அழகை என்னவென்று சொல்வது?

இதைத் தவிர நகரத்தின் நடுவே மூவுலகும் அளந்த பெருமான் சயனித்

திருக்கும் விண்ணகரக் கோயில் ஒன்றும் காட்சி அளிக்கிறது. சைவத்தையும் வைஷ்ணவத்தையும் இரு கண்களைப் போலப் போற்றி வளர்த்த பரமேசுவரப் பல்லவன் திருப்பணி செய்த விண்ணகரம் அது. திருமங்கையாழ்வார் இந்தக் கோயிலுக்கு வந்து தலசயனப் பெருமாளைத் தரிசித்துப் பக்தி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார். அவருடைய காலத்திலே கூடப் பல்லவ சாம்ராஜ்யம் பெருகி வளர்ந்த சிறப்புடன் விளங்கியது என்பதையும் மாமல்லபுரம் செல்வம் கொழிக்கும் துறைமுகமாக விளங்கியது என்பதையும் பின் வரும் பாசுரத்தின் மூலம் நன்கு அறியலாம்:

''புலன்கொள் நிதிக்குவை யோடு
புழைக்கை மா களிற்றினமும்
நலங்கொள் நவமணிக் குவையும்
சுமந்தெங்கும் நான் றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல் மல்லைத் தலசயனம்
வலங்கொள் மனத்தா ரவரை
வலங்கொள் என்மட நெஞ்சே!''

திருமங்கை யாழ்வாரின் காலத்துக்குப் பிற்பட்ட நூற்றாண்டு காலத்தில் பல்லவ சாம்ராஜ்ய சூரியன் அஸ்தமித்துவிட்டது. 'கல்வியில் இணையிலாத காஞ்சி' மாநகரின் சிறப்பும் குறைந்துவிட்டது. 'கலங்கள் இயங்கும் கடல் மல்லை'யின் வர்த்தக வளமும் குன்றி வந்தது.

ஆனால் தமிழகத்துக்கு அழியாப் புகழ் அளிப்பதற்கென்று அமைந்த அந்த அமர நகரத்தின் அற்புதச் சிற்பக் கலைகளுக்கு மட்டும் எந்த விதக் குறைவும் நேரவில்லை. பாறைச் சுவர்களில் செதுக்கப்பட்ட சித்திர விசித்திரமான சிற்பங்களும் குன்றுகளைக் குடைந்து எடுத்து அமைத்த விமான ரதங்களும் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் அவற்றை அமைத்த காலத்தில் விளங்கியது போலவே இன்றைக்கும் புத்தப் புதியனவாக விளங்கின. பண்டங்களை ஏற்றுமதி செய்வதற்காக வந்த வர்த்தகர்களின் கூட்டத்தைக் காட்டிலும் சிற்பச் செல்வங்களைக் கண்டு களித்துப் போவதற்காக வந்த ஜனக் கூட்டம் அதிகமா யிருந்தது.

❀ ❀ ❀

மாமல்லபுரத்து வீதிகளின் வழியாக இரட்டைக் குதிரைகள் பூட்டிய அழகிய விமான ரதம் ஒன்று சென்றது. குதிரைகளின் அலங்காரங்களும், ரதத்தின் வேலைப்பாடுகளும், பொன் தகடு வேய்ந்து மாலை வெய்யிலில் மற்றொரு சூரியனைப் போல் பிரகாசித்த ரதத்தின் மேல் விதானமும் அதில் இருந்தவர்கள் அரச குலத்தினராக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தின.

ஆம்; அந்தப் பொன் ரதத்தின் விசாலமான உட்புறத்தில் அரசகுலத்தினர் மூவர் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன்தான் வீராதி வீரனும், சுந்தர சோழரின் மூத்த குமாரனுமான ஆதித்த கரிகாலன். மிக இளம் பிராயத்திலேயே இவன் போர்க்களத்துக்குச் சென்று செயற்கரும் வீரச் செயல்கள் புரிந்தான். மதுரை வீர பாண்டியனை இறுதிப் போரில் கொன்று, ''வீர பாண்டியன் தலை கொண்ட கோப்பர கேசரி'' என்று பட்டப் பெயர் பெற்றான். வீரபாண்டியன் வீர சொர்க்கம் அடைந்து பாண்டிய நாடு சோழ சாம்ராஜ்யத்தின் கீழ் வந்த உடனேயாகத்தான் சுந்தர சோழர் நோய்



வாய்ப்பட்டார். ஆதித்த கரிகாலனே அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்பதை ஐயமற நிலைநாட்ட அவனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகம் செய்வித்தார். அது முதல் கல்வெட்டுக்களில் தன் பெயரைப் பொறித்துச் சாசனம் அளிக்கும் உரிமையும் ஆதித்த கரிகாலன் பெற்றான்.

பின்னர், தொண்டை மண்டலத்தை இரட்டை மண்டலத்துக் கன்னர தேவனுடைய ஆதிக்கத்திலிருந்து முழுதும் விடுவிக்கும் பொருட்டு ஆதித்த கரிகாலன் வட நாட்டுக்குப் பிரயாணமானான். அங்கேயும் பல போர்க்களங்களில் செயற்கரும் வீரச் செயல்களைப் புரிந்தான். இரட்டை மண்டலத்துப் படைகளை வட பெண்ணைக்கு வடக்கே துரத்தியடித்தான். மேலும் வட திசையில் படையெடுத்துச் செல்வதற்குப் படை பலத்தைப் பெருக்கிக் கொள்ளுதல் அவசியமாயிற்று. ஆத்

வின் காஞ்சியில் வந்து தங்கிப் படை திரட்டவும் மற்றும் படையெடுப்புக்கு அவசியமான ஆயுத தளவாட சாமக்கிரியைகளைத் திரட்டவும் தொடங்கினான். இந்த நிலையில் பழுவேட்டரையர்கள் அவனுடைய முயற்சிக்குத் தடங்கல் செய்யத் தொடங்கினார்கள். இலங்கைப் போர் முடிந்தபிறகுதான் வடநாட்டுப் படையெடுப்புத் தொடங்கலாம் என்று சொன்னார்கள். இன்னும் பலவிதமான வதந்திகளும் காற்றிலே மிதந்து வரத் தொடங்கின. இலங்கையில் போர் செய்யச் சென்றுள்ள படைக்குச் சோழ நாட்டிலிருந்து வேண்டிய உணவுப் பொருள் போக வில்லையென்று தெரிந்தது. இதனாலெல்லாம் ஆதித்த கரிகாலனுடைய வீர உள்ளம் துடித்துக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

நமது கதை நடந்த காலத்துக்கு முன்னும் பின்னும் சுமார் முந்நூறு ஆண்டு காலத்தில் தமிழ் அன்னையின் திருவயிற்றில் இதிகாச காவியங்களில் நாம் படிக்கும் மகாவீரர்களை யொத்த வீரப் புதல்வர்கள் தோன்றிக் கொண்டிருந்தார்கள். பீமனையும் அர்ச்சுனனையும் பீஷ்மரையும் துரோணரையும் கடோத்கஜனையும் அபிமன்யுவையும் ஒத்த வீரர்கள் தமிழகத்தில் அவதரித்தார்கள். உலகம் வியக்கும்படியான வீரச் செயல்களைப் புரிந்தார்கள். போரில் அடைந்த ஒவ்வொரு வெற்றியும் இவர்களுடைய தோள்களுக்கு மேலும் வலிமை அளித்தன. வயது முதிர்ந்த கிழவர்கள் மலையைப் பெயர்த்தெடுக்கும் வலிமை பெற்றிருந்தார்கள். பிராயம் ஆகாத இளம் வாலிபர்கள் காற்றிலேறிச் சென்று வான் முகட்டை அடைந்து விண் மீன்களை உதிர்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள்.

இப்படிப்பட்ட வீரர்கள் இருவர் அச்சமயம் ஆதித்த கரிகாலன் ஏறிச் சென்ற ரதத்தில் அவனுடன் சம ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

இவர்களில் ஒருவர் திருக்கோவலூர் மலையமான். இவர் ஆண்ட மலையமானாடு வழக்கத்தில் பெயர் சுருங்கி 'மலாடு' என்றும் 'மிலாடு' என்றும் வழங்கியது. ஆகையால் இவருக்கு 'மிலாடுடையார்' என்ற பட்டப் பெயர் ஏற்பட்டிருந்தது.

சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இரண்டாவது பத்தினியாகிய வானமாதேவி இவருடைய செல்வத் திருமகள்தான். எனவே, ஆதித்த கரிகாலனுடைய பாட்டனார் இவர். முதிர்ந்த பிராயத்திலும் நிறைந்த அறிவிலும் இவர் கௌரவர்களின் பாட்டனாரான பீஷ்மரை ஒத்திருந்தார். ஆதித்த கரிகாலன் இவரிடம் பெரும் பக்தி வைத்திருந்தபோதிலும் இவருடைய புத்திமதி சில சமயம் அந்த வீர இளவரசனின் பொறுமையைச் சோதித்தது.


ரதத்தில் இருந்தவர்களில் இன்னொருவன் பார்த்திபேந்திரன். இவன் பழைய பல்லவர் குலத்திலிருந்து கிளை வழி ஒன்றில் தோன்றியவன். ஆதித்த கரிகாலனை விட வயதில் சிறிது மூத்தவன். அரசுரிமை அற்றவனாதலால் போர்க்களத்தில் தன்னுடைய ஆற்றலைக் காட்டி வீரப் புகழை நிலைநாட்ட விரும்பினான். ஆதித்த கரிகாலனைச் சென்றடைந்தான். வீரபாண்டியனோடு நடத்திய போரில் ஆதித்த கரிகாலனுக்கு வலது கையைப் போல இருந்து உதவி புரிந்தான். இதனால் ஆதித்த கரிகாலனுடைய அந்தரங்க நட்புக்கு உரியவனானான். வீர பாண்டியன் விழுந்த நாளிலிருந்து இருவரும் இணை பிரியாத் தோழர்கள் ஆனார்கள்.

இந்த மூவரும் ரதத்தில் சென்றபோது தஞ்சாவூரிலிருந்து பராபரியாக வந்த செய்திகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

''இந்தப் பழுவேட்டரையர்களின் அகம்பாவத்தை இனிமேல் என்னால் ஒரு கணமும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. நாளுக்கு நாள் அவர்கள் வரம்பு கடந்து போகிறார்கள். நான் அனுப்பிய தூதன் பேரில் 'ஒற்றன்' என்ற குற்றம் சுமத்துவதற்கு இவர்களுக்கு எத்தனை அகந்தை இருக்க வேண்டும்? அவனைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் பொன் வெகுமதி கொடுப்பதாகப் பறையறைவித்தார்களாமே? இதையெல்லாம் நான் எப்படிப் பொறுக்க முடியும்? என் உறையில் உள்ள வாள் அவமானத்தினால் குன்றிப் போயிருக்கிறது. நீங்களோ பொறுமை உபதேசம் செய்கிறீர்கள்!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''பொறுமை உபதேசம் நான் செய்யவில்லை. ஆனால் இந்த மாதிரி முக்கியமான காரியத்துக்கு வந்தியத் தேவனை அனுப்ப வேண்டாம் என்று மட்டும் அப்போதே சொன்னேன். அந்தப் பதற்றக்காரன் காரியத்தைக் கெடுத்துவிடுவான் என்று எனக்குத் தெரியும்! வாளை வீசவும் வேலை எறியவும் மட்டும் தெரிந்திருந்தால் போதுமா? இராஜ காரியமாகத் தூது செல்கிறவனுக்குப் புத்திக் கூர்மை இருக்க வேண்டும்...'' என்று கூறினான் பார்த்திபேந்திரன்.

இளவரசன் கரிகாலன் வந்தியத் தேவனிடம் காட்டிய அபிமானம்



ஷாலிமார்
க்ளுகோஸ்
பிஸ்கட்டுகள்

புதுமை குன்றுமல்
இருக்க இப்பொழுது
அலுமினியம்
ரேக்குகளில் பேக்
செய்யப்படுகிறது



ஷாலிமாரின் புஷ்டிமிக்க
புதிய க்ளுகோஸ் பிஸ்கட்டுகளை
உண்டு இன்புறுங்கள்.
அவை புரதங்களும், வைட்ட
மின்களும் நிரம்பியவை; என்றும்
புதுமை குன்றுமல்
இருப்பதற்கென, அலுமினியம்
ரேக்குகளில் பேக்
செய்யப்படுகின்றன.

ஷாலிமாரின் ஐதராபாத்
தொழிற்சாலையின் தயாரிப்பு


இரண்டு சைஸ்களில்
கிடைக்கின்றன.

ஷாலிமார் பிஸ்கட்ஸ் ப்ரை. லிட்.,
பம்பாய்-ஐதராபாத்

SS தூ

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சென்னை : பிரமேஷ் குமார் ஏஜென்ஸீஸ், சென்னை-6 ○ கோயமுத்தூர் & நீலகிரிக்கு: ஆர். சந்திரசேகரன் & சன்., கோயமுத்தூர் - 2 ○ மதுரை : எஸ்.ஏ. ஏ. பாலகிருஷ்ண செட்டி & கோ., மதுரை-1 ○ திருநெல்வேலி & கன்னியாகுமரி: ராஜ் ஹோட்டல் & ஸ்டோர்ஸ், திருநெல்வேலி ○ திருச்சிராப்பள்ளி: ராஜன் ஸ்டோர்ஸ், திருச்சிராப்பள்ளி - 2 ○ சேலம் : வி. எஸ். ராமநாதன் செட்டியார், சேலம்

உறுதிமிக்கது...
துல்யமான
வேலைப்பாடுடையது...
சிறந்த முறையில்
உருவானது...





ஹெர்குலிஸ்

உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது

ஹெர்குலிஸ் 135 நாடுகளில் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவது. இந்தியாவில் ஏராளமாக விற்பனையாகும் சைக்கிள். உலகின் மாபெரும் சைக்கிள் தயாரிப்பாளர்களான டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட், யு.கே. நிறுவனத்தின் நவீன தொழில் நுட்ப முறையைப் பின்பற்றி தென் கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய, வசதிமிக்க சைக்கிள் தொழிற்சாலையில் அதி நுட்பமாக தயாரிக்கப்பட்டது.


சைக்கிள் ஒரு சிறந்த முதலீடு. ஹெர்குலிஸைத் தேர்ந்தெடுங்கள். அது மிதமான விலையில் கிடைக்கும் உன்னதமான சைக்கிள்.

ஹெர்குலிஸ்®

வெறும் சைக்கிள் மட்டுமன்று —
வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை

இந்தியாவில் தயாரிப்போர்:
டீஐ சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை 1 பதிவுபெற்று உபயோகிப்போர்.
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே. அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்

TIC/H/4832





முயல்களுக்காக மூன்று வேலிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆஸ்திரேலியா கண்டத்தின் அருகில் உள்ள சிறு தீவுகளுள் ஒன்றில் பிரிட்டிஷ் விவசாயி ஒருவன் குடியேறினன். அவனுக்கு முயல்கள் என்றால் ரொம்பவும் பிடிக்கும். தான் அன்புடன் வளர்க்க இருபது முயல்களை இங்கிலாந்திலிருந்து வரவழைத்தான். ஒருசில ஆண்டுகளில் இவை ஏராளமாகப் பெருகிவிடவே விவசாயி இன்னது செய்வதென்று புரியாமல் திகைத்தான். அவனுடைய பயிரையெல்லாம் இவை பாழ்படுத்திக் கொண்டிருந்தன. கடைசியில் நூற்றுக்கணக்கான முயல்களைக் கண்ணி வைத்துப் பிடித்து அவற்றுடன் தனது சிறு தீவினை விட்டுக் கிளம்பி ஆஸ்திரேலியா கண்டத்தினை அடைந்தான். ஆஸ்திரேலியா கண்டத்தின் மண்ணில் முதன் முதலாக முயல்கள் காலடி வைத்தன. 'விட்டது சனி' என்றெண்ணி விவசாயி தன் தேசுக்குத் திரும்பினன். ஆனல் ஆஸ்திரேலியா கண்டத்தில் இம்முயல்கள் வெகு சீக்கிரத்தில் ஆயிரக்கணக்கில் பெருகிவிட்டன. ஒவ்வொரு விவசாயியும் ஆண்டொன்றுக்கு இத்தனை முயல்களைக் கொல்லவேண்டும் என்று ஆஸ்திரேலிய சர்க்கார் சட்டம் பிறப்பிக்க வேண்டிய அளவுக்கு இம்முயல்கள் பெருகிப் பயிர்களை நாசம் செய்தன. நாளுக்கு நாள் புதிய புதிய பகுதிகளையும் ஆக்கிரமிக்கத் தொடங்கின.

மேற்கு ஆஸ்திரேலியாவில் முயல்களின் தொல்லை இல்லை. இங்கும் இவை பரவிவிடக் கூடாதே என்பதற்காக அரசாங்கம் ஒரு வேலி எழுப்பியது. 1139 மைல் நீளத்துக்குக் குன்றுகள், பள்ளத்தாக்குகள், வயல்கள் மீதெல்லாம் இந்த வேலி அமைந்திருக்கிறது. மூன்றரை அடி உயரமுள்ள இந்த வேலி அமைக்கப்பட்டு வருகையிலேயே சில முயல்கள் அப்பால் தாண்டிச் சென்றுவிட்டன. ஆகவே நூறு மைல் தள்ளி இன்னொரு வேலியையும் எழுப்பியது அரசாங்கம். இப்படியே மூன்றாவதாக ஒரு வேலியும் அமைக்கப்பட்டது.

முயல்களுக்காக மூன்று வேலிகளை மிலியன் கணக்கில் பணச் செலவு செய்து அமைத்தது ஆஸ்திரேலிய அரசாங்கம். எல்லாம் தொடக்கத்தில் அன்புடன் வளர்க்க வரவழைக்கப்பட்ட இருபது முயல்களால் வந்த வினை! —வி.எஸ். ஸங்கடண்கர்

பார்த்திபேந்திரனுக்குப் பிடிப்பதில்லை. எப்போதும் அவனைப் பற்றி ஏதாவது குறை சொல்லிக் கொண்டிருப்பான். அவன் செய்யும் எந்தக் காரியத்திலும் குற்றம் கண்டு பிடிப்பான். ஆகையால் இந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்வாறு குற்றம் சொன்னான்.

''ஆரம்பித்து விட்டாயா, உன் கதையை? வந்தியத்தேவன் பேரில் ஏதாவது சொல்லிக் கொண்டிராவிட்டால் உனக்குப் பொழுது போகாது. அவனுக்குப் புத்திகூர்மை இல்லாவிட்டால் வேறு யாருக்கு இருக்கிறது? எந்த விதத்திலாவது, எப்படியாவது, சக்கரவர்த்தியிடம் நேரில் ஓலையைக் கொடுத்துவிட வேண்டும் என்று நான் இட்ட கட்டளையை அவன் நிறைவேற்றி விட்டான். அதனால் பழுவேட்டரையர்கள் கோபங் கொண்டிருக்கிறார்கள். இதில் வந்தியத்தேவனின் தவறு என்ன?'' என்று ஆதித்த கரிகாலன் கேட்டான்.

''தாங்கள் சொல்லி யனுப்பிய காரியத்தோடு அவன் நின்றிருக்க மாட்டான். வேறு வேண்டாத காரியங்களிலும் தலையிட்டிருப்பான்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''நீ சற்றுச் சும்மா இரு! தாத்தா! ஏன் இப்படி மௌனமாக இருக்கிறீர்கள்? தங்களுடைய கருத்து என்ன? ஒரு பெரும் படை திரட்டிக் கொண்டு சென்று தஞ்சாவூரிலிருந்து சக்கரவர்த்தியை மீட்டுக் காஞ்சிக்கு அழைத்து வந்துவிட்டால் என்ன? எத்தனை நாள் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருப்பதுபோல் வைத்திருப்பதை நாம் பார்த்துக் கொண்டிருப்பது? எத்தனை நாள் பழுவேட்டரையர்களுக்குப் பயந்து காலம் கழிப்பது?'' என்று பொங்கினன் ஆதித்த கரிகாலன்.

தம் வாழ்நாளில் அறுபத்தாறு போர்க்களங்களைக் கண்டு அநுபவம் பெற்றவரான திருக்கோவலூர் மலையமான் — மிலாடுடையார் — மறுமொழி சொல்வதற்காகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். இதற்குள் எதிரே கடல் அலைகள் தெரியவும், ''முதலில் இந்த ரதத்திலிருந்து இறங்குவோம், தம்பி! வழக்கமான இடத்தில் போய் உட்கார்ந்து பேசுவோம். எனக்கு வயது ஆகிவிட்டதல்லவா? ஓடுகிற ரதத்தில் பேசுவது எளிதாக இல்லை'' என்றார்.

(தொடரும்)

வள்ளுவன் கண்ட இன்பம்



அ.ச. ஞானசம்பந்தம்

தலை சிறந்த உலக இலக்கியங்களுள் ஒன்று என வைத்து எண்ணத் தகுந்த திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலை உடையது என்பதை அனைவரும் அறிவர். தமிழ் மரபை விளங்கிக் கொள்ள முடியாத வேற்று நாட்டார் சிலரும், தமிழராய்ப் பிறந்தும் தமிழ் மரபை அறியாத தமிழருள் ஒரு சிலரும் குறள் கண்ட மூன்றாவது பாலை வள்ளுவர்தாம் இயற்றினரா என்று ஐயப் பட்டுப் பேசி எழுதிய காலமும் உண்டு. நல்ல வேளையாக இன்றைய நாளில் அத்தகைய ஆராய்ச்சியில் புகுவார் யாருமில்லை. முன்னர் கூறிய அச்சிறுபான்மையினரும் காமத்துப் பால் என்ற பெயரைக் கேட்டவுடன் அதனைத் தவறாகக் கருதினரேயன்றி அதனுள் புகுந்து ஆழ்ந்து கற்று இருப்பாரேல் இப்படிப்பட்ட பிழை செய்திரார்.

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் ஆண், பெண் பிரிவினையோடு வாழக் காண் கிறோம். மாக்கள் இனத்திலிருந்து வளர்ச்சி அடைந்த மக்கள் இனம், தன் வளர்ச்சி யைச் சிறப்பித்துக் காட்டுவதற்கு நிலைக் களனாகக் கொண்டவை பகுத்தறிவும் அத னோடு ஒருங்கு வைத்து எண்ணத் தகுந்த உணர்ச்சியுமேயாகும். விலங்குகளுக்கும் உற்றுணர்வு உண்டு எனினும் ஒரு முறை அனுபவித்த ஒன்றை மறுபடியும் நினைவுக் குக் கொணர்ந்து அந்நினைவின் அடிப்படை யில் இன்ப துன்பம் ஆகிய உணர்ச்சிகளைப் பெறுதல் மக்களை அல்லாத பிறவற்றுக்கு இயலாத காரியம். எனவேதான் மக்கள் பிறப்பை உயர்ந்தது என்றும், 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே' (தொல்காப் பியம்) என்றும் பெரியோர் பேசிப் போயினர். உற்றுணர்வு ஒன்றையல்லாமல், சிந்தித்தும் நினைத்தும்கூட உணர்ச்சியைப் பெறக் கூடும் என்ற அடிப்படையை நன்கு அறிந்த தமிழர் காமத்தை இவ்வுணர்வின் அடிப்படையில் கண்டனர். ஏனையவர்கள் போல் காமத்தை உடலோடு மட்டும் தொடர்புடையதாகக் கொள்ளாமல் உள்ளத் தோடு பெரிதும் தொடர்புடைய ஒன் றாகவே கண்டார்கள்.

தமிழர் மரபை வள்ளுவப் பெருந்தகை மிக நன்கு அறிந்திருந்தார் என்பது அவ ருடைய காமத்துப் பாலைக் கற்போர் நன்கு அறிதல் கூடும். இல்லையேல்,

> 'மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
> செவ்வி தலைப்படு வார்' (குறள்-1289)

என்ற குறளை அப்பெருந்தகை பாடியிருக்கக் காரணமில்லை. புல் பூண்டில் தொடங்கி மனிதன் ஈறாக அனைவருமே அனுபவிப்பது காம இன்பமெனின், உலக வளர்ச்சிக்கு இதுவே உறுதுணையாய் அமைந்துள்ளது எனின், 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என அனைவரிலிருந்து சிலரைப் பிரித்துக் கூறக் காரணமில்லை. இவ்வாறு கூறியதால் செவ்வி தலைப்படும் சிலரையல்லாத பலர் அதனை அறியவில்லை என்பதும் நன்கு விளங் கும். அனைவருமே அனுபவிக்கிற காம மாகிய ஒன்றை, சிலரே அதன் செவ்வியை (பக்குவம்) அறிவார் என்று வள்ளுவர் கூறினால், அனைவரும் அனுபவிக்கின்ற காமத்தையல்லாமல் தனிப்பட்ட வேறொன் றைப் பெரியார் கூறுகின்றார் என்று நினைக்கத் தோன்றும். காதல் உணர்ச்சியில் ஒருவனும் ஒருத்தியும் சேர்ந்து இன்பம் பெறுகின்றார்கள் எனினும், அவ்வாறு சேர்ந்த வர்கள் அனைவரும் காதலை அறிந்தவர்கள் என்று கூறிவிட முடியாது. இருவர் சேர்ந்த மாத்திரத்தில் அவர்கள் இருவரும் காமத் தின் செவ்வியை (பக்குவத்தை) அறிந்துவிட் டார்கள் என்று சொல்ல முடியாது. பால் வேறுபாட்டு மனோதத்துவத்தை (Sexual Psychology) மிகப் பெரிய அளவில் ஆராய்கின்ற மேனாட்டுக்காரர்கள் இப்போது பெரிதுப்படுத் திப் பேசி வருகின்ற ஓர் உண்மையாகும் இது. இல்லறம் நடத்துபவர்கள் அனைவரும் காதல் உணர்ச்சியை அறிந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. நூறு ஆண்டுகள் குடும்பம் நடத்தியவர்கள்கூடக் காதல் என்றால் இன்னது என்று அறியாமலே குடும் பம் நடத்தி, குழந்தைகள் பெற்று, இன்ப கரமான வாழ்க்கை நடத்திவிட்டதாக என்



ணிக் கொள்ளலாம்; என்றாலும், இவ்வளவும் நடைபெற்றுவிட்ட காரணத்தால் மட்டும் இத்தலைவன் தலைவியர் காமத்தைப் பற்றி அறிந்து கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. இந்த ஆழ்ந்த கருத்தைத் தான் வள்ளுவப் பெருந்தகை 'சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என்று பேசிச் செல்கிறார்.



வள்ளுவரின் காமத்துப் பாலின் அடிப்படையில் நின்று கண்டால் காமம் என்பது மலரைவிட மென்மையுடையது என்றும் அது ஒரு மனப் பக்குவ நிலையாகும் என்றும் அறிய முடிகிறது. அந்த மனப் பக்குவத்தை அறிவதே மிகப் பெரிய காரியமாகும். அறிந்தபின்னர் அதனைப் பயன்படுத்துதல் என்பது மிகமிகப் பெரிய காரியமாகும். மென்மையுடைய மலரானது, தான் இருக்கும் இடம், மண் வளம், தட்ப வெப்ப நிலைகள், நீர்வளம், காற்று ஆகிய அனைத்தினாலும் பாதிக்கப்படக்கூடிய ஒன்றாகும். இவை அனைத்தும் இருக்கக்கூடிய நிலையில் தான் மலர் முழுத் தன்மை பெற்று மணம் பரப்பும். இவற்றுள் யாதானும் ஒன்றோ பலவோ குறைந்துவிடின், மலர் வடிவளவில் மலர் என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்குமே தவிர முழுத்தன்மை பெற்றதாக அமையாது. அதேபோல் காம இன்பத்தை நுகர்வதற்குக்கூட ஒரு வகை மன நிலை வேண்டும். அம் மன நிலை இல்லாமலும் காமம் அநுபவிக்கப்படுவது இல்லையோ எனில் உண்டு; என்றாலும் அது முழுத் தன்மை பெற்றதாக ஆகாது. மலர், பெயர் அளவில் மலராக இருப்பதுபோல இக்காமமும் பெயரளவில் அநுபவிக்கப்படுகிறதே தவிர முழுத் தன்மை பெற்றதாக இருப்பதில்லை.

இத்துணைக் கருத்துக்களையும் உள்ளடக்கி ஒரு குறளை வள்ளுவர் பேசினார் என்றால், அதுவே அவருடைய நுண்மாண் நுழைபுலத்திற்கு எடுத்துக்காட்டாகும். தமிழ் மொழியிலுள்ள அகநூல்கள் பிறமொழிகளைப் போல ஆண், பெண் தொடர்பு பற்றி அதிகம் கூறாமல், காதல் உலகின் அடிப்படையிலுள்ள மன வளத்தையே பெரிதும் பேசிச் செல்வது கண்கூடு. அதிலும் சிறப்பாக, வள்ளுவருடைய காமத்துப்பால், ஒருவன் ஒருத்தி என்ற இருவர்எதிர்ப்பட்டு, ஒருவரால் ஒருவர் ஈர்க்கப்பட்டுப் பழகி, களவு வாழ்க்கை நடத்தி, பின்னர்க் கற்பில் புகுந்து வாழ்க்கை நடத்துகின்ற வரையில் ஓரளவு மரபை அடியொற்றிச் செல்கின்றது எனினும், ஆழ்ந்து நோக்கினால் களவு, கற்பு ஆகிய இரு நிலைகளிலும் தலைவன், தலைவி என்ற இருவருடைய



மன நிலைகள், எண்ண ஓட்டங்கள், எண்ணப் போராட்டங்கள், ஒருவரையொருவர் அறிந்து கொள்ள முயலும் மன நிலை, அவ்வாறு அறிந்த பின்னர் ஒருவருடைய பெருமையை மற்றவர் அறிதல், அதனை அறிந்த பிறகு ஒருவர் ஒருவரில் கலந்து பூர்ணமாகத் தம்மை அவரிடம் தியாகம் செய்து விடுதல் ஆகியவற்றையே கூறிச் செல்கிறது.

வள்ளுவரும் ஏனையோர் போல் காமத்தைக் கண்டிருப்பின் அதற்கு அடியிற் கூறியவாறு ஓர் இலக்கணம் வகுத்திருத்தல் இயலாது.

'அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு' (குறள்-1110)

பல்லாண்டுக் காலமாக ஒருவன் ஓர் இலக்கியத்தைத் திரும்பத் திரும்பப் பயில்கின்றான் எனின் அதன் அடிப்படை யாது? அவன் வயதும் அநுபவமும் ஏற ஏற அப்பழைய நூலில் முன்னர்க் காணாத புதுமையை அறிகிறான். அவ்வாறு அறிகையில் இதுவரை அப்பொருளை அறியாதிருந்த தன் அறியாமையையும் உடன் அறிகிறான். எனவே ஒவ்வொரு முறை கற்குந்தோறும் காணப்பெறும் புதிய நயத்தையும் முன்னர் காணமுடியாதிருந்த தன் அறியாமையையும் அறிகிறான். இந்த உவமையைப் பயன்படுத்தி வள்ளுவப் பெருந்தகை தலைவியிடம் முழுக் காதலுடன் வாழும் தலைவனின் இயல்பை வெளியிடுகிறார். ஒருத்தியுடன் பல்லாண்டு வாழ்ந்தும்கூட ஒவ்வொரு நாளும் அன்று வரை காணாத ஓர் இயல்பை அல்லது இன்பத்தைக் காண்கிறான் தலைவன் எனின் இது உடல் பற்றியதன்று என்பதும் உள்ளுணர்ச்சி பற்றியதே என்பதும் நன்கு விளங்கும்.

உடற்புணர்ச்சி அடிப்படையில் காமம் பேசிய பிறரும், உள்ளப் புணர்ச்சி அடிப்படையில் காமம் பேசிய வள்ளுவரும் இரு வேறு துருவங்களில் நிற்கின்றனர் என்பதை அறிதல் வேண்டும்.

உணர்ச்சியை மனிதன் வெளியிடப் பல்வேறு வழிகளைக் கையாள்கின்றான். சினம், மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை வெளியிட முகத்தையும், இன்னபிற உறுப்புகளையும் பயன்படுத்துகிறான். ஆனால், காதல் போன்ற நுண்மையான [உணர்ச்சியை வெளியிட முகம், உடல் உறுப்புகள் போன்ற] பருப்பொருள்கள் அதிகம் பயன்படுவதில்லை. இந்த உணர்ச்சியை வெளியிட நுண்மையான ஓர் உறுப்புத் தேவைப்படுகிறது. மேலும் சினம்போன்ற உணர்ச்சியை உடலுறுப்புக்கள் வெளியிடுங்கால் (பற்களைக் கடித்தல், மீசை துடித்தல், முகஞ் சிவத்தல்) சில மாறுதல்களை அடைகின்றன; இவற்றைப்

பிறர் அறியாமல் மறைத்தல் அத்துணை எளிதன்று.

ஆனால், நுண்ணிய காம உணர்ச்சி வெளியிடப்படும்பொழுது பிறர் அறியாமல் வெளிப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. பக்கத்திலேயே இருக்கும் பிறர் அறியாமல், ஆனால் யார் அதனை அறிந்து கொள்ள வேண்டுமோ அவர் மட்டும் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் உள்ளத்துணர்ச்



சியை வெளியிடும் ஓர் உறுப்பு உண்டு என்றால் அது எதுவாக இருக்கும்? இன்னும் கூற வேண்டுமாயின் அந்த உறுப்பு அந்த உணர்ச்சியை வெளியிட்டுக் கொண்டிருக்கும்போதே அதைக் காணுகின்ற பலருள் ஒருவர் மட்டும் அது வெளியிடும் உணர்ச்சியை அறிந்து கொள்ளவும், ஏனையோர் ஒன்றும் அறிந்து கொள்ள முடியாமல் இருக்கவும் உள்ள சூழ்நிலையில் உணர்ச்சியை வெளியிடும் உறுப்பு யாது? மனித உறுப்புகளுள் தலைசிறந்ததாகிய கண்தான் என்று கூறத் தேவையில்லை. இதனை நன்கு அறிந்த வள்ளுவனார் அக்கண்ணாகிய உறுப்புப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுவதுடன் ஒரு தனி அதிகாரமே கண்ணைப் பற்றிப் பேசுவதற்காக ஒதுக்குகின்றார். பிறர் அறியாமல் ஒருவருக்கு மட்டும் செய்தி அனுப்பும் அக்கண்ணின் திறத்தையும், ஒரே நேரத்தில் ஒருவருக்குத் துன்பத்தையும் இன்பத்தையும் மாறி மாறி அளிக்கின்ற திறத்தையும் பேசுகின்றார்.

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே புள' (குறள்-1099)

(முன்பின் தெரியாதவர் போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுதல் காதலர் கட்கு இயல்பு)

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து (குறள்-1091)

(இவளிடம் இரண்டு பார்வைகள் உண்டு; ஒன்று எனக்கு நோய் தரும் பார்வை, மற்றது அந்நோயைத் தணிக்கும் பார்வை.)

இத்தமிழ் நாட்டார் காதலை மன அடிப்படையிலேயே அதிகம் கண்டனர் என்பதை மற்றொரு வகையாலும் அறியலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாக அக வாழ்க்கையைப் பிரித்துக் கூறினர்கள். எனினும் கூட்டத்தைக் குறிக்கும் குறிஞ்சித் திணை பற்றிய பாடல்களைக் காட்டிலும் பிரிவைக் குறிக்கும் பாலைத் திணைப் பாடல்கள் பல மடங்கு அதிகமாக இருக்கின்றன. மனிதனுடைய வாழ்வு முழுவதையும் குறிக் கொண்டு பேசும் காமத்துப் பாலில் உள்ள மொத்த அதிகாரங்கள் 25. அதில் பன்னிரண்டு அதிகாரங்கள் பிரிவுபற்றி (பாலை) எழுந்தன என்றால் பாலையின் சிறப்பை வெளியிட வேறு சான்றும் வேண்டுமோ? இதன் காரணம் யாது என்பதைச் சற்று நின்று ஆய வேண்டும்.

பிரிவில் ஒருவரை ஒருவர் காணுகிற வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது, உடனிருந்து வாழும்பொழுது ஒருவரையொருவர் நினைப்பது தவிர மனத்தில் பிற எண்ணங்களுக்கும் இடம் இருக்கும். ஆனால், பிரிவு ஒன்றில்தான் எண்ணம் முழுவதும் பிரிந்தவர்கள் பற்றியே நிகழும். அன்றியும் ஒருவரிடத்து மற்றவர் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்பதை அளவிடவும் அறிந்து கொள்ளவும்கூடப் பிரிவுதான் பயன்படுகிறது.

இந்த அடிப்படையில்தான் பாலையாகிய பிரிவு அகத்திணை இலக்கியத்தில் அதிக இடம் பெறுகின்றது. குறளும் இதற்கு விலக்கன்று என்பதைக் காமத்துப்பாலில் பாலைக்கு ஒதுக்கின அதிகாரங்கள் மூலம் காணலாம்.


விட்டுப் பிரிந்திருக்கும் தலைவன் ஒருவன் இத்துணை நேரமும் தன்னைப் பற்றியே நினைந்து கொண்டிருப்பான் என எண்ணுகிறாள் ஒரு தலைவி. ஆனால், அதே நேரத்தில் பெண்களுக்கே இயல்பான சந்தேகமும் வந்து விடுகிறது. ஒருவேளை தன்னைப் பற்றி நினைக்க வேண்டும் என்று கருதி உடனேயே வேறு அலுவல் காரணமாக அந்நினைப்பை ஒதுக்கி விட்டான் போலும் என்று கவல்கிறாள்.

அம்மன நிலையை இதோ பேசுகிறார் வள்ளுவர்.

'நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்' (குறள்-1203)

(எனக்குத் தும்மல் வருவது போல வந்து அடங்கிவிட்டது. எனவே தலைவன் நினைப்பது போன்று நினையான் கொல்)

இதுகாறுங் கூறியவாற்றால் பிற ஆசிரியர்கள் இன்பத்தைக் கண்ட விதமும், வள்ளுவர் இன்பத்தைக் கண்ட விதமும் வேறு வேறு என்பதும், மனித மனத்தின் ஆழத்தை நன்குணர்ந்த வள்ளுவனார் கூறிய இன்பத்துப் பால் உலக முழுவதற்கும் எக்காலத்தும் பொருந்தும் என்பதும் நன்கு விளங்கும்.



புத்தாண்டுக்கு நெய்வேலியின் அன்பளிப்பு!

சூபர் லீக்கோ

மிக மிக மிகச்சிக்கனமானது!

இது ஓர் சிறந்த எரிபொருள்

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்
பெருமிதத்துடன் அளிக்கும் 'சூபர் லீக்கோ'!


'சூபர் லீக்கோ' பெருமளவில் உபயோகிப்போருக்கு ஓர் வரப்பிரசாதம். பொருக்கி எடுத்த ஒரே அளவான கட்டிகள். புகையற்றதும், சக்தி மிக்கதுமானது 'சூபர் லீக்கோ'. 'லீக்கோ'வைவிட சிக்கனமானது.

சென்னை நகரிலும், அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள எல்லா 'லீக்கோ' விநியோகஸ்தர்களிடமும் 'சூபர் லீக்கோ' கிடைக்கும். 40 கிலோ மூட்டை விலை ரூ. 12/- பிரதேச வரிகளும் உண்டு.

சிக்கனத்திற்கு சிறந்தது 'சூபர் லீக்கோ'!

LECO

'லீக்கோ'வும் இப்பொழுது வழக்கம்போல் தாராளமாக எங்கும் கிடைக்கிறது.



நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட்
நெய்வேலி-1

கிளிஞ்சல் கோபுரம்



முன் கதை

முத்துசிவனுக்கு வாழ்க்கையில் இலட்சியம் எல்லாம் தன் குடும்பத்துக்கு உழைப்பதுதான். தன் தம்பி, தங்கைகளின் முன்னேற்றத்திலேயே அவன் தன் நேரத்தைக் கண்ணுங் கருத்துமாய்ச் செலவிட்டான். அவனுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். தன் கடைசித் தங்கை மைதிலியின் திருமணத்தைச் சிறப்பாக முடித்து மணமக்களை வழி அனுப்பி வைத்தான்.

மைதிலியின் கணவன், முத்துசிவனை "நீங்க லட்சத்திலே ஒருவர்! அப்படிப்பட்ட உங்களை உங்க தங்கச்சிக்கு மாலையிட்டதின் மூலம் அத்தானாக அடைந்தது என் பூர்வஜன்ம புண்ணியம்!" என்று புகழ்ந்ததாகக் கேட்டபோது தன் மகனைப் பற்றிய பெருமை அன்னபூரணியம்மாளுக்கு ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தது.

முத்துசிவனின் தந்தை தீவிர தேசியப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டு, சொத்து பறி முதலாகி, டைப் பவுண்டரி திவாலாகி ஓட்டாண்டி நிலைக்கு வந்துவிட்டிருந்தார். அவர் காலமானபோது முத்துசிவன் தலையில் அத்தனை பொறுப்பும் விழுந்தது. அவனுக்குப் பின்னால் நான்கு பிள்ளைகள். முத்துசிவனுக்கு அடுத்தவள் ஜானகி. அப்பொழுது அவளுக்கு வயது பதினெட்டு; அடுத்தவன் தில்லைநாதன்; பதினாறு வயது இளைஞன். அவனுக்கு நேர் இளையவன் வலம்புரி, பன்னிரண்டு வயதுச் சிறுவன்; கடைக்குட்டிப் பெண் மைதிலி; கவுன் போட்ட ஒன்பது வயதுச் சிறுமி.

இப்படிப்பட்ட நிலையில் முத்துசிவன் ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டான். 'அநாதரவான நிலையில் விடப்பட்டுள்ள இந்த என் அன்புத் தம்பி தங்கைகளை என்னால் இயன்றவரை கஷ்டம் தெரியாமல் வளர்த்துப் படிக்க வைத்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நல்ல இடத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் தேடித் திருமணம் செய்து வைத்துக் குடியும் குடித்தனமுமாக வைக்கும் வரையில் நான் எனது சொந்த வாழ்க்கையில் எந்த ஒரு சுகத்துக்கும் ஆசைப்பட மாட்டேன். எனக்கென்று ஒரு தனித் துணையோ, தனி வாழ்க்கையோ அமைத்துக்கொள்ள மாட்டேன்!" இப்படி இலட்சியத்தை வெறியாக்கிக்கொண்டு உழைத்தான் முத்துசிவன்.

முத்துசிவனின் வாழ்க்கையில் காதல் எதிர்ப்படாமல் இல்லை. 'கனகா இண்டஸ்ட்ரீஸ்' அதிபர் கனகசபையின் புதல்வி கருணா குறுக்கிட்டாள். அந்தக் கனகசபை முத்துசிவன் தந்தையிடம் டைப் பவுண்டரியில் போர்மேனாகப் பணியாற்றிவிட்டுத் தம் சுய முயற்சியில் தொழிலதிபராக முன்னுக்கு வந்தவர். அவருக்கு எப்படியாவது தம் மகளை முத்துசிவனுக்குக் கட்டி வைத்துவிட வேண்டுமென்ற ஆசை. முத்துசிவனும் கருணாவும் ஒரே கல்லூரியில் படித்தவர்களாதலால் அவர்கள் காதல் ஈடேறிவிடும் என்று கருணாவின் பெற்றோர் நம்பினர். ஆனால் தந்தை இறந்தபின், ஏற்பட்டுவிட்ட குடும்பப் பொறுப்பு காரணமாக முத்துசிவனுக்குக் கல்யாணம் செய்துகொள்ள விருப்பம் ஏற்படவில்லை. தன் இலட்சியம் ஈடேறும் வரையில் அதை ஒத்திப் போடுவது என்ற முடிவுக்கு வந்திருந்தான். ஜானகி வாசுவை மணந்தாள்.

தில்லைநாதன் பம்பாயில் வேலையிலிருந்தபடியே மராத்திப் பெண் லதாவைப் பதிவுத் திருமணம் செய்து கொண்டான்.

வலம்புரி சொந்தச் சம்பளத்தில் அச்சகம் ஒன்றில் ப்ரூப் ரீடராகப் பணியாற்றினான். நோஞ்சானான அவனுக்குச் சுந்தரி என்ற அழகான பெண் மனைவியாக வாய்த்தாள். கடைசித் தங்கை மைதிலியைப் பெங்களூர் இந்துஸ்தான் விமான நிலையத்தில் பணியாற்றும் ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கும் அதிகாரிக்கு மணம் முடித்துக் கொடுத்து விட்டான்.

முத்துசிவன் பிரபல கால்நடைத் தீவன உற்பத்திக் கம்பெனியில் சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்து, படிப்படியாக உதவி மானேஜர் பதவியை எட்டியிருந்தான். அவனுக்கு நாடகத் தயாரிப்பாளன் ரட்சகனின் நட்புக் கிட்டியது. 'லவ் இஸ் வாஷர்மென் பெட்' நாடகத்தை அரங்கேற்றிய ரட்சகனுக்கு நாடகப் பித்தே பிடித்துவிட்டது. அவன் வேலையைத் துறந்தான். தன் மாமனாரின் செல்வத்தையும் நாடகம் போடுகிறேனென்று கரைக்கத் தொடங்கினான். அதைக் கண்டு வெகுண்ட மாமனாரிடம் ரட்சகனின் மனைவி வஸந்தி தானே வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பதாகக் கூறினாள்.

ரட்சகனின் மனைவி வஸந்தியும் கருணாவும் ஒரே பள்ளியில் படித்தவர்கள். தன் கணவன் நடத்தும் நாடகத்துக்குக் கருணாவை அழைக்க வந்த வஸந்தி, நாடகப் பைத்தியம் பிடித்த கணவனால் தனக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களைத் தோழியிடம் சொன்னாள். தான் வேலை பார்க்கிற விளம்பரக் கம்பெனியிலே அவனை விளம்பரத்துக்கு 'போஸ்' கொடுக்கச் சொல்லி வற்புறுத்துவதையும் சொன்னாள். இதனால் தான் வேலையை விடும் நிர்ப்பந்தமும் ஏற்படலாம் என்றாள்.

இவர்களது வாழ்க்கையே நாடக மேடையைப் போல் இயங்குகிறது. இவர்கள் நாடக வாழ்க்கையில் இன்னும் என்னென்ன திருப்பங்களோ, போகப் போகப் படிப்படியாகத் தெரியும்.

ஜெகசிற்பியன்

அத்தியாயம் பதின்மூன்று

இந்திர மகால்



பனி நுரையைப் பந்தாக உருட்டித் திடீரென்று தன் மீது வீசியெறிந்தாற்போல் ஒரு சிலிர்ப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள் கருணா. 'உங்க முத்துசிவன்' என்று வசந்தி சொன்னதைக் கேட்ட அவள் அந்த வகைய குளிர்ச்சிச் சிலிர்ப்புக்கு உள்ளானாள். மறுகணமே அந்தச் சிதளப் புல்லரிப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, ''அதாவது, அவருடைய தம்பி வலம்புரியின் மனைவி சுந்தரிதானே? தெரியுமே! ஆனால் அவளிடம் எனக்குப் பேச்சுப் பழக்கம் இல்லை!...ஏன், என்ன விஷயம்?'' என்று அவசரமாக வினவினாள்.

முகத்தைச் சுளித்த வசந்தி, ''ஒண்ணுமில்லேக்கா! நேற்று அவள் என்னை எங்கள் ஆபீஸிலே பார்க்க வந்தாள்'' என்றாள் அலட்சியமாக.

''அவளை உனக்கு ஏற்கனவே தெரியுமா வசந்தி?''

''சின்ன வயசிலே நானும் அவளும் பள்ளிக்கூடம் போறப்ப ஒரே பஸ் ஸ்டாண்டில் நின்னு பஸ் ஏறுவோம். அப்ப ஒருத்தரை ஒருத்தர் பார்த்ததும் சும்மா ஒரு 'ஸ்மைல்' பண்ணிக்குவோம். அவ்வளவுதான். இதையும் அவள் சொல்லித்தான் நான் ஞாபகப்படுத்திக்கிட்டேன்.''

''பின்னே எப்படி அவள் உன்னைப் பார்த்துப் பேச வந்தாள்?''

''பேசத்தானே? இதற்கு முன்பின் தெரிஞ்சிருக்கணுமா? அதிலும் பெண்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொள்கிறதற்கு அறிமுகம் மட்டுமில்லை, விஷயம் கூட எதுவும் தேவைப்படாதே!'' என்று கூறிச் சிரித்த வசந்தி, ''ஆனால் என்னிடம் பேசிவிட்டுப் போன பிறகுதான் அவள் என்னைப் பார்த்துப் பேசறதுக்காக மட்டும் வரலைன்னு எனக்குத் தெரிஞ்சது!'' என்றாள் ஒருவித வெறுப்புடன்.

இந்நேரம் வரை ஏதோ ஒன்றைத் துருவித் தேடி எடுக்க முயன்று கொண்டிருந்தவள் இப்போது கொஞ்சமாக அது தன் கையில் தட்டுப்பட்டுவிட்டாற் போன்ற பரபரப்புடன், ''வேறு எதற்கு அவள் வந்தாளாம்?'' என்று கேட்டாள் கருணா.

''எங்கள் ஆபீஸில் யாரையோ பார்க்க வந்தவள், போகிறவாக்கிலே என்கிட்டேயும் இரண்டு வார்த்தைகள் பேசிவிட்டுப் போயிருக்கிறாள்.''

''அப்படீன்னா, அவள் யாரைப் பார்க்க வந்தாள்னு நீ விசாரிச்சயா?''

''அதையெல்லாம் விசாரிச்சுத் தெரிஞ்சுக்க முடியுமா அக்கா? நானே 'கெஸ்' பண்ணிக்கிட்டேன், எங்கள் ஆபீஸ் மானேஜரைத்தான் பார்க்க வந்திருப்பாள்னு!''

''எதற்காம்?''

''நான் முன்னமே சொன்னேன் இல்லையா, என்னை ரிஸப்ஷனிஸ்ட் வேலையிலிருந்து எடுத்துட்டு வேறொருத்தியை அமர்த்திடணும் என்கிற பேச்சு அங்கே அடிபட்டுக்கிட்டிருக்குதுன்னு? அதற்குத்தான் இருக்கும்! எல்லாம் அந்தப் போட்டோகிராபர் பண்ணுகிற வேலை!'' என்று உள்ளார்ந்த ஆத்திரத்துடன் சொன்ன வசந்தி, ''அதற்காக நான் ஒண்ணும் கவலைப்படலை! பாவம், அந்தப் பெண் ரொம்பவும் கஷ்ட ஜீவனம் நடத்துகிறதாகக் கேள்விப்பட்டேன். அவளுடைய புருஷ



னுக்கு ஏதோ ஓர் அச்சாபீஸிலே புரூஃப் இருத்தற வேலையாம். வருமானம் குறைச்சல். அதனால் இவளும் ஏதாவது வேலை செய்து சம்பாதிக்கலாம்னு கிளம்பியிருப்பாள்'' என்றாள், ஒரு போலியான அநுதாபத்துடன்.

சற்று நேரம் மௌனமாயிருந்த கருணா, ''இது உன்னுடைய ஊகம் தானே ?'' என்று கேட்டாள்.

'' ஆமாக்கா ! நான் நிச்சயமாய்த் தெரிஞ்சு சொல்லலே ! ஆனால் வேறு எதற்காக எங்கள் ஆபீசுக்கு வருவான்? நீங்கதான் சொல்லுங்களேன்?''

''எனக்கு என்ன தெரியும்?'' என்று கூறி இளநகை பூத்த கருணா, அவ்விஷயமாய் இன்னும் ஏதோ கேட்க வாயெடுத்துப் பிறகு, 'வேண்டாம்' என்று தீர்மானித்தவள் போல் மெல்லத் தலையாட்டிக் கொண்டு மௌனமானாள்.

வசந்தியின் முகத்தில் மீண்டும் துயரச் சாயை படர்ந்தது. ''கேட்டீங்களாக்கா என்னோட அவலக் கதையை! மேலே பார்த்தால் மினுமினுப்பு, உள்ளே பார்த்தால் சொத்தைன்னு சொல்லுவாங்களே, அப்படித்தான் என் வாழ்க்கையும் இருந்துக்கிட்டிருக்குது. இந்த நிலைமையிலே அந்த வேலையையும் நான் விட்டுட்டு வீட்டிலே உட்கார்ந்து விட்டேன்னா பழையபடி என் அப்பா, அவர் பேரில் குறைப்பட்டு முணுமுணுக்க ஆரம்பிச்சுடுவார். அதைத் தொடர்ந்து பூசலும், புகைச்சலும், வெறுப்பும், சலிப்பும் தொடங்கிப் போயிடும். அப்புறம் ஒரு நிமிஷம்கூட

என்னால் நிம்மதியாக இருக்க முடியாது'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் குமுறினாள் அவள்.

கருணாவுக்குத் தர்மசங்கடமாகி விட்டது. வசந்தியின் கவனத்தைத் திருப்புவதற்காக, ''ஓ!.... மணி ஆறேகால் ஆயிடுத்தே!'' என்று சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தவாறு சிரித்தாள்.

சட்டென்று தன் கண்களைத் துடைத்துக் கொண்ட வசந்தி, ''ஆமாக்கா! நேரமாயிடுச்சு!'' என்று பரபரப்புடன் எழுந்தாள். ''அப்ப நீங்க நாடகத்துக்கு வரமாட்டீங்களா?''

கருணா குறும்புச் சிரிப்புடன் அவளைக் கூர்ந்து பார்த்துவிட்டு, ''அது சரி; உன்னை ஒன்று கேட்பேன்; கோபிச்சுக்கமாட்டாயே?'' என்றாள்.

திருதிருவென்று விழித்தபடி தலை நிமிர்ந்தாள் வசந்தி.

''ஆமாம், வசந்தி! உன் கணவர் குடும்பப் பொறுப்பு இல்லாமலும் வேலைவெட்டி எதுவும் செய்யாமலும் நாடகம், நாடகம்னு வீணாகச் சுற்றிக் கைப் பணத்தையும் கரைச்சுக்கிட்டு இருக்கிறதாகக் குறைப்பட்டுக் கொள்கிறாயே, அப்படிப்பட்டவர் நடத்துகிற நாடகங்களைப் பார்க்க மட்டும் ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டறே? நீ காட்டும் இந்த ஆர்வம் அவரை மேலும் அதே வழியில் செல்ல ஊக்கிவிடாதா?''

''ஐயோ! அந்த அநியாயத்தை ஏன் கேட்கிறீங்க போங்கக்கா!'' என்று நெற்றியில் தட்டிக் கொண்டே சோபாவில் மீண்டும் உட்கார்ந்துவிட்டாள் வசந்தி. மறுகணம் அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் வழியலாயிற்று. ''முன்னெல்லாம் அவர் நடத்துகிற நாடகங்களை நான் பார்க்கப் போகாமல்தான் இருந்தேன். அவரே எவ்வளவு வற்புறுத்திக் கூப்பிட்டாலும் பிடிவாதமாக மறுத்து விடுவேன். இது என்ன ஆச்சன்னா, என்னை அவர் வெறும் களிமண்ணுன்னு நினைக்க ஆரம்பிச்சார். எனக்குக் கலை உணர்ச்சியே கிடையாது, கலாரசனை அறியாத பாமரம், கட்டுப் பெட்டி, அசடு என்றெல்லாம் கேலியாகப் பேசத் தொடங்கினார். இம்மாதிரி அவர் என்னைப் பற்றி நினைக்கிறதையும் பேசறதையும் மேலே மேலே வளர்த்துக்கிட்டுப் போனால் அதன் பின் விளைவு என்ன ஆகுமோன்னு நான் பயந்துவிட்டேன். அந்தப் பயத்திலே என் வீம்பு, வெறுப்பு, பிடிவாதம் எல்லாத்தையும் மூட்டை கட்டி வைச்சுட்டுத் தலை விதியேன்னு அவருடைய நாடகங்களைப் போய்ப் பார்க்கலானேன்.....''

அழுகை கலந்த கம்மிய குரலில் இவ்வாறு சொல்லி வந்த வசந்தி திடீரென்று கலகல வென்று சிரித்துக் கொண்டே மேலும் கூறினாள்: ''நாடகமா அவர் போடறார்? ஒரே அபத்தக் களஞ்சியம்! கணவன்மார்களின் அசட்டுத்தனங்களை மனைவிமார்கள் பள்ளியறைகளில் மட்டும் தான் பார்ப்பார்கள்; நானோ என் கணவரின் அசட்டுத்தனத்தைப் பல பேர் முன்னிலையில் மேடையிலும் பார்த்துக்கிட்டு வரேன். என்ன பரிதாபம்! எனக்குச் சில சமயம் சிரிப்பு வரும்; பல சமயம் அழுதும் விடுவேன். அசடுகளில் அவர் இவ்வளவு கடைஞ்செடுத்த அசடாயிருப்பார்னு அவருடைய நாடகங்களைப் பார்க்காத முன் வரையில் எனக்குத் தெரியவே தெரியாது. யாராவது சொல்லியிருந்தாலும் நம்பமாட்டேன்; சொன்னவங்களிடம் சண்டைக்குப் போயிருப்பேன். பைத்தியம் பிடிச்சால் சில பேர் துணிமணிகளைக் கிழிச்சுக்கிட்டுத் தெருவிலே சுத்த ஆரம்பிப்பாங்க; இன்னும் சிலரோ மேடையில் நாடகம் போடப் போய் விடுவாங்கன்னு நினைக்கிறேன். என் கணவர் இந்த இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்.''

கருணாவுக்குச் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்து விட்டது. அவள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்.

வசந்தியின் முகம் சட்டென்று கண்டிச் சிறுத்தது. சற்றே ஆத்திரம் அடைந்த அவள் படபடப்புடன் மேலும் சொன்னாள்: ''கேளுங்க, அக்கா, இந்தக் கண்ணராவி சமாசாரத்தையும்! சினிமாவிலே தான் ஆணும் பெண்ணும் ஒரு வரைமுறை இல்லாமல் ஒட்டி உராய்ஞ்சுக் கட்டிப் பிடிச்சுக் கும்மாளம் போடறாங்கன்னா இப்ப நடக்கிற அமெச்சூர் நாடகங்களிலும் அந்தத் தொத்துநோய் பரவிப் போச்சு! ஜனங்கள் எதிரே இருக்கிறாங்களேன்னு கொஞ்சங்கூடக் கூச்சநாச்சம் காட்டறதில்லை. புரொபஷனல் நாடகக்காரங்க இப்படிச் செய்தால், 'பாவம், அது வயிற்றுப் பிழைப்புக்காக'ன்னு விட்டு விடலாம்; இந்த அமெச்சூர் குட்டிப் பிசாசுகளுக்கு என்ன கேடு? இவங்களுமில்லே அதையே செய்யறாங்க! கேட்டால் 'ஃப்ரீயா' நடிக்கிறாங்களாம்; அப்படி நடிச்சால்தான் நாடகம் 'ரியலிஸ்டிக்'காக இருக்குமாம்! யதார்த்தம் கெட்டுப் போயிடும்னு சொல்றவங்க, துப்பாக்கி, கத்தி, விஷம் இதுகளையும் நிஜமாகவே உபயோகிக்கட்டுமே! அதுகளுக்கு மட்டும்



பாரி


Parry's

மிட்டாய்
பழக்கம்
உங்களுடனேயே
வளர்கின்றது

பாரீஸ் கன்பெக்ஷனரி லிமிடெட், சென்னை

PRS-4834

டிவிஎஸ்
விநியோகிக்கும் உறுப்புகள்
நம்பகமானவை



டிவிஎஸ் விநியோகிக்கும்
உறுப்புகளை உற்பத்தி
செய்வோரில் பெரும்பாலோர்
தங்கள் தங்கள் துறைகளில்
தலைசிறந்தவர். அவை
நீண்ட நாள் உழைக்கும்
என்பதில் ஐயமில்லை.

உங்கள் நம்பிக்கைக்கு
உரியது டிவிஎஸ்

டி வி சுந்தரம்
அய்யங்கார் & சன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை-திருச்சி-திருநெல்வேலி-
புதுக்கோட்டை-
சேலம்-கோயமுத்தூர்-
திருவனந்தபுரம்

TVS

சுந்தரம் மோட்டார்ஸ்
பிரைவேட் லிமிடெட்,
மதராஸ்-பெங்களூர்;
செகந்திராபாத்
விசாகபட்டினம்
மதராஸ ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்-விஜயவாடா

எதுக்காக வெத்துவேட்டுத் துப்பாக்கியும், அட்டைக் கத்தியும், ஆரஞ்சுக் கிரஷூம் கொண்டு வருகிறாங்க? கலையிலே யதார்த்தம்னு சொல்லிக்கிட்டு ஊரை ஏன் இப்படிக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கணும் ?''


''உன் கணவர்கூட இப்படித்தானா?'' என்று சட்டென்று குறுக்கிட்டுக் கேட்டாள் சுகுணா.

சகிக்க முடியாத வேதனையும் வெட்கமும் முகத்தில் சூழச் சிறு பொழுது மௌனமாயிருந்த வசந்தி, ''அவரையும் இம்மாதிரி பார்த்த வயிற்றெரிச்சலில்தானே இவ்வளவும் பேசறேன்! ஒவ்வொரு முறையும் அவருடைய நாடகத்தைப் பார்த்துவிட்டு வரும் போது நரகத்துக்கே போய்த் திரும்பி வருகிறாற் போல ஒரு பயங்கர உணர்ச்சி எனக்கு ஏற்பட்டு விடுது, அக்கா! இரண்டு, மூணு நாட்களுக்கு நோயாளி மாதிரி படுக்கையிலும் விழுந்து கிடப்பேன். இந்த லட்சணத்திலே, நாடகம் நடந்த மறுநாள் அவர் என்கிட்டே வந்து, 'எப்படி நம்ப நடிப்பு?'ன்னு பெருமையோடு கேட்பார். 'பிரமாதம்'னு நான் சொல்லணும். வேறு ஏதாவது சொன்னால், 'போமடீ அசடு! நாடகத்தைப் பற்றியும் என் நடிப்பைப் பற்றியும் உனக்கென்ன தெரியும்? உன்கிட்டே வந்து கேட்டேனே!' என்பார் அலட்சியமாக !'' என்று சொல்லி முடிப்பதற்குள் அழுகை அடைத்துக் கொள்ளவே மெல்லச் செருமத் தொடங்கி விட்டாள்.

சுகுணாவின் மனம் உருகிக் கரைந்தது. அத்துடன், தன்னை வசந்தி இப்போது அந்த நாடகத்துக்கு அழைத்துப் போக வந்ததன் உண்மையான காரணத்தையும் ஒருவாறு ஊகித்துப் புரிந்து கொண்டாள்.

அதாவது, அவள் கொஞ்சமும் விரும்பாமலே — ஒரு கட்டாயத்துக்காக — தன் கணவனின் நாடகத்தைப் பார்க்கச் சென்று, அங்கே தனிமையில் உட்கார்ந்து, தனக்குப் பிடிக்காத காட்சிகளையெல்லாம் பார்த்து மனம் புழுங்கி வேதனைப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்; யாராவது சிநேகிதி பக்கத்தில் இருந்தால் அவளிடம் எதையாவது பேசித் தன் கவனத்தைத் திருப்பிக் கொண்டு நேரத்தைப் போக்கி விட்டு எழுந்து வந்து விடலாம் அல்லவா ?

பரிவும் அநுதாபமுமாக வசந்தியையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்த சுகுணா அன்புடன் அவளது முதுகை மெல்லத் தட்டி,



"நீ கேட்ட காலேஜ் ஸ்டாப்பிங் இதுதான்; இறங்கப்பா !"

"நிக்கற பஸ்ஸிலேயிருந்து இறங்கிப் பழக்கமில்லே; மூவிங்லே இறங்கித்தான் பழக்கம். நீ விசிலைக் கொடு !"

''கவலைப்படாதே, வசந்தி! எழுந்திரு; நானும் இன்று உன்னோடு நாடகம் பார்க்க வரப் போகிறேன்!'' என்றாள் சிரித்துக் கொண்டே.

திடுமென்று துள்ளி எழுந்த வசந்தி, ''நிஜமாகவா வரப் போகிறீங்க ?'' என்று கண்களில் மகிழ்ச்சியொளி மின்னக் கேட்டாள். ''அப்படியென்றால் சீக்கிரம் புறப்படுங்க ! மணி ஆறரை ஆயிடுச்சே !''

சுகுணா கார் சாவியை எடுக்க மேசையண்டை எழுந்து போனாள். சட்டென்று ஏதோ நினைத்துக்கொண்டவளாய் அந்த மேசைக்கு அடியில் கிடந்த காகிதக் குப்பைக் கூடையைக் குனிந்து நோக்கினாள். நேற்று மாலை அவள் கிழித்துப் போட்ட அந்த விளம்பர 'லே — அவுட்' படங்களைத் தான் அதிலே தேடிப் பார்த்தாள். ஒரு துண்டுப் படம்கூடக் கண்ணில் தட்டுப்படவில்லை. இன்று காலை வேலைக்காரி அதையெல்லாம் வெளியே கொண்டு போய்க் கொட்டி விட்டாள் போலும்.

மேசை டிராயரிலிருந்த கார் சாவியை எடுத்துக் கொண்டு தன் அம்மாவிடம் விவரம் சொல்லிவிட்டு வசந்தியுடன் நாடகத்துக்குக் கிளம்பினாள் சுகுணா.

அவள் காரைச் செலுத்திச் செல்லும் அழகைக் கண் கொட்டாமல்

பார்த்தவாறு மௌனமாய்ப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் வசந்தி. சுகுணாவோ சற்று முன் வசந்தி தன் கணவன் மீது குறைப்பட்டுக் கொண்டு சொன்ன விஷயங்களை மீண்டும் எண்ணிப் பார்ப்பதில் ஆழ்ந்தாள்.

ரட்சகனின் பொறுப்பற்ற போக்குகளையும், அசட்டுத்தனமான நடத்தைகளையும் நினைக்க நினைக்க, முத்துசிவனைப் பற்றிய எண்ணமே அவள் நெஞ்சில் விசுவரூபம் எடுத்து வியாபித்தது. அவனோடு இவனை ஒப்பிட்டுப் பார்க்க அவளுக்கு விருப்பமில்லையாயினும் அவ்விருப்பமில்லா ஒப்புநோக்கைத் தன்னையறியாமலே அவள் செய்தும் பார்த்தாள். அப்படிப் பார்த்தபோது முத்துசிவன் ஒரு மகாபுருஷனாக ஓங்கி உயர்ந்து தோற்றம் அளித்ததைக் கண்டு அவளது உள்ளம் பூரித்துப் புளகித்தது.

இப்புதுமையான புளகிதத்தால் உற்சாகம் அடைந்த அவள் காரை வெகு வேகமாகச் செலுத்தி, ரட்சகனின் 'பகல் கொள்ளை' நடக்கவிருந்த 'இந்திர மகால்' என்னும் நாடகத் தியேட்டரண்டை கொண்டு போய் நிறுத்தினாள்.

வசந்தி முதலில் இறங்கிக் கொண்டாள். கார்களை நிறுத்துவதற்கென அந்த மகாலின் இடது பக்கவாட்டில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கென்று ஒரு தனி வாயிலும் இருந்தது.

''வசந்தி! நீ தியேட்டர் வராந்தாவில் இரு; நான் காரைப் 'பார்க்' செய்துவிட்டு அப்படியே வரேன்!'' என்று சொன்ன சுகுணா மெல்லக் காரைக் கிளப்பினாள்.

ஓர் இருபதடி தூரம் கார் நகர்ந்து சென்று தியேட்டரின் இரண்டாவது வாசலுக்குள் திரும்ப முனைந்த சமயம், பின்னாலிருந்து வெகு வேகமாய் வந்த ஒரு ஸ்கூட்டர் பலத்த ஓசையுடன் உறுமிக் கொண்டே சரேலென்று வளைந்து உள்ளே புகுந்து விரைந்ததால் சட்டென்று 'பிரேக்' போட்டுக் காரை நிறுத்திவிட்டு நிமிர்ந்தாள் சுகுணா. மறுகணம் அவள் தன் கண்களையே நம்ப மறுப்பவள் போல் இமைகளைப் படபடவெனக் கொட்டிப் பரக்க மலர்த்தியபடி, ஸ்டீயரிங்கை இரு கைகளாலும் அழுத்திப் பிடித்துக் கொண்டு 'ஸீட்'டிலிருந்து சற்றே எம்பி நிமிர்ந்து பார்த்தாள்.

சந்தேகமில்லை; அந்த ஸ்கூட்டரில் அவ்வளவு வேகமாக வந்து உள்ளே சென்றவன் முத்துசிவனேதான்! ஸ்கூட்டரை ஓரிடத்தில் ஸ்டாண்ட் போட்டு நிறுத்திப் பூட்டி விட்டுச் சாவி வளையத்தைச் சுட்டு விரலால் சுழற்றியவாறு உல்லாச நடை பயின்று தியேட்டரை நோக்கி இப்போது அவன் சென்று கொண்டிருந்தான்.

சுகுணாவுக்கு ஏற்பட்ட வியப்பும் திகைப்பும் இன்னமும் தணியாததோடு, தான் காண்பது கனவா, நனவா என்ற சந்தேகமும் அவளது கண்களை விட்டு முற்றாக இறங்கித் தீராததால், அவள் இன்னும்கூட அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். சற்றைக்குப் பின் அவ்வியப்பார்ந்த ஐயம் ஒருவாறு நீங்கிக் கலைய, ''அவர்தான்! அவரேதான்!'' என்று மகிழ்ச்சிப் பரவசத்துடன் மெல்ல முணுமுணுத்துக் கொண்ட உடனே, 'என்ன இது விந்தை! அவரா நாடகம் பார்க்க வந்திருக்கிறார்? ஹோட்டலுக்குப் போய்க் காப்பி சாப்பிடுவதுகூட வீண் செலவு, வேண்டாத பழக்கம் என்று சொல்லிப் போகாமல் இருந்தவர் இப்போது நாடகமே பார்க்க வந்திருக்கிறாரே!' என்று எண்ணி மீண்டும் வியப்பில் ஆழ்ந்தாள்.

சட்டென்று அவளுக்குத் தன்னைப் பற்றிய ஒரு பிரச்னை எழுந்தது.

'ஆமாம்; இப்போது நான் இந்த நாடகத்தைப் பார்க்கப் போகலாமா, வேண்டாமா? போனால் அவர் என்னை எப்படியும் பார்த்து விடுவார்! அவராகப் பார்க்குமுன்னால் நானே போய் அவர் பக்கத்தில் உட்கார்ந்து விட்டால் என்ன?'

இப்படி நினைத்ததுமே அந்நினைப்பு செயலாகி விட்டாற் போன்றதொரு மானசீகக் காட்சி அவளது மனத்திரையில் விரிந்துவிட, அதைக் 'கண்டு' வெட்கமுற்றவளாய் முகம் சிவந்து முறுவலித்தாள்.

இச்சமயம் மற்றொரு கார் தியேட்டருக்குள் செல்வதற்காக அவளுடைய காருக்குப் பின்னால் வந்து நிற்பது 'ரியர் மிரர்'ரில் தெரிந்தது.

பரபரப்படைந்த சுகுணா 'கியரை' மாற்றினாள். ஆனால் நாடகத்துக்குப் போவதா, வேண்டாமா என்பதில் இன்னமும் அவளுக்கு ஒரு முடிவு தோன்றவில்லை. முன்னோக்கிக் காரை மெல்லச் செலுத்தினாள்.

'என்னை இங்கே அவர் பார்த்தால் என்ன நினைப்பார்? நாடகம், சினிமா என்று இஷ்டத்துக்கும் நான் சுற்றிக் கொண்டிருப்பதாக நினைத்து விடுவாரோ?'

வேகமாய்த் தலையாட்டிக் கொண்டே விருட்டென்று காரைக் கிளப்பிய சுகுணா தியேட்டர் வாயிலைக் கடந்து சாலையில் நேரே விரைவாகச் செலுத்திச் சென்று மறைந்து விட்டாள்! **(தொடரும்)**



மிஸ் ராஜகுமாரியின் 'மேரேஜ்' புரட்சி!

தாமரை மணாளன்

சில முக்கிய தகவல்கள் :

[இது ஒரு 'சரித்திர'ப் பின்னணியில் அமைந்த 'ராஜா ராணி' நாடகம். இந்தச் சரித்திரத்துக்கு ஆதாரம் எதுவென்று கேட்கிறீர்களா? தமிழில் வெளியாகும் 'சரித்திரத் திரைப் படங்களுக்கு எது ஆதாரமோ, அதுவேதான் இந்தச் 'சரித்திர'க் கதைக்கும் ஆதாரம்! கதையின் ஆங்கிலக் கலப்புத் தலைப்பைக் கண்டு மிரள வேண்டாம். சரித்திரக் கதை நாயகிகள் திரையில் 'டிவிஸ்ட்' நடனம் ஆடும்போது இது ஒன்றும் பிரமாதமான விஷயமில்லை. ஆனால் நம் கதாநாயக நாயகியர் ஆங்கிலத்தில் பேசுவார்களோ என்று பயப்பட வேண்டாம். அவர்களுக்குத் தமிழே சரியாகத் தெரியாது!

[மகாராஜா 'பல்விக்கல்' பராக்கிரமர் பூஜ்யபுரி ராஜ்யத்தின் மன்னர்; (பூஜ்யபுரியைக் கண்டு பிடிக்க யாரும் தேசப் படத்தைத் துருவ வேண்டாம். அது உங்கள் கண்ணுக்கு அகப்படாது. அதை இப்போது கடல் கொண்டு போயிருக்கலாம் என்று தேற்றிக் கொள்க) மகாராஜாவின் பெயர் விசித்திரத்தைக் கண்டும் யாரும் மயங்க வேண்டிய தில்லை. ராஜாக்கள் தம் வாழ்நாளில் செய்யும் வீரப் பிரதாபத்தை ஒட்டியே அவர்களுக்குப் பட்டப்பெயர் இடுவது சம்பிரதாயம். இளம் வயதில் நம் மகாராஜாவின் உடைந்து போன பல் ஒன்று தொண்டையில் விக்கிக் கொள்ள அதை அப்படியே விழுங்கி உயிரைக் காப்பாற்றிக்

இன்னொரு விஷயம்: இக்கதையில் வரும் சம்பவங்கள் கற்பனையே. ஆனால் யாருடைய கற்பனை என்பதுதான் பிரச்னை. இது தன்னுடைய கற்பனைதான் என்று யாராவது வெட்கமில்லாமல் உரிமை கோரும் பட்சத்தில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை.)

காலம் :

ரொம்பவும் கஷ்ட காலம், கதாநாயக நாயகியருக்கும் சரி, வாசகர்களுக்கும் சரி.

நாடகத்தில் வரும் பாத்திரங்கள் :

மகாராஜா 'பல்விக்கல் பராக்கிரமர்' மது குடிக்க உபயோகிக்கும் விளிம்பு நசுங்கிய குவளையைத் தவிர வேறு பாத்திரங்கள் எதுவும் உபயோகிக்கப்படவில்லை. என்ன யோசனை? மகாராஜா வீட்டுப் பாத்திரம் என்றால், விளிம்பு நசுங்கியிருக்காதா?

நாடகம் நிகழும் இடம் :

அருகில் கற்கள் அகப்படாத எந்த இடத்திலும் இதை நடத்தலாம்!

கொண்ட வீரப் பிரதாபத்தைக் கொண்டு அவருக்குப் பல் விக்கல் பராக்கிரமர் என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டதாகச் செப்பேடுகள் செப்புகின்றன. மகாராணியின் — பெயர் 'சாயாதேவி'. அந்த அம்மையார் எந்த ஆசனத்தில் சாய்ந்து உட்கார்ந்தாலும் ஆசனம் சுக்குநூறாக நொறுங்கிவிடும். எனவே அவர் தம் பூத உடம்பை மனத்தில் கொண்டு, 'சாயாதேவி' என்ற புகழ்ப் பெயர் சூட்டப்படலாயிற்று. அவர்கள் இருவரின் உரையாடலுடன் நாடகம் தொடங்குகிறது.

மகாராஜா அரண்மனையில் ஒதுக்குப்புறமாக இருக்கும் ஒரு மண்டபத்தில் 'வழக்கம் போல்' அமர்ந்திருக்கிறார். அந்த 'வழக்க'மாவது: தம் மனைவி (மகாராணி)யின் வாய்க்குப் பயந்து அவர் 'அந்தப்புரம்' பக்கம் போவதில்லை. எல்லாருடைய கண்ணுக்கும் தப்பி அந்த ஒதுக்குப்புற மண்டபத்தில் கொலு வீற்றிருப்பது பழக்கப்பட்ட 'வழக்கம்'. கொலு மண்டபத்தில் இருப்பதாக மகாராணியும் 'அந்தப் புரத்தி'லிருப்பதாக அமைச்சர்களும் நினைத்துக் கொண்டிருக்க நம் மகாராஜா நிம்மதியாக ஒதுக்குப்புற மண்டபத்திலிருந்து தேச பரிபாலனம் செய்து வந்தார்.

அன்று சம்பள பாக்கி வராததால் கோபமுற்ற காவலாள் ஒருவன் நம் காவலரைக் காட்டிக் கொடுத்ததின் பேரில் மகாராணி அவரிடம் வந்து போர் தொடுக்கிறாள்.

ஒரு வீரப் போருடன் நாடகத்தைத் தொடங்குவதைப்பற்றி வீரம் மிகுந்த தமிழ் ரசிகர்கள் மிக்க மன மகிழ்ச்சி அடைவார்கள் என நம்புகிறோம்!]

மகாராணி (கோபத்துடன்): இது உங்களுக்குக் கொஞ்சம்கூட நல்லாயில்லே...

மகாராஜா (பயத்துடன்): நீ எதைச் சொல்றே ?

ராணி: நீங்க போட்டிருக்கிற அங்கியைத் தான் சொல்கிறேன்! காஷாயம் கட்டிக்கிறவர் மாதிரி, காவி நிறத்திலே அங்கியைப் போட்டுக் கொண்டு...! கொஞ்சம்கூட நல்லாயில்லே! நான் எத்தனையோ நாள் பார்த்து விட்டு, ஏதோ சாமியார் இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டு பேசாமல் போயிருக்கிறேன் !

ராஜா: அப்பாடா... பிழைத்தேன் !

ராணி: அது என்ன பிழைப்பு ?

ராஜா : அது ஒரு பிழைப்பு! எனக்கும் என்மாதிரி ஆண்களுக்கும் மட்டுமே தெரியும் பிழைப்பு !



ராணி: நல்லாயிருக்கு! பட்டத்து ராணி நான் இருக்கேன். அருமை மகள் முல்லைவிழி இருக்கிறாள். மந்திரிப் பிரதானிகள் இருக்கிறார்கள். இவர்களை யெல்லாம் நினைத்துக் கொண்டால் உங்களுக்கு இந்தக் காவி நிறத்துத் துணியைக் கட்டிக் கொள்ளத் தோன்றுமா ?

ராஜா: இவர்களை யெல்லாம் நினைத்ததால்தான் இந்தத் துணியையே கட்டிக் கொள்ளத் தோன்றுகிறது. அது சரி, என்ன விஷயம் ?

ராணி: நீங்கள் இப்படியே இருந்தால் என்ன அர்த்தம்? நம் பெண்ணுக்கு வயசு ஆகிக் கொண்டே போகிறது தெரியவில்லை ? அவ கல்யாண விஷயமா நீங்க என்னதான் நினைச்சுக்கிட்டிருக்கீங்க?

ராஜா: இந்தச் சேனாதிபதி ஏதாவது சொல்லுவான்னு நெனைச்சுக்கிட்டிருந்தேன்.

ராணி: சேனாதிபதியா?

ராஜா: ஆமாம். ஒரோர் ராஜ்யத்திலே சேனாதிபதி சதி செய்து ராஜாகிட்ட வந்து கத்தி முனையிலே 'உன் மகளைக் கொடு'ன்னு மிரட்டுவாங்கன்னு கதைகளிலே படிச்சிருக்கோம். அந்த மாதிரி நம் சேனாதிபதியும் ஒரு நாள் பெண்ணைக் கொடுன்னு எங்கிட்ட வந்து மிரட்டுவான். உடனே பெண்ணை அவன் கையிலே பிடித்துக் கொடுத்துடலாம்னு பார்த்துக்கிட்டு இருக்கேன். அவன் மூச்சு விட மாட்டேங்கறான்! சுத்த மக்குப் பேர்வழி!

(அச்சமயம் ராஜ குமாரி 'முல்லை விழி' வேகமாக வருகிறாள்.)

ராஜா: முல்லை, ஏன் இப்படி வேகமாக வருகிறே?

முல்லை விழி: என் கல்யாண விஷயமா நீங்க பேசிக் கொண்டிருக்கிறதாகத் தோழி சொன்னாள். ஓடோடி வந்தேன்.

ராஜா: உன் பெண் ஓடோடி வந்தாச்சு. மாப்பிள்ளைகளும் ஓடோடி வரணுமே! அவனவன் ஓடி ஓடி மறையறானே!

மு. வி.: நான் கல்யாணம் வேணும்னு வரலை...

ராஜா: பின்னே?

மு. வி.: எனக்குக் கல்யாணம் வேண்டாம், ஒரு தரம்! கல்யாணம் வேண்டாம், இரண்டு தரம்!! கல்யாணம் வேண்டாம், மூணு தரம்!!!

ராஜா: அதுக்கு நீ ஏம்மா ஏலம் போடறே? நீ ஒரு தடவை வேணும்னு சொன்னாலே, எனக்கு ரொம்ப சந்தோஷம்!

ராணி: என்ன சந்தோஷம்? அவ மூணு தரம் கல்யாணம் வேண்டாம்னு சொன்னா மூணு மாசத் தவணைக்குள்ளே கல்யாணம் செய்தாகணும்னு அர்த்தம்!

ராஜா: ஏம்மா முல்லை! இன்னும் ஒரு பத்துப் பதினைந்து தடவை வேண்டாம்னு சொல்லித் தவணையைத் தள்ளி வையேன்!

மு. வி.: நீங்க ரெண்டு பேர் சொல்றதும் தப்பு. நான் என்ன சொல்றேன்னா நீங்க ஏற்பாடு செய்யற மாதிரி சாதாரணமாகக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன். புரட்சிகரமாகத்தான் கல்யாணம் செய்வேன்.

ராணி: சாதாரணக் கல்யாணத்துக்கே வழியில்லை. புரட்சி வேறயா?

ராஜா: நீ கம்மா இரு! அவ சொல்றதும் சரிதான். ஏதாவது புரட்சி கிரட்சி நடத்தால்தான் கல்யாணம் நடக்கும் போலிருக்கு. என்ன புரட்சி நீ சொல்லம்மா?

மு. வி.: 'கற்ற பின் நிற்க அதற்குத் தக' என்று இருக்கிறதல்லவா?

ராஜா: ஆமாம். கம்பர் மகாபாரதத்திலே சொல்லி யிருக்கார்!

மு. வி.: எனக்கு ராஜ குரு கஷ்டப்பட்டு எவ்வளவு கற்றுக் கொடுத்திருக்கிறார்?

ராஜா: உனக்குக் கஷ்டப்பட்டுக் கற்றுத் தரவில்லை; கற்றுத் தந்ததால் கஷ்டப்படுகிறார்! கொஞ்ச காலமாகப் புத்தி சுவாதீனமில்லாமல் இருக்கிறார். அது சரி, நீ சொல்லு.

மு. வி.: நான் நாலு வேதம், ஆறு சாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்தி நான்கு கலைஞானம் படித்திருக்கிறேன் அல்லவா? அதனாலே நான் கல்யாணம் செய்துகொண்டால், புராணத்தில் வரும் சீதை, துரௌபதை, தமயந்தி இவங்க கல்யாணம் செய்து கொண்ட சுயம்வர முறைப்படிதான் கல்யாணம் செய்வேன்.

ராஜா: வேண்டாம்மா. அவங்கள்ளாம் அப்படிக் கல்யாணம் செய்துக்கிட்டு ரொம்பக் கஷ்டப்பட்டாங்க.

ராணி: சுயம்வரமா? அது என்ன?

ராஜா: வேறொண்ணுமில்லே. யாராவது ஓர் அபூர்வப் பெண் இருந்தால் அவளுக்கு நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு மாப்பிள்ளைங்க வருவாங்க. அவர்களில் ஒருத்தனைத் தேர்ந்தெடுக்கிறதுக்குச் சுயம்வரம் நடத்துவாங்க. நம்ம மகளுக்கு அது எதுக்கு?

மு. வி.: அதெல்லாம் முடியாது. நான் சுயம்வரம் நடத்தவே போகிறேன்.

ராஜா: பிடிவாதம் பிடிக்காதேம்மா. நீ சுயம்வரம் நடத்தறதுன்னா ஒண்ணோடு கூட ஒரு நபராவது போன்னு வேணும்னு வரணும்! ஒருவனையே இன்னும் என்னாலே பிடிக்க முடியலை. இரண்டு பேருக்கு எங்கே போவேன்? (அச்சமயம் மந்திரி வருகிறார்.)

மந்திரி: நமஸ்காரம் மகாரா .

(ஒரு சமாசாரம்: ராஜாவும் ராணியும் சேர்ந்து இருக்கும் சமயத்தில் மந்திரி ராணிக்குத்தான் வணக்கம் செலுத்துவார். ஏனெனில் அவர் பிழைக்கத் தெரிந்தவர்!)

ராணி: மந்திரி, நம்ம ராஜ குமாரியின் கல்யாண விஷயமாகப் பேசத்தான் உங்களை அழைத்தோம். ராஜா அதைப் பற்றிக் கவலைப்படாமலேயே இருக்கிறார்..

மந்திரி: தெரியாமல் சொல்கிறீர்கள் மகாராணி! மகாராஜாவுக்கு சதா அதைப் பற்றித்தான் கவலை. 'நம்ம ராஜகுமாரிக்கு ஒரு கல்யாணம் செய்து நாட்டை விட்டு வெளியே அனுப்பிச்சாத்தான் நாட்டிலே மழை ஒழுங்காகப் பெய்து சுபிட்சமாக இருக்கும்' என்று அரண்மனை ஜோசியர் சொல்லி யிருக்கிறார். அதனால் ராஜாவுக்குச் சதா இளவரசியின் கல்யாணக் கவலைதான்!


ராணி: அப்படியா?

மந்திரி: ஆமாம். எனக்கும்கூட அப்படித்தான்.

ராணி: உங்களுக்கும் கூடவா?

உஷாராக இருங்கள்!

வெளிநாட்டு ஊடுருவிகள் நமது பொருளாதாரத்தை உறிஞ்ச விடாதீர்கள்!



வாங்குங்கள்

ஸிங்கர்*

தையல் மெஷின் ஊசிகள்...

• அவை நம்பகமானவை • அகில உலக ஸிங்கர் தரத்திற்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப் படுபவை.

வெளிநாட்டு ஊசிகள் கள்ளத்தனமாக இந்தியாவினுள் நுழைந்து நமது பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. இந்தியாவில் தயாராகும் ஊசிகளை வாங்குவதன் மூலம் நீங்கள் இப்பாதிப்பை முறியடிக்க உதவலாம். வாங்குங்கள் ஸிங்கர் தையல் மெஷின் ஊசிகள். மறவாதீர்கள், இது தேசிய அபிமானப் பிரச்சினை மட்டுமல்ல, உங்கள் சொந்த நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் விஷயமும் கூட!

ஸிங்கர்-அளிப்பது சிறந்த பொருள்களே.

தயாரிப்பாளர்கள்:
ஸிங்கர் டிவிஸ் லிமிடெட்
மதுரை
வியாபார விசாரணைகளுக்கு அணுகுக:
ஸிங்கர் ஸூயிங் மெஷின் கம்பெனி

SM 91 TM

மந்திரி: ஆமாம்: கொஞ்ச காலமா நாட்டிலே சுபிட்சம் இல்லாமல் வரிப் பணம் வரலே. வரிப் பணம் வராமல் எனக்குச் சம்பளம் சரியா வரலே.... ஒரே கவலே!

ராஜா: ஓய்... சும்மா இரும். சமயம் பார்த்து உம்ம சம்பளப் பாக்கியை ஞாபகப் படுத்துகிறீரா?... இப்போ முல்லே விழி 'சுயம்வரப்' போட்டி நடத்தித்தான் கல்யாணம் செய்து கொள்வேன்' என்கிறள்.

மந்திரி: செய்துவிட்டால் போச்சு!

ராஜா (ஆர்வத்துடன்): என்ன, நீர் செய்து கொள்கிறேன் என்கிறீரா?

மந்திரி (அலறியவாறு): ஐயய்யோ நான் செய்து கொள்ளவில்லே! சுயம்வரம் நடத்த ஏற்பாடு செய்துவிடலாம் என்றேன்.

ராஜா: எப்படி நடத்துவது? போட்டி ஒன்று வைக்க வேண்டுமானல் போட்டிக் குரிய பொருள் விசேஷமா இருக்க வேண்டும். அப்போதுதான் நாலு பேர் போட்டிக்கு வருவாங்க!

மந்திரி: கவலேப்படாதீங்க மகாராஜா. போட்டி என்று ஒன்றை வைத்து விட்டாலே ஏதாவது விசேஷமான பொருளாகத்தான் இருக்கும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டு போட்டியில் கலந்து கொள் வார்கள். சுயம்வரப் போட்டி நடத்தினுல் நிச்சயமாக இளவரசிக்கு மதிப்பு ஏற்பட்டு விடும்.

ராணி: மந்திரி என்றும் மந்திரிதான்! உடனே ஏற்பாடு செய்யுங்கள்.

மந்திரி: ஆகட்டும் மகாராணி!

ராஜா: என்ன ஏற்பாடு செய்யப் போறீர்?

மந்திரி: எல்லாம் வழக்கம் போலத்தான். ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களேயும் ஓலே அனுப்பி அழைக்கப் போகிறேன்.

ராஜா: அழைக்கிறது சரி. வருவார்களா?

மந்திரி: நிச்சயமாக வருவார்கள்.

ராஜா: அதெப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்கிறீர்? அவர்களுக்கு வேறு வேலே இருக்காதா?

மந்திரி: ராஜாக்களுக்கு இதுதானே வேலே. கல்யாணம் செய்து கொள்வதற்காக சுயம் வரம் நடக்கிற இடங்களுக்குச் சுற்றிக் கொண்டு அலேவதைத் தவிர வேறு எந்தக் காரியத்தையும் இந்த ஐம்பத்தாறு தேச ராஜாக்கள் செய்ததாகச் சரித்திரமே கிடையாது மகாராஜா!

(பொத்தென்று கிழிந்த திரை விழுகிறது. (கிழியாத நல்ல திரைச் சீலே வைத் திருப்பவர்கள் இந்த நாடகத்தை ஏன் நடத்துகிறர்கள்?)

காட்சி 2

[வழக்கப்படி பழைய இடத்தில் தூங்கி வழிந்து கொண்டிருக்கிறர் மன்னர். தள்ளாடியவாறு வருகிறர் மந்திரி.]

மகாராஜா: என்னவேய்! நீர் தான் காலேயி லிருந்து அங்குமிங்கும் 'லாந்தி'க் கொண் டிருக்கிறீர். மாப்பிள்ளேப் பயல்கள் ஒரு வனேயும் காணுமே! சுயம்வர ஓலே அனுப் பினுேமே, என்ன ஆச்சு!

மந்திரி: இப்போதுதான் பதில் வந்திருக் கிறது.



"மாமியாரிடம் கெட்ட பெயர் வாங்காமல் நல்லபடியா எட்டு வருஷம் காலம் தள்ளி னேன்."

"ஏன் என்ன ஆச்சு மாமியார் கோவிச் சுண்டு போயிட்டாளா?"

"இல்லே. கோவிச்சுண்டு வெளியூரிலிருந்து வந்து விட்டாள்."

மகாராஜா (ஆர்வத்துடன்): யாராவது வருகிறர்களா?

மந்திரி: எல்லோரும் வருவார்களாம்.

ராஜா: என்னேய்யா, ஆச்சரியமாயிருக்கு! நமக்கு வந்த தகவல்தானே? விலாசம் மாறிப் போகவில்லேயே?

மந்திரி: எனக்கும் முதலில் சந்தேகந் தான். அதனுல் கண்ணில் விளக்கெண் ணெய் ஊற்றிக் கொண்டு பார்த்தேன். நமக்கு வந்த தகவல்தான்!

ராஜா: எல்லோரும் எப்போ வருகிறர் களாம்?

மந்திரி: இன்னும் இருபது ஆண்டுகளில் வந்துவிடுவார்கள்.

ராஜா: என்ன, இருபது ஆண்டா?

மந்திரி: ஆமாம், அப்போதுதான் வரிசைப் படி நம்ம பெண்ணுடைய முறை வருகிறதாம்.

ராஜா: அதென்னய்யா முறை?

மந்திரி: இப்போதைய நிலவரத்தில் இந்த ஐம்பத்தாறு தேச ராஜாக்களுடைய கைவச மும் கிட்டத்தட்ட முப்பது முப்பத்தைந்து சுயம்வர அழைப்புக்கள் இருக்கிறதாம். வரிசைப்படி ஒவ்வொரு இடத்துக்கும் போய் விட்டுக் கடைசியிலே நம்ம ராஜ்யத்துக்கு வருவார்களாம்!

ராஜா: ராஜாக்கள் இல்லாவிட்டால் ராஜ குமாரர்கள் இருக்க மாட்டார்களா? அவர்கள் வந்தால் என்ன?

மந்திரி: ஆஹாங்...பேசப்படாது. ராஜாக் களுடைய கல்யாணப் பருவம் முடிகிறவரை ராஜ குமாரர்கள் சட்டப்படி கல்யாணம் செய்ய மாட்டாங்க. வேணும்னு உள்ளூரி லேயே காதலித்துக் கொள்வார்கள். பெரிய மகாராஜா காலாவதி யானப்புறம்தான் அவ ருக்குக் கல்யாணப் பருவம் ஆரம்பித்துச் சுயம்வரங்களுக்குக் கிளம்புவார்!

ராஜா: இப்போ என்னய்யா செய்யறது? இன்னும் இருபது ஆண்டு ஆகும் என்

இந்நேரம் அதற்கிடையில் அரசர்களை வர வழைக்க வழி கிடையாதா?

மந்திரி: இல்லையே! நம்ப அவனி ஐம்பத் தாறு ராஜாக்களும் அழகு வரிசைப்படித் தானே சுயம்வரப் பயணம் வருகிறார்கள். முதல் அழகியின் ராஜ்யத்துக்கு முதலாவ தாக... இப்படி வரிசைப்படி போவார்கள். இந்த அழகு வரிசையில் நம்ம குழந்தை கடைசியா வருது!

ராஜா (திடீரென்று கோபத்துடன்): ஓய் மந்திரி, இதெல்லாம் உம்ம சூழ்ச்சி! உம்ம பெண்கள் மாதிரியே என் பொண்ணுக்கும் கல்யாணம் ஆகப்படாது என்பதற்காகவே நீர் சதி பண்ணிக் காலே வாரி விட்டிருக்கிறீர்!

மந்திரி: என்ன மகாராஜா இது! எனக் கென்ன பொறாமை? உங்க பெண்ணுக்கே கல்யாணம் ஆகல என் பெண்களுக்குக் கல் யாணம் ஆகாதா?

ராஜா: பின்னே என்னய்யா? என் பொண்ணு இவ்வளவு மட்டம்னு எல்லோ ருக்கும் எப்படித் தெரியும்?

மந்திரி: சுயம்வர ஓலை அனுப்பும்போது கட்டாயம் பெண்ணுடைய படம் அனுப் பணும். அதனால் அனுப்பினோம்.

ராஜா: பெண்ணுடைய படம்தானே அனுப்பணும்? என் பெண்ணுடைய படம் தான் அனுப்ப வேண்டும் என்று என்ன கட்டாயம்?

மந்திரி: உங்களுக்கு இந்த ஐம்பத்தாறு ராஜாக்களுடைய சமாசாரம் தெரியாது. தங் கத்துக்குப் பதில் தவிட்டு மூட்டையைக் கொடுத்தால் கூட 'கண்டுக்க' மாட்டாங்க. ஆனா பொண்ணுக விஷயத்திலே மட்டும் ஒவ்வொருத்தரும் பேய்த்தனமான கறார்! தப்புத்தண்டா ஆச்சன்னா ஏக ரகளை பண்ணி நாட்டில் உள்ள பெண்களையெல் லாம் வாரிக் கொண்டு போயிடுவாங்க... வெறியனுங்க....!

ராஜா (தாபத்துடன்): போனா என்னய்யா? நாட்டிலே உள்ள பெண்களை யெல்லாம் வாரிக் கொண்டு போகும்போது நம்ம பெண் களுக்கும் சேர்ந்து ஒரு வழி பிறந்திடாதா? கெடுத்துவிட்டீர். இனி என்ன செய்வது?

[அச்சமயம் மகாராணியும் ராஜகுமாரி மூ. விழியும் வருகிறார்கள்.]

ராணி: என்னங்க, சுயம்வரத்துக்குக் குழந்தை தயார்!

மூ. விழி: அப்பா, வர்றவங்க கிட்ட கேட்கிறதுக்குக் கேள்விகளும் தயார்.

ராணி: ராஜ குமாரர்கள் தயாரா?

ராஜா: ராஜ குமாரர்களா? ராஜாக்கள் இப்போதுதான் கல்யாணம் பண்ணிக் கொண்டு திரிகிறார்கள். அவர்கள் குமா ரர்களைப் பெற்றுத் தரும் வரை காத்திருக்க வேண்டியதுதான்!

ராணி: என்ன விளையாடுகிறீர்கள்? என் பெண் வைத்த தவணை நெருங்குகிறது. இன் னும் ஒரே ஒரு மாதம்தான் பாக்கி!

ராஜா (தலையில் கை வைத்துக் கொண்டு): மந்திரி!....

மந்திரி: மகாப் பிரபோ!

ராஜா: நான் காட்டுக்குப் போயிடலா முன்னு பார்க்கிறேன்.

மந்திரி, எங் சம்பளப் பாக்கிக்கு வழி பண்ணிட்டுப் போங்க.

ராணி: ராஜ குமாரர்களை வரவழைத்து விட்டுத்தான் போகணும்!

ராஜா: நீ ராஜ குமாரர்களிலேயே இரு. உன் பெண்ணின் படத்தைப் பார்த்துவிட்டுக் கிழட்டு ராஜாக்களே ஓடறானுக. காட்டுக்குப் போய்த் தவம் செய்தால் கடவுள் வரு வாராமே! அவரைப் போய்ப் பிடிக்கப் போகிறேன். 'ஏதோ உனக்கு என்மேல் கோபம், இப்படி ஒரு பெண்ணைக் குடுத் திட்டே. பரவாயில்லை. அவளுக்குச் சமதை யாக எங்காவது ஒரு பயல் இருந்தா என் னிடம் ஒப்படை' என்று கேட்கப் போகி றேன். அவன் ஒரு வழி சொல்ல மாட்டானா?

மந்திரி: நான் ஒரு வழி சொல்றேன்.

ராஜா: சொல்லுமய்யா! கடவுள் முன் னால் செய்கிற தவத்தை உம்ம முன்னாலே செய்கிறேன்.

மந்திரி: நாம் ராஜாக்களைத் தேடிக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது. நம்ம நாட்டிலுள்ள வீரர்களையே வர வழைத்துச் சுயம்வரம் நடத்தலாம்.

ராஜா (பயம் கலந்த சந்தோஷத்துடன்): அவங்க நம்ம பொண்ணுடைய படத்தைப் பார்க்கவில்லையே?

மந்திரி: பார்த்தால் என்ன? நம்ம ராஜ் யத்திலே இருக்கிற அத்தனை வீரர்களும் கட்டாயம் சுயம்வரத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று உத்தரவு போட்டுவிடலாம்.

ராஜா: சேச்சே! அப்படி உத்தரவு போடக் கூடாது. அப்புறம் அத்தனை பேரும் ராஜ் யத்தை விட்டு வெளியேறிப் போய்த் தப் பித்துக் கொள்வார்கள்.

மந்திரி: என்ன செய்யலாம்?

ராஜா: ரொம்ப சாமர்த்தியமா இந்தச் செய்தியைத் தண்டோராப் போடணும்.

மந்திரி: எப்படி?

ராஜா: ''இனாம்! இனாம்! இளைஞர்களுக்கு இந்த ராஜ்யமே இனாம்!'' என்று முதலில் சொல்ல வேண்டும். எல்லோரும் வந்து ஆவலோடு கேட்பாங்க! அப்புறம் மெதுவாக ''ராஜ்யம் இனாமாக வேண்டுவோர் விண் ணப்பிக்கவும். ராஜகுமாரி நடத்தும் சுயம் வரத்தில் கலந்து கொள்பவர்களுக்கு விசேஷச் சலுகை காண்பிக்கப்படும்!'' என்று ரொம்ப மெதுவாக, ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும்.

மந்திரி: இதோ போகிறேன்.

[கிழிந்த திரை விழுகிறது.]

காட்சி 3

[சுயம்வர நாள். மகாராஜாவின் தனிப் பெரும் உல்லாசப் பிரதேசமான 'பழைய' ஒதுக்குப்புற மண்டபமே சுயம்வர மண்டபமாக மாற்றப்பட் டிருக்கிறது. ஏனென்றால் அது ஒன்று தான் அரண்மனையில் மழைக்குச் சுமாராக ஒழுகக் கூடிய இடம்!

போட்டிக்கு வரவிருக்கும் நபர்களை எதிர் பார்த்து ராணியும் ராஜ குமாரியும் ஆவலுடன் நோக்கிக் கொண்டிருக் கிறார்கள். ராஜா அனுதாபத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

வாசற்புறத்தில் ஒரு நிழலுருவம் தெரிகிறது.]

முல்லை விழி (உரத்த குரலில்): ஆ, அதோ வருகிறார்கள்!

ராஜா: அம்மா, புண்ணியமாப் போகட்டும். சத்தம் போட்டுப் பேசாதே! வருகிறவர்கள் ஓடிவிடப் போகிறார்கள்.

[மந்திரி மட்டுமே பயமாய்த் தள்ளாடியவாறே வருகிறார்.]

ராஜா: என்ன வேய்! ஒருவரும் வரவில்லையா?

மந்திரி: இரண்டே இரண்டு பேர் வந்தார்கள்.

ராஜா, ராணி, ராஜ குமாரி: எங்கே, எங்கே, எங்கே?

மந்திரி: இரண்டு பேரும் சிறையில் இருக்கிறார்கள்.

ராஜா கோஷ்டியினர்: ஆ ... ஆ.... ஆ...

மந்திரி: இருவரும் லஞ்சம் கொடுக்க முயன்றதாகக் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ராஜா கோஷ்டியினர்: ஏன்... ஏன்...ஏன்?

மந்திரி: போட்டிக்கு அந்த இரண்டே இரண்டு நபர்கள்தான் வந்தார்கள். புராண காலத்து ராஜ குமாரிகள் மாதிரி நம்ம ராஜ குமாரியும் சுயம்வரம் நடத்துவார் என்றதும் ஒவ்வொருத்தன் ஒவ்வொரு மாதிரி நினைத்துக் கொண்டான். சீதை செய்த மாதிரி வில்லை ஒடிக்கச் சொல்லுவார் என்று ஒருவன் நினைத்துக் கொண்டு, நம் அரண்மனைப் படைக்கலன் அதிகாரிக்கு லஞ்சம் கொடுத்துக் கைவசம் இருக்கும் அத்தனை வில்களையும் ரகசியமாக முன்கூட்டியே ஒடித்து வைக்க ஏற்பாடு செய்திருக்கிறான். அடுத்தவன் திரௌபதி சுயம்வரத்தில் நடந்த மச்ச யந்திரத்தை அடிக்க வேண்டியிருக்கும் என்று நினைத்து நம் அரண்மனைத் தச்சரை 'வளைத்து' 'தனக்கு'ச் சுலுவாக யந்திரத்தை அமைக்க ஏற்பாடு செய்திருந்தான்.

ராஜாவும், ராணியும்: அப்புறம்?... அப்புறம்?.... அப்புறம்?

மந்திரி: லஞ்சம் கொடுக்க முனைந்த அந்த இரண்டு பேரையும் லஞ்சம் கிடைக்காத காவலாளிகள் இரண்டு பேர் பிடித்துக் கொடுத்து விட்டார்கள்! அதனால் ஜெயிலில் போட்டிருக்கிறது.

ராஜா கோஷ்டி: அக்ரமம்... அக்ரமம்... அக்ரமம்!

மந்திரி: அக்ரமம் என்பதற்காகத்தானே அவர்களை ஜெயிலில் போட்டிருக்கிறது.


ராஜா: வேய், நீர் செய்ததுதான் அக்ரமம். சேவகா, இந்த மந்திரியைப் பிடித்து முதலில் ஜெயிலில் போட்டு விட்டுப் போட்டிக்கு வந்த புண்ணியவான்களை இங்கே அழைத்து வா!

மந்திரி: ஆ... என்னையா... ஜெயிலிலா?

ராஜா: உம்மைத்தான் வேய்! நீர் வெளியில் நடமாடுகிறவரை என் பெண்ணுக்குக் கல்யாணமாக விடமாட்டீர்!

மந்திரி: அபாண்டம்!

ராஜா (ஆவேசத்துடன்): பின்னே என்னய்யா? என் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள லஞ்சம் கூடக் கொடுக்கத் துணிந்த தியாகிகளை நீர் ஜெயிலில் போடுவதென்றால், அந்த ஜெயில் ஒழிக! நீர் ஒழிக!



அவர்: வங்காளக் குடாக் கடல் எங்கே இருக்குன்னு கேட்டா இவனுக்குத் தெரியல்லையாம். அதற்காக வாத்தியார் பெஞ்சி மேலே நிக்க வச்சானாம்!

பாட்டி: ஏன்! அங்கிருந்து பார்த்தா நன்னாத் தெரியுமாமோ!

மந்திரி: அரண்மனை அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தது தப்பு என்று...

ராஜா: என்ன ஐயா தப்பு? நாம்தான் சம்பளம் கொடுக்கிறதில்லை, அந்தப் புண்ணியவான்கள் லஞ்சம் கொடுத்திட்டுப் போறாங்க! லஞ்சம், கிஞ்சம் என்று என் கிட்டே கதை விடாதேயும். இந்த இரண்டு பேரையும் பத்திரமாக ஜெயிலில் வைத்து ஏமாற்றி உம்ம பெண்களை அவர்களிடம் தள்ளிவிடச் சூழ்ச்சி செய்திருக்கிறீர்!

ராணி (குறுக்கிட்டு): பாவம், வந்தவர்கள் ஓடிவிடாமல், ஜெயிலில் பாதுகாப்பாக வைத்தாரே, அதற்காக மந்திரியை விட்டு விடுங்கள்.

ராஜா: அதுவும் சரிதான். இப்போ அவரை வேலையை விட்டு நீக்கினால் சம்பளப் பாக்கியை உடனடியாகக் கேட்பார். சரி... மந்திரி, உம்மை மன்னித்தோம், உட்காரும். சேவகா, அவர்களை அழைத்து வா!

[அச்சமயம் இரு இளைஞர்களும் வருகின்றனர்.]

மந்திரி: இவர்கள்தான் ராஜா அவர்கள். சேவகன் சென்று விடுவிக்கு முன்பே ஜெயிலிலிருந்து வெளியேறி வந்து விட்டார்கள்.

ராஜா (உற்சாகப் பெருக்குடன்): வீரர்கள் தீரர்கள்... வீர இளைஞர்களே, பூட்டிய சிறையிலிருந்து எப்படி மீண்டீர்கள்?

முதல் இளைஞன்: எங்கே பூட்டியிருந்தது? ஜெயிலில் பூட்டு வாங்கிப் போடக் காசு இல்லாமல் சாத்தித்தானே கிடந்தது.

ராஜா: காவலாளிகள் தடுக்கவில்லையா?

இரண்டாவது இளைஞன்: தடுக்கவில்லை. கேட்டார்கள்; கள்ளு வாங்கிக் குடிக்கக் காசு பணம் கொடுப்பதானால் கண்ணை மூடிக் கொள்கிறோம் என்றார்கள். நாங்கள் அவர்களிடம் கடன் சொல்லி விட்டு வந்துவிட்டோம்!

ராஜா: என்ன சாமர்த்தியம்! வாழ்க! வாழ்க! முல்லை விழி, போட்டியை நடத்து!

(ரகசியமாக) இலேசான கேள்விகளாகக் கேள்!

மு. விழி (இளைஞர்களிடம்): என் சுயம்வரப் போட்டியில் வெற்றி பெற லஞ்சம் கூடக் கொடுத்தீர்களாமே... அப்படியா?

இளைஞர்கள்: ஆமாம். அது முட்டாள் தனம்தான்.

ராஜா (குறுக்கிட்டு): அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. ராஜகுமாரியின் மேல் உள்ள பற்றால் அப்படிச் செய்து விட்டீர்கள்... பரவாயில்லை.

மு. இளைஞன்: சேச்சே! ராஜ குமாரிக்காக அல்ல; ராஜ்யம் கிடைக்கும் என்றுதான் அப்படிச் செய்தோம்.

இ. இளைஞன்: ஆம். ஜெயிலுக்குப் பூட்டு வாங்கிக் கூடப் போட யோக்கியதை யற்ற ராஜ்யத்துக்காகக் கையிலிருந்த காசைச் செலவழித்தது முட்டாள்தனம் என்று இப்போதுதான் தெரிகிறது.

மந்திரி (குறுக்கிட்டு): தம்பி, நீ ராஜ்யத்தை மட்டும் குறைத்துப் பேசாதே. அதன் நிர்வாகப் பொறுப்பில் இருக்கும் என்னைப் பாதிக்கும். ராஜகுமாரிக்கு மட்டும் கல்யாணம் நிச்சயமாகட்டும். அப்புறம் பாரு, கல்யாணச் செலவுக்காக என்று அக்கம் பக்கத்திலே கைமாற்று வாங்கிப் போட்டுப் புரட்டிக் கஜானாவைச் சரி பண்ணிப்புடுவேன்!

ராஜா (ரகசியமாக மந்திரியிடம்): மகா கெட்ட எண்ணம் பிடித்த மனுஷனைய்யா நீர்! ராஜ குமாரியைப் பற்றி இரண்டு வார்த்தை தூக்கிப் பேசாமல் உம்ம நிர்வாகத்தை மட்டும் பீற்றிக் கொள்கிறீரே!

மந்திரி (ரகசியமாக): மகாராஜா! இது ராஜ தந்திரம். ராஜ குமாரியை அவங்க நேராப் பார்த்திருக்காங்க. என்ன சொன்னாலும் நம்ப மாட்டாங்க. ராஜ்யத்தைக் காட்டி ராஜகுமாரியை நகர்த்திப்புடலாம்!

ராஜா (இளைஞர்களிடம் சமாளிக்கும் குரலில்): வீர இளைஞர்களே, நீங்கள் ராஜ குமாரிக்காக வந்ததைச் சொல்ல வெட்கப்பட்டு ராஜ்யத்துக்காக வந்ததாகச் சொல்லுகிறீர்கள், பரவாயில்லை.

மு. இளைஞன்: ஆமாம், அரசே! ராஜ குமாரிக்காக நாங்கள் போட்டியிடுவதாக வெளியே சொன்னால் வெட்கம்தான்!

ராஜா (அசடு வழிகிறது. இருந்தாலும் சமாளிக்கிறார்): அது போகட்டும். எப்படியானாலும் ராஜ்யம் கிடைக்கும்போது ராஜ குமாரியும் உங்களுக்குக் கிடைக்கப்போகிறாள்.

இ. இளைஞன்: அதைப் பற்றிப் பரவாயில்லை... சமாளித்துக் கொள்ளலாம்!

ராஜா: சமாளித்துக் கொள்ளலாம் என்றால்?

இ. இளைஞன்: ராஜ்யம் கிடைத்தால் ராஜாவாகி விடலாம். அப்புறம் அரண்மனையை அடகு வைத்தாவது நாலு காசைப் புரட்டிவிடலாம். அதை வைத்து மனத்துக்கு இஷ்டமான வேறு நல்ல பெண்ணையும் கல்யாணம் செய்து கொள்ளலாம். ராஜா ஆகிவிட்டால் நம்மை யார் தடுக்க முடியும்?

மு. விழி: அப்பா என்னை இவர்கள் அவமானப்படுத்துகிறார்கள்.

ராஜா (ரகசியமாக): என்ன பெரிய அவமானம்? முதலில் கல்யாணம் ஆகட்டும், அப்புறம் அவங்க நினைச்சாலும் வேறு பெண்டாட்டி கட்ட முடியாது. இரண்டு பெண்சாதி வைத்துக் குடும்பம் நடத்துவதற்கு நம்ம அரண்மனையில் வருமானம் ஏது? என்னையே எடுத்துக் கோயேன். உங்க அம்மா ஒருத்தியோடுதானே வாழ்க்கை பூராவும் கஷ்டப்படுகிறேன்....ம் சரி சரி. கவலைப்படாமல் அவங்க கிட்ட ஏதாவது கேட்டு ஒருத்தனை நிச்சயம் செய்.

மு. விழி (இளைஞர்களிடம்): என்னைத் திருமணம் செய்த பின் நீங்கள் ராஜ்யத்தை இழந்தால் என்ன செய்வீர்கள்?

முதல் இளைஞன்: பேசாமல் வீட்டுக்குப் போயிடுவேன். இத்தனை நாளும் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் எனக்குக் கட்டிச் சாதம் கிடைக்கலையா?

மு. விழி: மனைவியாக இருக்கும் எனக்கு என்ன வழி செய்வீர்கள் என்று கேட்கிறேன்.

மு. இளைஞன்: வேணும்னா அர்ச்சகர் கிட்டச் சொல்லிக்கூட ஒரு கட்டிப் பிரசாதம் வாங்கித் தருவேன்.

மு. விழி (கோபத்துடன்): நான் ராஜ குமாரி.... ராஜ மரியாதையோடு நடத்த வேண்டும்.

இ. இளைஞன்: எனக்குத் தெரியும்!

மு. விழி: என்ன செய்வீர்கள்?

இ. இளைஞன்: தர்மராஜா செய்தது போல் வைத்துச் சூதாடுவேன், அல்லது அரிச்சந்திர மகாராஜா செய்தது போல் யார் வீட்டிலாவது வீட்டு வேலை செய்வதற்கு விற்பேன்! யாரும் வாங்கா விட்டால் நள மகாராஜா செய்தது போல் நடுக்காட்டிலேயே விட்டு விட்டு ஓடிப் போய்விடுவேன். எது வசதியோ, அதைச் செய்வேன்.

மு.விழி (ராஜாவிடம் ரகசியமாக): அப்பா! இந்த இரண்டு பேரும் சோம்பேறிகள்.

ராஜா: அதுதானம்மா உண்மையான ராஜகுணம்!

மு. விழி: ஒருத்தன் என்னை விற்கிறேன் என்கிறான்; அடுத்தவன் கோவிலில் உண்டைக் கட்டி வாங்கித் தரேன் என்கிறான்.

ராஜா: உண்டைக் கட்டி வாங்கித் தர்றவனே பரவாயில்லை. அவனையே நிச்சயம் பண்ணிடுவோமா?

மு. விழி: வேண்டாம்பா!

ராஜா: அப்படிச் சொல்லாதே. வேறு ஆட்கள் கிடைக்கிறது கஷ்டம். இவங்களில் ஒருத்தனை விடப்படாது. நாம கொஞ்சம் அசந்தாலும் மந்திரிப் பயல் தன் பொண்ணுக்குத் தட்டிக்கிட்டுப் போயிடுவான்.

மு. விழி: அப்படியானால் ஒன்னு செய்யலாம்!

ராஜா: என்ன?

மு. விழி: அப்பா, ஆறு சாஸ்திரம், அறுபத்து நாலு கலை படித்த நான் ஒரு சோம்பேறியைக் கல்யாணம் செய்து கொள்வது கேவலம். அதனாலே இந்தச் சோம்பேறிகள் இரண்டு பேரையும் நம்ம அரண்மனைக்குள் வைத்து வேலை கற்றுக் கொடுக்கலாம். எவன் முதலில் வேலை கற்றுக் கொள்ளுகிறானோ, அவனைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். அப்படியே அறிவித்து விடுங்கள். எப்படி என் சுயம்வரம்? புதுமையாகவும் புரட்சியாகவும் இல்லையா?


எவராலும்
நெருங்கமுடியாத
முதலிடம்
1st
★ கச்சிதமான நயம்
★ ஒப்பற்ற சுவை
★ முரமுரப்பான புதுமை
★ ஈடிணையற்ற போஷாக்கு
பார்லே க்ளுகோ
பிஸ்கட்டுகள்
PARLE
Gluco
PARLE
Gluco
பார்லே க்ளுகோ இந்தியாவிலேயே உன்னத
விற்பனையுள்ள பிஸ்கட்டாக விளங்குவதில் வியப்பில்லை !
everest/340dr1/PP.TM



வேலைக்காரன்: ஒரு பழைய சட்டை கொடுத்தீங்க ஐயா! அதில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டு இருந்திச்சிங்க! அது மாதிரி இன்னொரு சட்டை இருந்தாக் கொடுங்க!

ராஜா: ம்....ம்....ம்...சரி! மந்திரி இங்கே வாரும். (மந்திரி அருகே வருகிறார்) ராஜகுமாரி சொன்னது காதில் விழுந்ததல்லவா? அதை அவர்களுக்குச் சொல்லி, அவர்களுக்கு ஏதாவது வேலை கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யும்! ஆங்... முக்கியமான விஷயம்.... எங்காவது கடன் வாங்கியாவது ஒரு பெரிய பூட்டு வாங்கி அரண்மனைக் கதவைப் பூட்டிவிட்டு அப்புறம் அவங்க கிட்டே விஷயத்தைச் சொல்லும்.

(கிழிந்த திரை விழுதல்)

காட்சி 4

[மீண்டும் மேற்படி ராஜ கோஷ்டியினர் மேற்படி 'சுமார் ஒழுக்கு' மண்டபத்தில் கூடியிருக்கிறார்கள்.]

ராஜா: போட்டியாளர்களை அழைத்துக் கொண்டு வரும்படி மந்திரிக்குத் தெரிவி. (சேவகன் செல்கிறான். பின் மகளிடம்) இந்தாம்மா, நீ இன்னிக்கும் அது இது என்று நவ்வே சொல்லப்படாது. ஏறக்குறைய இருந்தாலும் எவனையாவது நிச்சயம் பண்ணிவிடணும்.

ராணி: ஆமாம்மா... நிலவரம் சரியில்லை.

ராஜா: இந்த மந்திரிப் போர்வழியும் நரி மாதிரி காத்துக்கிட்டிருக்கிறான்.

[மந்திரி பழையபடியே காலை இழுத்துக் கொண்டு வருகிறார்.]

ராஜா: என்ன ஐயா... அவர்கள் எங்கே?

மந்திரி: ஒருவரைக் காணோம்.

ராஜா: என்ன, ஒருவரைக் காணோமா?

மந்திரி: அந்த உண்டைக்கட்டிச் சாதப் போர்வழி ஓடிவிட்டார்!

ராஜா: உண்மையைச் சொல்லும், உம் வீட்டில் ஒளித்து வைத்திருக்கிறீரா?

மந்திரி (ரோஷத்துடன்): இந்த ஓலையைப் பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்!

ராஜா: ஓலையா?

மந்திரி: ஆமாம்! "மகாராஜா அறிய வேண்டியது. வேலை உபத்திரவம், உங்கள் பெண் ஒரு உபத்திரவம்! இரண்டையும் சகித்துக்கொள்ள என்னால் முடியாது"—இப்படி எழுதிவிட்டு அவன் ஓடியிருக்கிறான்.

ராஜா: அரண்மனைக் கதவு பூட்டியிருக்கும்போது எப்படி ஓட முடியும்?

மந்திரி: கோட்டைச் சுவர் ஏறி அகழியில் குதித்துத்தான் ஓடியிருக்கிறான்! அவன் அகழியில் குதிக்கும்போது நம்ம காவலாளிகள் கண்டு 'முதலை கிடக்கிறது' என்று பயமுறுத்தினார்களாம். அதற்கு அவன் "முதலையிடம் சிக்கினால் ஆதிமூலம் காப்பார். உங்க முதலாளி — ராஜாவிடம் சிக்கினால் ஆதிமூலத்தாலும் காப்பாற்ற முடியாது!" என்று அகழியில் குதித்து விட்டானாம்!

ராஜா (பரபரப்புடன்): அடுத்த ஆசாமி?

மந்திரி: அடுத்தவர் அதோ வருகிறார்!

ராஜா: அப்பாடா! (மகளிடம் துடிதுடிப்புடன்) அம்மா இவனும் ஓடு முன் மாலை மாற்றிவிட வேண்டும்.

[இரண்டாவது இளைஞன் வருகிறான்.]

இ. இளைஞன்: மகாராஜா! உங்கள் தயவில் நான் ஒரு வேலை கற்று விட்டேன்.

ராஜா: சரி, சரி... முல்லைவிழி! எடு மாலையை... ம்.....ம்... மாட்டு இவர் கழுத்தில்.

மு. விழி: இதோ மாலை!

இ. இளைஞன்: ஐயோ! மாலையா? வேண்டாம்!

ராஜா: சுயம்வரத்தில் ஜெயித்தாகி விட்டது. மாலையை வாங்கித்தான் ஆக வேண்டும்.

இ. இளைஞன்: ஐய்யய்யோ! வேண்டாம். எனக்கு இன்னிக்குக் காலையில்தான் கல்யாணம் ஆனது!

ராஜா (ஆவேசமாக): என்னது? பெண் யாரு? மந்திரி மகளா?

இ. இளைஞன்: இல்லை. நான் வேலை கற்றுக் கொண்டிருந்த இடத்தில் கண்ட ஒரு அழகான பெண்ணைக் காதலித்து மாலை மாற்றி விட்டேன்.

ராஜா (கோபத்துடன்): இது துரோகம். வேறு பெண்ணைக் கட்டக் கூடியவன் என் பெண்ணின் சுயம்வரத்துக்கு ஏன் வந்தாய்?


இ. இளைஞன்: அப்போது வேலை வெட்டி தெரியாத சோம்பேறியாக இருந்தேன். முழுச் சோம்பேறி ராஜாவுக்குச் சமம் என்று பழமொழி சொல்வார்கள். அதனால், "நமக்கு ஏற்ற வேலை ராஜா வேலைதான், விதியே என்று ராஜ குமாரியைக் கட்டிக் கொண்டு, அரண்மனையில் தூங்கலாம்" என்று நினைத்து வந்தேன். இப்போது ஒரு வேலை கற்றுக் கொண்டேன்! இனி எனக்கென்ன? பிழைக்கிறதுக்கு வேலை தெரிந்த பின், அந்தச் சோம்பேறி ராஜா வேலை எதற்கு? ராஜ்யமும் வேண்டாம்! ராஜ குமாரியும் வேண்டாம். இந்தச் சோம்பேறி வேலை அவனி ஐம்பத்தாறு ராஜாக்களுக்குத் தான் லாயக்கு!

ராஜா: அப்படியானால் என் மகள்?.... ஓய் மந்திரி!

மந்திரி (அலறியவாறு): ஐயய்யோ! நான் மாட்டேன். என்னை விட்டு விடுங்கள். நான் பிள்ளை குட்டிக்காரன்....!

(கிழிந்த திரை விழுதல்)


டி.எஸ்.ஆர் & கோ.,
மதராஸ்-16,
கும்பகோணம்.
GOKUL
SANTOL
TOILET POWDER
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER
'கோகுல்'
ஸான்டால்
டாய்லெட் பவுடர்
ஸான்டல் வுட்
டாய்லெட் பவுடர்
TSR-2117



வாழும் வகைக்கு ஓர் இலக்கணம் வகுத்தார் வள்ளுவப் பெருந்தகை. இலக்கியம் கண்ட பின்னரே இலக்கணம் வகுக்கப்படுகிறது என்பது உண்மையாயினும், தமிழ் மறை தந்த வள்ளுவர் கண்ட இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்ந்த பெருமை காந்தியடிகளையே சாரும்.

பாரிஸ்டர் காந்தி அப்துல்லா கம்பெனியின் வழக்குக்கு உதவத் தென் ஆப்பிரிக்கா சென்றவர், மனிதாபிமானம் மேலிட்டு, இன, நிற வெறிக்கு இலக்கானவர், அன்பின் பிணைப்பால் உயர்ந்து மக்கட் பணியை மேற்கொண்டார். பலன், அப்துல்லா கம்பெனியின் வழக்கு முடிந்தாலும், மீண்டும் தென் ஆப்பிரிக்கா சென்று பணி மேற்கொள்ளும்படியாயிற்று.

தென் ஆப்பிரிக்காவாழ் இந்திய மக்கள் அவரது மக்கட் பணிக்காக நிதி திரட்டி உதவ முன்வந்தனர், காந்தியடிகளும் கஷ்டமின்றிக் குடும்பம் நடத்த வேண்டுமே என்ற நல்ல எண்ணத்தில். ஆனால் காந்தியடிகள் நிதி உதவியை ஏற்க மறுத்து விட்டார், 'பயன் தூக்கார் செய்த உதவி'யாக அது அமைய வேண்டும் என்ற ஆவலில். 'நயன் தூக்கின் அதன் நன்மை கடலின் பெரிது' என்பதை உணர்ந்த மக்களோ, உழைப்பின் பலனைக் கொண்டு வாழ்ந்து மகிழ வேண்டும் என்ற அவரது பெரு நோக்கத்துக்கு வழி வகுத்துக் கொடுத்தனர். ஆம், பாரிஸ்டர் காந்தி ஒரு 'சீனியரி'ன் கீழ் 'ஜூனிய'ராக வழக்கறிஞர் ஆனார்.

அப்பொழுதுதான் அவரிடம் ஒரு வழக்கு வந்தது. அதை ஆராய்ந்தவருக்குத் தம் கட்சிக்காரரின் கணக்கில் இரண்டொரு தவறுகள் தென்பட்டன. உடனே அதைத் தம் சீனியர் கவனத்துக்குக் கொண்டு வந்தார். நீதிமன்றத்தில் கூறித் தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

சீனியரோ தேர்ந்தவர். தவறுகளை மறைத்து வழக்குகளைத் திரித்து ரோடித்து வெற்றி கொள்வதையே குறியாகக் கொண்டவர். அவருக்குக் காந்தியடிகளின் அந்தப் பேச்சு பிடிக்கவில்லை. "மிஸ்டர், காந்தி! உங்களுக்கு அநுபவம் போதாது. இந்தத் தவற்றிலும் நம்கட்சிக்குப் பலம் இருக்கிறது. மறைத்து வெற்றி காண முயல வேண்டுமே ஒழிய, நாமாக மாட்டிக் கொண்டு வழக்கை இழப்பது தவறு. அறிவீனம்!" என்றார்.

"இல்லை. இதையே எதிர்க்கட்சி வக்கீல் கட்டிக்காட்டி விட்டால், அது நமக்கு இழப்பாக முடியலாம் அல்லவா?"

"அப்பொழுது சமாளிக்க வேண்டும். அது தான் நம் தொழில். எதிராளிகள் கவனக் குறைவாக இருந்து விட்டால், நமக்கு வேலை மிச்சம்தானே?"

சீனியரின் வாதம் காந்தியடிகளின் செவிகளில் ஏறவில்லை; மனத்துக்கும் உகந்ததாகப்படவில்லை. "தோல்வியே கிட்டுவதாயிருந்தாலும், தவற்றைத் திருத்திக் கொள்வதே மேல்!" என்றார் பிடிவாதமாக. அதி பால்யத்தில் அரிச்சந்திரன் கதையை மனத்தில் அழுந்தப் பதிய வைத்துக் கொண்டவராயிற்றே!



"அப்படியானால் நீரே வழக்கை நடத்தும்!" என்று வெடித்தார் சீனியர்.

"நான் நடத்துவதா? அது எப்படி? கட்சிக்காரர் இஷ்டப்பட வேண்டாமா?"

"அவரைக் கூப்பிட்டுச் சொல்லிப் பாருமேன்!"

"சொல்லிப் பார்ப்போம். அவர் தம் தவற்றைத் திருத்திக் கொள்ள முன்வந்தால் சரி, இல்லாவிட்டால்...."

தயங்கினார் காந்திஜி. "....நீங்கள் பொய் வழக்கு ஆடுங்கள்" என்று கூற அவருக்கு மனம் வருமா? எனவேதான் அந்தத் தயக்கம். கட்சிக்காரர் தருவிக்கப்பட்டார். காந்தியடிகள் அவரிடம் விஷயத்தை எடுத்துரைத்தார். உண்மைக்குப் புறம்பாக நாம் நெறி தவறிப் போகக் கூடாது என்று அவர் கூறிய பாங்கே கட்சிக்காரரின் மனத்தில் பதிந்தது. "அப்படியே செய்து விடுவோம். கோர்ட்டில் நம் கணக்கில் உள்ள தவறுகளைக் கூறி விடுவோம்!" என்றார்.

சீனியருக்கு இது வேம்பாகக் கசந்தது.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட தினத்தன்று வேண்டுமென்றே சீனியர் நேரம் கழித்து வந்தார். எனவே, காந்தியடிகளே அந்த வழக்கை நடத்தும்படி ஆயிற்று.

முதல் காரியமாகக் கணக்கில் உள்ள தவறுகளைக் கூறித் தாம் திருத்திக் கொள்வதாக நீதிமன்றத்தில் சொன்னார்.

இதுவரை எதிர்க்கட்சிக்காரரோ அவருடைய வக்கீலோ இந்தத் தவற்றைக் காணவில்லை. முந்திரிக் கொட்டையெனக் காந்தியடிகளே முந்திக் கொண்ட பொழுது, இருவரும் உள்ளூற மகிழ்ந்தனர். 'நல்ல ஆடு! வக்கீல் வேலைக்கு வந்து சேர்ந்தது!' என்றும் எண்ணிக் கொண்டனர்.

நீதிபதியோ வியந்தார், திகைத்தார். 'ஓர் உண்மையை — தம்மிடமுள்ள தவற்றை ஒப்புக் கொள்ள எத்தனை திண்மை வேண்டும்' என்று மனமாரப் பாராட்டினார். பயன், தீர்ப்பு காந்தியடிகளின் கட்சிக்காரருக்குச் சாதகமாக அமைந்தது. 'பொய்யாது ஒழுகி நின்ற' காந்தியின் குணத்தைப் பாராட்டி, உண்மைக்கு என்றுமே வெற்றி தான் என்பதைச் சொல்லாமல் சொல்லி விளங்க வைத்தார்.

'வாய்மை'யைத் தம் முதற் கொள்கையாகக் கொண்டு வாழ்ந்து காட்டியதனால் தானே காந்தியடிகள் இன்றும்,

'உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்'

என்னும் குறள் இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்கிறார்!

ஃ ஃ ஃ

தவத்தின் சிறப்பைக் கூறும் வள்ளுவர், 'இலர் பலர் ஆகிய காரண'த்தை ஆராய்ந்து கூறுகிறார்: 'நோற்பார் சிலர் பலர் நோலாதவர்' என்று. அத்தகைய நோற்பார் சிலரில் சாபர்மதி ஆசிரமத்து முனிவர் முதலிடம் பெறுகிறார். சத்தியத்தையும் அஹிம்சையையும் தமது இரு கண்ணின் மணிகளாகப் போற்றித் தவமியற்றிய அவரது அருள் நோக்கு அகிலத்தையே கவர்ந்தது. எத்தனை எத்தனை மக்கள்



தொண்டு செய்யும் ஆவலுடன் அவர் ஆசிரமத்தை மொய்த்து விட்டனர்.

தவ வாழ்க்கை வாழ்ந்து வந்த அடிகள் ஆசிரம வாழ்க்கைக்குப் பல சீரிய விதிமுறைகளை வகுத்தார். ஆசிரமவாசிகள் சிறிதும் தவறாது அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் விதித்தார்.

வைகறைத் துயில் எழுவது முதற்கொண்டு இரவு படுக்கச் செல்வது வரையில் எந்த அலுவலும் அவற்றுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நேரங்களிலேயே நடைபெற வேண்டும். சிறிது தாமதித்தாலும் அவற்றுக்கான தண்டனையை அநுபவித்தே தீர வேண்டும் என்பது ஆசிரம விதி.

உணவு அருந்த ஒரு நேரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை நினைவுறுத்த முதல் மணி அடிக்கும். யார் என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அதை நிறுத்திவிட்டு, உணவுத் தட்டோடு உணவு விடுதிக்கு வந்து சேர வேண்டும். இரண்டாவது மணி அடித்ததும் போஜனசாலையின் கதவு சாத்தப்பட்டு விடும். யாராவது தாமதித்து வந்தால் அவர்கள் திரும்பிப் போகக் கூடாது. வராந்தாவில் நிற்க வேண்டும், இரண்டாவது பந்திக்கு இலை போட்டு மணி அடிக்கும் வரை. ஆம், நிற்க வேண்டும்; உட்கார்ந்து விடக் கூடாது.

அன்று காந்தியடிகள் ஏதோ முக்கியமான கடிதம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தார். உணவுக்கு மணி அடித்து விட்டது. கடிதத்தை ஓரிடத்தில் முடித்து ஒவ்வொன்றையும் ஒழுங்காக எடுத்து வைத்துவிட்டுப் புறப்பட்டார், உணவுச் சாலையை நோக்கி. அவர் உணவுச் சாலையை அடைவதற்கு முன்பாக, இரண்டாவது மணி அடித்து விட்டது. வழக்கம்போலக் கதவும் சாத்திக் கொண்டது.

காந்தியடிகள் வராந்தாவில் போய் நின்றார். ஏதோ அலுவலாக வெளியே வந்த தொண்டர் ஒருவர், காந்திஜி நிற்பதைப் பார்த்து, ''என்ன பாபூஜி! வராந்தாவிலேயே நின்று விட்டீர்கள்? உள்ளே வாருங்களேன்!'' என்றார்.

''நான் வருவதற்குள் இரண்டாவது மணி அடித்துக் கதவும் சாத்தியாகி விட்டதே! நான் எப்படி உள்ளே வருவது?'' என்று கேட்டார் காந்திஜி.


''உங்களுக்குக் கூடவா இந்தச் சட்டதிட்டம்?''

''ஏன்? நானும் உங்களில் ஒருவன் தானே? என்னை ஆசிரமத்தின் சட்டதிட்டம் கட்டுப்படுத்தாதா? இரண்டாவது பந்திக்கு மணி அடிக்கும்வரை நான் இங்கே இருக்க வேண்டியதுதான்!'' என்றார் காந்திஜி.

தொண்டர் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை. காந்தியடிகளின் இயல்பும் பிடிவாத குணமும் தெரிந்ததுதானே? எனவே, பேசாமல் உள்ளே சென்றார். ஒரு முக்காலியை எடுத்து வந்தார். ''சரி! அப்படியானால் அதுவரையில் இதில் உட்கார்ந்திருங்கள்!'' என்றார்.

''உட்காருவதா? நான் உட்காருவதா?''

''ஆமாம், பாபூஜி! எத்தனை நேரம்தான் நீங்கள் கால் கடுக்க நிற்பீர்கள்? இரண்டாவது பந்திக்கு மணி அடிக்க இன்னும்



அரை மணி நேரம் பிடிக்குமே!'' என்றார் தொண்டர்.

காந்திஜி அவரை ஏற இறங்கப் பார்த்தார். ''உனக்கு இந்த ஆசிரமத்தின் சட்ட திட்டங்கள் எல்லாம் தெரியும் அல்லவா?'' என்று கேட்டார்.

''அதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? குறிப்பிட்ட நேரத்துக்குள் உணவு விடுதிக்குள் நுழையாதவர்கள் வெளி வராந்தாவில் நிற்க வேண்டும்.''

''நிற்கத்தானே வேண்டும்? உட்காரக் கூடாதே?''

''உட்காரக் கூடாது. நிற்கத்தான் வேண்டும்.''

''நான் அதைக் கடைப்பிடிப்பதில் தவறில்லையே!''

''என்ன, பாபூஜி! உங்களுக்குமா இந்தக் கட்டுதிட்டம்?''

''என்னை ஏன் பிரித்துப் பேசுகிறாய்? உன்னைப் போலத்தானே நானும்? தொண்டனுக்கும் தலைவனுக்கும் ஒரே சட்டதிட்டம்தான் இந்த ஆசிரமத்தில். இன்று நான் ஒழுங்கு மீறி விட்டால், நாளை பிறருக்கும் துணிவு ஏற்பட்டு விடும். தவறு யார் செய்தாலும் தவறுதான். அதற்கேற்ற தண்டனையை அடைந்தே தீர வேண்டும். தெய்வமே தவறு இழைத்தாலும் மன்னிக்கக் கூடாது.''

நக்கீரர் பரம்பரையில் வந்தவர் போலப் பேசினார் காந்திஜி. பேச்சோடு நிற்கவில்லை; அதைச் செயலாக்கியும் காட்டினார். இரண்டாவது பந்திக்கு மணி அடிக்கும் வரையில் இருந்த இடத்தை விட்டு அசையாது நின்றார். பிறர் குற்றம்போல் தன் குற்றத்தையும் கண்டால்தான் உலகத்து உயிர்களுக்குத் தீங்கு இழைக்காமல் இருக்க முடியும் என்பதைக் கூறாமல் கூறிய காந்தியடிகளுக்கு,

'ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?'

என்னும் வள்ளுவம் எப்படித்தான் தெரிந்திருந்ததோ, விளங்கவில்லை!

ஃ ஃ ஃ

'**யா**தும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் மூதுரைக்கு மெருகு ஏற்றி வாழ்ந்து காட்டியவர் காந்திஜி. ஆனால், 'பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த மகாத்மா' ஆயிற்றே அவர்! எனவே, அதன் விடுதலையைக் கோரி வட்டமேஜை மகாநாட்டுக்குத் தூதுவராகப் போக முன்வந்தார் அவர். ஆடம்பர உடை உடுத்தியல்ல; அரை நிர்வாணப் பக்கிரியாக.

தென்னிந்திய விஜயத்தின் பொழுது, ஏழை மக்களின் எளிய வாழ்வைக் கண்டு, தாமும் அவர்களைப் போல் எளிய வாழ்வு வாழ முடிவு கட்டியவராயிற்றே! அதனால் தான் பாரதத்தின் பிரதிநிதியாக— ஏழை — எளிய மக்களின் பிரதிநிதியாக அந்தக் கோலத்தில் லண்டன் மாநகருக்கு விஜயம் செய்தார்.

பாண்டவர்களின் சார்பில் கிருஷ்ண பரமாத்மா கௌரவர்களிடம் தூதுபோனதை நினைவூட்டும் நிகழ்ச்சி அது.

அந்த நேரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கும் வெற்றி கிட்டவில்லை. இந்த நேரத்தில் காந்தியடிகளுக்கும் எடுத்த காரியத்தில் மன நிறைவு கிடைக்கவில்லை. ஆனால் எதிரிகளின் மனத்தில் வெற்றிக்கு விதையைத் தூவித்தான் திரும்பினார்.

காந்தியடிகள் லண்டனில் தங்கியிருந்த காலத்தில், ஆங்கிலேயத் துரை ஒருவர் அவரைச் சந்தித்துக் கேட்டார்:

''மக்களிடமுள்ள அன்புதான் உங்களை இத்தனை தூரம் இழுத்து வந்ததாகக் கூறுகிறீர்களே, நாங்களும் மக்கள்தானே?''

''ஆமாம், யார் இல்லை என்று மறுத்தார்கள்? உங்களிடமும் மக்கள் பண்பு இருக்கும் என்ற நம்பிக்கையோடுதானே நான் வந்திருக்கிறேன்.''

''உங்கள் நாட்டு மக்களிடம் நீங்கள் காட்டும் அதே அன்பு எங்களுக்கும் உண்டல்லவா?''

''கட்டாயம் உண்டு.''


''அப்படி இருக்கும்பொழுது எங்களைப் பிரித்துப் பேசுவானேன்? விடுதலை கோருவானேன்? அன்புக்கு ஏற்றத்தாழ்வு உண்டோ?''

''கிடையாது. என்னைப் போல் நீங்களும் பாரத மக்களிடம் ஒரே மாதிரியான அன்பைக் காட்ட வேண்டும் என்று கோரவே வந்திருக்கிறேன்.''

''அப்படியே நாங்கள் அன்போடு நடந்து கொண்டால், அப்புறம் உங்களுக்குச் சுயராஜ்யம் தேவையில்லையே!''

''தேவையில்லைதான். அதே நேரத்தில் அன்பினால் கட்டுண்டபின், இன்னொரு நாட்





டைக் கட்டியாள வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கும் எழ நியாயம் இல்லையே !''

''அன்பினால்தானே கட்டியாள் கிறோம்.''

''ஆம், ஆனால் அறிவினால் கட்டியாளவில்லையே !''

'' எப்படி ?''

''உங்களுக்குச் சுதந்திர உணர்வு இருப்பது போலவே, எங்களுக்கும் சுதந்திர உணர்வு இருக்குமானால் அது தவறில்லையே! எனவேதான் அன்போடு பகுத்தறிவோடு கேட்கிறோம், எங்களுக்கும் சுய நிர்ணய உரிமை வழங்குங்கள் என்று!''

''அறிவு சார்ந்த பேச்சாகத் தோன்றவில்லையே!''

''ஏது? என் பேச்சா? எப்படி?''

''சற்றுச் சிந்தித்துப் பாருங்கள், மிஸ்டர் காந்தி! எங்கள் ஆட்சிக்கு உட்படுவதற்கு முன்னால் உங்கள் நாடு எப்படி இருந்தது ? இப்பொழுது எத்தனை முன்னேற்றம் கண்டிருக்கிறது ? உங்கள் நாட்டை நாங்கள் ஆளுகிறோம் என்றாலும் உங்களுக்கு நாங்கள் என்ன குறைவு வைத்தோம்? படு அநாகரிகமாக வாழ்ந்த உங்களை நாங்கள் நாகரிகமாக்கியுள்ளோம். தபால், தந்தி, ரயில் போன்ற பல நவீன சாதனங்கள் அமைத்துத் தந்துள்ளோம். நாடெங்கும் இருப்புப்பாதை போடவும், தந்திக் கம்பங்கள் நடவும் எங்களுக்கு எவ்வளவு செலவாகியிருக்கும் என்று எண்ணுகிறீர்கள்? அதோடு நவீன கல்விக்கு வசதி செய்து உங்கள் நாட்டவர்களுக்கே எத்தனை எத்தனை பெரிய உத்தியோகங்கள் எல்லாம் கொடுத்திருக்கிறோம்? இத்தனைக்கும் நன்றி தெரிவிப்பதற்குப் பதிலாக எங்களை நாட்டை விட்டு ஓட்டப் பார்க்கிறீர்களே, இதைத்தான் சொல்கிறேன் !''

''நன்றி. எத்தனைதான் அறுசுவை உண்டி அளித்தாலும் கூண்டுக்கிளிக்குத் திருப்தியாக இருக்குமா ? அது போலத்தான் எங்களுக்கு அடிமை வாழ்வு பிடிக்கவில்லை. ஒருவிதத்தில் பார்க்கப் போனால் எங்களுக்குச் சுதந்திர உணர்வு உண்டாவதற்கே நீங்கள்தான் காரணம்.''

''அப்படியிருக்கும் பொழுது அடிமையாக நடத்துகிறோம் என்று குற்றம் சாட்டலாகுமா?''

''கூடாதுதான். ஆனால் நீங்கள் செய்து தந்திருக்கும் வசதிகளே அல்லவா எங்களுக்கு அடிமை மனப்பான்மையை வளர்த்துவிடுபவையாக இருக்கின்றன. எனவேதான் எங்கள் நாட்டை எங்களுக்கே தந்துவிடுங்கள் என்று கேட்கிறோம்.''

''நாங்கள் போட்டிருக்கும் இருப்புப் பாதைகள், நட்டிருக்கும் தந்திக் கம்பங்கள் என்ன ஆவது ?''

''எங்களுக்கு உங்கள் பொருள்களில் ஒரு தூசுகூட வேண்டாம். எல்லாவற்றையும் பெயர்த்து எடுத்துக் கொண்டு போங்கள். உங்கள் வருகைக்கு முன்னால் எங்கள் பாரதம் எப்படி இருந்ததோ, அப்படியே விட்டுச் செல்லுங்கள். அப்புறம் நாங்கள் எங்கள் விதியை நிர்ணயித்துக் கொள்ளுகிறோம். முன்னேற்றம் காண முடிந்தால் முயல்கிறோம். இல்லாவிட்டால், எப்பொழுதும் போல் இருந்துவிட்டுப் போகிறது — ஆமாம், உங்கள் பொருள்களையெல்லாம் எப்பொழுது எடுத்துச் செல்கிறீர்கள் ?'' என்று முத்தாய்ப்பு வைப்பது போலக் கேட்டார் காந்திஜி.

துரைக்குப் பேசத் தோன்றவில்லை. ஆயினும் மனத்துக்குள், ''மிஸ்டர் காந்தி! உங்களிடம் பேசி ஜயிக்க முடியாது. அன்போடு அறிவும், அதோடு ஆராய்ந்த சொல்வன்மையும் இருக்கிறது. உங்கள் எண்ணம் என்றைக்காவது ஒரு நாள் கட்டாயம் நிறைவேறும்'' என்றே சொல்லியிருப்பார்.

'அன்புஅறிவு ஆராய்ந்த
சொல்வன்மை தூதுரைப்பார்க்கு
இன்றி யமையாத மூன்று'

இக்குறளின் பொருளுக்கேற்பப் பணியாற்றிக் காந்தியடிகள் அன்று தூவிய விதை பலன் தந்து விட்டது.

ஃ ஃ ஃ

இப்படிக் குறள் வழி வாழ்ந்தவர் காந்தியடிகள்தாம் என்பதில்லை. அன்னை கஸ்தூரிபா அவரைக் காட்டிலும் ஒரு படி மேலாகவே இருந்தார். அதிகக் கல்வியறிவில்லை என்றாலும் பாரதத்தின் பாரம்பரியம் அவரது இரத்தத்தில் ஊறியிருந்தது. கட்டிய கணவனே தெய்வம் என்ற நம்பிக்கையில் திளைத்திருந்தார் அவர். ஆம், அமரர் உலகே ஆச்சரியப்படும் அளவுக்கு, 'அன்னை கஸ்தூரியை மனைவியாகப் பெற மகாத்மா காந்தி என்ன தவம் செய்திருந்தாரோ ?' என்று பொறாமைப்படும் அளவுக்குப் பத்தினித் தெய்வமாக வாழ்ந்து காட்டியவர் அவர்.

'பெற்றாற் பெறின்பெறுவர்
பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு'

என்னும் குறள் அவருடைய வாழ்க்கையின் விளக்க உரையாக அமைந்துள்ளது எனில் அது மிகையல்ல. சொல்லப் போனால் காந்தியடிகளின் மனத்தில் 'சத்தியாக்



“ஊதல், குழல், விசில், கூச்சல், தாம்பாளம், தமுக்கு, தகரம் இத்தனையும் இல்லாமல் எங்க ஊர் டூரிங் டாக்கீஸில் சினிமா பார்க்க முடியாது.”

“எதற்கு இவை?”

“ஒவ்வொரு தடவையும் பிலிம் ‘கட்’டாகிற போது ஓசை எழுப்பியாகணுமே!”

கிரகம்’ என்னும் வித்தை ஊன்றியவரே கஸ்தூரிபா தான்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தம் குடும்பத்தோடு வாழ்ந்து வந்த காலம் அது.

மக்கள் குலத்துக்குப் பணி புரியவென்று தோன்றிய மகாத்மாவோ இன, நிற வேறு பாட்டிலிருந்து உயர்ந்து, கீதையில் கூறியுள்ள ‘சமதர்சன’ பாவத்தில் இணைந்தவர். தீண்டாமை ஒழித்து, ‘எல்லா உயிரிலும் பரமன் இருக்கிறான், எல்லோரும் ஆண்டவனின் மக்கள்’ என்னும் கோட்பாட்டில் நின்றவர்.

அன்னை கஸ்தூரிபாவோ வழி வழி வந்த ஹிந்து மத நெறியில் ஊறி உருவானவர். ஆன்றோர் வகுத்தவை அனைத்தும் நியாயமானவையே என்னும் கருத்தைக் கொண்டவர். இரு வேறு துருவங்களும் இணைந்து வாழ்ந்த அழகை என்னவென்பது?

காந்தியடிகளின் ஆசிரமத்தில், எல்லா மதத்தவரும் தங்கியிருந்தனர். ஆசிரமக் கட்டடம் இந்த நாளைய நவீன நாகரிக வசதி கொண்டதல்ல. அவரவர் தங்கி யிருக்கும் அறையிலும் ஒரு மண் பாண்டம் இருக்கும். இரவு நேரங்களில் இயற்கையின் அழைப்புக்கு அவர்கள் அந்த மண்பாண்டங்களையே உபயோகித்துக் கொள்ள வேண்டும். பொழுது விடிந்ததும், அவற்றைக் கொண்டு போய்க் கொட்டிவிட்டுப் பழைய படியே அதன் இடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது அந்த ஆசிரமத்தின் விதியாக அமைந்தது.

அந்த ஆசிரமத்தில் ஒரு கிறிஸ்தவ இளைஞன், ஹிந்து மதத்தின் தாழ்த்தப் பட்ட வகுப்பிலிருந்து மதம் மாறியவன் — தங்கியிருந்தான்.

அவனுக்கு ஒரு நாள் உடல் நோய் கண்டது. எழுந்து சென்று தன் அலுவல்களைத் தானே முடித்துக் கொள்ளும் வலுவை அவன் இழந்து விட்டான்; எனவே, காந்தியடிகள் கஸ்தூரிபாவை அழைத்துத் தம் மனைவி என்ற தோரணையில் ஆணையிட்டார், ‘இவனது கழிநீர்ப் பாண்டத்தைக் கொட்டி விட்டுக் கழுவி எடுத்து வா’ என்று!

கஸ்தூரிபாவுக்கு இதைக் கேட்கவே மனம் கசந்தது. ‘தீண்டத் தகாத பிள்ளையாண்டான் ஒருவனுக்கு இத்தகைய பணியெல்லாம், நான் செய்ய வேண்டுமா?’ என்று. “உங்களுக்குத்தான் நான் வாழ்க்கைப் பட்டிருக்கிறேன். உங்களுக்குச் செய்யக் கடமைப்பட்டவள் நான். கண்ட கண்ட பேருக்கெல்லாம் நான் இத்தகைய பணி செய்யத் தயாராயில்லை!” என்றார்.

காந்திஜி கடுமையும் கொடுமையும் கொப்புளிக்க, “நீ செய்யத்தான் வேண்டும்” என்றார்.

“முடியாது. கணவனுக்காக நான் எதையும் செய்ய வேண்டியவள்தான். ஆனால் இந்த விஷயத்தில் என்னை நிர்ப்பந்திக்காதீர்கள்!” என்றார் கெஞ்சாக் குறையாக.

“உன்னால் முடியாது. அவ்வளவுதானே? இதோ, நானே செய்கிறேன்!” என்று எழுந்தார் காந்தி. உடனே சொல்லைச் செயலாக்கியும் காட்டத் தொடங்கி விட்டார்.

கஸ்தூரிபாவினால் அதற்குமேல் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. மனத்தைப் பிசைந்தது. “வேண்டாம், சொல்வதைக் கேளுங்கள்! நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம்!” என்று வழி மறித்தார்.

“நீயும் செய்ய மாட்டாய், என்னையும் செய்யவிட மாட்டாய். அப்படித்தானே? அப்படியானால் இந்தக் காரியத்தை யார் செய்வது?” என்று கேட்டார் காந்திஜி.

கஸ்தூரிபாவுக்குக் கணவர் செய்வது பொறுக்காததால், தாமே அவர் கையிலிருந்து அந்தப் பாண்டத்தை வாங்கிச் செல்ல முனைந்தார். இருந்தாலும் மனத்து அருவருப்பு முகத்தில் பளிச்சிட்டது.

“இப்படி அருவருப்போடு செய்வதாயிருந்தால் நீ செய்ய வேண்டாம். மகிழ்ச்சியுடன் செய்வதாயிருந்தால் மட்டுமே நீ செய்யலாம்” என்று காந்திஜி நிபந்தனை விதித்தார்.


கணவனைத் தெய்வமாகக் கொண்டாடும் கஸ்தூரிபா நிமிஷத்தில் தம் மனத்துக்கு இசையாத அந்தக் காரியத்தையும் மனத்துக்கு இசைந்ததாக ஆக்கிக் கொண்டுவிட்டார்.

கற்பின் இலக்கணமாக, பத்தினித் தெய்வமாக வாழ்ந்து, காந்தியடிகளின் மடியிலேயே இறுதி மூச்சை விட்ட கஸ்தூரிபாவை அமரர் உலகம் வள்ளுவரது வாக்கின்படி வரவேற்றிருக்கும் என்பதில் ஐயமென்ன?

அதோடு, ஒரு நல்ல காரியம் நடைபெறுவதற்குக் கொடுமையுடன் நடந்து கொள்வது உகந்ததல்ல; உண்மையான சத்தியாக்கிரகம் பிறர் மனம் நோகாமல் பிற நலக் காரியங்களைச் சாதிப்பதுவே என்பதை எடுத்தோதிய கஸ்தூரிபாவின் பிரிவு காந்தியடிகளை எப்படி வாட்டியது என்பதும் உலகு அறியும். இலக்கணத்துக்கு இலக்கியமாகச் சமைந்த காந்தியக் குறள் வாழ்க்கை என்றென்றும் இவ்வுலகில் நிலைத்து நின்று நலன் பயக்குமாக.

— அஜயம்

இல்லவாழ் அந்தணர் சார்பில் ஸ்ரீ சொர்ண வெங்கடேச தீக்ஷிதர் திருவாசகமணிக்கு, அவரது 61வது பிறந்த தினத்தை முன்னிட்டுப் பொன்னாடை போர்த்துகிறார்.



அம்புலிப் பருவத்தில் கவிப்புலி

அழகு தமிழ் குறட் பாக்களை அகில உலக மெங்கும் பரப்பும் குறிக்கோளுடன் ஆங்கிலத்தில் அற்புதக் கவிதை அடிகளாகவே மாற்றி அநேக அர்த்த புஷ்டியான குறிப்புக்களுடன் புத்தகமாக வெளிக் கொண்டு வந்த திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் மகத்தான பணி ஒன்றைச் செய்து முடித்து விட்டோம் என்ற பெருமிதத்தில், தம் சிருஷ்டி வேகத்துக்குத் தாற்காலிகமாக ஒரு 'கமா'வைக்கூடப் போடவில்லை. வள்ளுவரின் குறள் இன்பத்திலேயே மூழ்கியிருந்த அவருக்கு அந்தக் குறளின் சிருஷ்டிகர்த்தாவான வள்ளுவரைக் குழந்தையாகக் கற்பனைசெய்து கொஞ்சி இன்புற வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

வள்ளுவர் பிள்ளைத் தமிழுக்கு உடனேயே பிள்ளையார் சுழி இட்டார்.

பிள்ளைத் தமிழ் என்பது தொண்ணூற்றாறு வகைப் பாமாலைகளில் ஒன்று. இறைவனையும் மற்றும் தலைவன் தலைவியையும் தவழ்ந்து விளையாடும் பச்சிளம் பருவத்திலிருந்து சிறு தேர் உருட்டும் குழந்தைப் பருவம் வரை கற்பனையில் கண்டு அந்தப் பருவங்களின் பெருமைகளை யெல்லாம் கவியாகப் புனைந்து பாடுவதுதான் பிள்ளைத் தமிழ்.

கவிஞருள் ஒரு சூரப்புலியான திருவள்ளுவரை இந்தப் பத்துப் பருவங்களிலும் நிறுத்திப் பார்த்துப் பாமாலை சூட்டி மகிழத் திட்டமிட்டார் திருவாசகமணி. 1959ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் இந்தத் தமிழ்ப் பணியைத்தொடங்கினார். அவரைப்பொறுத்த வரை உணர்ச்சி பரவசம்தான் முதல் இடம் பெறும். சம்பிரதாயமெல்லாம் அப்புறம் தான். திடீரென்று நான்காவது சப்பாணிப் பருவத்தில் தொடங்கி அடுத்த நாள் ஆறுவது வருகைப் பருவத்துக்குத் தாண்டி மூன்றுவது நாளில் இரண்டாவது செங்கீரைப் பருவத்தையும் முடித்து விட்டார். அவர் உள்ளத்தில் ஓர் இருட்டடிப்பு. ஊ௱ உணற்றில் ஒருவித வறட்சி.

1964ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் திருவாசகமணியின் உள்ளத்தில் ஏதோ சஞ்சலம். மனவியாகூலம். இதைப் போக்க என்ன செய்யலாம் என்று தவித்த போது ஏறக்தாழ ஐந்து ஆண்டுகளுக்கு முன் எழுத ஆரம்பித்து மூன்று பருவங்களுடன் முற்றுப்பெறாமல் நிற்கும் திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ் நினைவுக்கு வந்தது. விட்ட இடத்தில் உடனே தொடர்ந்தார். சரியாகப் பன்னிரண்டாவது நாளில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சி மன நிறைவுடன் முற்றுப் பெற்றது. பத்துப் பருவங்களில் மொத்தம் நூற்றி இருபது பாடல்கள் அடங்கிய நூல் முழு வடிவம் பெற்றது.

திருவாசகமணிக்குத் தமிழில் எவ்வளவு புலமை உண்டோ அத்தனை புலமை ஆங்கிலத்திலும் உண்டு. தமிழ்ப் பண்டிதர் வட்டாரத்தில் அவருக்கு ஆங்கிலப் புலவர் என்ற பட்டமும், ஆங்கிலமறிந்தோர் நடுவில் அவருக்குத் தமிழறிஞர் என்ற அடைமொழியும் உண்டு. இதற்காக அவர், தம்முடைய பிள்ளைத் தமிழின் கையெழுத்துப் பிரதியை, இரண்டு முதுபெரும் தமிழ் அறிஞர்கள் பார்வைக்கும் அபிப்பிராயத்துக்கும் அனுப்பி வைத்தார். அவர்கள் இந்நூலைப் படித்துப் பிரமித்தார்கள். மனம் விட்டுப் பாராட்டினார்கள். ஒருவேளை அன்பின் காரணமாகவும் இந்தப் பாராட்டுதல்கள் எழலாம் என்ற ஐயத்தில் வேறுபல தமிழன்பர்களுக்கும் அனுப்பி வைத்தார். அபிப்பிராய பேதம் எங்குமே ஒலிக்கவில்லை.

1964ல் எழுதி முடிக்கப்பட்ட இந்நூலிற்கு அச்சாகிப் புத்தக உருப் பெறும் வாய்ப்பு 1968ல்தான் கிடைத்தது. காந்திஜெயந்தி அன்று பொருத்தமாக வெளியானது.

ஆரம்பப் பருவமாகிய காப்புப் பருவமே திருக்குறளின் தன்மையையும் லட்சியத்தையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. திருமால் தவிர, அல்லா, அஹுரமஸ்தா, புத்தர், வான்தந்தை அருகபரமேட்டி எனப் பிற சமய தேவர்களையும், அந்தந்தச் சமய உண்மைகளையும் விளக்கிப் பாடியிருக்கிறார் ஆசிரியர்.

அம்புலிப் பருவத்தில் திருவள்ளுவக் குழந்தையோடு விளையாடுவதற்கு நிலாவை

அழைக்கும் ஆசிரியர், ருஷ்யர்களைக் காட்டிக் கூட நிலவைப் பயமுறுத்தி விடுகிறார்.

சீலனிவன் நூற்குறள்
சாலஅறி ருஷ்யர்கள்
சினமார்ந்து கண்சிவப்பத்

தம்மக்கள் மூலம்நின்
சந்திர மண்டலமார்ந்து
சாடுவர் உனையறிகுவாய்

என்று அமைகிறது அந்தப் பாடல்.

ருஷ்யர், சந்திர மண்டலம் என்பன போன்ற தற்கால எண்ணங்களும் இந்த நூலில் தோன்றியிருப்பதும் பழமையில் ஒரு புதுமைதானே! இந்த நூல் எக்காலத்தில் பாடப்பெற்றதோ என்ற ஐயம் பிற்காலத்தில் ஏற்படாவண்ணம் இந்த வார்த்தைக் கோவைகள் உதவலாம் அல்லவா?

வள்ளுவரது பெருமையும் குறளின் அருமையும் இந்த நூல் முழுதும் நன்கு கலந்து பரிமளிக்கின்றன.

திருவாசகமணி பாலசுப்பிரமணியம் சட்டம் படித்தவர். ஆனால் அவர் ஈடுபட்டது சமய ஆராய்ச்சியில். அவர் கோர்ட்டுக்குள் நுழைவதைவிட கோயிலுக்குள்ளும் பெரிய புராணத்துக்குள்ளும் திருவாசகத்துக்குள்ளும் நுழைவதையே விரும்பினார். 'டை' கட்ட அவர் தயாராக இல்லை. அந்தக் கழுத்தில் உருத்திராட்சக் கொட்டைதான் கட்டினார்.

இதுவரை அவர் வள்ளுவரைப் பக்தியோடு பார்த்தார். அடியார்களில் ஒருவராகப் போற்றினார். இப்போது இந்நூலில் குழந்தையாகப் பாவித்துக் கொஞ்சி மகிழ்கிறார்.

— மேஜை

கிடைக்குமிடம்: 'திருவாசகமணி' கே.எம். பாலசுப்ரமணியம், டி - 69, தில்லைநகர், திருச்சி-3. விலை: ரூ. 2.



★ தீர்மானம் ஏகமனதாக ஏற்கப்படுமா?

★ வளம்பெற வாழ்த்து!

★ தாதா கோடையாவியே

★ பிரகாசாவின் பிரகாசம்

கோவை மாவட்டம், ஈரோடு தாலுகா, எழுமாத்தூர் பஞ்சாயத்தில் 10–12–68ந் தேதி சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:

லாட்டரிச் சீட்டு விற்பனை நேசத்தில் உழைப்பின் மீது இருக்கும் நம்பிக்கையை அடியோடு அழிப்பதோடு, சூதாட்ட மனோபாவத்தை வளர்ப்பதாக உள்ளதால், தமிழக அரசு லாட்டரிச் சீட்டுத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று இக்கூட்டம் கோருகிறது. தீர்மானம் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது.

எழுமாத்தூர் — மு. சென்னியப்பன்,
13–12–68 — பஞ்சாயத்து தலைவர்

கல்கி எனும் கற்பனை வண்டு
கால மெனும் தேன் கொண்டு
தமிழ் தென்றல் சோலை தவிழ
குமிழ் கொஞ்சும் மாலை மகிழ
பொன்னி நதி தீர புகழ்பாடி
கன்னித் தமிழ் வீர நடை ஓடி
தமிழிசை இயல் வளர வளர
பற பற பல்லாண்டு!

புதாபெஸ்ட், ஹங்கேரி
5–12–68 — "கவிதாலயன்"

சாலஞ்சென்ற கொடை வள்ளல் லாலசந்த் தாதா அவர்களைப் பற்றி கல்கியில் வெளியான குறிப்பு படித்தேன். எத்தனையோ அறங்கள் செய்திருக்கிறார். கல்வித் துறைக்குச் செய்திருக்கும் அறமும் பெரிதுதான். எனினும், ஜெயின் கல்லூரி, அகர்சந்த் மன்மல் ஜெயின் அவர்கள் பெயரில் நிறுவப்பட்டதால் அதை தாதாவின் நினைவுச் சின்னமாகக் கொள்வதற்கில்லை.

சென்னை, — சிவசுப்பிரமணியன்
15–12–68 — ஜெயின் கல்லூரி
பழைய மாணவன்

8–12–68 தேதியிட்ட கல்கி 'ராஜாஜி மலரில்' 81வது பக்கத்தில், அவர் வேலூர் சிறையில் இருந்த அறைக்குக் கல் பதித்தது ஸ்ரீ ஆந்திர கேசரி பிரகாசம் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதைப் பதிப்பித்தது அப்பொழுது சென்னை கவர்னரா யிருந்த ஸ்ரீ பிரகாசாதான்.

இந்த விழாவில் ஸ்ரீ ராஜாஜியும், ஸ்ரீ சுப்பிரமணியமும்கூடக் கலந்து கொண்டனர். நானும் இந்த விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒருவன்.

வாலாஜா பேட்டை
6–12–68 — கே. ஆர். கல்யாணராமன்


உங்கள் கூந்தல் பட்டுப்போல்
மிருதுவாகவும், செழுமையுடனும்
விளங்க
கேசவர்த்தினி
உபயோகியுங்கள்
KESAVARDHINI
30 வருடங்களுக்கு மேலாக ஒவ்வொரு குடும்பத்திலும் பிரபலமானது
பிசுக்கை அகற்றி கூந்தலை மிருதுவாகவும் மணமுள்ளதாகவும் செய்ய கேசவர்த்தினி ஷாம்புவை உபயோகியுங்கள்
கேசவர்த்தினி பிராடக்ட்ஸ் சென்னை-14
KYP-101A


பொங்கல் வெளியீடு
சென்னை:
சித்ரா
பிராட்வே
கிருஷ்ணவேணி
சரஸ்வதி
மற்றும்
தென்னுடெங்கும்
ஸ்ரீ சாவித்திரி புரொடக்ஷன்ஸ்
அளிக்கும்
குழந்தை
உள்ளம்
தயாரிப்பு, திரைக்கதை
டைரக்ஷன்
சாவித்திரி
ஒளிப்பதிவு - சேகர் - சிங்
பாடல்கள் · கண்ணதாசன் • வசனம் · மா. லட்சுமணன்
இசை · கோதண்டபாணி • ஆர்ட் · குமாரி மோகனு
எடிட்டிங் · எம். எஸ். என். மூர்த்தி • நடனம் · தங்கராஜ்
ஸ்டில்ஸ் · ராமசுவாமி
ELEGANT

ரசிகமணி டி. கே. சி. அவர்களுடன் சேர்ந்து இருந்து இரண்டு குறள்களை அனுப வித்து மகிழும் வாய்ப்புக் கிட்டுகிறது நமக்கு. இந்தக் கட்டுரைவாயிலாக. ○

தீமைக்கும் அன்பே துணை!

“குறளுக்குப் பலர் உரை கண்டிருக்கிறார்கள். பரிமேலழகர், காளிங்கர், மணக்குடவர் என்று எத்தனையோ பேர். ஆனால் கவிச் சக்கரவர்த்தி கம்பன் ஒருவன் தான் குறள் கூறும் கருத்தின் ஆழத்தை அகழ்ந்து கண்டவன்” என்பார் டி. கே. சி. அவர் மேலும் சொல்லுவார்:

ஒரு வள்ளல் இருந்தார். அவர் தம்மை நாடி வருபவர்களுக்கெல்லாம் உதவுபவர். ஒரு நாள் அவரிடம் ஒருவர் வந்தார். ஐந்து ரூபாய் கொடுத்தார் வள்ளல். அதைப் பெற்றுக்கொண்ட அவர், “பெரிய வள்ளலாம் வள்ளல்! பிச்சைக் காசு ஐந்து ரூபாய் கொடுக்கிறான்!” என்று சொல்லிக்கொண்டு போனார்.

அடுத்தாற்போல் ஒருவர் வந்தார் வள்ளலின் உதவி நாடி. அவருக்கும் ஐந்து ரூபாய் கொடுத்தார். வாங்கிக் கொண்டவர், “ஐந்து ரூபாயா இது! ஐந்நூறு ரூபாயல்லவா! எவ்வளவு கணிசமான உதவி!” என்று சொல்லிக் கொண்டு போனார்.

மூன்றாவதாக ஒருவர் வந்தார் அவருக்கும் அந்தத் தர்மப் பிரபு அதே ஐந்து ரூபாய்தான் கொடுத்தார்.

வந்தவர் அதைப் பெற்றுக் கொண்டவுடன் உள்ளம் நன்றியால் நிறைந்து விட்டது. “ஐந்து ரூபாயா இது? என் கஷ்டதசையை உணர்ந்து சமயத்தில் செய்த உதவியல்லவா?” ஐந்து லட்ச ரூபாய் கிடைத்ததாகவும் புதையலே கிடைத்தது போலவும் அகமகிழ்ந்து போனார் அவர்.

இப்போது குறளைப் பாருங்கள்:

உதவி வரைத்தன்று உதவி, உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து


உதவிக்கு வரம்பு உதவி செய்யப்படும் பொருளில் இல்லை. உதவி பெறும் மக்களின் மனோபாவத்தில், பண்பாட்டில், உயர்ந்த உள்ளத்தில்தான் உதவியின் வரம்பு காண வேண்டும்.

அந்த வள்ளல் கொடுத்தது என்னமோ எல்லாருக்கும் ஐந்து ஐந்து ரூபாய்தான். வாங்கிக் கொண்டவர்களின் பண்புக்கு — சால்புக்குத் தகுந்தபடி அந்த ஐந்து ரூபாய் ஐந்நூறுகவும், ஐந்து லட்சமாகவும் உயர்ந்தது.

இந்தக் குறள் பாவின் இப்படிப் பொருள் கண்டு உணர்ந்தவர் கம்பர். கம்பராமாயணத்திலே ஓரிடம்:

மகாபலி சக்கரவர்த்தியிடம், வாமனன் மூன்றடி மண் யாசகம் கேட்டான். குல குரு சுக்கிராச்சாரியார் தடுத்தார். இருப்பினும் மகாபலி கேட்கவில்லை. வாமனனுக்கு மூன்றடி மண் வழங்க, அவன் கைகளில்





ரஸிகமணி டி. கே. சி.யும், பேராசிரியர் கல்கியும்

நீர் தாரை வார்த்துவிட்டான். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது!

கயந்தரு நறும்புனல் கையில் தீண்டலும்
பயந்தவர் களும்இகழ் குறளன் பார்த்தெதிர்
வியந்தவர் வெருக்கொள விசும்பின் ஓங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய உதவி ஒப்பவே!

நான்காவது அடியைக் கவனிக்க வேண்டும். வாமனன் விசும்பில் வளர்ந்தான்! எப்படி? உயர்ந்த மனப் பண்

பாடு உடையவர்களுக்கு அளிக்கப்படும் உதவி எப்படி வளருமோ அப்படி வளர்ந்தான் என்கிறான்.

வள்ளல் வழங்கிய ஐந்து ரூபாய், ஐந்நூறாக ஆகி, ஐந்து லட்சமாக ஆகி வளர்ந்தாற்போல் வாமனன் வளர்ந்தானாம்!

மேற்கண்ட குறள்பாவை எவ்வளவு தூரம் அநுபவித்திருந்தால், கம்பர் இப்படி இடம் அறிந்து கையாண்டிருப்பார் என்பது இலக்கிய ரஸிகர்கள் அநுபவித்து அநுபவித்து மகிழ வேண்டிய விஷயமாகும்!

ஃ ஃ ஃ

உலகில் பல அறச் செயல்கள் நிகழ்கின்றன. சிலர் ஆஸ்பத்திரி கட்டுகிறார்கள். சிலர் பள்ளிக்கூடங்கள் நிறுவுகிறார்கள். வேறு சிலர் பஜனமடங்கள் எழுப்புகிறார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம் அன்பு—தான். நோயாளிகளிடமும், மாணவர்களிடமும் பக்தர்களிடமும் ஏற்பட்ட அன்பு. அதனால் அறத்துக்கு அன்பு சார்புடையது என்றுதானே முடிவு கட்ட வேண்டும்? ஆனால் அப்படிச் சொல்பவர்கள் முற்றும் அறியாதவர்கள் என்கிறார் வள்ளுவர்.

பின்?

விக்டர் ஹ்யூகோ என்ற பிரபல பிரஞ்சு நாவலாசிரியர் ஏழைபடும் பாடு என்ற அற்புத நவீனம் படைத்திருக்கிறார்.

அதில் ஜீன்வால்ஜீன் என்ற கதாநாயகன் ரொட்டி திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு நீதிபதி முன் நிறுத்தப்படுகிறான்.


நீதிபதி: நீ திருடினாயா?

ஜீன்: ஆம்.

நீதிபதி: ஏன் திருடினாய்?

ஜீன்: குழந்தைகள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருந்தன. அதைப் பார்க்கச் சகிக்காமல் திருடினேன்.

குழந்தைகளின் மீது இருந்த அன்பு அவனை அறத்துக்கு மாறுபட்ட மறச் செயலாகிய திருட்டுத் தொழிலைச் செய்ய வைத்ததல்லவா?



அதனால் அறத்துக்கு மட்டும்தான் அன்பு காரணம் என்று சொல்பவர்கள்! அறிவிலிகள்: மறத்துக்கும் திருட்டு, கொலை, கொள்ளை போன்றவற்றுக்கும் அன்பே காரணம், துணை என்கிறார் வள்ளுவர். இது டி. கே. சி.யின் விளக்கம்?

அறத்திற்கே அன்புசார்
பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே
துணை!

இதுவரை எந்த உரையாசிரியரும் காணாத வகையில் ரஸிகமணி இக்குறளுக்கு மேற்கண்ட விதத்தில் உரை கண்டு விளக்குவார். இந்த உரையைக் கேட்ட பின், இக்குறள்பாவைப் படிக்கப் படிக்க மேற்கண்ட விதத்திலன்றி, வேறு எவ்வித உரையும் சரியாகாது என்றே தோன்றும்!

''மறத்திற்கும் அஃதே துணை!''

எவ்வளவு அழுத்தந் திருத்தமாக விழுந்திருக்கிறது என்று வியக்கத்தான் வேண்டியிருக்கிறது.

மேற்கண்ட குறளும் அதற்குரிய விளக்கமும் டி. கே. சி. எத்தனையோ பேருக்குச் சொல்லியிருக்கிறார்.

கற்பனை வளம் மிக்க 'கல்கி' அவர்கள் மனத்தில் இவ்விளக்க விதை விழுந்தவுடன் ''கள்வனின் காதலி'' என்ற அற்புத இலக்கியப் படைப்பு முளைத்தது; தளிர் விட்டுச் செழித்து வளர்ந்தது!

முத்தையன் என்ற பட்டிக்காட்டு இளைஞன் தனது சகோதரி அபிராமியின் மேல் கொண்ட அளவுகடந்த வாஞ்சை காரணமாகக் கள்வனான வரலாறே கள்வனின் காதலி.

கள்வனின் காதலி கடைசி அத்தியாயங்களில் பேராசிரியர் கல்கி அவர்கள், மேற்குறிப்பிட்ட குறளையும் இவ்விளக்கத்தையும் தமிழ் நாட்டில் ஒரு பெரியவர் சொன்னதாகக் குறிப்பிடுவார். அப்பெரியவர் டி.கே.சி.தான் என்பதைக் கல்கி — டி.கே.சி.யை உணர்ந்த எல்லாரும் அறிவார்கள். — எஸ். வி. எஸ்.

லாம் என்று விளக்கினார். புதுமை ஒளியை மருத்துவ உலகம் ஒரு வரப்பிரசாதமாக வரவேற்று ஏற்றுக் கொண்டது. உடைந்த எலும்புகளை இணைக்கவும் நோயுற்ற பகுதிகளைக் கண்டு பிடித்து சிகிச்சை செய்யவும் இன்றைக்கு 'எக்ஸ்ரே'யின் உபயோகம் எவ்வளவு என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இத்தகைய அற்புத ஒளிக் கதிரைக் கண்ட விஞ்ஞானி யார் தெரியுமா? வில்ஹெல்ம் ராண்ட்ஜெம் என்பது அவரது பெயர். எதிர்பாராத விதமாகக் கண்டு பிடித்த இத்தகைய ஒளிக்காக, மிகப் பெரிய கௌரவமான நோபல் பரிசும் இவருக்குக் கிடைத்தது. ரகசியங்களை அம்பலமாக்கிக் காட்டும் இக்கதிரின் தன்மைகளைப் பற்றிக் கல்லூரியில் விரிவாகப் படிப்பீர்கள்.

கண்டு பிடி — விடை :

(1) கிங் மாஸ்டரின் மீசை (2) கிங் மாஸ்டரின் டையில் (3) கிங் மாஸ்டரின் கைவிரல்கள் (4) யானையின் வால் (5) யானையின் பாத நகங்கள் (6) யானையின் தந்தம் (7) பக்கெட் கைப்பிடி (8) பபூனின் கால் (9) பபூனின் டிராயரில் புள்ளிகள் (10) ஸீலின் உடலில் புள்ளிகள் (11) சின்ன ஸீலின் பீடத்து டிசைன் (12) மைதான வேலியில் ஒரு வட்டத்தைக் காணோம்.

துப்புத் துலக்க வாரீகளா ?

சென்னையின் ஓர் ஒதுக்குப்புறமான பகுதியில் ஒரு பாழடைந்த பங்களாவில் அதிகாலை 3-30 மணிக்கு நான்கு பேர்வழிகள் காரசாரமான கடும் விவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அன்று ஜனவரி மாதம் 14ந் தேதி. வாய்ச்சண்டை வலுப்பட்டு நால்வரில் ஒருவனை யாரோ ஒருவன் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டான். குத்தப்பட்டவன் இறந்ததும் மற்ற மூவரும் உயிர் பிழைக்க ஓட்டம் பிடித்தார்கள். நீதியின் கரங்களிலிருந்து தப்ப முடியுமா? போலீஸின் பிடியில் சிக்கினார்கள் அம்மூவரும். துரதிர்ஷ்டவசமாக அவர்களோடு ஒரு நிரபராதியும் கைது செய்யப்பட்டான். போலீசாரால் பிடிபட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட யாரோ ஒருவன் ஆக ஐவரைப் பற்றிய சிறு குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது. இதைக் கொண்டு கொலை செய்யப்பட்டது யார்? கொலையாளி யார்? இவர்களோடு சேராத அந்நிய மனிதன் யார் என்பதை உங்களால் கூற முடியுமா?



கபாலி : கொலை செய்யப்பட்டவனைச் சம்பவம் நடக்கச் சற்று முன்புதான் சந்தித்தவன். இறந்தவன் ஒரு ரௌடிக் கூட்டத்தை நடத்தி வருபவன் என்று இவனுக்குத் தெரியும். கொலையாளி யார் என்பதைச் சொல்லும் துணிவு இவனுக்குக் கிடையாது.

மருதமுத்து : கொலையாளியை வெறுப்பவன். அவனை நான்கு வருஷமாக இவனுக்குத் தெரியும். வடிவேலுவின் தோழன். கொலை செய்யப்பட்டவனின் மாமா பிள்ளை.

கோபாலு : கொலையாளி கத்தியைப் பாய்ச்சும்போது அவன் பின்னால் நின்றிருந்தவன். கபாலிதான் கொலை செய்தது என்று சாதிக்கிறான்.

சீனி : கொலை நடந்த அன்று மாலை காஞ்சிபுரத்தில் இருந்தவன். மருதமுத்துவை இவன் சந்தித்து இரண்டு வருடங்களாகின்றன. இரண்டு நாள் கழித்துப் போலீஸாரால் மதுரையில் கைது செய்யப்பட்டவன்.

வடிவேலு : ஒரு பெரிய ரௌடிக் கோஷ்டியின் தலைவன். சிறையிலிருந்து தப்பிய கைதி. போலீஸாரால் முதலில் கண்டுபிடிக்கப்பட்டவன்.

முடியுமே !

சீனிதான் வடிவேலுவைக் கொன்றவன். மருதமுத்து அந்தக் கோஷ்டியில் சேராத அந்நியன் — நிரபராதி. காரணங்கள்: கபாலி கொலையாளியாக இருக்க முடியாது. ஏனென்றால் கொலை செய்யப்பட்டவனோடு சற்று முன்பே தொடர்பு கொண்டவன். கொலை செய்யப்பட்டவனும் அவனாக இருக்க முடியாது. கொலை செய்தவனைப் பற்றிய உண்மையைச் சொல்லும் துணிவு அவனுக்கு இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் இவன் இருந்திருக்க வேண்டும். ஏனென்றால் கொலை செய்தது யார் என்பது இவனுக்குத் தெரியும்.

மருதமுத்து ஒருவன்தான் கொலை நடந்த இடத்தில் இல்லாதவன். அவன் அங்கு இருந்ததற்கான குறிப்பு எதுவும் இல்லை. ஆகவே, இவனும் கொலைகாரன் இல்லை.

கோபாலு கொலையாளி அல்ல, கொல்லப்பட்டவனும் இல்லை. ஏனென்றால் கொலையாளியின் பின்னால் நின்றிருந்தவன் இவன். சீனி அன்று மாலை காஞ்சிபுரத்தில் இருந்திருந்தாலும் இவனே கொலைகாரன். காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வர மூன்று மணி நேரம் போதாதா? கொலை நள்ளிரவுக்கு வெகு நேரம் கழித்தே நடந்திருக்கிறது.

வடிவேலுதான் கொல்லப்பட்டவன். சீனி கொலைகாரன் என்பது முடிவான பின் (சீனி இரண்டு நாள் கழித்துக் கைது செய்யப்பட்டிருக்கிறான்.) கபாலியும் கோபாலுவும் உயிரோடு இருக்கிறார்கள். கபாலி கொலைகாரனைக் காட்டிக் கொடுக்கத் துணிவில்லாதவன். கோபாலு அந்த இடத்திலேயே இருந்தவன். ஆகவே கொலையுண்டது வடிவேலு.

சிறுவர் விருந்து

தயாரிப்பு: வாண்டுமாமா


பிறந்தது எப்படி?



பவேரியாவில் உள்ள உர்ஸ்பர்க் நகரம். ஒரு விஞ்ஞானி தமது சோதனைக் கூடத்தில் மிகத் தீவிரமாக ஏதோ ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு நேரத்தைப் பற்றிய கவலையே இல்லை. ஆகவே பொழுது போனது கூடத் தெரியவில்லை. ஏதோ ஒரு கண்ணாடிக் குழாயில் குனிந்து வேலை செய்து கொண்டிருந்தார் அவர். அதன் பெயர் 'க்ரூக்ஸ் ட்யூப்'. அதைச் சுற்றிக் கருப்புக் காகிதத்தை வேறு ஒட்டி இருந்தார். அதனுள் 'கேதோட்' கதிர் பாய்ச்சியிருந்தார். அந்தக் குழாயிலிருந்து கொஞ்சமும் வெளியே ஒளி சிதற முடியாது. சோதனைச் சாலையிலும் வெளிச்சமில்லை. குழாய்க்குள் 'கேதோட் கதிர்' களைப் பாய்ச்ச விட்டு நிமிர்ந்தபோது அவருக்கு வியப்புக் காத்திருந்தது. அந்தக் குழாய்க்குச் சற்றுத் தூரத்தில் ஓர் அட்டை வைக்கப்பட்டிருந்தது. அது வேறு ஏதோ சோதனைக்கானது. அதன் மீது ரசாயனப்பூச்சுவேறுபூசப்பட்டிருந்தது. அதன் மீது ஒளியைப் பாய்ச்சினால்தான் அது தகதகக்கும். ஆனால் கொஞ்சமும் ஒளியே இல்லாத அந்தச் சமயத்தில் அந்த அட்டை தகதகத்துக் கொண்டிருந்தது. விஞ்ஞானிக்கோ வியப்புத் தாங்கவில்லை. இது எப்படி? அது சாதாரண ஒளியல்ல. பிரகாசமான பச்சை வண்ண ஒளி. ஆனால் எங்கிருந்து வருகிறது அது? அந்தச் சோதனைச் சாலையில் ஒளி உள்ள ஒரே இடம் அவர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்த க்ருக்ஸ் குழாயினுள்தான். அதுவும் கருப்புக் காகிதத்தினால் நன்றாக மூடிச் சுற்றப்பட்டிருந்தது. விஞ்ஞானி குழலுக்குள் செல்லும் மின் தொடர்பைத் துண்டித்தார். உடனே அட்டையில் ஒளிர்ந்து கொண்டிருந்த பச்சை ஒளியும் மறைந்தது. மறுபடி மின் தொடர்பைக் கொடுத்தார். விந்தை ஒளி மறுபடியும் தகதகத்தது. அப்படியானால்?

திகைப்பும் வியப்பும் கொண்ட விஞ்ஞானி, குழலுக்கும் அட்டைக்கும் இடையே தம் கையைவைத்தார். என்ன விந்தை! கண்ணுக்குப் புலப்படாத அந்த மாய ஒளி — கருப்புக் காகிதத்தை ஊடுருவி வெளிப்படும் அந்த மந்திர ஒளி — இப்போது அவர் கையில் ஊடுருவிப் பாய்ந்து அவரது கை எலும்புகளின் நிழலுருவை அட்டை மீது பிரதிபலிக்க வைத்தது. அப்போதுதான் அந்த விஞ்ஞானிக்குத் தாம் ஒரு புதிய அற்புத ஒளியைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்ற உணர்வு வந்தது. அந்த ஒளி எத்தகைய மாய சக்தியைக் கொண்டது என்பதையும் அறிந்தார். இத்தனை வல்லமை பெற்ற அந்த ஒளிக்கு என்ன பெயரிடுவதென்று புரியவில்லை அவருக்கு. ஆகவே 'எக்ஸ்ரே' ('X'RAY) என்று நாமகரணம் செய்தார். தம் கண்டு பிடிப்பை இவர் விஞ்ஞான உலகுக்கு அறிவித்தார். மனித உடலினுள் இருக்கும் உறுப்புக்களை ஆராய, இந்த ஒளியை ஊடுருவச் செய்து அதன் பிரதிபலிப்பை போட்டோகிராபிக் பிலிமில் தேக்கிப் பிரதிகள் எடுக்க

கண்டு பிடி! சர்க்கஸ் கூடாரக் காட்சியைக் கீழே காண்கிறீர்கள். யானை இருக்கிறது. வேல் பந்தை பாலன்ஸ் செய்கிறது. பபூன் நிற்கிறான். ரிங் மாஸ்டர் அறிவிக்கிறார். இந்தப் படத்தில் பன்னிரண்டு தவறுகள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. அவைகளை உங்களால் கண்டு பிடிக்க முடியுமா?



மனம் பொங்கப் பொங்க மகிழ்ந்திடுவோம்!

— சௌந்தரா கைலாசம் —

வள்ளுவப்பெருந்தகை எழுப்பிய மாளிகை திருக்குறள். காமமும் பொருளும் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க வகையிலே விண்ணுற ஓங்கிய மேற்புறப் பகுதிகள். மாளிகையைத் தாங்குகின்ற அடிப்படையாக மன ஆழத்திலே வேர்விட்டு நிற்பது அறம். அறம் தழுவாத நெஞ்சத்தால் மலரினும் மெல்லிதான காமத்தின் நீர்மையைத் தெரிந்து கொள்ள முடியாது; செறுநர் செருக்கறுக்கும் பொருளின் கூர்மையைப் புரிந்து கொள்ள முடியாது. ஆக அனைத்தினுக்கும் ஆதாரமாக — பறக்கச்சிறகிருக்கும் பறவைக்கு உந்தியெழ உதவும் காலாக — உள்ளன யாவினுக்கும் உயிர்நாடியாக இருப்பது அறமேயாகும்.

''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்.'' ஆயின் செய்யத் தக்கதுதான் எது? எங்கும் எப்பொழுதும் யாராலும் செய்யத் தக்கது என்று ஒன்று இருக்குமானால் அது அறமின்றி வேறில்லை. 'செயற்பாலதோரும் அறனே.'' எனவே செய்யத்தான் வேண்டும் அறத்தை — செய்து செய்து உய்யத்தான் வேண்டும் மண்ணுண்டு போகாமல் மானுடம்! ஆனால் சொல்லி விடலாம் மிகவும் எளிதாக அறஞ்செய வேண்டும் என்று; செய்துவிட முடியுமா எல்லாராலும் என்பதைச் சிந்திக்க வேண்டும். செய்ய முடியாததையா வள்ளுவர் சொல்லியிருப்பார்? அவர் சொன்ன அறம்தான் யாது?—அதைச் செய்வதென்றால் தனித் தகுதி ஏதாவது வேண்டுமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அறம் செய்ய விருப்பம்தான்; ஆனால் கையிலே வசதி வேண்டாமா என்று, அறம் என்றால் தான தர்மம் என்னும் தவறான எண்ணத்திலே உள்ள சிலருக்குக் கேட்கத் தோன்றும். காலத்தையும் இடத்தையும் கடந்து ஏழை, செல்வன் என்னும் பேதத்தையும் பிளந்து அனைவருக்கும் பொதுவாக அமையும் பெருமை மிக்கது வள்ளுவர் வகுத்த அறம்!

கோயில் கட்டுவதையோ, குளங்கள் வெட்டுவதையோ, வருவார் போவார்க்கெல்லாம் பொருளை வாரி வாரி வழங்குவதையோ வள்ளுவர் அறம் என்று குறிக்கவில்லை. அப்படிக் குறித்திருப்பாரேயானால் அறம் செய்வதென்பது தனிப்பட்ட சிலர் மட்டுமே பெறும் சலுகையாகிவிடும். வள்ளுவர் பேசுகின்ற அறம், செயலை அல்ல, சிந்தனையை ஒட்டியது; பணத்தை அல்ல, மனத்தைப் பற்றியது. புவியில் பிறந்துவிட்ட எந்த மனிதனுக்கும் இருந்து வருகின்ற ஒரே எண்ணம் மனக் கவலையில்லாமல் வாழ வேண்டும் என்பதுதான்.

''ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல'' என்று இரக்கம் மேலிட்ட காரணத்தால் கருதிக் கருதிக் கவலைப்படுவார் கவலைக் கடலைக் கடிய வள்ளுவர் அருளிய கருத்துக் கருவூலம் அறத்துப்பால் ஆகும்.

நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி அஞ்சி வாழ்வதுதானே நாம் யாண்டும் காணக்கூடிய காட்சியாக இருக்கிறது. கவலை தோய்ந்த முகங்களைத் திரும்பிய பக்கமெல்லாம் காண்கிறோமே, அதற்கு என்ன காரணம்? யான், எனது என்னும் செருக்கு — அஞ்ஞானத் திரையினாலே மெய் மறைப்புண்டு போனதன் விளைவாக எழுந்த யான் எனது என்னும் செருக்குத்தான் கவலைக்கு முதற் காரணமாக உள்ளது. தன்னைப் போல் பிறரை எண்ணாத தன்மையினாலே காணுகின்ற அனைத்தும் தானே என்னும் மெய்ஞ்ஞானம் இன்மையினாலே மனிதன் பேதமிட்டான், கலகமிட்டான், வேலி



கட்டிப் பின்னதற்குக் காவல் என்ற பேருமிட்டான். அவன் வாழ்விலே போட்டியும் பொறாமையும் பூத்துச் சிரித்தன. சிறப்புடன் பிறர் வாழப் பொறாத சிறு மனத்தினாலே, அடை ‹ வேண்டும் அதையும் இதையும் எனும் ஆசைவலைப்பட்டான், பேயாய் அலையத் தலைப்பட்டான். மூச்சுவிடக்கூட நேரமில்லை என்பது போல் ஓடி ஆடினான், முயங்கி மயங்கிக் கூடாமல் மோதிக் கலங்கி வாடினான். வென்ற போது மனம் களித்தான் — விழுந்த போது முகம் கனத்தான்— ஆவி வராத போது ஆத்திரத்தால் — பற்றி எரிந்த சினத் தீயால் கடுகடுத்தான்; பாழ் செய்யும் வன்சொற்கள் பல தொடுத்தான். பெறற்கரிய பேரின்பத்தை இழக்கச் செய்வது மட்டுமல்ல, பேத உணர்வு, மனிதனை, மாசு படிந்த மனத்தினன் ஆக்கி மாறாத கவலைக்கும் ஆளாக்கி விடுகிறது. கவலை என்று மறுபெயரிட்டு அழைக்கலாமோ என்று

கருதக்கூடிய அளவுக்கு வாழ்க்கை அஞ்சி நடுங்க வேண்டிய ஒன்றாக ஆகிவிடுகிறது! நடுங்கவே தேவையில்லாத ஒன்று—நன்கு வாழ வேண்டிய முறையில் வாழ்ந்தால் தெய்வ நிலைக்கு நம்மைக் கொண்டு சேர்க்கும் ஒன்று வாழ்க்கை என்று வள்ளுவரின் அறம் குரல் கொடுக்கிறது. அவர் கூறும் அறம் எல்லாம் மாயப் பெருங் காற்றால் வந்து படிந்துவிட்ட மாசெனும் தூசியை மனத்தினின்றும் துடைப்பதுதானே தவிர, விழுந்துவிட்ட திரையை விலக்குதல்தானே தவிர, புதிதாக எதையோ ஒன்றை நிர்மாணிக்கப் புறப்படுவது அல்ல! வாழ்வின் நோக்கம் என்பதே மாசின் நீக்கம்தான்! எண்ணிப் பார்த்தால் புரியும் விதந்தரு கோடியின்னலுக்கும் வித்திடுவது மனத்திலே உள்ள மாசுதான் என்பது! அறுதியிட்டுச் சொன்னார் வள்ளுவர், குழப்பிக் கொள்ளாதீர்கள் எதையெதையெல்லாமோ பார்த்து அறம் என்று; மனத்தினைத் தூய்மைப் படுத்துவதுதான் அறம்; வேறு பிறவெல்லாம் வெறும் ஆடம்பரம் என்று. மனத்திலே படியும் மாசு எது என்பதிலே மயக்கம் கூடாது என்று கருதி அழகாக — தெளிவாகச் சொல்லி வைத்தார். ''அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும் இழுக்கு'' என்று! சங்கிலித் தொடர் போன்ற இந்த மாசினாலே என்னென்ன தொல்லைகளுள்ளாகித் துடிக்கிறது — தேய்கிறது மானுடம் என்பதை — இந்த மாசெல்லாம் நீங்கப் பெற்றால் எத்தகைய பேரின்பம் பிறக்கும்— எவ்வளவு எளிதிலே கவலையெல்லாம் பறக்கும் என்பதை விளக்கமாக விரிவாக அறத்துப்பால் சொல்கிறது. ஆக தன்னுயிர் தான் அறப் பெறுவதுதான், யான் எனது என்னும் செருக்கு அறப் பெறுவதுதான் அறம்! ''அறம் என்றால் இல்லறமா — துறவறமா? எதைச் சிறப்பிக்கிறது குறள்?'' என்று இடர்ப்படத் தேவையே இல்லை.



''தலைப்பட்டார் தீரத் துறந்தார்.'' சந்தேகமே இல்லை. ஆனால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்னும் குறள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று வலியுறுத்தும் குறள் இல்லற வாழ்க்கை என்னும் அதிகாரத்திலே இடம் பெறுகிறது. எனவே, சேர வேண்டிய இடம் துறவறம், செல்ல வேண்டிய பாதை இல்லறம் என்பது தெளிவாகிறது. தன்னைத் தானே சுற்றிச் சுழன்றால் அஞ்ஞானம் ஒரு நாளும் தீராது — பற்றிய பற்றுப் போகாது. தனக்குத் தனக்கு என வாழ்வது விட்டு, தனிக்கொடி ஒருத்தியின் கரத்தினைத் தொட்டுக் குலவி மகிழ்ந்து குடும்பம் நடத்தினால்தான் கொஞ்சம் கொஞ்சமாகப் பாசம் — விட்டு விலகாது-சற்று விரியும்! பாழாய்ப் போன அந்தப் பற்று என்பது பிறர் மேலும் சென்று படியும்: தன் மேல் வைத்த பாசம் மனைவி மக்களின் மேல் வைப்பதாகப் பெருகும்; வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு வீதி வழியே பாயும். படிப்படியாக வளர்ந்து, இந்தப் பாசம் பார் முழுவதையும் அன்பணைப்புக்குள் அடக்கிக் கொள்ளும். எல்லையற்ற பற்று என்ற துறவு நிலையிலே ஏறி நிற்க உதவும் ஏணி இல்லறம். எந்தப் படியிலே நிற்கும் போதும் எண்ணத்திலிருந்து நீங்காதிருக்க வேண்டியது இது தான். ''மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்.'' அப்படிச் செயற்பட்டால், அறத்துப்பால் காட்டும் வழியிலே விரைந்திட்டால் நிச்சயமாகப் பேத உணர்வு நீங்கும் — பேரின்பம் ஓங்கும். ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிராய் ஒத்துரிமை பூண்டு உவக்க''ப் பெருதவி புரியும் அறத்துப்பால் என்பதில் ஐயமே இல்லை. எவ்வுயிரும் தம்முயிர் என்று ஒத்தது அறிந்தால் உயிர் வாழலாம்; வானகத்து விளையாடலாம். நரகமும் சொர்க்கமும் வெவ்வேறு இடத்திலா இருக்கின்றன? நமக்குள்ளேதான் இருக்கின்றன. எங்கேயோ வெகு தூரத்தில் இருக்கின்ற ஒன்று என்றால் இத்தனை லக்ஷம் மைல்கள் என்று சென்றுவிட்ட பிறகு சொர்க்கம் மனிதனுக்கு உலகத்தைவிடப் பக்கத்தில் உள்ளதாக ஆகிவிடும் என்றல்லவா சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்லவில்லை வள்ளுவர். ஆயிரம் கோடி மைல்களுக்கு அப்பால் உள்ளது வானம் எனச் சொல்லவில்லை அவர். ஒரு குறிப்பிட்ட மன நிலையிலே உலகத்தையும்விட மனிதனுக்கு வானம் பக்கத்தில் வந்துவிடுகிறது என்கிறார். ''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து!'' அனைத்தும் தான்தான் என்னும் ஐயத்தின் நீங்கித் தானே அனைத்தும் எனத் தெளிந்தார்க்கு, எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிராய் ஒத்துத் தெளிந்தார்க்கு — மாசெனும் யாவையும் நீங்கிய மனத்தினர்க்கு வையத்தின் வானம் நணியதுடைத்து என்பதைத் தெளிவாக உறுதியாகக் காட்டுகிறது அறத்துப்பால். தனக்குத்தான் எப்படி நடந்து கொள்வது என்பதைச் சொல்வது அறத்துப்பால். மனத்தோடு கொள்ளும் உறவைச் சொல்வது அறம். மனைவியோடு கொள்ளும் உறவைச் சொல்வது காமம். மற்றவர்களோடு கொள்ளும் உறவினைப் பேசுவது பொருள். ''அறத்தால் வருவதே இன்பம்'' இது அன்பழைப்பு. வேறு திசையில் புறப்பட்டாலோ — ''மற்றெல்லாம் புறத்த; புகழும் இல'' இது அபாய அறிவிப்பு. சரி, வம்பு வேண்டாம் திரும்பிடுவோம், வள்ளுவர் அறநெறி விரும்பிடுவோம். புதுப் புது அரும்பாய் அரும்பிடுவோம், மணம் பொங்கப் பொங்க மலர்ந்திடுவோம்!





KAMALA MOVIES
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன் நடிக்கும்
கமலா மூவிஸ்
அன்பளிப்பு
புவனேஸ்வரி
A.C.திருலோகசந்தர்



எடுத்துச் செல்ல ஒரு புதியமுறை

வெஸ்ட் கோஸ்ட் க்ராப்ட் காகிதம் பலவழிகளில் பயன்படுகிறது. இங்கே நீங்கள் பார்க்கும் அலாதியான பணிக்கும் அதை பயன்படுத்தலாம்! வழக்கமான உபயோகங்கள் பலவும் கூட அதற்கு உண்டு. எம்மாதிரியான பேக்கிங் வேலையையும் எளிதாக்குகிறது அது. ஏனெனில் முரட்டுத்தனமாகக் கையாளும்போது கூடத் தாங்கும்படி, உறுதியாகவும், நீடித்து உழைக்கும்படியும் க்ராப்ட் காகிதத்தைத்தயாரிக்கிறது வெஸ்ட் கோஸ்ட்.

உபயோகியுங்கள் வெஸ்ட் கோஸ்ட் க்ராப்ட்...பல்வகைப் பயனுள்ள காகிதம்

வெஸ்ட் கோஸ்ட் பேப்பர் சினிவால் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1.

வள்ளுவத்துக்கு ஒரு நாடக விளக்கம்



திரு வழித்துணைவன்

"இவர்தான் திரு வழித் துணைவன்" என்று அறிமுகம் செய்து வைத்தார் அருகிலிருந்த நண்பர்.

"பெயர் புதுமையாயிருக்கிறது! போக்குவரத்து இலாகாவில் பணி செய்கிறாரா என்ன?" என்று கேட்டேன் சிரித்தபடியே.

"என் இயற்பெயர் மார்க்கபந்து. மார்க்கம் என்றால் வழி என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா! 'பந்து'வைத் 'துணைவனா'க்கி 'வழித் துணைவன்' என்று ஆக்கினேன்" என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அன்பரே பதில் சொன்னார்.

"இவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர்" என்றார் கூட வந்த நண்பர்.

"சரித்திர நாடக ஆசிரியரா? சமூக நாடக ஆசிரியரா?" என்று நான் இடைவெட்டினேன்.

"வரலாற்று நாடகம். திருவள்ளுவர் வாழ்க்கை வரலாற்றையே மேடைக்கேற்ப நாடகமாக மாற்றியிருக்கிறேன். புத்தகமாகக்கூட வெளியிட்டிருக்கிறேன்."

அன்பர் வழித்துணைவனின் பதிலில் அடக்கமும் பெருமிதமும் இணைந்து நின்றன.

பள்ளி நாட்களிலேயே இவருக்குக் குறளில் ஈடுபாடு. அது, பள்ளியிலிருந்து வெளியேறித் தந்தி இலாக்கா பொறியியல் பகுதியில் உத்தியோகத்தில் சேர்ந்த பிறகும் தொடர்ந்தது.

வழித்துணைவன் திருவள்ளுவரைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார்.

உத்தியோகத்தில் முன்னேறுவதற்கான பரீட்சைகள் எழுத ஆறு மாதம் லீவு போட்டிருந்த நேரம். உத்தியோக சம்பந்தமான புத்தகங்களையெல்லாம் ஒதுக்கிக் கட்டி வைத்து விட்டு, லீவு நாட்களை அதிகப்படுத்தித் திருவள்ளுவர் வரலாற்று ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டு முந்திய வரலாற்று ஆசிரியர்கள் வகுத்திருந்த பாதையிலிருந்து பிறழாது 'திருவள்ளுவர்' என்ற மேடை நாடகத்தை எழுதி முடித்தார்.

சென்ற ஆண்டு சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டு நேரத்தில் இந்த நாடக நூலை வெளிக்கொண்டு வர இவர் தீவிரமாக முயன்றார். ஆனால் எந்தப் பிரசுரகர்த்தரும் இவர் உழைப்பையும் உற்சாகத்தையும் புரிந்துகொள்ள முன்வரவில்லை. அதனால் இவர் மனம் தளர்ந்து எடுத்த முயற்சியைக் கைவிட்டுவிடவில்லை. எப்படியோ, சொந்தத்தில் பணம் புரட்டி, புத்தகத்தை அச்சடித்துப் பாரி நிலையத்தாருக்கு விற்பனை உரிமையைக் கொடுத்துப் புத்தகத்தைக் குறித்த காலத்தில் கொண்டு வந்து விட்டார். எவரெஸ்டின் உச்சிக்கு ஏறின மகிழ்ச்சி!

தம் சிருஷ்டியின் பிரதி ஒன்றை அன்புக் காணிக்கையாக முதலமைச்சர் அண்ணாதுரையைச் சந்தித்துச் சமர்ப்பித்தார். முதலமைச்சர், இந்த முயற்சியைப் பாராட்டியதோடு, இந்தப் புத்தகத் தயாரிப்பு சம்பந்தமான பல சிறிய விஷயங்களைக்கூட, ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்து கொண்டாராம். இவரது "திருவள்ளுவர்" இன்னும் அரங்கில் ஏறவில்லை.

ஆனால் வானொலி மூலம் இவருக்கு இந்த மன நிறைவு கிடைத்திருக்கிறது. வானொலி நாடகத்தில் வள்ளுவர் பாத்திரம் ஏற்ற திரு சுந்தரமூர்த்தி இவர் கற்பனை செய்தவாறே குரல் கொடுத்தாராம்.

வள்ளுவரின் வாழ்க்கை வரலாறு என்று ஆதாரபூர்வமாக அதிகமாக ஏதும் இல்லாத நிலையில் குறள்பாக்களுக்கு ஏற்ப நாடக நிகழ்ச்சிகளை அமைத்திருக்கிறார் வழித்துணைவன். வள்ளுவரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்த முதல் நாடக நூல் என்ற முறையிலும் குறள்பாக்களுக்கு விளக்கமாக அமைந்த நாடகம் என்ற அளவிலும் இந்நூல் கவனத்துக்குரியது.

— ஜி. எஸ். என்.

திருவள்ளுவர் - தமிழ் வரலாற்று நாடகம்; கிடைக்குமிடம்: பாரி நிலையம், பிராட்வே சென்னை—1; விலை: 4-00.

மரகதத்தைத் தெரியுமா?

உங்களுக்குத் தெரிந்தவர்களில் யாருக்காவது 'மரகதம்' என்று பெயர் இருந்தால் இனி மரகதம் என்று அழைக்காமல் 'ஒன்று' என்று கூறி அழைக்கலாம். காரணம்:



அறுவடை செய்து களத்தில் சேகரித்த நெல் முதலிய தானியங்களை அளக்கும்போது 'ஒன்று' என்று சொல்லி அளக்காமல் 'லாபம்' 'ஆதாயம்' என்று சொல்லி அளப்பது தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் வழக்கமாக இருந்து வருகிறது.

ஆனால் நெல்லை மாவட்டத்தில் மட்டும் அந்தந்த ஊரில் உள்ள கோவிலில் உறையும் இறைவனின் பெயரைச் சொல்லி அளக்கின்றனர். நெல்லை மாவட்டம் வீரவநல்லூரில் 'மரகதம்' என்று அளக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் அறுவடைக் காலத்தில் 'லாபம்' என்று அளக்கிறார்கள்.

கருத்தில் போட்டவர்: பிரேமா - கேட்டு எழுதியவர்: அப்பு



உங்கள் கவனத்தைக்
கோருகிறோம்...
இன்று நீங்கள்
ஃபெர்ரோடால்
சாப்பிட்டுவிட்டீர்களா?
FERRADOL
STANDARDIZED
PARKE, DAVIS
தயாரிப்பு
குடும்பம் முழுவதும் நலமுடன் விளங்கவே

இசையில் குறள்

குறளுக்கு இசை வடிவம் தர வேண்டும் என்ற எண்ணம் சுமார் இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஓர் அறிஞர் உள்ளத்திலே எழுந்தது. 'இசை மாத்திரம் அறிந்தவர்க்குத் தெளிவான பொருள் விளக்கங்களுடன் குறள்கள் நன்கு மனப்பாடம் ஆகும். குறள் மாத்திரம் அறிந்தவர்க்கோ இனிய புதிய இசைகளின் இன்பம் கிடைக்கும் என்பது அவரது நோக்கம்.

அவர் வடமொழி நன்கு பயின்றவர். ஆங்கிலம் கற்றவர். செந்தமிழில் அற்புதமான பக்திரசக் கீர்த்தனைகளை இயற்றி முருகனுக்குப் பாமாலை சூட்டியவர். முறைப்படி இசைக் கலையைச் சங்கீத வித்வான் நாமக்கல் நரசிம்மய்யங்காரிடம் பயின்றவர்.

ஆனாலும் அவர் அவசரப்பட்டுக் குறள் வரிகளை ஸ்வரப்படுத்த ஆரம்பித்துவிடவில்லை. பரிமேலழகர் உரையையும் தமிழ்ப் பண்டிதர் ஒருவர் உதவியையும் நாடினார். முதலில் தாமே குறட் பொருள்களை நன்கு உணர்ந்து புரிந்து கொண்டார். பிறகு அந்தப் பொருள்களின் சுவைக்கேற்ப ராகங்களைப் பொறுக்கி இணைத்துப் பாடிப் பாடிப் பார்த்து, மன நிறைவு அடைந்து பிறகு ஸ்வரப்படுத்தினார். விளைவு, கருத்தும், ஒலியும் கச்சிதமாய்க் கலந்து நின்றன.

இவ்விதம் இசையில் குறளைப் புகுத்தி இணையற்ற வெற்றி கண்டவர் மாயூரம் டி. ஆர். விசுவநாத சாஸ்திரிகள்தான்.

கம்பன் பிறந்த தேரழுந்தூரில் 1893ல் பிறந்தவர் விசுவநாத சாஸ்திரி அவர்கள். அதனால்தானோ இவரிடமும் கவிதா வேகம் வளர்ந்தது! சொந்தமாக, எளிய முறையில் இனிய ராகங்களில் பக்திரசக் கீர்த்தனைகள் இயற்றத் தொடங்கினார்.

காந்தமாம் கதிர்காமம் தன்னில் – ஓர்
வேதாந்தமாம்

என்று ஆரம்பித்து ஓர் இனிய கீர்த்தனையை உருவாக்கினார். அந்தக் கீர்த்தனை, இசை உபாசகர்கள் பலரின் கச்சேரிகளில் இடம் பெற்றது. இதை ஒட்டி, இவருக்குக் 'காந்தம்' விசுவநாத சாஸ்திரி என்ற பெயரும் கிடைத்தது.

பல ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தடவை சென்னை மியூஸிக் அகாடெமியார், ஒவ்வொரு மொழியிலும், அரசியல் கலப்பில்லாத சிறந்த தேசிய கீதத்தைப் புனைந்து தருபவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதாக அறிவித்தார்கள். 'பாரத ஜய கீதம்' என்ற தலைப்பில் விசுவநாத சாஸ்திரி ஒரு பாட்டை எழுதி அனுப்பினார். அந்த ஒரு பாட்டுத்தான் பரிசு பெற்றது. விசுவநாத சாஸ்திரி அப் பாட்டை சம்ஸ்கிருதத்தில் உருவாக்கியிருந்தார். ''ஜயதி ஜயதி பாரத மாதா'' என்று தொடங்கும் அப்பாடல் இன்னும் பலருக்கு நினைவிருக்கும்.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற முதல் குறளடியைப் பல்லவி செளகியத்துக்காக, 'பகவன் முதற்றே–உலகு –ஆதி' என்று இரண்டாவது அடியிலிருந்து ஆரம்பித்தார். முதலில் இந்த அடிக்குப் பூர்வி கல்யாணி ராகத்தைத் தேர்ந்தெடுத்தார். பிறகு அவருக்கே என்ன தோன்றியதோ, ஹம்சத்வனி ராகத்தில் அமைத்து விட்டார். மற்ற கீர்த்தனைகளில் குறளின் பொருளினிமை பாதிக்கப்படாமல் இருக்க, – தயாரஞ்சனி, தர்மவர்த்தினி, வருணப்பிரியா, அமிருத வருஷிணி போன்ற பல ராகங்களைப் பிரயோகித்திருக்கிறார்.

பொருட் சுவைக்கேற்ப, வெவ்வேறு குறளடிகளை ஒரே கீர்த்தனத்தில், பல்லவி, அனுபல்லவி, சரணம் வகைக்காக இணைத்தார். இதன்படி ஒரு கீர்த்தனைக்கு ஐந்தாறு குறளடிகள் பயன்பட்டன. திருக்குறள் முழுவதையும் இந்த வகையில் 289 கீர்த்தனைகளாக அமைத்தார். இந்த 289 கீர்த்தனைகளையும், ஸ்வரப்படுத்தி ஏழு பகுதிகளாகப் பிரித்து முதல் பகுதியைச் சொந்தச் செலவிலேயே வெளியிட்டார். இதில் நாற்பத்தி ஒன்று அறத்துப்பால் கீர்த்தனைகள் அடங்கியிருக்கின்றன.

இந்தக் கீர்த்தனைகளை, வானொலி மூலம், திரு எஸ். ராஜம், திரு தண்டபாணி தேசிகர் முதலியவர்கள் பாடிப் பரப்பினார்கள்.


விசுவநாத சாஸ்திரி, 1958ல் காலமாகி விட்டார். அவருடைய திருக்குறள் மதுர கீர்த்தனை முதல் பகுதிதான் அப்போது வெளிவந்திருந்தது. அரசாங்கம் அவருடைய முயற்சியைப் பாராட்டி ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக அறிவித்தது. ஆனால் அந்த ரூபாய் அவர் காலமான பிறகுதான் வழங்கப்பட்டது.

அச்சாக வேண்டிய மீதி ஆறு பகுதிகளும் தயாராக இப்போது விசுவநாத சாஸ்திரியின் இளைய சகோதரர் வைத்தீசுவரனிடம் இருக்கின்றன. தகுந்த ஆதரவு கிடைத்தால், மீதியுள்ள ஆறு பகுதிகளையும் அச்சிட்டு வெளிக் கொண்டு வரலாம் என்கிறார் திரு வைத்தீசுவரன்.

— பட்டினத்தார்

திரு விசுவநாத சாஸ்திரி





யாருக்கு யார் துணை

ர.சு.நல்லபெருமாள்

சுலோசன முதலியார் பாலத்துப் பக்கம் வந்ததும் சிவராம பிள்ளை திரும்பிப் பார்த்தார். தம்மை யாராவது தொடர்ந்து வருகிறார்களா என்று பார்த்தார். அப்படி வர வேண்டும் என்னும் சபலம்தான் திரும்பிப் பார்க்க வைத்தது. இனி, அவரைத் தொடர்ந்து யார் வரப் போகிறார்கள்? நேற்று வரை தினமும் ஆபீஸ் முடிந்ததும் கூட வரும் கப்புசாமிகூட இன்று நின்றுவிட்டாரே!

சிவராம பிள்ளை ஒரு பெருமூச்சு விட்டார். மூக்கு நுனியில் நழுவியிருந்த கண்ணாடியை உயர்த்தி விட்டுக் கொண்டு மீண்டும் சற்றுத் தூரத்தில் பார்வையைச் செலுத்தினார். ஆர்ச் வரைக்கும் அவருக்குத் தெரிந்தவர்கள் யாரும் இல்லை. அவ்வளவு தூரம் வரையில் வந்தார்களே, அதுவே பெரிதுதான்.

முப்பதாண்டுகள் தாலுகா ஆபீஸில் குமாஸ்தாவாக உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த கடனுக்காக அன்று அவருக்குப் பிரிவுபசாரக் கூட்டம் கூட நடத்தினார்களே! இதைவிடத்தான் சிவராம பிள்ளை என்ன எதிர்பார்க்க முடியும்? ஆச்சு. வருஷம் முப்பது ஓடி விட்டது. இன்று அவர் ரிடையர் ஆகிவிட்டார். ஒரு சிறு கூட்டமும் கூட்டி, தேநீரும் கொடுத்து அவரைச் சக ஊழியர்கள் வழியனுப்பிவைத்துவிட்டார்கள். மரியாதைக்கு ஆர்ச் வரைக்கும் கூடவே வந்து வழியனுப்பியாகி விட்டது. இன்னும் கூடத் துணைக்கு வரமுடியுமா?

கையில் தொங்கிய மாலை கனத்தது. மறு கையில் மாற்றிக் கொண்டார். பரவாயில்லை. கனத்த ரோஜாப்பூ மாலையாகத்தான் போட்டிருக்கிறார்கள். முப்பது ஆண்டு உழைப்புக்குக் கடைசியில் மாலை இந்தக் கனமாவது இருக்க வேண்டாமா?...

பாலத்தின் பக்கத்தில் வந்தவருக்கு மேலே நடக்க மனமில்லை. அங்கேயே நின்றார். சீக்கிரமாக வீட்டுக்குப் போய் என்ன செய்துவிடப் போகிறார்? நாளைமுதல் விடுமுறைதான். விடுமுறை என்ன, இனி எந்நாளும் நிரந்தர விடுதலைதான்.

முப்பது வருஷங்களுக்கு முன்னால் இதே பாலத்தைக் கடந்துதான் முதன் முதலில் தாலுகா ஆபீசுக்கு வேலைக்குப் போனார். அப்போது பாலம் இவ்வளவு பெரிதாக இல்லை. தேர்தலை யொட்டி அவசரம் அவசரமாக அப்போதிருந்தவர்கள் பாலத்தைப் பெரிதாக்கினார்கள். என்ன அவசரமோ, பாலம் கட்டி முடிவதற்குள்ளேயே மந்திரியைக் கூப்பிட்டுப் பாலத்தைத் திறந்து விட்டார்கள். பாலத்தைக் காட்டி ஓட்டு வாங்கி விடலாம் என்ற ஆசைதான்.

பாலத்தின் ஒரு முனையில் நின்றவாறு சுற்றும் முற்றும் பார்த்தார் சிவராம பிள்ளை. பிறகு, மெதுவாகப் பாலத்தின் மீது நடக்கத் தொடங்கினார்.

நடையில் தளர்ச்சி எப்படித் தோன்றியது? நேற்று வரை இல்லாத ஆயாசம் இன்று எப்படி வந்தது? பாலத்தின் கைப்பிடிச் சுவரை ஒட்டியே நடந்தார். நாலு முழ வேஷ்டி காற்றில் படபடத்தது. மேலே போட்டிருந்த கோட்டு, தோள்பட்டைப் பக்கத்தில் தையலில் கிழிந்து சிரித்தது. கோட்டு நிறம் மாறி, வெளிறி, சாம்பல் நிறத்திலிருந்தது. சில இடங்களில் அது ஓர் உயர்ந்த துணி என்பதற்குத் திட்டுத் திட்டாக அடையாளம் இருந்தன. அந்தக் கோட்டு முப்பது வருஷங்களுக்கு முந்திய மாடல். ஒன்றிரண்டு பித்தான்கள் கழன்று பரிதாபமாகத் தொங்கிக்கொண்டிருந்தன. காலர் பக்கத்தில் நைந்து உள்ளே இருந்த வெள்ளைத் துணி வெளியே தெரிந்தது. வலப்பக்கத்து கோட்டுப் பைக்குள் கையை விட்டு ஓர் அழுக்குத் துணியை — அது அவருடைய கைக்குட்டை— எடுத்து மூக்கை அதில் சிந்திவிட்டு அதனாலேயே முகத்தில் அரும்பியிருந்த வியர்வை

யையும் துடைத்து விட்டு, கோட்டுப் பைக்குள்ளேயே அதை அழுத்திப் பத்திரப் படுத்தினார்.

பாலத்தில் பாதித் தூரம் வந்ததும் வலப் பக்கம் திரும்பிப் பார்த்தார். கைகள் தாமாகக் கூப்பிக் கொண்டன. அது முப்பது ஆண்டுப் பழக்கத்தினால் ஏற்பட்ட செய்கை. பாலத்தின் நடுவில் நின்று பார்த்தால், தாமிரபரணி ஆற்றுக்கு நடுவில் அமைந்திருக்கும் குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமி கோயில் தூரத்தில் தெரியும். பாலத்தைக் கடந்து போகும்போதும் வரும் போதும் கும்பிட்டுக் கும்பிட்டுப் பழக்கமாகிவிட்ட கைகள். அப்போதும் அவர் அறியாமலேயே தம் வேலையைச் செய்து கொண்டன. ஆனால் அவரோ கும்பிட்ட உணர்வே இல்லாமல் மேலும் நடந்து கொண்டிருந்தார்.

இன்று ஏனோ மூச்சு வாங்கியது. உள்ளத்திலிருந்த பாரம் அவரை அழுத்தியது. சோர்ந்து போய்த் தள்ளாடியபடியே நடந்து போய்க் கொண்டிருந்தார். ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் பல ஆண்டுகள் இருந்தவன் வெளியே வந்ததும் செய்வதறியாது திகைப்பதைப் போலத்தான் சிவராம பிள்ளையும் திகைத்தார்.

இனி என்ன செய்வது? பேசக்கூடத் துணைக்கு யாருமில்லை !

நேற்றுவரை தாலுகா ஆபீஸ் வேலை இருந்தது. நாளைக்கு...?

கொக்கிரகுளத்து ரோடும் பாலமும் சந்திக்கும் இடத்தில் வந்து நின்றார். நன்றாக இருட்டி விட்டது. அவரை நோக்கி ஒரு நாய் வேகமாக ஓடி வந்தது. பக்கத்தில் வந்ததும் வாலை ஆட்டிக் கொண்டு அவர் மீது விழுந்தது.

''அட, நீ ஏண்டா இங்கே வந்தே?'' என்று வியப்புடன் கேட்டுக் கொண்டே அதைத் தடவிக் கொடுத்தார். அது வாஞ்சையோடு அவருடைய காலை நக்கிக் கொண்டிருந்தது.

ஒரு மாதமாக அந்த நாய் அவரை ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு நாள் அவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவர் சாப்பிடுவதையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றது. அதற்கும் கொஞ்சம் சாப்பாடு போட்டார். பிறகு தினமும் வர ஆரம்பித்தது. கடைசியில் எங்கும் போகாமல் அவருடன் தங்கிவிட்டது. அதை அவர் விரட்டவும் இல்லை.



ஒருவருக்கு ஒருவர் துணை. சிவராம பிள்ளை, அவர் குடியிருக்கும் வீடு, அவருடைய தினசரி வாழ்க்கை எல்லாவற்றோடும் அதுவும் ஒட்டிக் கொண்டது. தினமும் சிவராம பிள்ளை மாலையில் வீடு திரும்பியதும் அவருடைய பொழுதுபோக்கெல்லாம் அந்த நாயோடு தான். அவருடைய வரவுக்காக இரவில் வீட்டு நடையிலேயே ஆவலோடு காத்திருக்கும். இன்று எப்படியோ அவரைத் தேடிக் கொண்டு ஓடி வந்திருக்கிறது.

கொஞ்ச நேரம் கொக்கிரகுளம் பாலத்து விளிம்பில் நின்று யோசித்தார் பிள்ளை.

இப்போதே வீட்டுக்குப் போவானேன்? எப்போதும் மாலையில் வீடு திரும்பும்போது மூக்காண்டி ஐயர் கடைப் பாதாம் அல்வாப் பொட்டலத்தை வாங்கிக்கொண்டு கொக்கிரகுளம் ஆற்றங்கரை மணலில் உட்கார்ந்து தான் ரசித்துச் சாப்பிடுவார். பிறகு அங்கேயே துண்டை விரித்துப் படுத்தால் இரவு மணி எட்டோ ஒன்பதோ ஆகிவிடும் எழுந்திருக்க. எப்படியும் டவுன் நகரசபை சங்கு ஒன்பது மணிக்கு ஊதும். அது ஊதி விட்டால், சிவராம பிள்ளை மணலை விட்டுஎழுந்து விடுவார். சில சமயங்களில் அவரோடு வேலை பார்க்கும் சுப்புசாமியும் கூடவருவார். அவர் எட்டு மணிக்கு மேல் இருக்க மாட்டார். வீட்டில் அவருக்குப் பொறுப்பு இருக்கிறது. ஒரு மனைவி உண்டு. ஏழெட்டுக் குழந்தைகள் உண்டு. ஆனால் சிவராம பிள்ளைக்கு அந்தச் சங்கடங்களெல்லாம் இல்லை.

பையன்கள் இரண்டு பேர் உண்டு. இருவரும் இன்ஜினீயர்களாக ஒருவன் மதுரை

லும் ஒருவன் சென்னையிலும் இருக்கிறார்கள். தலைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்குகிறார்கள். சிவராம பிள்ளைக்குப் பொறுப்பு ஏதுமில்லை. இரண்டு பையன்களையும் ஆளாக்கி விட்ட பிறகு, அவருக்கு எந்தக் கவலையும் இல்லை. கொக்கிரகுளத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன் பிடித்த அதே வாடகை வீட்டில்தான் இருக்கிறார். வீடு அப்படியேதான் இருக்கிறது. ஆனால் வாடகை மட்டும் ஐந்து ரூபாயிலிருந்து இருபது ரூபாய்க்குத் தாவிவிட்டது. இப்போது அந்த வீட்டை நோக்கித்தான் கால்கள் அவரை இழுத்துச் சென்றன. ஆனால் பாலத்தின் முடிவில் வந்து மேலே நகராமல் நின்றுவிட்டன.

வீட்டில் அவருக்காகக் காத்திருக்கும் ஜீவனும் இப்போது அவரைத் தேடி இங்கேயே வந்துவிட்டது. வீட்டுக்கு என்ன அவசரம்?

பிள்ளையார்கோயில் படி வழியாக ஆற்றுக்குள் இறங்கி, வழக்கமாக உட்காரும் மணலில் போய் உட்கார்ந்து கொண்டார். வருஷக்கணக்காக உட்காரும் இடம்தான் அது. அந்த இடத்தில் அமர்ந்து கொண்டு தான் முப்பது வருஷத்திய கனவுகளையும் தினம் தினம் கண்டார். இன்றும் அங்கேயே போய் உட்கார்ந்து கொண்டார். பூமாலையை எங்கே வைப்பது? மணலில் போட்டால் மாலையெல்லாம் மணலாகி விடும். கோட்டைக் கழற்றி மணலில் விரித்து, அதன் மீது மாலையை வைத்தார். பிறகு இடுப்பில் சுற்றியிருந்த துண்டை எடுத்து மணலில் விரித்துப் படுத்தார். நாய், அவரை இரண்டு மூன்று முறை சுற்றி வந்தது. பிறகு அவருடைய கால்மாட்டில் மணலில் குழியைப் பறித்து அதில் படுத்துக் கொண்டது.

கண்ணெதிரே உயரே நட்சத்திரங்கள் எப்போதும்போல் மின்னின. எந்த மாற்றமும் இல்லை. ஆனால் இன்று என்ன இப்படி ஆகிவிட்டார்? ஒரேநாளில் உடல் தளர்ந்துவிடுமா?

மல்லாந்து படுத்தவர் முட்டை மடக்கிக் கால் மேல் கால் போட்டுக் கொண்டார். சற்றுத் தூரத்தில் இன்னும் சிலர் உட்கார்ந்திருந்தார்கள். ஓர் ஓரத்தில் நாலைந்துபேர்கள் அரசியலைப் பற்றித் தர்க்கித்துக் கூச்சல்போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒன்றிலும் சிவராம பிள்ளையின் மனம் செல்லவில்லை.

திடீரென்று அநாதையாகித் தெருவில் நின்று தவிப்பதைப் போன்ற உணர்வு அழுத்திக் கொண்டிருந்தது. ரிடையராயாச்சு. வேலை முடிந்து விட்டது. முப்பது வருஷத்துப் பழக்கம் அன்றோடு முடிந்துவிட்டது. சூனியம் சூழ்ந்து விட்டதா?

பஞ்சப்படியெல்லாம் சேர்த்து இருநூறு ரூபாய் கிடைத்துக் கொண்டிருந்தது. இனி ஏதோ பிச்சைக் காசு மாதிரி ஐம்பதோ அறுபதோ கிடைக்கும். பையன்கள் தலைக்கு ஆயிரத்துக்கும் மேல் சம்பாதிக்கிறார்கள். கார் போட்டு அனுபவிக்கிறார்கள். ஆனால் இவருக்கு என்ன அதைப் பற்றி?

கல்யாணி இருந்தால் இப்படி அநாதை போல் நினைக்க வேண்டியிருக்குமா? சிவராம பிள்ளைக்கு இப்படி ஆயாசம் தட்டியிருக்குமா? அவளுடைய நச்சரிப்புத் தாங்காமல் ராமேசுவரம் வரைக்கும் அவளோடு துணைக்குப் போனாரே, இந்த இரண்டு பையன்களையும் பெற்று எடுக்க!

நாய் திடீரென்று எழுந்து நின்றுகொண்டு தொண்டை கிழியக் குரைத்தது. சிவராம பிள்ளை படுத்தவாறே தலையைத் திருப்பிப் பார்த்தார். பக்கத்தில் யாரோ வந்து கொண்டிருந்தார். வந்தவர், நாய் குரைப்பதைக் கண்டு ஒதுங்கி நின்றார்.

''சீ, கம்மா இரு கழுதை!'' என்று அதட்டினார் சிவராம பிள்ளை. நாய் தன்னுடைய கடமை முடிந்து விட்டது என்று எண்ணி மீண்டும் மணலில் படுத்துக் கொண்டது.

''யாரு...? சிவராம பிள்ளையா?'' என்று கேட்டார் வந்தவர். இருட்டில் சிவராம பிள்ளைக்கு அடையாளம் தெரியவில்லை. எழுந்து உட்கார்ந்து கொண்டார். பக்கத்தில் நின்றவர் கீழே உட்கார்ந்தார்.

''ஓ.... சாஸ்திரிகளா?'' என்றார் சிவராம பிள்ளை.

''என்ன? ரோஜாப்பூ மாலையெல்லாம்?'' என்று சாஸ்திரி கேட்டார்.

''இன்னிக்கு ரிடையராகி விட்டேன். தெரியாதா?...'' என்றார் சிவராம பிள்ளை. அவர் குரலில் தொனித்தது மகிழ்ச்சியா, அல்லது விரக்தியா என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''அதுக்குள்ளேயா?'' என்றார் சாஸ்திரி, ஏதோ காலக் கணக்கில் தப்புப் போட்டு விட்டவர் மாதிரி.

''ஆச்சே! வருஷம் முப்பதாச்சே!'' என்றார் பிள்ளை.

''நேத்து வந்த மாதிரி இருக்கு. முப்பது வருஷங்கள் தாண்டிட்டுதே!'' என்றார், சாஸ்திரி. கால ஓட்டத்தை மனத்தால் அளந்து கொண்டிருந்தார்.

''போதாதா சாஸ்திரிகளே? முப்பது வருஷங்கள் உழைச்சாச்சு. இனிமேலாவது ஓய்வு வேண்டாமா? வேலை பார்த்துப் பார்த்து என்னத்தைக் கண்டோம்? விடுதலை வேண்டாமோ?'' என்றார் பிள்ளை. மனம் தன்னையே ஏமாற்றிக் கொண்டு அவரை அப்படிப் பேச வைத்து விட்டது. அப்படிப் பேசியாவது தெம்பூட்டலாமே என்று நினைத்தாரோ என்னவோ!

''உமக்கென்ன ஓய், இரண்டு பையன்கள். இரண்டு பேரும் இன்ஜினீயராக இருக்காங்க. ஒவ்வொருத்தரோடும் கொஞ்ச கொஞ்ச நாள் இருந்து காலத்தை ஓட்டிப்பிடலாம்.... எதுக்கும் கொடுத்து வைக்கணும் ஓய்!'' என்று தம் பொறாமையை வார்த்தைகளில் பொறிந்து விட்டு எழுந்தார், சாஸ்திரி.

''எங்கே எழுந்துவிட்டீர்?''

''கொஞ்சம் வேலை இருக்கு. நாளைக்குச் சந்திக்கலாம்'' என்று கூறிவிட்டுச் சென்றார், சாஸ்திரி. நாய், தலையைத் தூக்கிப் பார்த்தது. சாஸ்திரியின் உருவம் மறைந்ததும் மீண்டும் மணலில் சுருண்டு படுத்துக்கொண்டு கண்களை மூடிக் கொண்டது.

சிவராம பிள்ளை மீண்டும் மணலில் படுத்தார். ''எதுக்கும் கொடுத்து வைக்கணும் ஓய்...'' — சாஸ்திரி சொன்னது காதில் இரைந்துகொண்டிருந்தது. எத்தனைபேருக்குச் சிவராம பிள்ளைமீது பொறாமை! ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தா இரண்டு பையன்களையும் வளர்த்து இன்ஜினீயராக்கி, பெரிய உத்தியோகத்திலும் இருத்திவிட்டாரே!''

நாலைந்து வருஷங்களுக்கு முன்னால் பொங்கலுக்கு அவருடைய இரண்டு மகன்களும் வந்திருந்தபோது எத்தனை கண்கள் பொறுமையைக் கொட்டித் தீர்த்தன. இரண்டு பேரும் ஆளுக்கொரு காரில் குடும்பத்தோடு வந்து ஒரு வாரம் இருந்துவிட்டுப் போன நினைவு சிவராம பிள்ளையின் மனத்தில் படர்ந்தது.

அடேயப்பா! சின்னவனுடைய பெண்டாட்டியின் அலங்காரமும் பேச்சும்....! இருக்காதா? பணக்கார வீட்டுப் பெண். நம் தகுதிக்கு மீறிய குடும்பம் அது. சின்னவன் படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் அவள் வந்தாள். இந்தச் சிவராம பிள்ளையின் அந்தஸ்தை எண்ணியா வந்தாள். இருக்கத்தானே செய்யும்? பணத் திமிரும், அகம்பாவமும். ஆனால் என்னை மாமனார் என்று நினைக்கக் கூட அவளுக்கு எரிச்சலாக இருந்திருக்க வேண்டாம். அவனுடைய பிள்ளை என்னுடைய சட்டையைத் தொட்டு விட்டதாம். அடேயப்பா, அவள் வந்த வரத்து! ஏதோ தீண்டத் தகாத பொருளை எடுப்பது போலல்லவா இடது கைவிரலால் சட்டையைத் தூக்கி எறிந்தாள். தாலுகா ஆபீஸ் குமாஸ்தாவின் சட்டை. அது கசங்கிப்போய், வெளிறிப் போய்த்தானே இருக்கும். ஆனால் இவள் புருஷன் இந்தக் குமாஸ்தா பெற்ற பயல்தானே?...

நதியின் சலசலப்புக் கேட்டுக் கொண்டிருந்தது. நகரசபைச் சங்கு ஊதியது. மணி ஒன்பது.

'எழுந்திருப்போமா? எழுந்து போய் என்ன செய்யப் போகிறாய்? சாயங்காலம் டீ பார்ட்டியிலே சாப்பிட்ட வடை இன்னும் ஜீரணமாகவில்லை....'

படுத்தவாறே கண்களை மூடிக் கொண்டார், சிவராமபிள்ளை. எதையோ நினைத்துக் கொண்டிருந்தோமே... ஆ... அந்தக் கர்வக்காரி, இளையவன் பெண்டாட்டி... அவளைச் சொல்லவும் குற்றமில்லை. நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டும். என்ன இருந்தாலும், நான் ஒரு தாலுகா ஆபீஸ் குமாஸ்தா தானே? எனக்குக் கோபம் வரக் கூடாது. கல்யாணி இருந்தால் இதுகளெல்லாம் என்னை இப்படி அலட்சியப்படுத்துமா....?

அது அது வளர்ந்து அது அதற்குக் குடும்பம் வந்து விட்டது. வாழ்க்கை வசதியும், பழக்க வழக்கமும் எப்படியோ அதை நாடிப் போகிறார்கள். போகட்டும், போகட்டும். இந்தப் பயல்களை நம்பியா இருக்கிறேன். யாருக்கு யார் துணை? ஒரு பயலுடைய துணையும் வேண்டாம். கடவுள் இருக்கிறார்.....

சின்னவன் சொன்னானே, இப்போதுகூட அதை நினைத்தால் நெஞ்சு வலிக்கிறதே. நான் கேட்டேனா? என்னைக் காப்பாத்துடா என்று அவனிடம் போய்க் கெஞ்சினேனா? இந்தச் சிவராம பிள்ளையை ஊருக்குள் போய்க் கேட்டாலல்லவா தெரியும். பியூன் முதற் கொண்டு பெரிய அதிகாரி வரை பொறுக்கித் தின்கிற போது, நான் ஒரு பயலிடம் கைநீட்டிக் காசு வாங்கியிருப்பேனா? நேர்மையும், மானமும்தான் மனிதனுக்கு முக்கியம். இதுவரை அப்படியே வாழ்ந்தாகிவிட்டது....



''எங்கம்மாவை நான் ஊரிலிருந்து வரவழைச்சது உங்களுக்குப் பிடிக்கவில்லே. இல்லையா?''

''ஆமாம்''

''அப்படியானா அவளை இன்னிக்கே ஊருக்கு அனுப்பிடறேன். ஆபீஸிலிருந்து திரும்பி வரும்போது அவளுக்கு ஒரு ரிடர்ன் டிக்கெட் வாங்கிட்டு வாங்க!''

ஆச்சு, முப்பது வருஷங்களை ஒரு கெட்ட பெயர் இல்லாமல் ஓட்டி விட்டேன். இனியும் எப்படியும் ஓட்டி விடுவேன். இந்தப் பயல்கள் வீட்டில் போய்ப் பிச்சை எடுப்பேனா? அப்படித்தானே சொன்னான் சின்னவன்...

அன்று இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, மொட்டை மாடியில் இருந்த போது, சின்னவன் வந்து என்ன சொன்னான்.... ''அப்பா, உங்களுக்கு இந்த ஊர்தான் புடிச்சுப் போச்சு. இதை விட்டு நீங்க எங்கேயும் வரமாட்டீங்க. நீங்க ரிடையரானதும் அதிகமாக வெளியே சுற்றாமல் ஊரோடேயே இருங்கள். நான் மாதம் ஐம்பது ரூபாய் அனுப்பிவிடுகிறேன். அண்ணனும் அவன் பங்குக்கு அனுப்புவான். நிம்மதியா இருங்கள்....''

எப்படி இருக்கிறது பேச்சு? சின்னப் பயல், எனக்குப்பிச்சையா போடுகிறான்? நான் கேட்டேனா? இவன் பேச்சுக்கு அர்த்தம்என்ன?

'அப்பா நீங்கள் ரிடையரானதும் புறப்பட்டு நான் இருக்கும் இடத்துக்கு வந்து விடாதீர்கள். அது சரிப் படாது. என்னைப் பெற்ற கடனுக்கு உங்களுக்கு மாதம் ஐம்பது ரூபாய் அழுதுவிடுகிறேன். காணாதென்றால், மீதியைப் பெரியவன் கொடுப்பான்—'

இப்படித்தானே அர்த்தம்....?

அண்ணனும் அவன் பங்குக்கு அனுப்புவானாம். இதென்ன பாகப் பிரிவினையா? அப்பனிடம் செலுத்த வேண்டிய கடமையையும் பாகம் பிரித்துத்தான் செய்ய வேண்டுமா? டேய், டேய், நான் அவ்வளவு மானம் கெட்டவனுடா, உங்கிட்டே வந்து பணம் பெற....?

பெரியவன் பரவாயில்லை, கொஞ்சம் ஆசாபாசம் உள்ளவன். பாவம், பெண



மாஜிஸ்டிரேட்: பிச்சை எடுப்பது குற்றம். ஐந்து ரூபாய் உனக்கு அபராதம்.

பிச்சைக்காரன்: இரண்டு ரூபாய்தான் இருக்குங்க.

மாஜிஸ்டிரேட்: அதெல்லாம் எனக்குத் தெரியாது. எங்கேயாவது போய்ப் பிச்சை எடுத்து வந்தாவது அபராதத்தைக் கட்டு!

டாட்டி ஒரு முறை முறைத்தால் அடங்கி விடுவான். போகும் போது அவனுடைய மனம் திறந்து கொண்டது —

"அப்பா, இங்கேயே இந்த ஊரிலேயே முடங்கியிருக்கிங்களே, ஒரு மாசம் லீவு போட்டுவிட்டுப் பட்டணத்துக்கு வாருங்களேன்" என்றான். மனம் திறந்து சொன்ன சொல்தான். ஆனால் அவன் சொல்லும் போது ஒரு முறை மனைவியைப் பார்த்து விட்டு நடுங்கிப் போனானே. பிறகு பேச்சை மாற்றி விட்டான்.

பாவம் அவனைப் பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது. பாசம் நெஞ்சோடு இருந்தால் போதுமடா. நீ எங்கிருந்தாலும் நன்றாக இருக்க வேண்டும். பெற்றவனிடம் காட்டும் பாசத்துக்குக்கூட அனுமதி பெற வேண்டிய இழிவான நிலை, பாவம்....

பொங்கலுக்கு இரண்டு பையன்களும் வந்து விட்டுப் போன பிறகு வீடு வெறிச் சோடிக் கிடந்தது. பிள்ளைப் பாசம் நெஞ்சைச் சூழ்ந்திருக்கிறது. ஆனால் அவர்களோ ஏதோ பணம் அனுப்புவார்களாமே.....

ஆயிரம், ஆயிரமாகச் சம்பாத்தியம். கார், பங்களா சுகபோக வாழ்க்கை! தந்தையைத் தன்னோடு வைத்திருக்க வேண்டும் என்னும் ஆசை இல்லையே. அதுகூட வேண்டாம். கடமைகூட உணர்வில் தட்டவில்லையே....!

சீச்சீ... நான் அவ்வளவு மானம் கெட்டுப் போகவில்லை. ஒரு காசு வேண்டாம். முப்பது ஆண்டுகளாக எவன் கையையும் எதிர் பார்க்கவில்லை. சொத்து, சுகம் எல்லாவற்றையும் பையன்களின் படிப்புக்கு அர்ப்பணித்து விட்டேன். அது என் கடமை. அதை முடித்து விட்டேன். இதை இருந்து பார்க்கக் கல்யாணிக்குத்தான் கொடுத்து வைக்கவில்லை.....

சிவராமபிள்ளைக்கு [illegible] மனைவியின் நினைவில் நெஞ்சு வலித்தது.

எனக்காக வாழ்ந்த ஒரே உயிர் அவள் தான். இப்போது அவள் இருந்தால் எனக்கு எல்லாம் இருந்த மாதிரிதான்.

'கல்யாணி, பார்த்தாயா, உன் பிள்ளைகளை? பணம் அனுப்புவாராம், பணம். வாங்கவா சொல்கிறாய்? எவ்வளவு மானமாக வாழ்ந்தேன். நீயே சொல்லுவியே, ஞாபகம் இருக்கா? "நமக்குன்னு அன்பு செலுத்த உலகத்திலே யாரும் இல்லைன்னா, உயிரை விட்டு விடலாம்" என்பாயே.'

சிவராம பிள்ளைக்கு நெஞ்செல்லாம் வலித்தது. நாளையைப் பற்றி நினைத்தார். ஆவியம் நிரம்பியிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். பாலத்தில் பஸ் போக்குவரத்துக் கூட நின்று விட்டது. மணி பத்தோ, பதினொன்றோ இருக்கும்.

தொண்டை வறண்டிருந்தது. மெதுவாக எழுந்தார். அவர் எழுந்து நிற்பதற்குள் நாய் எழுந்து அவருக்கு முன்னால் வந்து நின்றது. வீட்டுக்குப் போக வேண்டும் என்று அதற்கு அவசரம். பாவம், அதற்குக் கடுமையான பசி. சிவராம பிள்ளை தண்ணீரை நோக்கி நடந்தார். நாய் அவருக்கு முன்னால் ஓடியது. நதித் தண்ணீரை அள்ளிக் குடித்தார். முகத்தை அலம்பிவிட்டு மீண்டும் பழைய இடத்துக்கே வந்து படுத்துக் கொண்டார். நாய், சிறிது நேரம் அவர் கால்மாட்டிலேயே நின்று கொண்டிருந்தது. சிவராமபிள்ளை சீக்கிரத்தில் கிளம்பமாட்டார் என்று தெரிந்ததும் அதுவும் தன்னுடைய இடத்தில் போய் அமர்ந்து கொண்டது.

பக்கத்தில் கிடந்த ரோஜாப் பூ மாலை மணம் பரப்பியது. கண்களை மூடிக் கொண்டார். நினைவு, மதுரைக்கும் பட்டணத்துக்கும் ஓடியது —

"டேய், வரமாட்டேன்டா. பயப்படாதீங்க. உங்க வீட்டும் எனக்கு வேண்டாம். நான் மானஸ்தன்டா, மானஸ்தன்....." அவருடைய வாய் இப்படிப் பல தடவை முனகிக் கொண்டே இருந்தது. நட்சத்திரத்தின் ஊடே மனைவியின் முகம் தோன்றி அவரைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.


அப்படியே மணலில் படுத்தவாறே கண்களை மூடிக் கிடந்தார். துணைக்கு நாய் கிடந்தது.

மறு நாள் அதிகாலையில் கொக்கிர குளம் ஆற்று மணலில் பெரும் கூட்டம் கூடியிருந்தது. மணலில் சிவராமபிள்ளை படுத்துக் கிடந்தார். பக்கத்தில் கோட்டின் மீது ரோஜாப் பூ மாலை சிரித்துக் கொண்டிருந்தது. இன்னும் வாடவில்லை!

"யோகக்காரர்டா! நேற்றுத் தான் ரிடையர் ஆனார்; இன்னிக்கு மண்டையைப் போட்டுவிட்டார்! வேலை முடிந்தது. கவலையை அனுபவிக்காமலே போய் விட்டார். இதுக்கும் கொடுத்து வைக்கணும்" என்றார், பக்கத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு தாலூகா ஆபீஸ் குமாஸ்தா.

அவருடைய நாய் பக்கத்தில் நின்றவாறே நெஞ்சே வெடித்துவிடும்படி கண்ணீர்விட்டு அழுது கொண்டிருந்தது.

டாடாவிஷன்



டாடாவின் பெருநோக்கு. தீர்க்க தரிசனமுள்ள கருத்துக்கள் இருந்து என்ன? அவை மக்களிடையே பரவாவிட்டால் என்ன பயன்?— அவை மக்களைத் தழுவுமாறு என்று செயல்படுத்த வேண்டாமா?

ஜாம்ஷெட்பூரில் நல்ல கருத்துக்கள் செயலாகாமல் வீணாவதில்லை. ஏற்ற உதவிகளும் ஊக்கமும் அங்கே உள்ளன. இத்தகைய ஒன்றே குடும்ப நலத்திட்டம்.

இந்தத் திட்டம் ஜாம்ஷெட்பூரில் தொடங்கிய மூன்று ஆண்டுகளுக்குள் 'விவாத வட்டங்களில்' கலந்து கொள்வோர் தொகை பத்து மடங்காக உயர்ந்து விட்டது. விவாதத்தின் விளைவாக எழுந்த தெளிவான உறுதி: 1965-இல் ஜாம்ஷெட்பூரில் பிறப்புவிகிதம் குறையத் தொடங்கி விட்டது.

டாடா எஃகு ஸ்தாபனத்தின் குடும்ப நலத் திட்டத்தினால் ஜாம்ஷெட்பூர் மக்களுக்கு என்ன பயன்?

இரண்டு நவீன கொத்துக் குடும்பத் திட்ட நிலையங்களும் ஆறு பிரசவ, குழந்தை பராமரிப்பு விடுதிகளும் இலவசமாகக் குடும்பக் கட்டுப்பாட்டு சாதனங்களை வழங்குகின்றன, ஆலோசனை கூறுகின்றன.

இரண்டு நகர நிலையங்களிலும் டாடா மெயின் ஆஸ்பத்திரியிலும் 'வாசக்டமி' ஆபரேஷன் செய்யப் படுகிறது. அதைச் செய்து கொள்ளும் கம்பெனி ஊழியருக்கு ஆபரேஷன் செலவு இல்லை. அதோடு ரொக்கப் பரிசாக ரூ. 200/- தரப் படுகிறது. போனவருஷம் ஆகஸ்டு டிசம்பர் காலத்தில் 1650 பேர் ஆபரேஷன் செய்து கொண்டதில் வியப்பில்லை. கம்பெனி ஊழியரின் மனைவியர் 'டியூபெக்டமி' ஆபரேஷன் செய்து கொண்டாலோ, 'லூப்' பொருத்திக் கொண்டாலோ ஊக்கப்படுத்தும் வகையில் ரொக்கம் வழங்கப்படுகிறது.

டாடா ஸ்டீல்



வெள்ளித் திரையில் இரண்டாவது தடவையாக வள்ளுவர் வரப் போகிறார். குறள் எழுதி அதற்குக் குரல் கொடுக்கப் போகிறார், வள்ளுவராகத் தோன்ற இருப்பவர் தமிழ்த் திரை உலகம் நன்கு அறிந்த நடிகர் 'மேஜர்' சுந்தரராஜன் தான்! தமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு பற்றியும் பொதுவாகத் திருக்குறள் குறித்தும் சுந்தரராஜன் என்ன சொல்கிறார், கேளுங்கள்:

''எனக்கும் திருக்குறளுக்கும் என்ன உறவு என்று ஆச்சரியப் படுகிறீர்களா? அந்த நாள் முதற்கொண்டு நான் தொடர்பு கொண்டிருக்கும் ராகினி ரிக்ரியேஷன்ஸ் நாடக நிறுவனத்தின் கடவுள் வணக்கமே திருக்குறள் அடிகள்தான். 'அகர முதல எழுத்தெல்லாம்' என்ற அடி ஒலித்து முழங்கி முடிந்தபின் தான் நாங்கள் மேடையில் அடியெடுத்து வைப்போம். என் நண்பர் திரைப்பட இயக்குநர் கே. பாலசந்தருக்கு இந்த

வெள்ளித்திரையில் வள்ளுவர்



மேஜர் சுந்தரராஜன்

ஆரம்பத் துதிப்பாடல் அடிமீது மிகுந்த ஈடுபாடு உண்டு. இந்த வழக்கத்தை அவர் நாடக மேடையிலிருந்து தாம் இயக்கும் திரைப்படங்களுக்கும் கொண்டு போய் விட்டார்!

என் மேல் அன்பும் பரிவும் கொண்ட நண்பர்கள், 'என்னப்பா, 'மேஜர்' வேடம் தாங்கி அற்புதமாய் நடித்திருக்கும் நீ, ஏன் பல தடவைகளில் 'மைனர்' ரோல்களை ஏற்றுக் கொண்டு நடிக்கிறாய்?' என்று கேட்பார்கள். அன்பின் காரணத்தினால் அவர்கள் கேட்கிறார்கள்! உண்மை! இப்படிச் சொல்கிறார்களே என்பதற்காக நான் கிடைக்கும் வாய்ப்புக்களை ஒதுக்கிவிட முடியுமா? நான் வாழ வேண்டாமா? எனக்கு இன்னொரு குறள் அடியும் நன்றாகத் தெரியுமே!

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு

என்று அதே வள்ளுவர்தானே சொல்லியிருக்கிறார். குடும்பஸ்தனாகிய எனக்கு இந்தப் பொருள் முக்கியம்தானே?

திருக்குறளை இப்போதெல்லாம் ரொம்ப மலிவுப் பொருளாக்கி விட்டார்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயம். ஒவ்வொரு மேடைப் பிரசங்கியும் தன் நோக்கத்துக்கு, தன் லட்சியத்துக்கு, தன் தேவைக்கு ஏற்பச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஒரு குறள் அடியை எடுத்து ஆராய்ச்சி செய்து சாதாரண மக்கள் மனத்தைப் பேதலிக்கச் செய்து விடுகிறான். குறளையும் வர்த்தக ரீதியில் உபயோகப்படுத்துகிறார்களே என்று வருத்தப்படத்தான் வேண்டியிருக்கிறது.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

என்ற லட்சியத்தை நாம் மறக்கக்கூடாது.

நான் நடித்து சமீபத்தில் வெளிவந்த 'உயர்ந்த மனிதன்' திரைப்படத்தில் மற்றொரு குறளடியைச் சொல்ல அற்புதமான சூழ்நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்

என்ற அடியைச் சூழ்நிலைக்குப் பொருத்தமாக உணர்ச்சிப் பரவசத்துடன் நடிகர் திலகம் சிவாஜியிடம் சொல்ல எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.

பள்ளி நாட்களில் எங்களுக்கு 'மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்' வகுப்புகள் உண்டு. உலக மதங்களின் உயர்ந்த பண்புகளை

யெல்லாம் பொறுக்கி மாணவர்கள் மனத்தில் பதியும்படி போதிப்பதாகத் தாத்பர்யம். ஆனால் எங்கள் ஆசிரியர் அந்த வகுப்புக்களில் குறளைத்தான் போதித்தார். உலகப் பொது மறை குறள் என்பதை அவர் உணர்ந்து அதை நாங்களும் உணர வேண்டும் என்று நினைத்தார். வாரா வாரம் ஐந்து குறள் அடிகளை ஒப்புவிக்கச் செய்து பொருளும் விளக்குவார். அந்த நினைவு இன்றும் இருக்கிறது என் மனத்தில்.

திருவள்ளுவராகத் திரைப்படத்தில் நடிக்க எனக்கு வாய்ப்புக் கிட்டியிருப்பதை நான் பெருமையாகவே கருதுகிறேன். ஆதர்சத் திருவள்ளுவரின் உருவத் தேவைக்கேற்ற உடல் அமைப்பும், குறள் ஒலிக்கத் தேவையான குரல் கனிவும் என்னிடம் இருக்கின்றன என்று அந்தத் தயாரிப்பாளர் நம்புகிறார்கள். இந்தப் பெருமை ரசிகர்களின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி விளங்கும் சிவாஜி கணேசனுக்குப் போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். ஆனால் அவருக்கு அவகாசமில்லை என்ற நிலையில் அந்த அதிருஷ்டம் என்னிடம் திரும்பியது.

எழுத்தாணியை எப்படிப் பிடித்துச் சுவடியில் எழுதுவது என்பது பற்றி எனக்கு மூன்று மணி நேரம் பயிற்சி கொடுத்தார்கள். திருவள்ளுவர் மாதிரி தோன்ற வேண்டுமென்றால் சும்மா தானா ?''

'மேஜர்' சுந்தரராஜன் இந்தத் திரைப் படம் வெளியானபின் 'வள்ளுவர் சுந்தர ராஜன்' ஆனாலும் ஆகலாம்! -திருவேரகத்தான்

அட்டைப்பட விளக்கம்

பிரிவுத்துயரில் ஓர் இன்பம்

அழகிய பூஞ்சோலை. அதை யொட்டினாற் போல் ஒரு தடாகம். அதில் பூத்திருக்கும் தாமரையொத்த முகத்தாளை முதன் முதலில் அவன் கண்டான்.

எந்தப் பிறவியில் தொடர்ந்த தொந்தமோ, அவனைக் கண்டதும் கதிரவனைக் கண்ட தாமரையென முகமலர்ந்தாள் அவள்.

''யான்நோக்குங்காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்''

ஆம்! 'அவன் நோக்குங்காலை நிலன் நோக்கி நோக்காக்கால் அவனை நோக்கி மெல்ல நகும்' அவளிடம் அவன் தன் மனத்தைப் பறி கொடுத்தான்.

'இவள் எப்படி இருவகைப் பார்வையைப் பெற்றாள்? ஒரே நோக்கில் அவனுக்குக் காதல் நோயை உண்டு பண்ணி விட்டாளே! அந் நோயைத் தீர்க்கும் ஆற்றல் கூட அவளது பார்வைக்குத்தானே இருக்கும் போலிருக்கிறது?'

இனி அவளையே அடைந்தால் அல்லவா அவன் நோய் தீரும்? கவலையில் ஆழ்ந்தான் அவன்.

அவன் கவலையை மாற்றவல்ல மருந்து வைத்திருந்தவளோ...

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலை மலரும் இந்நோய்'க்கே ஆளாகியிருந்தாள்!

அவள் நோயைக் கண்டு அவளைப் பெற்றோர் கவலை கொள்ளவில்லை; மாறாக மகிழ்ந்தனர்.

அவர்கள் மகிழ்ச்சி, அவள் மனத்துக்குரிய மணாளனைக் கொண்டு வந்து சேர்ப்பதில் காலம் தாழ்த்தவில்லை.

இல்லறம் என்னும் இன்பப் பூங்காவில் மகிழ அவர்கள் கூடிக் குலாவிய நாளை...

...நினைத்தால் இன்றும் அவள் நெஞ்சம் இனிக்கிறது.

அப்படியானால் ஏதாவது தாம்பத்தியக் கலகம் நிகழ்ந்து விட்டதோ?

இல்லை, இல்லை! அவள் மனத்துக்கு இசைந்த மணாளன் தொலைவில் உள்ள நாட்டுக்குப் பொருளீட்டச் சென்றுவிட்டான்! அவளையும் கூடவே அழைத்துப் போயிருக்கக் கூடாதோ? இப்படித் தனிமையில் தவிக்க விடுவதில் அவனுக்கு என்ன இன்பம்?

பிரிவுத் துயரால் வாடிய அவளுக்கு உணவு செல்லவில்லை; உறக்கம் கொள்ளவில்லை. அவன் நினைவிலேயே தன் மனத்தைச் செல விட்ட அவளுக்குத் தன் உடல் நலிந்ததோ, தோள்கள் மெலிந்ததோ தெரியவில்லை!

தன் மனச் சுமையை இறக்க அவள் தன் கால் போன நோக்கில் நடந்தாள். அவை அவளை யறியாமலே அந்தத் தடாகக் கரைக்கு இட்டுச் சென்றன! கண்டது, காதல் கொண்டு கடிமணம் புரிந்துகொள்ள வழி வகுத்த தடாகம் அல்லவா?

அதன் கரையில் போய் மெய் மறந்து உட்கார்ந்தாள். அவள் முகத் தாமரையை நிகர்த்த செந்தாமரை அவளைப் பார்த்துச் சிரித்தது. அதன் அழகில்கூட அவள் கண் செல்லவில்லை. தன் உயிருக்கு இனியவன், தன் தலையில் மலர் சூட்டி மகிழ்ந்த காட்சி மனக் கண்ணெதிரே விரிந்தது.

அட, அதோ அவள் முகத்தில் உதடுகளில் என்ன மென்னகை! பிரிவுத் துயரிலும் அப்படி ஓர் இன்பமா? கூடல் இன்பத்தைக் காட்டிலும் இது இன்னும் இனிக்கிறாற்போலிருக்கிறதே!

தன் மெலிந்த கைகளிலிருந்து வளையல்கள் நழுவுவதைக்கூட மறந்து இன்பத்துள் இன்பம் துய்க்கும் காட்சியை ஓவியர் கல்பனா படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

வள்ளுவர் பெருமானோ, அந்த ஓவியத்துக்கு ஒரு குறளோவியம் எத்தனை எழிலுறத் தீட்டியிருக்கிறார், பாருங்கள்!

''பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்''

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor : T. Sadasivam

GRASIM
STAPLE FIBRE A SUPPLEMENT TO COTTON AND OTHER FIBRES



Among Indian technological achievements Gwalior Rayon's success in producing Rayon Grade Pulp from indigenous raw materials without any foreign aid or collaboration has, perhaps, been the most remarkable. The staple fibre produced from the pulp has been a boon to the hard-pressed textile industry which was deprived of valuable raw materials when vast areas of cotton-growing land were lost to Pakistan as a result of Partition.

Grasim Staple Fibre is unique in many respects, and is, in effect, a supplement to all natural fibres including cotton, wool, silk, jute, as well as to synthetic fibres. When blended or mixed with other fibres, it increases the usefulness of the resultant fabrics, making them cooler, softer, and more comfortable while at the same time helping to lower costs.

Today Gwalior Rayon contributes substantially to the national economy. It keeps hundreds of textile mills busy, gives employment to thousands of people, helps clothe lakhs more, saves crores of rupees in foreign exchange, contributes handsomely and in ever-increasing amounts to the national exchequer—these are just a few of the calculable benefits.

Besides Rayon Grade Pulp and Staple Fibre, Gwalior Rayon also produces high quality fabrics and fabricates its own machinery and equipment.

As the needs of the nation for the basic necessities of life are constantly growing, Gwalior Rayon, conscious of its responsibilities, has already made plans to expand its production. It is the constant endeavour of the Company to serve the country to its utmost ability.

THE GWALIOR RAYON SILK MANUFACTURING (WVG.) CO. LTD.

Birlagram, Nagda.

Registered as a Newspaper in Ceylon

SIMPSON & COMPANY LIMITED (Estd. 1840), MADRAS-2.
ADDISON & COMPANY LIMITED (Estd. 1873), MADRAS-2.
ADDISONS PAINTS & CHEMICALS LIMITED, MADRAS-11.
AMCO BATTERIES LIMITED, BANGALORE-28.
BIMETAL BEARINGS LIMITED, MADRAS-11.
GEORGE OAKES LIMITED, MADRAS-2.
GEORGE OAKES LIMITED, (BOMBAY OPERATIONS) BOMBAY-1.
INDIA PISTONS LIMITED, MADRAS-11.
INDIAPISTONS-REPCO LIMITED, MADRAS-11.
REICHHOLD CHEMICALS INDIA LIMITED, MADRAS-51.
SHARDLOW INDIA LIMITED, SEMBIAM, MADRAS-11.
SRI RAMA VILAS SERVICE LIMITED, MADRAS-2.
SRI RAMA VILAS SERVICE LIMITED, KUMBAKONAM.
STANES MOTORS (SOUTH INDIA) LTD., COIMBATORE.
STANES TYRE & RUBBER PRODUCTS LTD., COIMBATORE.
TRACTORS AND FARM EQUIPMENT LIMITED, MADRAS-34.
L. M. VAN MOPPES DIAMOND TOOLS INDIA LIMITED, MADRAS-2.
THE WHEEL & RIM CO OF INDIA LIMITED, MADRAS-11.

Engineering Group

The Amalgamations Group is the largest Light Engineering Group in South India.
The Corporate strength of Amalgamations is due to a successful plan of acquiring or constructing a network of manufacturing units and progressively rationalising them to be complementary units of production in related fields of activity.

The Group Manufactures Automotive and Industrial Diesel Engines, Agricultural Tractors and farm implements, Castings, Stampings, forgings, Engineers Cutting Tools, spares and ancillaries such as pistons, piston rings, bimetal bearings, flywheel ring gear as original equipment or for use in the automobile and other industries, lead acid batteries for transport, telecommunication and industrial uses,
Builds coaches and bodies,
Fabricates mechanical light engineering specialities,
Formulates Synthetic resins, pigments, lacquers, paints, colours, varnishes, emulsions, enamels,
Operates transport and passenger services,
Produces tea and coffee,
Publishes an evening newspaper,

The Group's Industrial Estates cover over 150 acres and provide as many as 17 separate manufacturing units using latest equipment and modern techniques.
Its valuable experience of cost and quality considerations over many years in the domestic market enables the Group to export a wide range of first class products which have been accepted by discriminating buyers in over thirty countries in the world.

Non-Engineering Group

ASSOCIATED PRINTERS (MADRAS) PRIVATE LIMITED, MADRAS-2.
ASSOCIATED PUBLISHERS (MADRAS) PRIVATE LIMITED, 'THE MAIL' MADRAS-2.
HIGGINBOTHAMS PRIVATE LIMITED, MADRAS-2.
SIMPSON & GENERAL FINANCE COMPANY LIMITED, MADRAS-2.
SPEED-A-WAY PRIVATE LIMITED, MADRAS-2.
T. STANES & COMPANY LIMITED, COIMBATORE.
THE UNITED COFFEE SUPPLY COMPANY LIMITED, COIMBATORE.
WALLACE CARTWRIGHT & CO. LIMITED, 55/56, St. James Street, LONDON S. W. 1.

Total Number of Employees: About 14,000
Bankers: The Central Bank of India Limited, Madras-2.
Advertising Consultants:
THE MADRAS ADVERTISING CO. PRIVATE LTD., MADRAS-2.

Amalgamations

PRIVATE LIMITED
202, Mount Road, Madras-2.
and subsidiary Companies
(Unit Companies of Simpson Group Industries)